தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
2623

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

புதன்கிழமை, 1983 மார்ச் 16-தொகுதி XLV எண் 2
Wednesday 16th March 1983 —Volume XLV No.2

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600009
Legislative Assembly Department, Fort St. George,
Madras-600009

வ ரூ-3-15 காசுகள்]

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: XLV NO: 2

March 16th 1983

D
V211,31 N83
N83.45.2.
135999

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
சென்னை-600 008.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

புதன்கிழமை, 1983 மார்ச் 16.

பங்குனி 2, துந்துபி—திருவள்ளுவர் ஆண்டு 2014.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''பொருள்கருவி காலம் வினையிடனொரு ஐந்தும்

இருள்தீர எண்ணிச் செயல் ''

வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம், மேற்கொண்ட தொழில், உரிய இடம் ஆகிய ஐந்தினையும் மயக்கம் தீர எண்ணிச் செய்ய வேண்டும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### Purchase of Xerox Machines for use in Sub-Registrar Offices

*Q.No. 347 : THIRU N.S.V. CHITHAN : Will the Hon, the Minister for Rural Industries be pleased to state:

(a) the details of the firm from which Xerox Machines were purchased by the Government for use at Sub-Registrar Offices in this state—

(b) the total number of machines purchased so far; and

(c) the rate at which they were purchased

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) & (ஆ). சென்னையிலுள்ள கோரஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தின் மூலமாக தானேயிலுள்ள ரீவ்ஸ் ஆர்ட்டிஸ்ட் மெடிரியல்ஸ் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து ரூ. 3, 31, 344க்கு 15ஜீராக்ஸ் நகல் எடுக்கும் கருவிகள் வாங்கப்பட்டன.

(இ) ஒரு நகல் எடுக்கும் கருவியின் விலை ரூ. 22,089.06 ஆகிறது.

D 1
V2'',31 N83
N83-45-2
135999



உள்ளடக்கம் | பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்:

உடுக்குறியிட்ட வினாக்கள் 313—345

2. தத்துவமேதை காரல் மார்க்ஸ் நூற்றாண்டு நிறைவு நாள் அஞ்சலி. 345—346

3. தகவல் கோரல்:

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் .. 346

(ஆ) உறுப்பினர்கள் விடுதியில் தண்ணீர் தட்டுபாடு .. 347—348

4. ஒத்திவைப்புத் தீர்மானம்:

காயல்பட்டினம் சிறுபான்மை சமுதாய மக்கள் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுத்துக்கொள்வது. .. 348—371

5. வரவு—செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி) .. 372—436

கோரிக்கை எண். 26 — கைத்தறியும் நெசவுத் தொழிலும் 425—436

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் 372

திரு. பாபுஜனார்த்தனன் 373—380

திரு. சி. கோபால் 380—385

திரு. இ. எஸ். எம். பக்கீர்முகம்மது 386—391

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் 391—396

திரு.கே. ஆர். சுந்தரம் 396—401

திரு. ஆ. வெள்ளைச்சாமி 401—404

திரு. குமரிஅனந்தன் 404—409

திரு. தி. க. நல்லப்பன் 409—412

திரு. ஏ. சி. சண்முகம் 413—417

திரு. து. புருஷோத்தமன் 417—424

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 436—437

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சார்பதிவாளர் அலுவலகங்களில் நகல் வாங்குவதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. அதற்கும், இன்னும் சில காரியங்களுக்கும் இதை பயன்படுத்துகிறார்கள் என அறிகிறேன். 15 கருவிகள் வாங்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இக்கருவிகளை தமிழகம் முழுவதற்கும் வாங்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? இந்தக் கருவி வந்ததற்கு பின்னால் வேலைகளைப் பொறுத்த அளவில் அல்லது ஜனங்களுக்கு நகல்கள் கிடைப்பதற்கு எந்தளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புதிய முயற்சியின் காரணமாக துரிதமாக நகல்கள் மக்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. எனவே அடுத்த ஆண்டு அதிகமான அளவுக்கு இதை விரிவுபடுத்தப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இயந்திரங்களை பயன்படுத்துவதால் அலுவலர்களுக்கு வேலை குறைப்பு ஏதாவது ஏற்பட வழி உள்ளதா? இதனால் நகல் கிடைப்பதற்கு பொதுமக்களுக்கு கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதா என நான் அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போட்டோ காபி இயந்திரங்களை இன்றையதினம் நிறுவியிருக்கிற காரணத்தினால் ஏற்கனவே நகல் எடுக்கும் பணி புரியும் பணியாளர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். அவர்களுக்குத் தேவையான பயிற்சி கொடுக்கப்பட்டு, இந்த இயந்திரங்களை இயக்குவதற்கு அவர்களை தகுதி உள்ளவர்களாக்குகிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜீராக்ஸ் இயந்திரங்களை எல்லா சார்பதிவாளர் அலுவலங்களிலும் பொருத்தும் திட்டம் இருக்கிறதா? எத்தனை ஆண்டுகளுக்குள்ளாக இந்த திட்டத்தினை நிறைவேற்றுவதாக உத்தேசம்? அடுத்து இது நகல் எடுப்பதற்கு மட்டும் உபயோகப்படுத்தப்படுகிறதா? அல்லது எழுதக்கூடிய பத்திரங்களை அதாவது முன்னால் பைல் சிஸ்டத்தில் நகலை எடுப்பார்கள். எழுதக்கூடியவர்களே இரண்டு பத்திரங்களையும் எழுதிக் கொடுக்கக்கூடிய நிலைமை இருந்தது. இப்போது ஒன்றை எழுதி மற்றொன்றை ஜீராக்ஸ் இயந்திரம் மூலமாக போட்டோ எடுத்து வைத்துக்கொள்வதற்கு ஏற்பாடு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியினுடைய முதல் பகுதிக்கு படிப்படியாக இது மாநிலம் எங்கும் நிறைவேற்றப்படும். 2-வது பகுதிக்கு என்னிடத்தில் தகவல் இல்லை. தனியாக அளிக்கிறேன்.





திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஜீராக்ஸ் மூலம் அசலின் நகல் எடுப்பதற்கு பயன்படுத்துகிறார்கள். அதுபோல இன்றையதினம் அத்தாட்சிப் பத்திரங்கள், பதிவுப்பத்திரங்கள், ஜாதி சான்றிதழ்கள் இவைகளை இந்த ஜீராக்ஸ் மூலம் காப்பி எடுப்பதை அப்படியே ஏற்றுக் கொள்கிறார்களா? அந்த நகல்களுக்கு அரசு முத்திரைப் பெற்ற அந்த அலுவலர்கள் கையெழுத்து வேண்டும் என்ற எண்ணம் இன்றையதினம் இருந்துக் கொண்டிருக்கிறது ஆக ஜீராக்ஸ் மூலம் கொடுக்கப்படுகின்ற இந்த பத்திரங்களை அரசு ஏற்றுக் கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இது ஜீராக்ஸ் சம்மந்தப்பட்டகேள்வி. தனிக் கேள்வி. போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஒசூரிலுள்ள சிறு தொழில் கூடங்கள்.

* வினா எண் 348—திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் ஒசூரிலுள்ள சிறு தொழில் கூடங்களில் அண்மைக்காலத்தில் வங்கி வசதி, மானிய வசதி போன்றவற்றில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் 'சிட்கோ' மூலம் அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு ஏற்பட்ட நிகழ்ச்சியின் விளைவாக இந்த கேள்வி எழுப்பப்பட்டது. அப்படியென்றால் அரசே கடன் உதவி இந்த சிறு தொழில் கூடங்களுக்குத் தருகிறதா அல்லது தேசிய வங்கிகலினுடைய சார்பாகத் தருகிறதா? அப்படியென்றால் எந்த தேசிய வங்கியினுடைய சார்பாக சிறு தொழில் கூடங்களுக்கு கடன் உதவி அல்லது மானியம் வழங்கப்பட்டது. என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, ஒசூரிலே உள்ள தொழிற்பேட்டையிலே இயங்கிவருகின்ற சிறு நிறுவனங்களில் பெரும்பாலானவை பாரத் ஸ்டேட் வங்கியிலே கணக்கு வைத்துள்ளன. அவர்கள் மூலமாக அவர்கள் நிதி வசதியைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

*தொழிற்சாலைகள் பத்திரப்பதிவு செய்யும் பொழுது வழங்கப்படும் முத்திரைக் கட்டண விதி விலக்கு*

* வினா எண் 430—திரு. எஸ். ரெத்தினராஜ் : மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிற்சாலைகளுக்கு அரசு நிறுவனங்கள் (T.I.I.C., SIDCO etc.) கடன் வழங்கும் போது சென்னையில் பத்திரம் பதிவு செய்தால் முத்திரை கட்டணம் விதிவிலக்கு தரப்படுவது போல் எங்கு பத்திரம் பதிவு செய்தாலும் முத்திரை கட்டண விதிவிலக்கு. தரப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** ஆம்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள், அரசு நிறுவனங்கள் கடன் வழங்கும்போது பத்திரம் பதிவு செய்தால் முத்திரைக் கட்டணமோ அல்லது மற்றக் கட்டணமோ இல்லையென்று சொல்லக்கூடிய விதிவிலக்கு என்ன நோக்கத்திற்காக அளிக்கப்படுகிறது. ? இது எல்லா இடங்களுக்கும் உண்டா அல்லது சென்னை நகரத்திற்கு மட்டுந்தானா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, இந்த விதிவிலக்கு தொழில் முனைவர்களுக்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற தூரநோக்குப் பார்வையோடுதான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்த முத்திரை தீர்வை விலக்கு மாநிலம் பூராவுக்கும் பொருந்தும்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** தலைவர் அவர்களே, இந்த விலக்கு சிறு தொழில் செய்கிறவர்களுக்கு மட்டுமா அல்லது கோடிக் கணக்கான ரூபாய் முதலீடு செய்து அதிலே ஒரு பகுதியை அரசிடம் கடனாகவோ அல்லது வேறு விதத்திலோ பெற்று செய்யக்கூடிய தொழில்களுக்கும் இந்த விலக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, மூலக்கேள்வி டி. ஐ. ஐ. சி., சிட்கோ ஆகிய இரண்டு நிறுவனங்கள் மூலமாக நிதி வசதிபெருகின்ற நிலையைப்பற்றியதாகும். இந்த இரண்டு நிறுவனங்களிலிருந்து சிறு தொழில்கள் மட்டுந்தான் நிதிவசதியைப் பெறுகின்றன.

*சிவகாசி—விருதுநகர் சாலையை விரிவுபடுத்தும் திட்டம்.*

* வினா எண் 431—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சிவகாசி—விருதுநகர் சாலையை விரிவுபடுத்தவும், புதிய பாலங்கள் கட்டவும் அரசு பணம் ஒதுக்கியிருந்தும் வேலை தொடங்கப்படாததற்கான காரணங்கள் யாவை?*

*(ஆ) எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும்?*

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** *(அ), (ஆ)* சிவகாசி—விருதுநகர் சாலையை விரிவுபடுத்தி, மேம்பாடு செய்யமட்டுமே முன்னர் அரசு ஆணை வெளியிடப்பட்டது. அதில் புதிய பாலங்கள் கட்டும்பணி இடம் பெறவில்லை. பின்னர் தலைமைப் பொறியாளர், சாலை மேம்பாடு செய்யும் பணியுடன், இச் சாலையில் பாலங்கள் கட்டுவதற்கான செலவினங்களையும், சேர்த்து அனுப்பிய திருத்திய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசின் நிர்வாக ஒப்புதல் அளித்த பின்பு இப்பணி துவங்கப்படும்.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த சாலை வேலை ஆரம்பிக்கப்பட்டு ஒரு ஆண்டு ஆகியும் பாதி வேலை மட்டும் முடிவுற்றிருக்கிறது. பாதி வேலையை இதை எடுத்த ஒப்பந்தக்காரர்கள் தாங்கள் எடுத்த ரேட் கட்டுப்படியாக வில்லை என்று சொல்லி செய்யாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வேலையை சீக்கிரமாக முடிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, பாதியிலே நின்றதாக என்னிடத்திலே குறிப்பு இல்லை. பாதியிலே நிறுத்திவிட்டு யார் தவறு செய்திருக்கிறார்களோ அந்த ஒப்பந்தக்காரர்கள் மீது அரசு நடவடிக்கை எடுத்து உடனடியாக முழுச் சாலையையும் போடுகின்ற பணியை கண்டிப்பாக மேற்கொள்ளும்.

**திரு. வி. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த இரண்டு பால வேலைகளையும் செய்வதற்கு கடந்த ஆண்டிலேயே அரசு அனுமதித்து இருந்தும் இந்த ஆண்டு பார்ட் 2 ஸ்கீமிலே எடுத்துக் கொள்ளாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? ஒரு பால வேலையை இந்த ஆண்டே எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, நாளைக்கு மானியக் கோரிக்கைகள் வருகின்றன. அப்போது அதை வலியுறுத்தலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, சிவகாசி—விருதுநகர் சாலையில் கலாமிஜி மில்ஸ் அருகில் உள்ள அர்ஜுனா நதியின் குறுக்கே மழை காலங்களில் தண்ணீர் வந்து பஸ்கள், பிளஷர்கள் எல்லாம் ஆக்சிடெண்டு ஏற்பட்டு அதன

காரணமாக நூற்றுக்கணக்கானவர்கள் இறக்கிறார்கள். தண்ணீர் இல்லாத காலங்களிலேயும் அந்த பாலம் இல்லாததால் அங்கே ஆக்சிடெண்ட் ஏற்பட்டு மாதத்திற்கு 20 பேர்கள் இறக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது, ஆகவே இதை யுத்தகால வேலையாகக் கருதி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக்கு தவறான தகவலைக் கொடுக்கக்கூடாது. மாதத்திற்கு 20 பேர்கள் இறக்கிறார்கள் என்றால் பத்திரிக்கையிலே போட்டிருப்பார்கள். பாலம் தேவை என்பதை வேண்டுமானால் வலியுறுத்துங்கள். தவறான தகவலைக் கொடுக்கக்கூடாது.

(முற்பகல் 9–10)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவ அவர்களே, அர்ஜுனா நதியைப் பொறுத்தமட்டில் எப்போதெல்லாம் மழை பெய்கிறதோ அப்போது வெள்ளம் ஏற்பட்டு அதன் மூலமாக அந்த பகுதியிலே தண்ணீர் வருகிறது. எனக்கு கொடுத்துள்ள குறிப்பின்படி வருடத்தில் 40 நாட்கள் நீர் வரும் என்ற கணக்கைக் சொல்லித்திருக்கிறார்கள். இந்த நதியின் குறுக்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று கோரிக்கை வந்து ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியிலே நான் அடிக்கல் நாட்டி அந்த பால வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே பல்வேறு இடங்களில் இப்படி நதி குறுக்கிடுவதால் பாலம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவைகள் அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகின்றன.

திரு. த. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல இடங்களில் பாலங்கள் தன்னிறைவுத் திட்டத்தின் கீழும் ஹைவேஸ் பெருவழித்துறை இலாக்காவின் கீழும் எடுக்கப்பட்டு ஒப்பந்தக்காரர்கள் அந்த வேலைகளை முடிக்காமலே பாதியிலே விட்டிருக்கிறார்கள் அப்படி முடிக்காமல் விட்டிருக்கிற ஒப்பந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே கொடுக்கப்பட்ட கேள்வி அர்ஜுனா நதியும் அந்தப் பகுதியிலே இருக்கிற பால வேலைகளும் என்பது. ஆனால் உறுப்பினர்கள் அவர்கள் கேட்பது தன்னிறைவுத் திட்டம். அதற்கு தனி கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.



சித்தாபுதூரிலுள்ள ஆரம்பப்பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் கட்டும் திட்டம்.

* வினா எண். 432—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம், முதல் வரர்டு சித்தாபுதூரில் உள்ள ஆரம்பப்பள்ளிக்கு எட்டு புதிய வகுப்பறைகள் கட்ட அரசு அனுமதியளித்தும் நாளது வரை கட்டிடம் கட்டாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

)ஆ) ஆம் எனில் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ), (ஆ) தலைவர் அவர்களே வகுப்பறைகள் கட்டும் பணி ரூ. 4.16 இலட்சம் மதிப்பீட்டில்பொதுப் பணித்துறையால் துவக்கப்பட்டு மேற்படி பணி முன்னேற்றத்தில் உள்ளது. தரை மட்டம் வரை வேலை நடந்துள்ளது. பொதுப் பணித்துறை நிர்வாகப் பொறியாளர் மேற்படி பணியினை விரைவில் முடித்துத் தரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கம் 1977 ஆம் வருடத்தில் முதன்முதலாக பதவியேற்ற பிறகு 1979-ல் இதற்கான பணம் ஒதுக்கப்பட்டு நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கல்நாட்டு விழாவிலே கலந்து கொண்டு நான்கு ஆண்டுகள் ஆகின்றன. அந்த கல்லலைக் கூட முனிசிபாலிட்டியிலே பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள். இன்றையவரைக்கும் அந்த கட்டடம் கட்டாமல் இருப்பதற்கு யாருடைய அஜாக்கிரதை காரணம்? அதை பரிசீலனை செய்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? அந்த கட்டிடம் எப்போது முடியும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, 1979-லே இதற்கு நிர்வாக ஒப்புதல் கொடுக்கப்படவில்லை. அதற்குரிய பணியைத் துவக்கும்படி 16–10–80-ல்தான் உத்தரவிடப்பட்டது. ஆகவே அதற்கு முதலில் மூன்று லட்சம் ரூபாய்க்கு தான் மதிப்பீடுகள் போடப்பட்டது. அதற்கு பிறகு திருத்திய மதிப்பீடாக 4 லட்சத்து 16 ஆயிரம் ரூபாய்க்குப் போட்டு அந்தப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. சில தாமதங்களின் அடிப்படையிலே அந்தப்பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் சீக்கிரமாக இன்னும் மூன்று மாதக் காலத்தில் அந்தப் பணிகள் முடிவடையும் என்று ஆணையாளர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சீக்கிரத்திலே முடிக்கப்படும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) (ஆ) சாப்டூர்-சந்தையூர் சாலையின் மொத்த நீளம் 8.8 கி.மீ. ஆகும். இது கீழ்க்கண்ட சாலைகளைக் கொண்டது.

அ. சாப்டூர் ஆழகாபுரி சாலை கி.மீ. 0/0–2/2 (ஒன்றிய சாலை)

ஆ. ஆழகாபுரி சந்தையூர் சாலை கி. மீ. 0/0–6/6 (ஒன்றியசாலை)

சாப்டூர் அழகாபுரி சாலையில் கி.மீ. 0/2–2/0 மண்பரத்தல் பணியும் இதே சாலையில் கி. மீ.1/6ல் தாம்போதி கட்டும் பணியும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு பணி 31-3–82–ல் முடிக்கப்பட்டுள்ளது.

சாலை முழுவதும் தார் சாலையாக மேம்பாடு செய்யவும் பாலங்கள் கட்டவும் ரூ. 53 இலட்சம் தேவைப்படும். இப் பணியை வரும் ஆண்டுகளில் அரசின் நிதிநிலைக்கேற்ப 2 ஆம் பாகத் திட்டத்தின் கீழ் மேற்கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

திரு. என். பழனிவேல்: இந்த மலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சில வேலைகள் நடப்பதாக அறிகிறேன். மதுரை மாவட்டத்தில் இருக்கக்கூடிய பாய்சலூர் போன்ற கிராமங்களில், அதையொட்டியுள்ள சின்னச்சின்ன கிராமங்களில் ரோடு வசதி இல்லாமல் அந்தப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே மலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அவற்றிற்கு விசேஷ நிதி ஒதுக்கீடு ஏதாவது இந்த ஆண்டு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மேற்கு தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பாகம் 2–ன்கீழ் இந்த வேலைகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்றுதான் நாங்கள் கேட்டுக்கொண்டோம். ஆனாலும் நிதி வசதிக்கேற்ப தான் இந்த வேலைகளை எடுத்துக் கொளளமுடியும். இந்தப் பணியில் நாம் மண் பரப்பி, கல் பரப்பி இவைகளையெல்லாம் சாலைகளாக மாற்றியிருக்கிறோம். தார்ச்சாலையாக மாற்ற வேண்டுமென்றால் ரூ. 53 இலட்சம் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே வருகிற ஆண்டுகளில் இவை கண்டிப்பாகக் கவனிக்கப்படும்.



## குறைந்த வருவாய் உள்ளவர்களுக்காக வீடுகள்கட்டும் திட்டத்தை நிறைவேற்றியுள்ள நகராட்சிகள்.

*வினா எண் 435—திரு. மு. அரங்கநாதன் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள எத்தனை நகராட்சிகள் மாநில அரசு மூலம் மத்திய அரசு நிதி உதவி பெற்று குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான வீடுகள் கட்டும் திட்டத்தை நிறைவேற்றின?

(ஆ) இவற்றில் எத்தனை நகராட்சிகள் இவ்வீடுகளை குடி இருப்பவர்களுக்கு உரிமையாக்கி கொடுத்துள்ளன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) பதினான்கு நகராட்சிகள்.

(ஆ) ஏழு நகராட்சிகள்.

திரு. மு. அரங்கநாதன்: மாநில, மத்திய அரசு உதவி பெற்று ஏழுநகராட்சிகளில் வீடுகளை குடியிருப்பவர்களுக்கு உரிமையாக்கிக் கொடுத்துள்ளது என்று அமைச்சர் அவர்கள் விடையில் சொன்னார்கள். மீதியுள்ள ஏழு நகராட்சிகளிலும் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்காகக் கட்டியிருக்கும் வீடுகளை அவர்களுக்கே தந்துவிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கான குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 14 நகராட்சிகள் மத்திய அரசிடமிருந்து மாநில அரசு மூலமாக கடன் உதவி பெற்று இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதிலே ஏழு நகராட்சிகள் இப்போது வீடுகள் கட்டி குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கெல்லாம் வீடுகள் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கனவே இருக்கக்கூடியவர்களுக்கு அந்த வீடுகளை சொந்தமாக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இதைப்பற்றி அரசாங்கம் தகுந்த பரிசீலனை செய்து முடிவெடுக்கும்.

(முற்பகல் 9–20)

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 7 நகராட்சிகளிலும் நகரசுத்தி தொழில் செய்கிறவர்களுக்கு அரசாங்கம் மத்திய அரசின் மூலம் வீடுகள் கட்டி கொடுத்திருப்பது உண்மையா? அப்படி இருக்கிறவர்களுக்கு, அவர்களுடைய சந்ததியார்கள் தங்குவதற்குக் கொடுக்காமல், அவர்களுடைய உத்தியோகம், வேலை முடிந்த பிறகு, அந்த குறிப்பிட்ட நகரசுத்தி தொழிலாளர்களுக்கு மத்திய அரசாங்கம் வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டுமென்று ஒரு பாலிசி இருந்தும், இந்த ஏழு நகராட்சிகளில் இவர்களுக்கு

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, முனிசிபாலிடிகளில்] நாம் தீர்மானிக்கிற வேலைகள் துரிதமாக நடக்காத ஒரு மோசமான நிலை இருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு இந்த கேள்வியை எழுப்புவதன் மூலமாக அதன் மீது ஜாக்கிரதையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுதான் கேட்கிறேன். அங்கே பெண்கள் உயர்நிலைப்பள்ளி வந்து இரண்டு, மூன்று வருடங்கள் ஆகின்றன. அதற்கு கட்டிடம் இல்லை. இந்தக் கட்டிடத்தை முடித்து பிறகு அந்த ஆட்கள் அங்கே போனால் தான் இந்தக் கட்டிடம் கட்ட முடியும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே உயர்நிலைப்பள்ளியைக் கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடுகளை செய்வாரா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இது சித்தாபுதூரில் உள்ள ஆரம்பப்பள்ளி. ஆகவே உயர்நிலைப் பள்ளியைப்பற்றி தனிக்கேள்வி கேட்டால் அதற்கு பதில் சொல்கிறேன்.

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிப் பகுதியில் பல ஆரம்பப்பள்ளிகளிலே வருகிற குழந்தைகளுக்கு ஏற்றவாறு கட்டிடங்கள் இல்லாமல் இருப்பதை அமைச்சர் அவர்கள் பலமுறைப் பார்த்து இருக்கிறார்கள். ஆகவே கட்டிடவசதியை கூடுதலாக செய்து தந்து சிறப்பான முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே இருக்கக்கூடிய எல்லா நகராட்சி, மாநகராட்சிப் பள்ளிகளிலும் இப்போது வாடகைக் கட்டிடங்கள் இருக்கிற பள்ளிகளை யெல்லாம் சொந்த கட்டிடங்களாக மாற்ற வேண்டுமென்ற யோசனையை நகராட்சிகளுக்கு கொடுத்து இப்போது ஆணை இடப்பட்டிருக்கின்றன. ஆகவே எவ்வளவு சீக்கிரத்தில் எல்லாப் பள்ளிகளையும் சொந்தக் கட்டிடங்களுக்கு கொண்டு வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பரமக்குடியில் சுப்பிரமணியசாமி எமனேஸ்வரம்அருகே வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம்.

*வினா எண் 433—திரு. ஆர். தவசி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் சுப்பிரமணியசாமி கோவில்—எமனேஸ்வரம் என்ற இடத்தில் வைகை ஆற்றில் புதிய கல்பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். தவசி: இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் வைகையாற்றில் எமனேஸ்வரம் என்ற இடத்தில் புதுப் பாலம் கட்டவேண்டும் என்ற கோரிக்கை அங்குள்ள மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாக இருக்கிறது. அதற்கு இன்றுவரை அரசு எடுத்த நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு. திரு. ப. குழந்தைவேலு: பரமக்குடி நகராட்சியில் நிதிநிலைமை திருப்திகரமாகயில்லாததால் அந்த நகராட்சி அப்பணியினை ஏற்க இயலாது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனாலும் இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இந்தப் பாலம் கட்டவேண்டுமென்று சொன்னால் ஏறத்தாழ ரூ. 27,50,000 செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே வருகிற ஆண்டுகளில் இது யோசிக்கப்படும்.

திரு. ஆர். தவசி: நீண்டகாலமாக நிதி இல்லை, நிதி இல்லை என்று அரசாங்கம் காலம் கடத்திக்கொண்டு போகிறது. அங்கிருக்கிற மக்கள் தொகை கிட்டத்தட்ட 65,000 ஆகும். மூன்று பஞ்சாயத்து ஒன்றியங்களில் உள்ள ஒன்றரை இலட்சம் மக்கள் தொகை அதன் வழியாகத்தான் போக்குவரத்து செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே அரசாங்கம் இந்தப் பாலத்திற்கு முன் உரிமை கொடுத்து நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நகராட்சிப் பகுதிகளிலும் சரி, ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் சரி மக்கள் தொகை அதிகமாகிக் கொண்டுவருகிறதே தவிர அதற்கேற்ற முறையில் நிதிவசதிகள் அதிகமாவதில்லை. இப்போது நுழைவு வரி கொண்டு வந்தால் அதை எதிர்க்கிற எண்ணம்தான் நமக்கு இருக்கிறது. இன்றையதினம் நுழைவு வரி மூலம் இதுபோன்ற நகராட்சிகளின் நிதிசெதியைச் சரிப்படுத்தலாம் என்ற எண்ணம் நமக்கு எழுவதில்லை. அதனால் இதுபோன்ற பணிகள் தாமதப் படுகின்றன.

மதுரை மாவட்டம் சந்தையூர்—சாப்டூர் சாலைப்பணி.

*வினா எண். 434—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் சந்தையூர்—சாப்டூர் மலைச் சாலை போடும் வேலை நடந்து முழுமையாக முடியாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது முடிக்கப்படும்?

அனுமதிக்கப்படாமல் இருப்பது உண்மையா? அப்படியிருந்தால், அவர்களை அனுமதிக்க அரசாங்கம் உதவிசெய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, நகரசுத்தி தொழிலாளர்களைப் பொறுத்த அளவில், என்னிடத்திலே குறிப்புகள் இல்லை. நீங்கள் தனிக் கேள்வி போட்டால், விவரமாக பதில் சொல்கிறேன்.

திரு. கே. சொக்கலிங்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 7 நகராட்சிகள் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். எந்தெந்த நகராட்சிகள் என்ற விவரத்தை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, தாம்பரம், சேலம், ஈரோடு, திருப்பூர், கடலூர் தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய நகராட்சிகள்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு மூலம் நிதி உதவி பெற்று, 14 நகராட்சிகளில் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை நிறைவேற்றியுள்ளதாகச் சொன்னார்கள். அதிலே 7 நகராட்சிகளுக்கு, குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டி கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித் திருக்கிறார்கள். இந்த 7 நகராட்சிகளின் பெயர்களை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். 14 நகராட்சிகள் என்று சொன்னாலும், எந்தெந்த நகராட்சிகள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? அதிலே மயிலாடுதுறை இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க முடியுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதிலே மயிலாடுதுறை இல்லை. 7 நகராட்சிகள் அறிவித்ததுபோக, இன்னும் 7 நகராட்சிகள் இருக்கின்றன. அவைகளைச் சொல்கிறேன்/ அரக்கோணம், கோபிசெட்டிப் பாளையம், மேட்டுப்பாளையம், குன்னூர், உதகமண்டலம். ராஜபாளையம், திருநெல்வேலி ஆகிய நகராட்சிகள்.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகளின் பட்டியலை அமைச்சர் அவர்கள் தந்திருக் கிறார்கள். குறைந்த வருமானமுள்ள பலநகராட்சிகள் அதிலே விட்டப்பட்டிருக்கின்றன. அந்த நகராட்சிகளுக்கு, அடுத்த நிதி ஆண்டிலாவது இந்த திட்டத்தை அமுலாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, வருகின்ற ஆண்டிலே அது பரிசீலிக்கப்படும்.

திரு. மு. அரங்கநாதன்: தலைவர் அவர்களே, குன்னூர் நகராட்சியிலே அந்த குடியிருப்புகளை அவர்களுக்கு சொந்த மாக்கித்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீலகிரி ஒரு மலைப்பகுதி; அங்கே வாழ்கின்ற மக்கள் ஏழை எளிய நலிந்த பிரிவைச் சார்ந்தவர்கள். அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அந்தக் குடியிருப்புகளை அவர்களுக்கே சொந்தமாக்கித் தரவேண்டு மென்ற கோரிக்கையை அரசுக்கு ஏறத்தாழ 5 ஆண்டுகளாக வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் குறிப்பாக மலைப்பகுதியாக இருக்கின்ற காரணத்தினால்தான் குன்னூர், உதகமண்டலம் ஆகிய இரண்டு நகராட்சிகளிலும் இந்த வீடுகள கட்டிக் கொடுக்கின்ற திட்டம் அமுல் படுத்தப்பட்டு வருகின்றது. யார் யார் குடியிருக்கிறார் களோ அவர்களுக்கே அந்த வீடுகளை சொந்தமாக்குகின்ற நிலை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே,இந்த குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கு, வீடுகள் கட்டிக் கொடுக்கும் போது மத்திய அரசே வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத் திற்கான நிதியை ஒவ்வொரு ஆண்டும் கொடுக்கின்றதா? அப்படியில்லாமல், இந்த ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்கு மட்டும் கொடுக்கின்றதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார் களா? அதேபோல், குறைந்த வருமானமுள்ள பல நகராட்சி களில் மக்கள் வசிக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம், அதிக அளவில் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு, தமிழக அரசு திட்டம் ஏதேனும் தயாரித்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசைப் பொறுத்த அளவில் நாம் கேட்கும் போதே அவர்கள் கொடுப்பதில்லை. கேட்டாலும்கூட, கிடைப்ப தில்லை. ஆகவே, அப்பேர்ப்பட்ட நிலைதான் இருக்கிறது. தானாகப் பழுக்காமல், அடித்துப் பழுக்க வைக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கஷ்டப்பட்டுத்தான் வாங்க வேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீடு கட்டும் திட்டத்தை 14 நகராட்சி களுக்குத் தான் மத்திய அரசு பணம் கொடுத்திருக்கிறது, என்று அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். மாநில அரசு தமிழ்நாட்டிற் காக எத்தனை நகராட்சிகளுக்கு இந்தத் திட்டத்தைச் செயல் படுத்தவேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டது, என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர் களே, பல நகராட்சிகளுக்காகக் கேட்டோம். ஆனால் கிடைத்தது இது தான்.

**ஆனையூர் அருகே அர்ஜீனா நதியில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம்.**

*வினா எண் 436—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா--

சாத்தூர் வட்டம் ஆனையூர் அருகே அர்ஜுனா நதியில் நீர்த்தேக்கம் கட்டும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: அர்ஜுனா நதியின் குறுக்கே, விருதுநகர் வட்டம் ஆனைக்குட்டம் கிராமத்திற்கு அருகிலும், சாத்தூர் வட்டம் கோல்வார்பட்டி கிராமத்திற்கு அருகிலும், ஆக இரண்டு நீர்த்தேக்கங்கள் கட்டும் திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. ஆனையூர் அருகே நீர்த்தேக்கம் அமைக்க திட்டம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, இந்த அர்ஜுனா நதி ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியிலே தான் உற்பத்தியாகிறது. அங்கே இளந்தகுளம் அருகிலே, இந்த நீர்த் தேக்கம் கட்டப்படுவதற்காக அரசு அதிகாரிகள் ஆய்வு செய்தார்கள், ஆதலால் விரைவில் அரசு அதிகாரிகள் மறுபடியும் ஆய்வு செய்து, வத்திராயிருப்பு—இளந்தகுளத்திலே நீர்த்தேக்கம் கட்டுவதற்காக அரசு ஆய்வு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இதுவரை அப்படிப்பட்ட எண்ணம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதுகுறித்து தனியாக ஒரு வேண்டுகோள் கொடுப்பார்களேயானால், அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் வர்களே, சுமார் 3 வருடங்களுக்கு முன்னால் இதே சட்டசபையில், இளந்த குளம், அருகில, இந்த அர்ஜுனா நதியில் நீர்த்தேக்கம் கட்டு வதற்கு, எனக்கு சட்டசபையின் வாயிலாக கொடுக்கப்பட் டுள்ளது. ஆனால் அமைச்சரவர்கள் அரசு அதிகாரிகளுக்கு அவசர உத்தரவை இட்டு, இதில் ஆய்வு செய்ய உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேவ.



திரு. என். பெருமாள்: ஆனைக்குட்டம் அருகிலே ஒரு அணைக்கட்டு கட்டப்படுவதாக அறிவிக்கப்பட்டு, வேலை தொடங்கப்பட்டு வருகிறது. அந்த சாத்தூர் வட்டத்திலே நீர்த்தேக்கத் திட்டம் எந்த நிலையில் உள்ளது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு. திரு. கே. இராஜா முகமது: ஆனைக்குட்டம் எருக் கங்குடியின் ஒருபகுதியிலே வந்த காரணத்தால், இதற்கு முன்பு இந்தப் பேரவையிலும்கூட ஆனைக்குட்டம் திட்டம் தான் என்ற கருத்துகூட சொல்லப்பட்டது. அதற்கு ஒரு திருத்த அறிக்கை பேரவைக்கு வைத்திருக்கிறோம். இப்போது அர்ஜுனா நதிக்கு அருகிலே ஆனைக்குட்டம் கிராமத்திலும், சாத்தூர் வட்டத்தில், கோல்வார்பட்டி கிராமத்திலும், இரண்டு பெரிய நீர்த் தேக்கங்கள் கட்டுவதற்காக அரசு முயற்சி எடுத்திருக்கிறது.

**கோவை மாவட்டத்தில் ஆய்விலுள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள்.**

*வினா எண் 437—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) கோவை மாவட்டத்தில் ஆய்வில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள் என்ன?

(ஆ) கடந்த பத்து ஆண்டுகளில் இம்மாவட்டத்தில் கோவை, அவினாசி, மேட்டுப்பாளையம் ஆகிய தாலுகாக்களில் புதிய திட்டங்கள் ஏதேனும் நிறைவேற்றப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) (1) சங்கனூர்ப் பள்ளம் ஓடையின் குறுக்கே அணை கட்டி சின்னவேடம்பட்டி கண்மாய்க்கு நீர் அளிக்க வகை செய்யும் திட்டத்தின் ஆய்வினை முடித்து தலைமைப் பொறியாளர் (ஆய்வு) ஒரு மதிப்பீட்டினை அரசுக்கு அனுப்பியுள்ளார். இதன் மீது வேளாண்மை இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர், நில நிர்வாக ஆணையாளர் ஆகியோரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

(2) கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி தாலுக்காவில் சோலனூர் ஊருணி நீர்ப்பாசன திட்டம் தலைமைப் பொறி யாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில் உள்ளது.

(ஆ) கடந்த பத்து ஆண்டுகளில் கோவை வட்டத்தில் 29 சிறு பாசனத் திட்டங்களும், அவினாசி, மற்றும் மேட்டுப் பாளையம் வட்டங்களில் 27 சிறு பாசனத் திட்டங்களும் மேற் கொள்ளப்பட்டன.

(முற்பகல் 9-30)

திரு. மா. சின்னராசு: நிலத்தடி நீரைக் கொண்டுவர கோவை, அவினாசி, மேட்டுப்பாளையம் ஆகிய தாலுக்காக்களில் எடுக்கப்பட்ட திட்டங்களில், ஆய்வில் இருக்கிற திட்டங்களில் நிறைவேற்றப்பட இருக்கிற திட்டங்கள் என்று சொல்லப்பட்டிருக்கிற நொய்யலில், பூண்டி நீர்த்தேக்கத் திட்டத்தில், ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவைகள் இந்த நிதியாண்டில் நிறைவேற்றப்படுமளவிற்கு, ஆய்வுப் பணிகள் முடிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பொதுவாக இப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட 2 திட்டங்களுமே வனத்துறையினுடைய அனுமதி பெற்று, இப்பொழுது ஆய்வு செய்வதற்காக நம்முடைய அதிகாரிகளுக்கு வந்து பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். ஒருவேளை ஆய்வுப் பணிகளை விரைவாக முடித்தால், உறுதியாக அடுத்த நிதி ஆண்டிற்குள், முயற்சிகளை எடுத்து, செயல்படுத்துவதற்காக அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே அங்கே ப்ளோ ரிவர்ஸ் ஓடுகிறது. நதிகள் அதிகம் இல்லாத காரணத்தால், நீர் ஊற்று அதிகம் ஏற்படுத்துவதற்கு, சிறிய அணைகளை, நீர்த்தேக்கங்களை ஏற்படுத்துவதுதான் ஒரே வழியாகும். ஆனால் பொதுப்பணித் துறையிலே அந்த பி.சி ரேஷியோ கட்டுப்படியாகவில்லை என்ற கருத்தைக் கூறி சிறிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பல காலமாக தடையாக இருந்த காரணத்தாலே கோவை மாவட்டத்திலே பல திட்டங்கள், உத்தேசிக்கப்பட்ட பல திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை அமைச்சர் அவர்கள் பல முறை இந்த பி சி. ரேஷியோ இது போன்ற வறட்சிப் பகுதிகளுக்கு தளர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட அந்தப் பொதுப்பணித் துறையிலே உள்ள நில ஆய்வாளர்கள் எந்தத் திட்டமாக இருந்தாலும், அந்த பி.சி, ரேஷியோ கட்டுப்படியாகவில்லை என்று அவர்கள் மறுத்துவருவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? இனிமேல் அந்தப் பகுதிகளில் திட்டங்கள் நிறைவேற்றுகின்றபோது, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிற அந்த பி.சி. ரேஷியோ தளத்துவதற்கான அறிவுரைகளை துறைக்கு அனுப்புவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

- - - -



அவர்களுக்குத்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகாரிகள் என்ன கருதிக் கொண்டு இருந்தாலும், அந்த ஆய்வுப் பணிகளை முடித்து அந்தக் கருத்துருவை உடனடியாக செயல்படுத்துவதற்கு இறங்குவார்களானால் முடிவை நாம் விரைவாக எடுத்து, அந்த வறண்ட பகுதிகளுக்கு பி.சி. ரேஷியோ என்பது ஒரு தடையாக இருக்குமானால், அதைத் தளர்த்தி அந்த திட்டங்களை நிறைவேற்றுவதற்கான உத்தரவுகளை இடுவோம் எனறு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான பேரூர் தொகுதியில் பாலத்துறை என்ற நீர்த்தேக்கம் இருக்கிறது. அதை அமைச்சர் அவர்கள் வந்து பார்வையிட்டார்கள். அது ஆய்வில் உள்ளதா? அல்லது முடியும் தருவாயில் உள்ளதா? பாண்டிய நாட்டுக்கு பல திட்டங்களைத் தந்த அமைச்சர் அவர்கள் சேர நாட்டுக்கும் இந்த சிறிய திட்டங்களையாவது நிறைவேற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் உள்ள இரண்டு திட்டங்களை இப்போது விரிவுபடுத்த வேண்டுமென்று தல அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு இருக்கிறோம். வேறு சில பகுதிகளிலேயும் சிறிய சிறிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். ஏற்கனவே பாசனத் துறையின் பொறுப்பிலே இருந்த சேர நாட்டுக்காரரான, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், நிறை அணைகளைக் கட்டுவதற்கு பல்வேறு உத்தரவுகளை போட்ட காரணத்தால், தான் இப்போது சேர நாடு கவனிக்கப்பட்டு வருகிறது.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, சின்ன வாடம்பட்டிக்குளம் என்ற அந்த திட்டம் கட்டுவதற்கான ஏற்பாடுகள் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த திட்டம் 15 வருடங்களுக்கு முன்பே யோசனையில் இருந்தது. அப்போது உங்கள் ஆட்சி இல்லை. ஆனால் வந்ததற்குப் பிறகாவது, அதைச் சீக்கிரமாக முடிக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் வந்து அந்த இடத்தையெல்லாம் பார்வையிட்டார்கள். இநிலே லாபம் இருக்கிறது என்று தெரிகிறது. இது எவ்வளவு காலத்திலே முடிக்கப்படும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த பட்ஜெட்டிலேயாவது பணம் ஒதுக்கி அதற்கு ஏற்பாடு நடக்குமா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட்டுக்கும் நம்முடைய திட்டத்திற்கும் எந்த விதமான பிரச்னை இல்லை. ஒரு கருத்துக்காகச் சொல்கிறேன். அந்த திட்டத்தின் ஆய்வுப் பணிகள் முடிந்து திட்ட மதிப்பீடுகள்

நமக்கு எப்போது வருகிறதோ, அப்போது ஒப்புதல் அளித்து திட்டத்தை எடுத்துக்கொள்கிறோம். அதிலே நமக்கு ஒன்றும் பிரச்னைகள் கிடையாது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ள அந்த இடத்திற்கு நானும், மாண்புமிகு உறுப்பினர் சின்னராஜ் போன்றவர்களோடும், அதிகாரிகளோடும் சென்று பார்த்தேன். முதலிலே அதை ஆய்வு செய்வதாகவே இல்லை. அவரவர்கள் ஒரு கருத்தை வைத்துக்கொண்டு நீண்ட காலமாக அதைத் தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று நானே சென்று ஆய்வு செய்து இப்போது ஆய்வுப் பணிகள் எல்லாம் முடிந்து, கிட்டத்தட்ட 266 லட்சம் ரூபாய் மதிப்பீடு வந்திருக்கிறது. இதனால் 512 ஏக்கர்களுக்கு பாசன வசதி ஏற்பட இருக்கிறது. இதைவிட கோவை நகரத்திலே சில நேரங்களிலே, வெள்ளக்காலங்களிலே ஏற்படக்கூடிய சில ஆபத்துக்களை தடுப்பதற்கும் இந்தத் திட்டத்திலே ஒரு நோக்குமாக நாம் கொண்டிருக்கிற காரணத்தால், நிச்சயமாக மிக விரைவிலே இதைச் செய்வதற்கு அரசு முனைந்திருக்கிற என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற நேரத்திலே கோவை மாவட்டத்திலே, 29 சிறிய பாசனத் திட்டங்கள் ஆய்வில் இருப்பதாகச் சொல்லப்பட்டது. கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய அவினாசி, மேட்டுப்பாளையம் போன்ற பகுதிகள் வறட்சிப் பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால், இந்த 29 சிறிய பாசனத் திட்டங்களில் அவினாசி, மேட்டுப்பாளையம் போன்ற பகுதிகளுக்கும் ஏதாவது திட்டங்கள் இதில் இருக்கின்றதா. அப்படியானால் அது எப்போது அமுல்படுத்தப்படும் என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பதிலில் கடந்த 10 ஆண்டுகளில் கோவை வட்டத்திலே உள்ள 29 சிறு பாசனத் திட்டங்களும், அவினாசி, மேட்டுப்பாளையம் வட்டங்களில் 27 சிறு பாசனத் திட்டங்களும் மேற்கொண்டு முடிக்கப்பட இருக்கின்றன என்று பதில்தான் சொல்லப்பட்டது. வேறு சில திட்டங்களும் ஆய்வில் இருக்கிறது. இதுகுறித்து தனியாகக் கேள்வி போட்டால் மொத்தம் எத்தனை திட்டங்கள், எந்த எந்த பகுதிகளில் நிறைவேற்றப்படும் என்று சொல்ல முடியும். எவ்வளவு அதற்காகச் செலவழிக்கப்பட்டது? பயன் பெறும் ஏக்கர்கள் எவ்வளவு? அடுத்து செயல்படுத்தப்பட இருக்கின்ற திட்டத்தின் பயன்கள் எப்படி இருக்கும் என்பதைப் பற்றியெல்லாம்கூட விரிவாக அறிக்கை கொடுக்கலாம். எனவே, தனியாக ஒரு கேள்வி கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.



திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறுகின்ற நேரத்தில், சேர நாட்டைச் சேர்ந்த அமைச்சர் அந்தத் துறைக்கு அமைச்சராக இருந்த காலத்தில் அதற்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு விட்டன. எனவே இப்பொழுது பாண்டிய நாட்டைச் சேர்ந்து அமைச்சர் இருப்பதால் பாண்டிய நாட்டுக்குத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்ற நிலையில் இருக்கிறது என்று சொன்னார்கள். அப்படியானால் சோழ நாட்டுக்கான திட்டங்கள் எப்பொழுது ஆய்வு செய்யப்பட்டு, திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, சோழ நாட்டுக்கு ஒரு வரலாறு உண்டு. கல்லணை கட்டப்பட்டதே அந்த நாட்டிலே தான். ஆகவே, கிட்டத்தட்ட ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பேயே நீங்கள் திட்டங்களை நிறைவேற்றி விட்ட காரணத்தினால்தான், அடுத்து சேரநாடு, இப்பொழுது பாண்டிய நாடு என்று வருகின்றன.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, சேர நாடு, பாண்டிய நாடு, சோழ நாடு என்றெல்லாம் இங்கே குறிப்பிடப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பல்லவ நாடு பாக்கியிருக்கிறது.

திரு. ப. நெடுமாறன்: ஏற்கனவே சில பகுதிகள் கேரளத்தோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது, சேர நாட்டுப் பகுதிகள் என்று நாமே சொல்லுகின்ற காரணத்தினால் அந்தப் பகுதிகளின் மீது கேரளம் உரிமை கொண்டாடுகின்ற வாய்ப்பு இருப்பதை அமைச்சரவர்கள் அறிந்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, தென் மாவட்டங்களில் ஒருவருக்கொருவர் இப்படிப் பழம் வரலாற்றைப் பேசுவது நல்லது என்று நான் இந்த நேரத்தில் நினைத்துக் கொள்கிறேன்.

### மேமாத்தூர் விருத்தாசலம் அணைகளுக்கு சாத்தனூர் அணையிலிருந்து தண்ணீர் விடும் திட்டம்.

* வினா எண் 438—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு பொதுப்பணி (பாசனத்) துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேமாத்தூர், விருத்தாசலம் அணைகளுக்கு சாத்தனூர் அணையிலிருந்து நீர் விடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உண்டா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராசா முகமது: (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

திரு. ஆர். தியாகராசன்: மரியாதைக்குரிய சபாநாயகர் அவர்களே, அமைச்சரவர்கள் விருத்தாசலம் பகுதியிலே உள்ள மயூரா, மணிமுத்தா என்ற அணைகள் கட்டப்பட்டு கீழே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மறுவாழ்வு அளிக்கின்ற வகையிலே, சாத்தனூர் டேமிலிருந்து இப்பொழுது புதிதாக வந்தபுரம் கால்வாய் வழியாக மணிமுத்தா நதிக்கு அந்த நீரைக் கொடுத்து, இத்தனை கன அடி என்று கொடுத்து பாதிக்கப்பட்டுள்ள பகுதிக்குக் கொடுப்பதாக உறுதி அளித்தார்கள். ஆனால் அந்த உறுதிமொழியின் அடிப்படையிலே இந்த இரண்டாண்டுக் காலமாக தண்ணீர் அங்கே விடப்படவில்லை. எனவே, பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு வேறு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்வார்களா? அந்த உபரி நீரை அந்த அணையிலே தடுக்க வேண்டுமென்பது அமைச்சருடைய பதிலும், அரசாங்கத்தின் திட்டமும் ஆகும். ஆனால் உபரி தண்ணீர் என்றால் அதிகமாக வரும்போது தான் தண்ணீர் கிடைக்கும். கொஞ்சமாக மழை பெய்தால் அந்தத் தண்ணீர் பூராவையும் அவர்களே வைத்துக் கொள்வார்கள். அப்பொழுது சுத்தமாக எங்கள் பகுதிக்கு வரவில்லை. தஞ்சை மாவட்டத்தில் அந்த அணை கட்டுவதற்கு முன்பு நல்ல விளைச்சலைக் கொண்ட ஏரியா எங்கள் ஏரியா. எனவே, இப்பொழுது பாதிக்கப்பட்டிருக்கின்றவர்கள் மறுவாழ்வு அளிக்கின்ற வகையிலே ஏற்கனவே கொடுத்த உறுதிமொழியை நிறைவேற்றுகின்ற முறையிலே, வலது புறக் கால்வாய் வழியாக தண்ணீர் விடுவதாக உறுதிமொழி அளித்தார்களே, அந்த உறுதிமொழி என்னவாயிற்று என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராசா முகமது: தலைவரவர்களே. உறுதிமொழியை கிட்டத்தட்ட நிலைமைகளை அனுசரித்துக் கொடுத்திருப்போம். அப்படிக் கொடுத்திருந்தால் அந்த உறுதிமொழியிலிருந்து இந்த அரசு நிச்சயமாகப் பின் வாங்காது. அதை நான் அவைக் குறிப்பிலேயிருந்துகூட எப்படி உறுதிமொழி கொடுத்தேன், எந்தச் சந்தர்ப்பத்திலே கொடுத்தேன் என்பதைப் பார்த்துக் கொள்கிறேன்.

ஆனால், பொதுவாக மணி நதியில் வறட்சி நிலைமையிருக்கும் போதும் பெண்ணையாறு வெள்ள நீர் தேவைக்கு மேல் உபரியாகும் போதும் சாத்தனூர் அணையின் கீழ் உள்ள அணைக்கட்டுகள் நீர் நிரம்பி வழியும் போது மட்டும் சாத்தனூர் வலது



கரை கால்வாய் மூலமாக, கிளைக் கால்வாய் மூலமாக, தாமராசபுரம் அணைக்கட்டு கால்வாய்கள் மூலமாகப் பயன் அடையும் குளங்களுக்கு நீர் கொண்டு செல்ல 6—7—1979 தேதியிட்ட அரசு ஆணை ஏற்கனவே, 1979-லேயே இடப்பட்டிருக்கிறது.

அதைத்தான் தாங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்று கருதுகிறேன். உபரி நீர் கிடைத்தால்தான் அங்கே செல்ல முடியும். உபரி நீர் இல்லை என்றால், மற்றப் பகுதிகளில் விவசாயம் நடக்கிறது, அந்த விவசாயிகளுக்கு நாம் இந்த அணைத் திட்டத்தை ஏற்படுத்துகின்றபொழுது உறுதி மொழிகளை, சில சட்டதிட்டங்களையெல்லாம் உருவாக்கியிருக்கிறோம். மாற்று ஏற்பாடு என்ன என்றால், ஏற்கனவே நெய்வேலி இரண்டாவது சுரங்கம் என்ற அந்தப் பணி வரும்பொழுது நான் ஏற்கனவே சொன்னேன், உங்களுடைய கோரிக்கைகள் முழுவதுமாகக் கவனிக்கப்படும். அந்த அடிப்படையில் கவனிக்கும். இதில் உபரி நீர் இருந்தால் கொடுக்க முடியும் என்ற நிலைமை இருக்கிறது.

வேறு எந்த அடிப்படையிலே உறுதிமொழி கொடுத்திருக்கிறேன் என்பதை நானும் பார்த்துத் தங்களுக்குத் தகவல் தருகிறேன்.

(முற்பகல் 9-40)

திரு. ஆர். தியாகராசன்: தலைவரவர்களே, சாத்தனூர் டாமில் இருந்து கொடுப்பது எப்படி இருந்தாலும் அணை கட்டும்போது உபரி நீரைத்தான் தடுக்க வேண்டுமென்று சொல்லியிருந்தார்கள், அதன்படி உத்தரவாதம் கொடுத்திருந்தார்கள். இந்த ஆண்டு உபரி நீர் வரவில்லை. கொஞ்சம் தான் தண்ணீர் வந்தது. அந்தத் தண்ணீரையும் அதிகாரிகள் பூராவையும் மூன்று அணைகளிலும் தடுத்து நிறுத்தி விட்டார்கள். அதனால் கீழே இருக்கிற 14 அணைகளும் பாதிக்கப்பட்டன. உபரி நீரைத்தான் தடுப்போம் என்று உறுதி கொடுத்துவிட்டு உபரி நீரே வராமல், கொஞ்சம் வந்த தண்ணீரையும் தடுத்துவிட்டதால் நாங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றோம்; எங்கள் பிரச்சனையைத் தீர்க்க அமைச்சரவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. கே. இராசா முகமது: தலைவரவர்களே, அதிகாரிகள் தடுத்து விட்டார்கள் என்றால் அதை அவர்களுடைய வீட்டுக்கு எடுத்துச் செல்ல முடியாது. பொதுவாக அங்கே இருக்கக்கூடிய நிலைமைகளை ஆய்ந்து பார்த்துதான் செய்திருப்பார்கள். உங்கள் தொகுதியிலும் விவசாயிகள் இருக்கிறார்கள், பக்கத்துத் தொகுதியிலும் விவசாயிகள் இருக்கிறார்கள். உங்கள் தொகுதியில் வறண்ட நிலைமையைப் போக்க அரசு தீவிரமாக கவனம் செலுத்தி வருகிறது. உபரி நீர் இருந்தால் தான் கொடுக்க முடியும் என்று 1979 ஆம் ஆண்டு ஒரு கொள்கை முடிவு எடுக்கப்பட்டது. அந்த அடிப்படையில்தான் சால்வாய் வெட்டப்

பட்டது. உபரி நீர் இல்லாத காலத்தில் உங்கள் பிரச்சனையை எப்படி போக்க முடியும் என்று பொறியியல் அதிகாரிகளுடன் கலந்து பேசி, உங்களுக்குத் தகவல் தருகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, சாத்தனூர் நீர்த் தேக்கம் கட்டுவதற்கு முன்னதாக நெல்லிக்குப்பம் தொகுதி, பண்ருட்டி தொகுதி, கண்டமங்கலம் பகுதிகளிலுள்ள ஏரிகள், பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரியில் உள்ள பெரிய ஏரியான பாகூர் ஏரி ஆகிய ஏரிகள் எல்லாம் பெண்ணையாற்றிலிருந்து வருகின்ற தண்ணீரால் நிரம்பி வந்தன. சாத்தனூர் நீர்த் தேக்கம் கட்டிய பிறகு பல ஆண்டுகளாக இந்த ஏரிகளுக்கு தண்ணீர் வரவில்லை. நிலைமை இப்படி இருக்க சாத்தனூர் நீர்த் தேக்கத்திலிருந்து இன்னும் பல ஏரிகளுக்கு தண்ணீர் அனுப்புவது எங்களுடைய 'ரைப்பேரியன் ரைட்ஸ்' என்ற உரிமையைப் பாதிக்காதா? இருக்கக்கூடிய தண்ணீரை எங்களுடைய ஏரிகளுக்கு எல்லாம் நிரப்பிய பிறகு மற்ற இடங்களுக்கு அனுப்புவதற்கும், அதைப்போன்று பாதிக்கப்பட்டுள்ள ஏறத்தாழ 50-க்கு மேற்பட்ட பி.டபிள்யூ.டி. ஏரிகளுக்கும் நீரை விட்டு நிரப்பி ஸ்டேபுலைஸ் செய்வதற்கும் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, வலது புறக் கால்வாய் கட்டும் பணி அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்டது. அப்போது அந்த கருத்து வந்த காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இனிமேல் புதிய பாசனத் திட்டங்களை மேற்கொள்ளும்போது 18 மாதங்களுக்கு ஒருமுறை அல்லது வருடத்திற்கு ஒருமுறை என்ற அளவுக்கு கூடுதல் நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கும் திட்டங்களைச் சொல்லவேண்டும். Dry should become irrigated dry என்கின்ற அளவிலே ஒரு திட்டத்தைச் செய்தால் நலமாக இருக்கும் என்றார்கள். இருக்கிற நீரைக் கொண்டு கூடுதல் ஏரிகளுக்குக் கொடுப்பதற்காக வலதுபுறக் கால்வாய் வெட்டப்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மாதிரி அவர்களுடைய 'ரைப்பேரியன் ரைட்ஸ்' பாதிக்கப்படக்கூடாது என்பது தமிழக அரசின் கொள்கை. காவேரி நீர்ப் பிரச்சனையிலும் இந்தக் கொள்கைதான் இருக்கிறது. இந்த பிரச்சனைக்கு ஒரு முடிவு காண அந்தப் பகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து, அதிகாரிகளையும் அங்கே வரவழைத்து, சாத்தனூர் அணை கட்டுவதற்கு முன்பு இருந்த நிலைமை, அதற்கு பின்னால் ஏற்பட்டுள்ள நிலைமை ஆகியவற்றை விவாதித்து, ஒரு கருத்தரங்கு மூலம் கேட்டு முடிவு செய்யலாம் என்று கருதியிருக்கிறேன். இந்த சட்டமன்றக் கூட்டம் முடிந்த பிறகு பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து அந்த கருத்தரங்கை நடத்துவது உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். அந்த அடிப்படையிலே அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.



திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: தலைவரவர்களே, அமராவதியில் உடுமலைப்பேட்டையில் அணை கட்டும் போது திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நாங்கள் எதிர்த்தோம்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சாத்தனூர் அணையைப் பற்றியது.

**கொங்கன் கால்வாய் மற்றும் அதன் இளைக் கால்வாய்களை நவீனப்படுத்தும் திட்டம்.**

* வினா எண் 439—திரு எஸ். இராசாராமன்: மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் பாபநாசம் ஒன்றியத்தில் உள்ள கொங்கன் கால்வாயையும் மற்றும் அதன் கிளைக் கால்வாய்களையும் தண்ணீர் கசியாமல் நவீனப்படுத்துவதற்கு திட்டம் ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. எஸ். இராசாராமன்: தலைவரவர்களே, இந்த ஆண்டு தண்ணீர் வரும்போது கசிவு ஏற்பட்டு, அங்கே கரையோரமாக இருக்கிற கிராமவாசிகள் அந்தத் தண்ணீரை பயன்படுத்த இரு கரைகளையும் உடைத்து, அதன் காரணமாக கீழ்ப்பகுதியில் இருக்கிற கிராமவாசிகளுக்கு தண்ணீர் கிடைக்காமல் செய்தது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.கே. இராஜாமுகமது: அது குறித்து என்னிடத்தில் குறிப்புகள் இல்லை. ஒருவேளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி ஒரு புகாரை கொடுத்திருப்பார்களேயானால் கவனிக்கலாம். அப்படி கொடுக்காவிட்டாலும் கூட, அவர் இப்போது கூறியதையே புகாராக கருதி அது குறித்து விசாரிக்கலாம்.

திரு. எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் தஞ்சை மாவட்டத்தில் இது பற்றி கவனிக்கும் என்ஜீனியர் அவர்களிடம் ஒரு புகாரை கொடுத்திருக்கிறதோடு மட்டுமல்லாமல், அவரையே அழைத்து வந்து அந்த குறைபாடுகளை சுட்டிக்காட்டியிருக்கிறேன். அதுமட்டுமில்லாமல், அந்தப் பகுதியிலே வேலை செய்கிற லஸ்கர்கள், நாங்கள் நல்ல முறையில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும் என்றால், கிராமத்தில் உள்ள அத்தனை பேர்களும் வசூல் செய்து மாமூல் கொடுத்தால் தான்

[1983 மார்ச் 16

அந்த கிராமங்களுக்கு தண்ணீர் கிடைக்கும் என்று கூறியதை நான் அந்த எக்ஸிகியூட்டிவ் என்ஜினீயர் அவர்களிடத்திலேயே தெரிவித்திருக்கின்றேன் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். (விடை இல்லை.)

திரு.ந. சிவஞானம்: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம் காவிரி, பெண்ணாறு ஆகிய ஆறுகளில் நவீனப்படுத்தும் திட்டம் அரசினால் நடைப் பெற்றுக் கொண்டு வருகிறது ஆனால் கல்லணை கால்வாய்களை நவீனப்படுத்தும் திட்டம் அமுலில் இல்லை. அதைச் செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக் கேள்வி போடுங்கள்.

திரு, இரா. இராமமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதி பகுதிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் இந்தப் பகுதிகளை நவீனப்படுத்துவதற்கு எவ்வளவு தொகை இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. போதுமான தொகை ஒதுக்கப் படவில்லை. என அதிகாரிகள் மட்டத்திலே பேசப் படுகிறதே. அந்த குறை நீக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே இராஜா முகமது: தலைவர் அவர்களே, இது மூலக்கேள்விக்கு தொடர்பான கேள்வியாக இல்லா விட்டாலும் கூட, குற்றச்சாட்டாக வைத்து விட்ட காரணத்தால் பதில் சொல்கிறேன். காவிரி நதிநீர் டெல்ட்டாப் பகுதிகளை நவீனப்படுத்தும் திட்டத்திற்காக உலக வங்கியின் உதவியோடு கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் அளவில் திட்டமிட்டு இந்தப் பெரிய திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். இந்த திட்டம் நிறைவேற்றப்படுகிற வகையில், இடையிலே காவிரி யினுடைய சில பகுதிகளையும் நவீனப்படுத்த வேண்டும் என்பதற் காக, தோராயமாக 4, 5 கோடி ரூபாயை ஒதுக்கிக் கொண்டு வருகிறோம். அது ஒவ்வொரு ஆண்டும், ஒவ்வொரு பகுதிக்குச் செய்யப்படுகிறது. சென்ற ஆண்டு இந்த திட்டங்களை அதிகாரிகளே, டெண்டர் போடாமலே கொடுக்கக் கூடிய ஒரு நிலைமை வேண்டும் என்று கேட்டபோது அது குறித்து பரிசீலிப்பதற்காக முடிவு எடுத்த காரணத்தால், கடந்த 4, 5 மாதங்களாக அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதே தவிர, ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

### உடல் ஊனமுற்றோருக்கு சுயதொழில் செய்ய மானியம் வழங்கும் திட்டம்

*வினா எண். 440—திரு.செ. செம்மலை: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றோர்க்கென்று சுயதொழில் செய்ய மானியம் வழங்கப்படுகிறதா?



1983 மார்ச் 16]

(ஆ) ஆம் எனில் 1980-1981ம் ஆண்டு அப்படி எத்தனை பேருக்கு மானியம் வழங்கப்பட்டது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (அ) ஆம்

(ஆ) 1980-81ல் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மானியம் பெற்று பெட்டிக்கடை வைத்து சுய வேலை வாய்ப்பு பெறப்பட்டவர்களின் எண்ணிக்கை 221.

ஊனமுற்றோர் மாநில வாரியத்தின் மூலமாக சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மானியம் பெற்று பயனடைந்தோரின் எண்ணிக்கை 86. .. ..

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து விட்டு வேலையின்றி, வேலை செய்கிற தகுதி உடைய, உடல் ஊனம் உற்றவர்களின் எண்ணிக்கை தமிழகத்தில் கணக்கிடப்பட்டுள்ளதா? அப்படி என்றால் எத்தனை பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள். இன்னும் எத்தனை பேர்கள் வேலை வாய்ப்புப் பெற வேண்டிய நிலையில் இருக் கிறார்கள் என்கிற கணக்கையும், அவர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பளிக்க அரசிடம் சிறப்புத்திட்டம் ஏதாவது செயற்குறிப்பில் இருக்கிறதா என்கிற விவரத்தையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி. கோமதி சீனிவாசன்; மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக் கேள்வி சுயவேலை வாய்ப்புத் திட்டத்தைப் பற்றியது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேலை வாய்ப்பு திட்டத்தைப்பற்றிக் கேட்கிறார்கள். அதாவது படித்து வேலை வாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு செய்தவர்களின் எண்ணிக்கையைக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அந்த விவரம் இல்லை. சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் அடிப் படையில் 5ஆயிரம் பேர்கள் பயனடைந்திருக்கிறார்கள். அரசு மானியம் பெற்று சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ், உடல் ஊனமுற்றவர்கள் 500 பேர்கள் பயனடைந்திருக்கிறார்கள்.

திரு.செ.செம்மலை: தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர் களுக்கு உதவி செய்கிற திட்டத்திற்காக இவ்வளவு என்று தொகை ஒதுக்கீடு வருகிறது. ஆனால் அந்தத் தொகை முழுவது மாக செலவிட முடிவதில்லை. என்ற கருத்து இருந்து வருகிறது. அதற்கு காரணம் அவர்களுக்கு விதிக்கப்படுகிறது. நிபந்தனை என்று சொல்லப்படுகிறது. அதாவது வயது இவ்வளவு இருக்க வேண்டும், டிஸ்எபிலிட்டிஸ் என்பது இந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே ஊனம் உற்ற அத்தனை பேர்களுக்கும் அந்த உதவித் தொகை கிடைக்கின்ற வகையில் அந்த நிபந்தனைகளைத் தளர்த்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1983 மார்ச் 16

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனம் உற்றவர்களுக்கு, இந்த சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையிலே 1,000 ரூபாய்க்கு அவர்கள் வங்கிகளின் மூலமாக கடன் பெற்றால், 250 ரூபாய் அரசு மானியம் வழங்குகிறது. ஆயிரத்திற்கு மேற்பட்ட அவர்கள் வங்கிகளின் மூலமாக கடன் பெற்று பெட்டிக் கடை போன்றவை வைக்க வேண்டும் என்றால் அதற்கு 500 ரூபாயை அரசு மானியமாக தருகின்றது. அதுமட்டுமல்லாமல், ஒரு வரையறை வைத்து வங்கிகள் மூலமாக அவர்களுக்கு கடன் பெறுவதற்கு சரிசமமான மானியம்—ஆயிரம் ரூபாய்கள் என்றால், அதே ஆயிரம் ரூபாய்க்கு மானியம் கொடுத்து, பழக்கடைகள் வெற்றிலைப் பாக்கு கடைகள், இன்னும் மீன்கடைகள் போன்ற கடைகளில் அவர்கள் எதை வைக்க வேண்டும் என்று கேட்கிறார்களோ, அந்த அடிப்படையில் இந்த அரசு உதவிசெய்துவருகிறது. அதன் மூலமாக நான் முன்பே குறிப்பிட்டபடி 5 ஆயிரம் பேர்கள் பயனடைந்து இருக்கிறார்கள். பெட்டி கடைகள் மூலம் 500 பேர் பயனடைந்து இருக்கிறார்கள். குறிப்பாக சென்னையில் 170 பேர் பயனடைந்து இருக்கிறார்கள் இதற்கு கொடுக்கப்பட்ட தொகை 5இலட்சம் ரூபாயாக இருக்கின்றது. இந்த வகையில் இது செயல் படுத்தப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமிற்றவர்களைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களுடைய பெயராலே கடன்களை வாங்கி மற்றவர்கள் அனுபவித்து வருவது அரசுக்குத் தெரியுமா? அது போன்ற தகவல் வந்திருக்கிறதா? அப்படியானால் அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களை வைத்துக் கொண்டு வேறு ஒரு நபர் சலுகைகளை பெறுவது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி ஒன்றும் இதுவரை தகவல் அரசுக்கு வரவில்லை. ஏதோ ஒரு அடிப்படையில் அவர்கள் கூறுகிறார்கள். அதற்காக தான் உடல் ஊனமுற்றவர்களுக்கு என்று ஒரு வரையறை வைத்து இந்த மாதிரி அவர்கள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப் பட்டு இருக்கின்றது. இப்படிப்பட்ட ஊனமுற்றோர்களாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையை வைத்து அந்த அத்தாட்சியின் பேரில் தான் அவர்களுக்கு அரசு மானியம் கொடுக்கின்றது. தேசிய வங்கிகளின் மூலமாகவும் கடன் கொடுக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1983 மார்ச் 16]

திரு. எல். இளையபெருமாள்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உடல் ஊனமுற்றோர் எல்லோருக்கும் உதவி கிடைக்கின்ற வகையில் மொத்தமாக நபர்களைக் கணக் கெடுத்து அவர்களுக்கு என்று ஒரு சிறப்பான வேலை கொடுக் கின்ற முறையில் ஸ்பெஷல் ஸ்கீம் எடுத்துக் கொண்டு எல்லா ஊனமுற்றவர்களுக்கும் வேலை கொடுப்பதற்கு அரசிடம் திட்டக் குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்; தலைவர் அவர்களே, எல்லா ஊனமுற்றோர்களுக்கும் கொடுப்பது என்றால் அதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்வது மிகவும் சிரமமாக இருக்கும். எனவே ஊனமுற்றவர்களைப் பொறுத்தவரையில் கல்வி அடிப்படையில் அவர்களுக்கு பல்வேறு சலுகைகளைக் கொடுத்து வருகிறோம். அதோடு வேலை வாய்ப்பு அடிப்படையிலும் பல்வேறு சலுகைகளை கொடுத்து வருகிறோம். அவர்களுக்கு என தனியாக வேலை வாய்ப்பு அலுவலகம் வைத்து அதன் மூலம் அவர்கள் வேலை வாய்ப்பினை பெறுகிறார்கள். தனியார் நிறுவனங்களிலும் ஊனமுற்றோருக்கு பயிற்சி அளித்து அவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே அதற்கான மானியத் தொகையினை தனியார் நிறுவனங்களுக்குக் கொடுத்து அதன் மூலமாக அங்கேயே அவர்கள் தற்காலிக வேலை வாய்ப்புப் பெறாமல் நிரந்தர வேலை வாய்ப்பு பெற வேண்டும் என்ற எண்ணத்தோடு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இப்படிப் பல வகைகளில் உடல் ஊனமுற்றோருக்காகசலுகைகள் கொடுத்துக் கொண்டு வருகிறோம். இப்படி வேலை வாய்ப்பு முதலிய பல வகைகளில் அவர்களுக்குச் சலுகை கொடுத்து அவர்களை முன்னேற்றுவதற்கான ஏற்பாடுகளை அரசு கையாண்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே உடல் ஊனமுற்றோருக்கு சுய வேலை வாய்ப்பு அடிப்படையில் பல காரியங்களைச் செய்து இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் சாதாரணமாக பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் மூலமாக ஒருவர் ஏழை, வாழவழியில்லாதவர், ஊனமுற்றவர். எனவே அவருக்கு வங்கிகளின் மூலமாக பணம் கொடுக்கலாம் என்று எழுதி அனுப்பினாலும் கூட சில தேசிய மயமாக்கப்பட்ட வங்கி களில் பணம் கொடுப்பதற்கு மறுக்கப்படுகின்றது அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கின்றதா? மேலும் கொடுக்கப்படுகின்ற கடன் தொகை கூட போதுமானதாக இல்லை. எனவே அதிக பட்சம் 5 ஆயிரம் ரூபாய் கொடுத்து உதவுகின்ற வகையில் அரசாங்கம் வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ ஒரு இடத்திலே வங்கி களின் மூலமாக கடன் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள் என்று

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி தா. இராசரம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோருக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் கடன் உதவி செய்யப்பட்டு பெட்டிக்கடைகள் வைக்க உதவி செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மாநகராட்சிகள் போன்றவற்றிக்குச் சொந்தமான பயன்படுத்தப் படாத இடங்களை ஊனமுற்றோருக்கு இனாமாகக்கொடுத்து அந்த இடங்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்வதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா? அல்லது அங்கே கடைகள் கட்டிக் கொடுத்து குறைந்த வாடகை பெறுகின்ற வகையில் ஏற்பாடு செய்து அந்த வகையில் உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை கொடுத்து அந்தக் கடைகளை அவர்களுக்கு வாடகைக்கு கொடுப்பதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்; பேரவைத் தலைவர் அவர்களே, வியாபாரம் நடக்கக் கூடிய இடங்களில் தான் அவர்கள் கடைகளை வைத்து வியாபாரம் செய்வதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்து வருகின்றது. அவர்களிடத்திலே குறைந்த வாடகை வசூலிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள் ஊனமுற்றவர்கள் என்ற அடிப்படையில் அதற்கான முன்னுரிமை கொடுப்பது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊமைகளுக்கு உடல் ஊனமுற்றோர்களுக்கான சலுகைகள் வழங்கும் திட்டம்,

வினா எண்.441— திரு. வேடசந்தூர் வி. பி பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

ஊமைகளுக்கு உடல் ஊனமுற்றவர்களுக்கான அரசு சலுகைகள் வழங்கப்படுகின்றனவா;

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: ஆம் ஊமைகளுக்கு உடல் ஊனமுற்றவர்களுக்கான அரசு சலுகைகள் வழங்கப்படுகின்றன.

திரு. வேடசந்தூர் வி பி. பாலசுப்பிரமணியன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்களுக்கு சலுகைகள் வழங்கப் படுகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஊமைகளுடைய மேம்பாட்டுக்காக அரசு செய்திருக்கின்ற பணிகள் யாவை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய் பேசமுடியாத காது கேட்க முடியாதா ஊனமுற்றவர்களுக்கு தமிழக அரசு 8 சிறப்பு பள்ளிகளையும், அரசு மானியத்துடன் 10 தனியார் பள்ளிகளையும் நடத்தி வருகின்றன. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்கள், மாணவியர்கள் படிப்பதற்கு மத்திய அரசாங்கமும், மநில அரசாங்கமும் உதவித் தொகை கொடுத்து அவர்களுடைய கல்வி முன்னேற்றத்திற்குஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது. சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் மூலமாகவும். வங்கிகளின் மூலமாகவும், கடன் கொடுத்து அரசு மானியம் கொடுத்து பெட்டிக் கடைகளை வைப்பதற்கு ஏற்பாடுகளை செய்து வருகிறது. அதேபோல் தனியார் நிறுவனங் களுக்கும் அரசு உதவித் தொகை கொடுத்து பயிற்சியாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, பயிற்சி பெற்ற பிறகு அங்கேயே நிரந்தரமாக வேலை வாய்ப்பு பெறுகின்ற வகையில் அரசு சலுகை செய்து வருகிறது. மண்டல மறு வாழ்வு நிலையங் களான சென்னை, வேலூர், தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை ஆகிய நிலையங்களில் அவர்கள் எந்த எநத வேலைக்கு தகுதியான வர்கள் என்று தேர்ந்து எடுத்து அதன் மூலமாக தனியார் நிறுவனங்களுக்கோ அல்லது அரசு நிறுவனங்களுக்கோ அனுப்பப் பட்டு வேலை வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. மாநிலத்தில் உள்ள தனியார் நிறுவனங்கள் சிறார்களை பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் பராமரிப்பு தொகையை அரசு வழங்கி வருகிறது. இந்த பிட்டர், ஓயர்மேன் போன்ற வேலை களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு மதுரையில் உள்ள அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் சிறப்பு பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. இதே முறையில் தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவியர்களுக்கு வரையாளர்கள் பதவிகளுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் கடலூரில் உள்ள பெண்கள் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் நிலையம் ஒன்றை ஆரம்பிக்க அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது

திரு. சோ. அழகர்சாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கேள்விக்கும் இதிலே பதில் கேட்கலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த ஊனமுற்றவர்களுக்கு 221 பேர் களுக்கும் இன்னும் 86 பேர்களுக்கும் ஆயிரம் ரூபாய் சுயவேலை செய்வதற்கு அளித்திருக்கிறார்கள். சுயமாக தொழில் நடத்துவது எல்லாத் துறைகளில் உள்ளவர்களுக்கும் கஷ்டம். ஆகவே அவர்கள் தொழில் அமைத்து ஜீவிப்பது மிக கஷ்டம். ஆகவே உண்மையிலேயே மிகப் பெரிய ஊனமான கண்பார்வை அற்றவர்களுக்கு அதாவது எம்.ஏ.படித்தபெண்ணுக்கு 2 ,3 ஆண்டு களாக அமைச்சர் அவர்களிடம் சொல்லி வருகிறார்கள். கல்யாணி என்ற பெண் எம்.ஏ. படித்தவர், ஊனமுற்றவர், கண்பார்வை அற்றவர், விழி இழந்தவர்கள் பள்ளியில் படித்து இதுவரைவேலை கிடைக்கவில்லை. ஆகவே தகுதி இருந்தால் தனியார்களுடைய தொழிற்சாலைகளில் அல்லது அரசு தொழிற்சாலைகளில் வேலை கிடைப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே இப்படிப்பட்ட படித்த,தேர்ச்சிப் பெற்ற ஊனமுற்றவர்களுக்கு

[1983 மார்ச் 16

உடனடியாக அரசு ஏதாவது தொழில் ஒன்றை துவக்கி வேலை கொடுப்பதற்கும், வேலை இல்லை என்றால் மானியம் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்பார்வையற்றவர்கள் படித்து வேலையில்லாமல் அரசு வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தால் அது சீனியார்ட்டி அடிப்படையில் அவர்களுக்கு 50 ரூபாய் உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்று அரசு அறிவித்திருக்கிறது. வாங்கிக் கொண்டும் இருக்கிறார்கள். வேலை வாய்ப்பு பற்றி நான் குறிப்பிட்டதைப் போல சீனியார்ட்டி அடிப்படையில் தான் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்துக் கொண்டு வருகிறோம். தனியார் நிறுவனங்களில் கூட அவர்களை அனுப்பி அரசு மானியம் கொடுத்து வேலை வாய்ப்பு கொடுத்துக் கொண்டுவருகின்றோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்யாணி என்ற ஒரு பெண்ணைப்பற்றி குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு வேலைக்கு ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்ற பெண்களில் சிலர் அழகாகவும் அதே நேரத்தில் அறிவுள்ளவர்களாகவும் படித்தவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களை திருமணம் செய்து கொள்வதற்கு முன் வருகின்ற ஆடவர்களுக்கு கலப்பு திருமணத்திற்கு கொடுக்கிற சலுகையை தர இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதிகோமதி சீனிவாசன்; தலைவர் அவர்களே அதைப்பற்றி அரசு பரிசிலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் பேரவையின் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

(முற்பகல் 10 00)

செங்கல்பட்டு மாவட்டத்தில் உலக வங்கி உதவியுடன் சுகாதார பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கும் திட்டம்.

வினா எண் 442 திரு. பெ. சு. திருவேங்கடம் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981–1982, 1982-1983ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் உலக வங்கி உதவியுடன் சுகாதார பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) அதில் எந்தவிதமான பயிற்சி அளிக்கப்படுகிறது?

(ஈ) ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?



1983 மார்ச் 16]

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) 1980–82ல் செங்கல்பட்டு மாவட்டத்தில் உலக வங்கி உதவியுடன் சுகாதார பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டு ஒன்பது ஊரக சுகாதார பயிற்சி நிலையங்களும், காஞ்சிபுரத்தில் ஒரு சுகாதார பணியாளர் பயிற்சி பள்ளியும் நிறுவப்பட்டுள்ளன. 1982-83ல் புதிதாக ஏதும் ஆரம்பிக்கப்படவில்லை.

(இ) பல்நோக்கு சுகாதாரப் பெண்பணியாளர்களுக்கு காஞ்சிபுரத்தில் உள்ள சுகாதார பணியாளர் பயிற்சி பள்ளியில் 12 மாதங்கள் பல்வேறு பொது சுகாதார செய்முறை பயிற்சி அளிக்கப்படுகிறது. ஊரக சுகாதார பயிற்சி நிலையங்களில் ஆறுமாதம் களசெயல்முறைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

(ஈ) காஞ்சிபுரத்தில் பெண் சுகாதாரப் பயிற்சிப் பள்ளி கட்டுவதற்கு 13.68 லட்சம் ரூபாயும் செங்கற்பட்டு மாவட்டத்திலே 9 ஊரக சுகாதார பயிற்சிப்பள்ளியும் கட்டுவதற்கு 25.92 லட்ச ரூபாயும் செலவிடப்பட்டுள்ளன.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சி பல்வேறு இடங்களில் நடத்தப்படுவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள், அதிலே பயிற்சி பெற என்ன தகுதி அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்? இந்தப் பயிற்சித் தருகிற காலங்களிலே அவர்களுக்கு ஏதாவது ஊதியம் தரப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி, கோமதி: சீனிவாசன் பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எஸ். எஸ். எல். சி முன்பு 11 ஆம் வகுப்பு வரை இப்போது 10 ஆம் வகுப்புவரை படித்திருக்க வேண்டும், பயிற்சிக் காலத்தில் உதவித்தொகை வழங்குவதற்கான குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போட்டால் தகவல் கொடுக்கலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, பயிற்சி பெற்றதற்குப் பிறகு அவர்களை எதற்காகப் பயன்படுத்துவதற்கு யோசனை இருக்கிறது! வேறு ஏதாவது வேலைவாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்க அரசு வழிவகை கண்டுள்ளதா? இந்தத் திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கத் திட்டம் உண்டா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, பயிற்சி முடிந்தபிறகு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் அரசு அதை கையாண்டு வருகிறது.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, செங்கற்பட்டு, வட ஆற்காடு. புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களிலே உலக வங்கி மூலம் சத்துணவுத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்ற எண்ணத்தை அரசு கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையில் 172 ஒன்றியங்களில் 5 ஆண்டுகளிலே படிப்படியாக அமைக்க, வேண்டுமென்ற யோசனை செய்யப்பட்டு வருகிறது. மதுரையிலே 32 ஒன்றியங்களிலே செயல்பட்டு வருகிறது, அதோடு மட்டுமல்லாமல், 1983–84 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் ஆகியவற்றில் சில ஒன்றியங்களிலே விஸ்தரிக்கப்பட இருகின்றன.

**திரு. ஏ. சந்திரசேகரன்:** தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்களுக்கு மானியம் கிடைக்கிற வகையிலே மற்றவர்களுக்கு உதவுகின்றபோது அவர்கள் பதிவு செய்து ஐந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய நிலை இருப்பதைப்போல் அல்லாமல் அவர்கள் பதிவு செய்தவுடனே கிராஜுவேட் அலவன்ஸ் தொகையை வழங்குவதற்கு ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தலைவர் அவர்களே, கேள்வி ஊனமுற்றோர் பற்றியது அல்ல. சுகாதாரப் பயிற்சி நிலையத்தி பெண்களுக்கு இடம் கொடுப்பது பற்றியது. கேள்வியைப் புரிந்துகொள்ளாமல் உறுப்பினர் அவர்கள் கேள்வியைக் கேட்கிறார்கள்.

**திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது:** தலைவர் அவர்களே சுகாதாரப் பயிற்சி நிலையத்தை மருத்துவக் கல்லூரி இருக்கிற இடத்திலே அமைத்தால் அந்தப் பயிற்சியைப் பெறக்கூடியவர்களுக்கு உதவியாக இருக்கும், ஆகவே மருத்துவக் கல்லூரி இருக்கிறஇடத்திலே இந்த பயிற்சி நிலையத்தை அமைக்க அரசு ஆலோசனை செய்யுமா?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்:** தலைவர் அவர்களே, பயிற்சி கொடுப்பதற்காகத்தான் சுகாதார பயிற்சி நிலையம் என்று ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலமாக பயிற்சி காடுக்கப்பட்டிருக்கிறது. சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்படவில்லை என்றால் மருத்துவ நிலையங்களில் அவர்கள் பயிற்சி கொடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையை அரசு கையாண்டு வருகிறது. பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டாலே அங்கே தான் அவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்படுகிறது.

**திரு. கே. ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களே, சுகாதாரப் பயிற்சி நிலையத்தை 83–84-ல் வடஆற்காடு மாவட்டத்திலும் விஸ்தரிக்க ஆலோசனை இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தெந்த ஒன்றியங்களில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தலைவர் அவர்களே, அது பிறகு அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு:ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 2. தத்துவ மேதை காரல் மார்க்ஸ் நூற்றாண்டு நிறைவு நாள் அஞ்சலி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மறைந்த விஞ்ஞான சோஷலிசத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிற காரல்மார்க்ஸ் அவர்களின் நூற்றாண்டுநிறைவு நாள் இப்போது கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். நேற்று முன்தினம் அதற்கான ஒரு அஞ்சலியை நாடாளுமன்றம் செலுத்தி இருக்கிறது. அந்த மரபை ஒட்டி நம்முடைய சட்ட மன்றத்தின் சார்பிலே அவர்கள் உலகத்திற்கு அறிவித்த விஞ்ஞான சோஷலிசத்தின் தத்துவங்களை எடுத்துச்சொல்லி அவர்களுடைய மறைவிற்கு அஞ்சலி செலுத்துகிறேன்.

காரல் மார்க்ஸ் தத்துவங்கள் உலக நாடுகளிலே பதினெட்டு நாடுகளிலே நின்று நிலைபெறுகிற தத்துவமாக இருந்து வருகிறது. அவர்கள் 65 ஆண்டு காலம் உலகிலே வாழ்ந்தார்கள். அவர்கள் ஜெர்மெனியிலே பிறந்து, இங்கிலாந்திலே வளர்ந்து, அதற்குப் பிறகு பல்வேறு நாடுகளிலே நாடு கடத்தப்பட்டு பல தொல்லைகளுக்கு ஆளாகி உலகில் மனித சமுதாயம் உய்வதற்காக சிறந்த தத்துவங்களை அவர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அரசியலை பிறகு தெரிந்து கொள்ளலாம். அதே போல விஞ்ஞான தத்துவத்தையும் மற்ற எல்லாவற்றையும், பிறகு தெரிந்து கொள்ளலாம். ஆனால் மனித சமுதாயத்திற்கு மிக முக்கியமானது உணவு, உடை, வீடு என்ற தத்துவத்தை வலியுறுத்தி அதற்காக ஒரு பெரிய தத்துவத்தை உலகிற்கு நல்கியிருக்கிறார்கள். காரல் மார்க்ஸ் அவர்கள் இங்கிலாந்து நாட்டிலே தங்கியிருந்தபோது 12 ஆண்டுகாலம் அங்கு நூல் நிலையத்திலே படித்து, படித்து பலவித தத்துவங்களை ஆராய்ச்சி செய்து, இதுதான் உலகத்திற்கு ஏற்ற தத்துவம் என்று விஞ்ஞான சோஷலிச தத்துவத்தை உலகத்திற்கு தந்தார்கள். அந்த தத்துவத்தின் அடிப்படையில் இன்றைக்கு உலகம் பெருமளவிற்கு அந்த தத்துவத்தை பின்பற்றி நடந்து கொண்டிருக்கிறது என்பதை நீங்கள்

தத்துவ மேதை காரல் மார்க்ஸ் நூற்றாண்டு நிறைவு நாள் அஞ்சலி —தொடர்ச்சி.

எல்லாம் அறிவீர்கள். அவருடைய தத்துவத்தைப் பின்பற்றி சோஷலிச நாட்டை உருவாக்கிய லெனின் அவர்களைப்பற்றி சொல்கிறபோது, மார்க்கிச தத்துவம் மற்ற எல்லா சமதர்ம கோட்பாடுகளிலிருந்தும் எவ்வாறு வேறுபடுகிறது என்றால் இது முழுமையாக நிலைத்திருக்கும் விஞ்ஞான அறிவையும், பொருள்களை பகுத்தறியும் ஆற்றலையும் ஒருங்கே இணையக் கொண்டது. சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாத புரட்சிகரமான சக்திகளையும், புரட்சிகரமான சமுதாய தூண்டுதல்களையும், உந்துதல்களையும் கொண்டு தனி மனித அடிப்படையிலும், சமுதாய தொகுப்பு அடிப்படையிலும், ஸ்தாபன அடிப்படையிலும், கட்சிகள் அடிப்படையிலும் ஒன்றோடொன்று இணைய சமுதாய முன்னேற்றத்திற்கு வழி வகுக்கிறது. என்று பெரிய உண்மையை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெரிய தத்துவமேதை யாக விளங்கிய காரல் மார்க்ஸ் அவர்களுடைய நினைவை இன்னறக்கு கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அதற்கு இந்த மாமன்றத்தின் அஞ்சலியை உங்கள் அனைவரின் சார்பாகவும் நான் செலுத்துகிறேன்.

## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். திருச்சியிலே ஹைவேஸ் டிவிஷனல் என்ஜினியர் தாக்கப்பட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது குறித்து எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். உங்களுக்கு முன்னுரிமை கொடுக்க முடியாது. இன்றைக்கு திரு ரகுமான்கான் அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்கிறேன்.

திரு. கே. நாராயணசாமி : தலைவர் அவர்களே, செங்கத்திற்கு பக்கத்திலே ஒரு பஸ் ஆக்சிடென்ட் நடந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கேதான் ஆக்சிடென்ட் ஆகி இருக்கிறது. இப்போது அந்த பிரச்னை வேண்டாம், உட்காருங்கள்.

திரு. இரா. கருப்பையா: பாயின்ட் ஆப் ஆர்டர். திருச்சியிலே கோட்டப் பொறியாளர் ஒருவர் தாக்கப்பட்டிருக்கிறார்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குத் தமிழிலேதான் சொன்னேன். உட்காருங்கள் இப்போது வேண்டாம்.



(முற்பகல் 10-10)

### (ஆ) உறுப்பினர்கள் விடுதியில் தண்ணீர் தட்டுப்பாடு.

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, பழைய சட்டமன்ற விடுதியிலே நேற்று மத்தியானத்திலேயிருந்து தண்ணீர் இல்லாமல், காலையிலே கேட்டதற்கு லாரி வரவில்லையென்று சொல்லிவிட்டார்கள். பிறகு, கொஞ்சம் திறந்து விட்டார்கள். ஒரு பக்கெட் ரொம்பிற்று, குளித்தோம். மறுபடியும் தண்ணீர் வருவது நின்றுவிட்டது. (குறுக்கீடு) நேற்று மத்தியானத்திலேயிருந்து தண்ணீர் கிடையாது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7 லாரிகள் வைத்து, வேண்டுமான அளவுக்கு இரவிலேயே தண்ணீர் நிரப்பி வைத்து விடுகிறோம். (குறுக்கீடு) தயவு செய்து பொறுமையாகக் கேளுங்கள். இரவிலேயே நிரப்பி வைத்து விடுகிறோம். இரவு பூரா மாண்புமிகு உறுப்பினர்களோடு வந்திருக்கிற விருந்தினர்கள் எல்லா இடத்திலேயும் அந்தத் தண்ணீரையெல்லாம் காலி செய்து விடுகிறார்கள். பிறகு (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தண்ணீர் கொஞ்சம் லேட்டாக வந்திருக்கிறது. வந்தது என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ஒரு வேண்டுகோள். நீங்களே வேண்டுகோள் விடுத்திருக்கிறீர்கள். இரவிலே ஸ்டாக் பண்ணியிருக்கிற தண்ணீரை விரயமாக்காமல், காலையிலே குளித்தால், குளித்தபிறகு மறுபடியும் தண்ணீர் நிரப்புவதற்கு வசதியாக இருக்கும். வந்துள்ள விருந்தினர்களை, காலை 5 மணிக்கே கொஞ்சம் போகச் சொல்லிவிட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் மட்டும் இருந்து குளித்தால் கொஞ்சம் உதவியாக இருக்கும் என்று வேண்டிக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நேற்று பார்லிமென்டிலேயே சபாநாயகர் திரு. ஜாக்கர் சொல்லிவிட்டார், பட்டணத்திற்குப் போங்கள், அங்கேயும் இதே நிலைமைதான், என்று. பார்லிமென்டிலேயே சொல்லிவிட்டார் என்றால், நாடு பூராவுக்கும் சொன்னதாகத் தான் அர்த்தம். ஆகவே நீங்களும் அதைக்கேட்டு அதன்படி ஜாக்கிரதையாக இருந்து, தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, குளிப்பதைக் கொஞ்சம் ஜாக்கிரதையாகக் குளித்து, ஒத்துழைப்பாக இருங்கள். (குறுக்கீடு) தண்ணீர் இல்லை. இருப்பதைக் கொடுக்க முடியவில்லையென்றால் அர்த்தம் உண்டு. 7 லாரிகள் உங்களுக்கென்று வேலை செய்கின்றன, இவ்வளவு பெரிய உரிமை, தமிழ்நாட்டிலே வேறு யாருக்கும் கிடையாது. 35 லோடு தண்ணீர் வருகிறது நமக்கு.

திரு. ப. பொன்னுரங்கம்: தினமும் இந்தப் பிரச்னையை எழுப்புகிறார்கள். உண்மையிலேயே தண்ணீர் சப்ளை ஆகிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பட்டினத்திலே இருக்கிறார். ஒரு நாள் காலையிலே ஹாஸ்டலைப் போய் பார்த்து விடலாம். காலையிலே பொடி நடையாக நடந்தால், ஹாஸ்டலையும் பார்க்கலாம், உடம்புக்கும் நல்லது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பழைய விடுதியிலே தண்ணீர் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் லேட்டாக தண்ணீர் வந்திருக்கிறது என்பதைத் தவிர, தண்ணீர் விடப்பட்டிருக்கிறது, நான் விசாரித்து விட்டேன். தண்ணீர் 8 மணிக்கு வந்திருக்கிறது. தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சிலவற்றைச் சொல்கிறேன். லாரியிலே, 8-வது மைல், 10-வது மைலிலிருந்து தண்ணீர் வருகிறது. டிரைவர் வருவதற்கு லேட் ஆகலாம். இன்ஜின் கெட்டுப் போகலாம். ஏதாவது ஒரு பிரச்னை வரலாம். ஏதாவது ஒரு நாள் தவறு நடந்தால் என்ன செய்ய முடியும்? தினசரி 7 லாரி இதற்காக, வேலை செய்ய போடப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: விருந்தினர்கள் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விருந்தினர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. சிக்கனமாக இருக்க வேண்டுமென்று சொல்கிறேனே தவிர, வேறொன்றும் சொல்லவில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தண்ணீர் இருக்கிற இடத்திலே சட்டசபையை வைத்துக் கொண்டால் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் தண்ணீர் இருக்கிற இடம் என்றால் அடுத்த ஸ்டேட்டுக்கு போகச் சொல்கிறீர்களா?

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்

### காயல்பட்டினம் சிறுபான்மை சமுதாயமக்கள் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுத்துக்கொள்வது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் அ. ரகுமான்கான், ஏ. சாகுல் ஹமீது, என். எஸ். வி. சித்தன், எல். இளையபெருமாள், இல. பலராமன், ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். வரதராஜன், ரா. உமாநாத், டி. மணி ஆகியோர் காயல்பட்டினத்தில் வாழும் சிறுபான்மை சமுதாய மக்களுக்கு எதிராகப் போலீசாரும் வன்முறைக் கும்பலும் நடத்தி வரும் தாக்குதலாலும் அவர்களில் பலபேரைக் காயப்படுத்திக் போலீசார் வழக்குகள் போட்டிருப்பதால் அன்றாடம் போலீசார் அவர்களை அச்சுறுத்துவதாலும் காயல்பட்டினத்தைச் சேர்ந்த சிறுபான்மைச் சமுதாய மக்கள் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் ஆபத்து ஏற்பட்டு இருப்பதாலும் உள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.





திரு. அ. ரகுமான்கான்: மாமன்றத்தினுடைய தலைவர் அவர்களே, காயல் பட்டினத்தில் சிறுபான்மை முஸ்லீம் பெருமக்கள் பெரும்பகுதியினர் வாழ்கிறார்கள். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு அளிக்கக் கூடியவர்கள்; கலைஞர் அவர்களின் மீது பற்றுதல் உடையவர்கள். * ** இன்றைக்கு அந்தச் சிறுபான்மை சமுதாயத்தின் மீது மிகப்பெரிய தாக்குதல்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இன்றைக்கு அந்தச் சிறுபான்மை சமுதாய மக்கள் மீது பொய் வழக்குகள் போடப்படுகின்றன. செக்ஷன்கள் 147, 148, 323, 324, போன்ற பல செக்ஷன்களின்கீழ், எந்தக் குற்றமும் செய்யாத அந்த அப்பாவிகள் மீது, கண்ணியமான குடும்பத்தில் உள்ள பல முஸ்லீம் பெரியவர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

அதோடு மட்டுமல்லாமல், முஸ்லிம் பெண்கள் கோஷா உடையை அனுஷ்டிக்கக் கூடியவர்கள். அவர்கள் வீடுகளின் கதவுகளைத் தட்டி, பயங்கரமான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எனக்குக் கிடைத்த தகவல் என்னவென்றால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் துப்பாக்கியோடு இன்றைக்கு அணி வகுத்து சந்துபொந்தாக, வீதி வீதியாக வந்து, ஒரு அச்சமான பதட்டமான சூழ்நிலையை அங்கே காவல் துறையைச் சேர்ந்தவர்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் சிறுபான்மை சமுதாயத்தினரின் உடைமைக்கும், உயிருக்கும் இன்றைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல், **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அனுதினமும் அந்த ஊரிலே பல பெரியவர்களையும் தாய்மார்களையும், முஸ்லீம் பெரியவர்களையும் அச்சுறுத்திக், கொண்டிருக்கிறது.

இந்தியா ஒரு ஜனநாயக நாடு, செக்யூலர் ஸ்டேட் என்று சொல்லக்கூடிய மத சார்பற்ற நாடு. யாருக்கு வேண்டுமானாலும் ஒட்டளிப்பதும், யாரை வேண்டுமானாலும் ஆதரிப்பதும், ஒரு கட்சியின் சார்பாக நிற்பதும் அவரவர்களின் ஃபண்டமெண்டல் ரைட், அடிப்படை உரிமை ஆகும். அந்த அடிப்படை உரிமைகளைத் தகர்ப்பதற்கு யாருக்கும் எந்த உரிமையும் கிடையாது.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவரவர்களே ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுக்கும் முன்பே அதன் உள்ளே போய் பேசுவது என்றால் அது சரியாக இருக்காது. ஏன் ஒத்தி வைக்க வேண்டும் என்பதற்கான காரணங்களைச் சொல்ல வேண்டுமே தவிர விஷயங்களுக்கு உள்ளேச் சென்று பேசுவது சரியான மரபாக இருக்க முடியாது. எனவே தாங்கள் ஒத்தி வைத்து விவாதிப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏன் ஒத்தி வைத்து இப்பொருள் குறித்து விவாதிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை மட்டும் தான் உறுப்பினர் சொல்ல வேண்டும்.

மேலவையில் நடந்தது பற்றி இங்கே ஏதும் சொல்வது முறை அல்ல சொல்லக்கூடாது. அவ்வாறு குறிப்பிடப்பெற்ற பகுதிகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு ஆணையிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, பல முஸ்லிம் பெரியவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சமூக விரோதிகள் அல்ல, சம்பல் பள்ளத்தாக்கைச் சார்ந்த கொள்ளையர்கள் அல்ல; கள்ள நோட்டு அடிக்கின்றவர்கள் அல்ல; கள்ளச் சாராய பேர்வழிகள் அல்ல. ஆனால் அவர்கள் பயங்கரமான செக்ஷன்களின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

** *

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



(முற்பகல் 10-20.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பொழுது நாம் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. அதை ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கான காரணங்களைத்தான்விவாதிக்கிறோம். சிறுபான்மை சமுகத்திற்கு எதிராக அங்கே போலீசார் வன்முறைச் சம்பவம் நடத்தினார்கள் என்பது உங்கள் கருத்து எலெக்ஷன் போது நடந்தவற்றை எல்லாம் சொல்லப்போனால், அதிலே வேறு விவரங்கள் எல்லாம் வரும் எலெக்ஷன் முடிந்தபிறகு உள்ள சமாசாரத்தை சொல்லுங்கள் (கூச்சல்-குழப்பம்)

திரு. அ. ரகுமான்கான்: **

இன்னும் சொல்லப் போனால் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரும்பச் திரும்பச் சொல்கிறேன். எலெக்ஷனுக்கு அப்புறம் வாருங்கள்.

என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. அ. ரகுமான்கான் ** (குறுக்கீடு.) **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி அங்கங்கே ஆளுக்கு ஆள் பேசினால், நம்மால் சபையை ஒழுங்காக நடத்த முடியாது எல்லோரும் உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த அவையில் எவ்வளவோ தடவைகள் ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் அதன்மீது பேசியிருக்கிறார்கள். அவற்றுக்கு, அரசு தரப்பிலிருந்தும் விளக்கங்கள் தந்திருக்கிறோம். ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டுவருபவர்கள் அத்தீர்மானத்தை எடுத்துக்கொண்டு பேரவையில் ஏன் விவாதிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை எடுத்துக் கூறும் அடிப்படையில்தான், எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு தம் இசைவினை அளித்தால், அதன்மீது முழு விவாதம் வரலாம். இசைவு அளிப்பதற்கு முன், ஏன் ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களைத்தான் எடுத்துச் சொல்ல வேண்டும் என்பது அடிக்கடி வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. இந்த அடிப்படையிலே

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

எடுத்துக்கொள்ளப்பெற்ற பல ஒத்தி வைப்புத் தீர்மானங்களில், மாண்புமிகு உறுப்பினர்களும், கட்சித் தலைவர்களும், மற்றவர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதே அடிப்படையில் ஏன் ஒத்தி வைக்க வேண்டுமென்பதற்கான காரணங்களைச் சொல்லும்பொழுது, சில பல நிகழ்ச்சிகளைச் சேர்த்துக் கொள்வது, அதோடு நடைபெற்றதைச் சொல்கின்ற ஒரு மரபையும்கொண்டிருக்கிறோம். ஆனாலும்கூட, கூடுமானவரை, ஏன் ஒத்திவைக்கவேண்டுமென்ற காரணங்களை மட்டும்எடுத்துக் கூறுகின்ற மரபை, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எப்போதும் கடைபிடிப்பார்களேயானால், அவை முறையாக நடைபெற உதவியாக இருக்கும். உறுப்பினர்கள் தங்களுக்குத் தெரிந்த தகவல்களைச் சொல்கிறார்கள். அரசுக்குத் தெரிந்த தகவல்களை அரசு எடுத்திருக்கிற முயற்சிகளை நானும் எடுத்துச் சொல்ல இருக்கிறேன். அதற்கு பிறகு மாண்புமிகு தலைவரவர்கள் தங்களுடைய தீர்ப்பைச் சொல்ல இருக்கிறார்கள். ஆக அந்தத் தன்மையிலே மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருத்தைச் சொன்னால், நலன் பயக்கும் என்று நினைக்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கும ஒத்திவைப்புத் தீர்மானமானது முஸ்லீம் சமுதாய சிறுபான்மை மக்களை போலீசார் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இந்த அடிப்படையில் நான் சொல்லி உட்கார்ந்து விட்டால், பிரச்சினை தீர்ந்து விடுகிறதா. நீங்கள் சொல்வதை புரிந்து கொள்கிறேன். நான்சொல்ல விரும்புவது, (கூச்சல்—குழப்பம்) என்னதான் பேசவேண்டும் சொல்லுங்கள் பேசுகிறோம்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** : இப்பொழுது ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை அருமை நண்பர் ரகுமான்கான் கொண்டுவந்திருக்கிறார்கள். ** ** தயவு செய்து இந்தப் பிரச்சினைக்குப் போக வேண்டாம். ஏனென்றால் அது வழக்கு மன்றத்திற்குப் போயிருக்கிறது. (கூச்சல், குழப்பம்)

**திரு. அ. ரகுமான்கான்** : நான் வழக்குக்கே போகவில்லை. மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, காயல் பட்டினத்தைப் பொறுத்தமட்டில், இன்றைக்கு இதுபோன்ற

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



புகார்கள், பொய் வழக்குகள் பல்வேறு செக்ஷன்களில் வழக்குகள் போலீசாருடைய அடக்குமுறைகள் வருவதற்குக் காரணம், அரசியல் பின்னணிதான். அந்த அரசியல் பின்னணியிலே தான் இன்றைக்குப் பலர்மீது பொய் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இன்றைக்குக்கூட அந்த ஊரைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் பெரியவர் எங்களைச் சமூகவிரோதிகள் என்று கருதி போலீசார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். யாருக்கும் தைரியம் இருக்குமானால், வெளியிலே தைரியமாக அறிக்கை விடட்டும். நான் அவர்களை எங்கே சந்திக்க வேண்டுமோ, அங்கே சந்திப்பதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

அதோடு மட்டுமல்லாமல், இன்றைக்குப் பல்வேறு பொய் வழக்குகள் போட்டிருக்கிறார்கள். உதாரணமாக, இன்றைக்கு 147, 148 செக்ஷன்களில் வழக்கு போட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், ஆயுதம் தாங்கி கலவரத்தை நடத்தினார்கள் என்று வழக்கு போட்டிருக்கிறார்கள். அதே காயல்பட்டினத்திலே, இன்றைக்குத் தேர்தல் களத்திலே—நான் அந்தப் பிரச்னைக்குப் போகவில்லை. அதற்குப் பின்னாலே வருகிறேன். அந்தப் பகுதியைச் சேர்ந்த, இன்னும் சொல்லப் போனால், மிகப்பெரிய சன்னியாசி நாடார் என்ற ஒரு பெரிய ஊர்த் தலைவர், இன்டிபென்டன்ட் கான்டிடேட் ஆக இருந்தவர், சுயேச்சை வேட்பாளருக்கு, வாழைத்தோப்பு, நிலம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் காரணம், தேர்தலுக்குப் பின்னாலே, திருச்செந்தூர் இடைத் தேர்தலுக்குப் பின்னாலே இந்தச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. நடைபெற்றதற்குக் காரணம், நான் ஏற்கெனவே கூடச் சொன்னேன். நான் சொன்னால், அமைச்சர் அவர்கள் அதையெல்லாம் பேசக்கூடாது என்று சொல்கிறார்கள். * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தேர்தல் சம்பந்தமாகக் குறிப்பிட வேண்டாம் என்று சொன்னேன். உறுப்பினர்கள் ஓர் வரையறைக்குள்ளே பேசவேண்டும். ஒத்தி வைப்பதற்கான காரணம, சிறுபான்மையாளர் பாதிக்கப்பட்டிருக்கிறது, என்பது. அதோடு நிறுத்தி விடலாம். * *

**திரு. அ. ரகுமான்கான்** : ஆகவே, இன்றைக்கு அங்கே நடைபெற்றிருக்கிற சம்பவத்திற்கு முக்கியமான காரணமே, நான் பகிரங்கமாகக் குற்றம் சுமத்துகிறேன். முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் அந்தக் கூட்டத்திலே

---

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இரண்டு போலீஸ் அதிகாரிகளை டிஸ்மிஸ் செய்ய உத்தரவிட்டிருக்கிறார்கள், சரியாகப் பாதுகாப்பு கொடுக்கவில்லை என்று. அதோடு மட்டுமல்ல (குறுக்கீடுகள்) மாண்புமிகு மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நான் உங்கள் மூலமாக இப்பொழுது ஒரு நியாயம் கேட்க விரும்புகிறேன். நீங்கள் தீர்ப்பு சொல்ல வேண்டும். அதற்கும் பிறகு, அதோடு உட்கார் என்று சொன்னாலும் சரி, பேசுங்கள் என்று சொன்னாலும் சரி * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன், மேலவையை இங்கே உதாரணம் காட்டக் கூடாது. மேலவை நிகழ்ச்சி பற்றி எதுவும் இங்கே வரக் கூடாது * *

திரு. அ. ரகுமான்கான் : வழக்குகள் போடப்பட்டு இன்றைக்கு அவர்கள் சிறைச்சாலையிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள், சிலருக்கு ஜாமீன் கொடுத்திருக்கிறார்கள். இந்த வழக்குக்கு அடிப்படைக் காரணம், தேர்தல் உள்நோக்கம்தான். இன்றைக்கு ஜனநாயகத்திலே ஓட்டு அளிக்கக்கூடிய உரிமை இருந்துங்கூட, அந்த உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. முஸ்லிம் லீக் கட்சியினுடைய செயலாளர் கைது செய்யப்பட்டிருக்கிறார். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் கைது செய்யப்பட்டிருக்கிறார். சமுதாயத்தை சேர்ந்த வேறு பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தேர்தலில் நின்ற வேட்பாளர்கள்கூட கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எந்தவிதமான தாக்குதலும் இல்லை. அவர்கள் எந்தவிதமான தப்பான நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. ஒரே காரணம், * * * இது அரசியலிலே பழி வாங்குகின்ற போக்கு என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, சிறுபான்மைச் சமுதாயத்து மக்கள் மீது பல பொய் வழக்குகள் போடப்பட்டு, கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்த பலரைச் சமூக விரோதிகளாகச் சித்தரித்து, கொலைகாரர்களாகச் சித்தரித்து, ஆயுதம் தாங்கி கொலை செய்ய முயற்சித்தார்கள் அவர்கள் என்ற அளவுக்கு, பொறுப்பிலே உள்ளவர்கள் மீதெல்லாம் பொய் வழக்குகளைச் சித்தரிப்பது என்பது எதிர்காலத்திலே ஒரு குறிப்பிட்ட இரண்டு மூன்று இஸ்லாமிய சகோதரர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கு அல்ல; அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகச் சர்க்கார் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய முஸ்லீம் சமுதாயத்தினர் மீது தொடுத்திருக்கக்கூடிய ஒரு மாபெரும் அராஜகம்.

இன்னும் சொல்லப் போனால், * * இது முக்கியமான பிரச்னை, ஆகவே இதுபற்றி விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று நான் வேண்டுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, * * ஒரு வார்த்தையாகிவிடும். ஆகவே அதை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : * * எனக்கும் தெரியாது. அவருக்கும் தெரியாது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கும் தெரியாது' அவருக்கும் தெரியாது, யாருக்கும் தெரியாது என்கிற வார்த்தையை உபயோகப்படுத்தி என்ன பயன்? அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெறுகிறது. வார்த்தைகள் என்பது தெரிந்து பயன்படுத்துவது; பிறருக்கு தம் கருத்தை தெரிவிக்க பயன்படுத்துவது. யாருக்கும் புரியாத ஒரு ஹிப்ரு மொழியிலே பேசக் கூடாது (குறுக்கீடுகள்). சவால்கள் விடுவது நல்லதல்ல. சவால்கள் எல்லாம் நீக்கப்பெறுகின்றன.

இது ஒத்திவைப்புத் தீர்மானம். எதற்காக மற்ற பொருள்களை ஒத்தி வைத்து, இந்தப் பொருள் குறித்து அவை விவாதிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை மட்டும் சொல்ல வேண்டும். சிலர் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்றால் அவர்கள் மீது அனுதாபம், இரக்கம், உண்டாகுமாறு பேசவேண்டும். (குறுக்கீடு). ஆனால் நீங்கள் அப்படிச் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அது இந்த அவைக்கும், இந்த சமுதாயத்திற்கும், தமிழ்நாட்டுக்கும் நன்மை பயக்கும் என்பதற்காக சொல்லவிரும்புகிறேன். ஒரு குறிப்பிட்ட இடத்திலே நடைபெற்ற ஒரு சம்பவம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்துச் சொல்லட்டும். அதிலே யாரும் குறிக்கிட முடியாது. நம்முடைய அரசின் சார்பிலே நாவலர் அவர்கள் பதில் கருத்துச் சொல்லக் கூடும். ஆனால் * * என்று சொன்னால் அது சரியாக வராது. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் நீக்கிவிட்டேன். நீங்கள் உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : * *

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை எடுத்துவிட்டேன் (குறுக்கீடு). திரு. சாகுல் ஹமீது.

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு காயல்பட்டினச் சம்பவத்தைப் பற்றி, சிறுபான்மை சமுதாயத்திற்கு எதிராக இழைக்கப்படுகின்ற கொடுமைகளைப் பற்றி நான் 11–ஆம் தேதி ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். ஆனால் அது ஏழு நாட்களுக்குப் பிறகு இந்த அவையிலே கொண்டு வரப்படுகிறது. இன்றைக்கு காயல் பட்டினத்திலே, திருச்செந்தூர் தொகுதியிலே இடைத் தேர்தல் நடத்தப்பட்டதன் விளைவாக அங்கே தேர்தல் முடிந்த பிறகு ஆளும் கட்சிக்கு, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக இஸ்லாமிய சமுதாயத்தின் மீது பழி தீர்க்கப்படுகிறது. ஆளும் கட்சிக்காரர்கள் சுட்டிக் காட்டுபவர்களை எல்லாம் கைது செய்கின்ற ஆட்சியை நான் காண்கிறேன். இறைநேசச் செல்வர்களை எல்லாம் சிறைக் கோட்டத்திற்கு அனுப்புகின்ற சூழ்நிலை இன்றைக்கு காயல் பட்டினம் சந்தித்துக் கொண்டிருக்கிறது. காயல்பட்டினம் தமிழ் நாட்டினுடைய பழம்பெரும் தொல்பொருள் வணிக நிலையமாகும், வரலாற்று புகழ்மிக்க நகரமாகும். அந்த நகரத்திலே ஏறத்தாழ 20 ஆயிரம் இஸ்லாமிய மக்கள் வாழ்கிறார்கள். அந்த இஸ்லாமிய சமுதாய மக்களிலே ஏறத்தாழ, 9, 10 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். அந்த 10 ஆயிரம் வாக்காளர்களிலே 9 ஆயிரம் வாக்காளர்கள் முஸ்லீம் லீக்கைச் சேர்ந்தவர்கள். அப்படி அங்கே இடைத்தேர்தல் நடந்த பிறகு ஒரு சமுதாய மக்கள் ஆளும் கட்சிக்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக ஒரு சமுதாயத்தின் மீது பொய்க் குற்றத்தைச் சாட்டி, கைது செய்யப்படுவது தமிழ்நாட்டினுடைய பொன்னான வரலாற்றிலே, சிறப்பான வரலாற்றிலே, இன்றைக்கு அந்த இடைத்தேர்தலாலே ஒரு கறைபடிந்த நிலை இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியிலே நடைபெற்றிருக்கிறது என்பது வரலாற்றிலே இங்கே நிரூபிக்கப்பட்டிருக்கிறது, அங்கே என்ன நடந்தது. ஒரு இடைத் தேர்தல் வருகிறது. ஜனநாயக நாட்டிலே, ஜனநாயக மக்கள் வாக்களிக்க வருகிறார்கள், அப்படி ஜனநாயக மக்கள் வாக்களிக்க விரும்புகிற நேரத்தில் அவர்கள் தோழமைக் கொள்கிறவர்களுக்கு வாக்களிக்கிறார்கள் அப்படி தோழமைக் கொள்கிறவர்களுக்கு வாக்களித்து விட்டதற்காக, ஒரு சமுதாயத்தின் மீது இப்படி பழி வாங்கவேண்டுமா. இப்படி ஒரு சமுதாயத்தின் மீது பொய் வழக்குகள் போட்டு, குற்றச்சாட்டு போட்டு கொடுமைகள் இழைக்க வேண்டுமா? இது என்ன ஆட்சி என்று அந்தச் சமுதாய மக்கள் இன்றைக்குக் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு காயல்பட்டினத்திலே மட்டுமல்ல, பரபரப்பு, அந்த படபடப்பு தமிழகத்திலே இருக்கிற ஒட்டுமொத்தமாக இருக்கிற அந்த இஸ்லாமிய மக்கள் மத்தியிலே இந்த ஆட்சியைப் பற்றி ஒரு தப்பான கருத்து பரவிக்கொண்டிருக்கிறது. இன்றைக்கு அண்ணா தி.மு.க. ஆட்சியில் இஸ்லாமிய சமுதாயத்தினர் அடக்கப்படுகின்ற நிலைமை ஒடுக்கப்படுகின்ற நிலைமை, இந்த சமுதாயம் புறக்





கணிக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று தமிழ்நாடு முஸ்லீம்லீக் கருதுகிறது. ஏன் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால் திருச்செந்தூர் தேர்தலில் இஸ்லாமிய மக்கள் ஆளும் கட்சிக்கு ஓட்டுப்போடவில்லை என்று கருதுவதுதான்.

இஸ்லாமிய சமுதாய தோழர்கள் இன்றையதினம் காயல் பட்டினம் பகுதியில் கடுமையாகத் தாக்கப்படுகிறார்கள். அவர்கள் மீது பொய் வழக்குகள் தொடர்ந்து போடப்படுகின்றன. அங்கே ஆளும் கட்சிக்கு வாக்குப் போடவில்லை என்பதால் இப்படிப் பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. யார் யார் கைது செய்யப்படுகிறார்கள் என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தோழர்களும், இஸ்லாமிய சமுதாய தோழர்களும். அவர்கள் மீது பொய் வழக்குகள் போடப் படுகின்றன. கைது செய்யப்பட்டவர்களில் முக்கியமானவர்கள் ஏ. எம். கே. காதர்மொய்தீன், முஸ்லீம்லீக் தோழர், அபுபக்கர், டி. எம். கே. முஸ்லீம் தோழர் மற்றும் பலர். இந்திரா காங்கிரஸ் கட்சி வேட்பாளர் திரு. சந்திரசேகர் அவர்களும் மற்றும் அந்த ராமி போன்றவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் திருச்செந்தூர் தேர்தலில் ஆளும் கட்சிக்கு வாக்குப்போடவில்லை என்பதுதான். வாக்குப் போட வில்லை என்பதற்காக அங்கே பழி வாங்கப்படுவது அராஜகம் இல்லையா? அக்கிரமம் இல்லையா? உலக மக்கள் இதுபற்றி என்ன நினைப்பார்கள்? இந்திய நாட்டு மக்கள் இதுபற்றி என்ன நினைப்பார்கள்?

அதைப்போன்று இன்னொருவர் ஷேக் ஹாஜி என்பது அவருடைய பெயர். 67 வயதானவர் மெக்காவுக்கு சென்று புனித 'ஹாஜ்' யாத்திரை முடித்தவர். 5 வேளை தொழுகையில் மாலை தொழுகை முடித்து, இறை இல்லத்திலிருந்து இறைவனை வணங்கி வரும்போது அவரை ஒருவர் சுட்டிக்காட்ட, அவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார். அவர்மீது 147, 148, 322, 326 பிரிவுகளின்படி வழக்குப் போட்டிருக்கிறார்கள். அவர் என்ன, அவ்வளவு பயங்கரமான ஆயுதங்களையா வைத்திருந்தார்? அப்படிப்பட்ட ஆயுதங்களையா கொண்டு வந்தார்? ஏன் அவர் மீது இப்படி பொய்யான வழக்குகளைப் போட வேண்டும்? இது நியாயம் தானா? இது நீதிதானா? இது பொய் அல்லவா? அந்த பெரியவரைப்பற்றி அறிந்த மக்கள் என்ன நினைப்பார்கள்? இந்த சமுதாயம் அதுபற்றி என்ன நினைக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட ** கடமைப்பட்டிருக்கிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேர்தலைப்பற்றி விவரங்களை விட்டுவிட்டு, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப்பற்றி மட்டும் சொல்லுங்கள்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு காயல்பட்டிணத்தில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார்கள். (குறுக்கீடு) அது வேண்டாம் என்பதால் நான் அதைப்பற்றி பேசவில்லை. இன்றைக்கு அந்தப் பகுதியிலே இஸ்லாமிய மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். அவர்களிடையே பதட்டநிலை நிலவுகிறது. சிறுபான்மை சமுதாயத்தினரின் உரிமை நசுக்கப்படுகிறது. பெண்களை பயமுறுத்துகிறார்கள். ஆண்களை கைது செய்கிறார்கள். இன்றைக்கு ரிசர்வ் போலீஸ் பார்ட்டி அங்கே ஆயுதம் தாங்கி, அணிவகுத்துச் செல்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகள் அங்கே ஒரு பீதியை ஏற்படுத்தியிருக்கிறது. சிறுபான்மை சகோதரர்கள் தாக்கப்படுகிறார்கள், அவர்கள்மீது பொய் வழக்குகள் போடப்படுகின்றன. ஆளும் கட்சிக்கு வாக்களிக்கவில்லை என்பதால் இந்தபாதிரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது மிகவும் அராஜகமானது' அக்கிரமுமானது, அடக்குமுறையானது. அவர்கள்மீது போட்டிருக்கிற பொய் வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற வேண்டும். சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த தோழர்கள் மீது தொடுக்கின்ற அராஜகத்தை, அடக்குமுறையை, அக்கிரமத்தை, அட்டூழியத்தை நிறுத்த வேண்டும். இதுபோன்ற பல பிரச்சனைகள் பற்றி விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : * * என்ன பாடுபட்டாகிலும் வெற்றிபெற வேண்டுமென்று தேர்தல் பணியாற்றினார்கள்.

(முற்பகல் 10–40)

திரு. ஆர். மணிமாறன் : * (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும்போதே சொன்னேன். *

திரு. அ. ரகுமான்கான் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * *

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * *

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே திருச்செந்தூர் தொகுதியிலே நடைபெற்ற சட்டமன்ற இடைத்தேர்தலில், இதற்கு முன்னாலே தமிழகத்தில் நடைபெற்ற இடைத்தேர்தல்களை விட, தமிழகம் மட்டும் அல்லாமல் இந்தியா பூராவுமே ஆழ்ந்து கவனிக்கிற அளவுக்கு பல விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

தேர்தலுக்கு முன்னாலும் சரி, தேர்தலுக்கு பின்னாலும் சரி, அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகள் உள்ளபடியே மனவருத்தத்தை தருவதாகத்தான் அமைந்திருக்கின்றன.

அத்தோடு இனி நடைபெறுகிற தேர்தல்களில் முன்னாலும் சரி, பின்னாலும் சரி இதுபோன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறக் கூடாது என்பதிலே இருவேறு கருத்து இருக்காது என்றும் நான் கருதுகிறேன்.

திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட காயபட்டணம் என்ற ஊரில் இஸ்லமிய சமுதாயத்தினர் வாழ்ந்து வருகின்றனர். ஏறத்தாழ 20 ஆயிரம் மக்கள் வாழ்கிற அந்த ஊரிலே, மிகப் பெரும்பகுதியான மக்கள் மதத்திலே இஸ்லாமியராகவும், மொழியாலே தமிழர்களாகவும் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டின் சுதந்திரப் போராட்டத்திலே பங்கு பெற்று சுதந்திரத்திற்காக பல்வேறு தியாகங்களைச் செய்த தியாகப் பெருமக்கள் வாழ்கிற ஊர் அது. தேசபிதா காந்தி அடிகளுக்கு கூட நூற்றாண்டு நினைவு மண்டபம் கட்டி சிறப்பித்த ஒரு ஊர், அந்த காயல் பட்டணம் என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் நடைபெற்றஇடைத்தேர்தலில் காயல் பட்டணத்தில் வாழ்கிற மக்களில், ஏறத்தாழ பதிவான வாக்குகள் 8 ஆயிரம் வாக்குகளுக்கு மேலே, அதிலே 6 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குகள் ஆளும் கட்சிக்கு எதிராக போடப்பட்ட வாக்குகள் என்ற காரணத்தாலே அப்படி எதிராக விழுந்த காரணத்தாலே, தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பின்னாலே, உண்மைக்கு மாறான பல்வேறு வழக்குகள் அந்தப் பகுதிகளிலே இருக்கிற மக்கள் மீது போடப்பட்டிருக்கின்றன.

சிறுபான்மை சமுதாயத்தினரான, தமிழ் கற்றவர்களான, கண்ணியத்தோடும், நியாயத்தோடும் வாழ்கிற பல்வேறு நல்ல குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் மீது இன்றைக்கு சட்டம் வீசப்பட்டு வழக்குகள் தொடரப்பட்டிருக்கக் கூடிய நிலைமை இருந்து

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

கொண்டிருக்கிறது தேர்தலுக்குப் பின்னாலே அரசாங்கத்தின் சார்பாக தொடரப்பட்ட இவ்வழக்குகள் பழி வாங்கும் நடவடிக்கைகளாகவே எடுக்கப்பட்டிருக்கின்றன. * *

(குறுக்கீடுகள்—குழப்பம்)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுகுறித்து வழக்கு மன்றத்திலே இருக்கின்றது. எனவே வழக்கு மன்றத்திலே இருப்பது பற்றிப் பேசுகிறார்கள். (குறுக்கீடுகள்—குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது நமக்கு முன்னாலே இருக்கின்ற பிரச்சினை என்னவென்றால் காயல்பட்டணம் சிறுபான்மை சமுதாயத்திற்கு எதிராக (குறுக்கீடுகள்) அது எல்லாம் இப்போது வராது. அதை எல்லாம் தனியாகக் கொண்டு வாருங்கள். ஒன்றை இங்கே உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன். ரோட்டிலே நடக்கலாம் என்ற வகையில் உரிமை உண்டு. ஆனால் லாரி வேகமாக வருகின்றபோது குறுக்கே நடக்கலாமா என்று கேட்டால் எப்படி? எனவே மற்றவற்றைப் பற்றி எல்லாம் தனியாகக் கொண்டு வாருங்கள். இப்போது வேண்டாம் (குறுக்கீடுகள்) நான்தான் சொல்கிறேனே தயவு செய்து திரு. ரகுமான்கான் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை சிறுபான்மை சமுதாயத்திற்காகத்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் (குறுக்கீடுகள்) எனவே எதற்காக ஒத்திவைக்கவேண்டும் என்பதை மட்டும் சொல்ல வேண்டும். ஏற்கெனவே திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னதையே திரு. சித்தன் அவர்களும் சொன்னால் மீண்டும் மீண்டும் பிரச்சினை வந்துகொண்டுதான் இருக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே. காங்கிரஸ் கட்சிக்காரர்கள் மீது வழக்கு போடப்பட்டிருக்கின்றது எனவே சட்டமன்ற இடைத்தேர்தலுக்குப் பிறகு அங்கே நடைபெறுகின்ற நிகழ்ச்சி பற்றி மத்திய உள்துறை அமைச்சருக்கும் மேதகு ஆளுநர் அவர்களுக்கும் புகார் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே தேர்தலுக்குப் பின்னாலே, ஆளும் கட்சிக்கு ஒரு தொகுதி சாதகமாக இல்லை என்ற காரணத்தைக் காட்டி அராஜகத்தைக் கட்டவிழ்த்து விடுகின்ற முறை தொடர்ச்சியாகத் தமிழகத்தில் இருக்கின்றது. இந்த நிலை ஏற்படக்கூடாது என்பதற்காகவும் தேர்தலுக்கு பின்னாலே நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்து பகிரங்கமாக நீதிவிசாரணைக்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும். அங்கே ஒரு தவறும் செய்யாதவர்கள் மீது ஆளும் கட்சிக்கு எதிராகப் பணியாற்றினார்கள் என்பதற்காக பல்வேறு வழக்குகளை போட்டிருக்கிறார்கள் அந்த வழக்குகளைத் திரும்பப் பெறவேண்டும் என்று சொல்லி அந்தப் பகுதியிலே இருக்கின்ற பதட்டமான நிலை குறித்து விவாதிப்பதற்காக பேரவையின்

** மாண்புமிகு பேரவை தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் என்னுடைய கருத்துக்களைக் கூறி அமர்கிறேன்.

(முற்பகல் 10—50)

திரு ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, காயல்பட்டினம் பகுதியில் கிட்டத்தட்ட ஒரு ஆயிரத்திற்கு மேற்பட்ட போலீஸ் காரர்கள் அங்கே குவிக்கப்பட்டு, கையில் துப்பாக்கி ஏந்தி, வீடுகளில் புகுந்து பல பேர்களை கைது செய்யப்பட்டதாகவும் இங்கே செய்தி வந்து கொண்டிருக்கிறது- ஆனால் அப்படிப் பட்ட ஒரு போக்கு அதுவும் குறிப்பாக தேர்தல் முடிந்த பிறகு அங்கே அவசியம்தானா என்பதையும் இங்கே சற்று சிந்திக்க வேண்டியிருக்கிறது. பலர் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். கைது செய்யப்படுவதற்கு அடிப்படைக் காரணம் என்ன? நடந்து முடிந்த சம்பவங்களுக்காக கைது செய்யப்படு கிறார்களா? இப்போது சில சம்பவங்கள் நடந்து கொண்டிருக் கிறதா என்பதையும் இந்த மன்றம் ஆராய வேண்டியிருக்கிறது. ஆனால் பொதுவாக மிக அமைதியாக அந்த தேர்தல் நடந்தது. சந்தேகம் இல்லை. போலீஸ் பாதுகாப்பு மிக அருமையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்த நகரத் தில் இருக்கக்கூடிய வாக்காளர்கள் தங்கள் விருப்பப்படி வாக் களிக்க முடிந்தது என்பது உண்மை. ஆளும் கட்சிக்கு எப்படி மனப்பான்மை இருந்தாலும் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 27ம் தேதி காயல்பட்டினம் பகுதியில் அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வுக்கு வாக்குகள் விழுமோ விழாதோ அதைப்பற்றி கவலையில்லை. ஆனால் தேர்தல் முறையாக நடத்தப்படும். பாதுகாப்பு அளிக்கப்படும் என்று சொன்ன காரணத்தினால் அந்த சிறப்பு ஏற்பாடு இருந்தது என்பதுதான் உண்மை. * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேர்தலைப் பற்றி பேசாதீர்கள். நான் ஒவ்வொருவருக்கும் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல விஷயத்தை சொல்லிக் கொண் டிருக்கிறார். அதாவது சிறுபான்மை வகுப்பினர்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியை எதிர்க்கிற போது இந்த மாதிரியான ரொம்ப சென்ஸிட்டிவ் விஷயங்களில் டைரக்ட் பண்ணக்கூடாது. மெயின் எஸன்சியல் அப்செக்ஷன் இருந்தால் தட் வில் பீ கரெக்ட். ஆனால் ஒவ்வொன்றுக்கும் டைரக்ட் பண்ணுவது தப்பு. மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் பேசும்போது என்ன சொன்னார் ..............

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் தவறான வார்த்தை சொன்னதாக நான் சொல்லவில்லை. அவர் சொன்ன சப்ஜெக்ட்டிலும் தவறு இல்லை. பிரச்சனை என்னவென்றால் தேர்தலைப் பற்றி ஒவ்வொருவரும் பேச ஆரம்பிக்கிறார்கள். தேர்தலுக்கு பிறகு வாருங்கள் என்று சொல்லிவிட்டேன். அதை ஒட்டி பேசினால் நல்லது என்பதுதான் வேண்டுகோள்.

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலையொட்டி நடந்து இருக்கக்கூடிய விக்டிமைசேஷன் *** என்பதுதான் அதிலே வார்த்தை இருக்கிறது. ஆகவே வார்த்தை இருப்பதற்காக இந்த மாதிரி மைனாரிட்டி வாக்கு அளிப்பதற்காக இந்த விக்டிமைசேஷன் என்கிறபோது அந்த வாக்குகள் என்ற விஷயத்தை இத்தனை இத்தனை மைனாரிட்டிகள் அவர்களுடைய வாக்குகள் இங்கேதான் விழுந்து இருக்கிறது, ஆகவேதான் இந்த விக்டிமைசேஷன் by he Ruling Party. அதுதான் பாயிண்ட். How it is irrelevant? ரொம்ப டைரக்ட் பண்ணக்கூடாது. It is wrong.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ, நோ, அப்புறம் ஒவ்வொருவரும் தேர்தலைப்பற்றி பேசினால் உரிமை பிரச்சனை வரும். தேர்தலை விட்டு விட்டு பேசுங்கள்.

*திரு க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலை ஒட்டி என்று சொன்னால் கூட தேர்தலில் வாக்குகள் போட்டது அவைகளை எண்ணப்பட்டது ஆகியவைகளைப்பற்றி பேசினால் தாங்கள் அதை தனி என்று பிரிக்கலாம். லா-அண்டு ஆர்டர் என்ற அந்த அடிப்படையில் சட்டம் ஒழுங்கு அமைதி பாதிக்கப்பட்டதுடன் எந்த எந்த கோணத்தில் தவறிப் போயிருந்தாலும் எப்படி எப்படி அதனால் கேடுகள் ஏற்பட்டாலும் சட்டம் அமைதியை பாதுகாக்க வேண்டியவர்கள் முறை தவறி நடந்தாலும் அதுபற்றி பேசுகிறபோது தேர்தல் தேதியை ஒட்டி பல தேதிகளில் நடைபெற்ற காரியங்களைச் சொல்கிற போது இது சட்டம், அமைதி ஒழுங்கு என்ற அடிப்படையில் வருவதே தவிர தேர்தலை ஒட்டி நடந்திருந்தாலும் கூட இது தேர்தல் நடத்தப்பட்டது சம்பந்தப்பட்டது அல்ல. தேர்தலுக்கான பிரச்சாரத்தில் மற்றவர்களோ, தோழர்களோ நடந்து கொண்ட முறையிலே ஏற்படுகிற பிரச்சனைகள் எல்லாம் தேர்தல் முடிவைமாற்றுகிற, பாதிக்கிற நேரடி பிரச்னைகள் ஆகாது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



எனவே சட்டம் அமைதி என்ற அடிப்படையில் அவற்றைப் பேச தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் பேச அனுமதிப்பதிலே எந்தவிதமான மாறுபாடும் கிடையாது. கொடுத்திருக்கிற தீர்மானத்திலே எந்த ஒரு இடத்திலேயும் தேர்தல் என்ற வார்த்தை கிடையாது. தேர்தலை ஒட்டி என்றும் கிடையாது. எல்லா உறுப்பினர்களுடைய கவனத்திற்காகவும் நான் மீண்டும் அதைப் படித்துவிடுகிறேன். காயல் பட்டினத்தில் வாழும் சிறுபான்மை சமுதாய மக்களுக்கு எதிராக போலீசும் வன்முறைக் கும்பலும் நடத்திவரும் தாக்குதல் அவர்களிலே பலபேர்களைக் காயப்படுத்தி பலபேர்கள் மீது வழக்குப் போடப்பட்டிருப்பதாலும் போலீஸ் அச்சுறுத்துவதாலும் காயல்பட்டினத்தைச் சேர்ந்த சிறுபான்மை சமுதாயத்தினரின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஆபத்து ஏற்பட்டு இருப்பதாலும் உள்ள பதட்டநிலை குறித்து என்று இருக்கிறது. (குறுக்கீடு)

திரு. ரா. உமாநாத்: இந்தமாதிரி அவர்கள் நடந்தார்கள் என்று சொல்வதற்கு உரிமை இல்லையா? உரிமை இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணன்: என்னுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்திலே நான் குறிப்பிட்டிருப்பது, திருச்செந்தூர் தேர்தலையொட்டி காயல்பட்டினத்தில் பொதுமக்கள் போலீஸ்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதித்து இருப்பது திரு ரகுமான்கான் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம். (குறுக்கீடு) அதன்மீதுதான் திரு. கிருஷ்ணன் பேசுவதாக அர்த்தம். பத்து ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வரலாம், ஏதாவது ஒருவர் கொடுத்ததைத்தான் எடுத்துக்கொள்கிறோம். இது ஒவ்வொருவருக்கும் தெரிந்து இருக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: சிறுபான்மையோர் கடுமையான அளவுக்கு இந்த அரசின்மீது விரோதம் கொள்வதற்கு என்ன காரணம் என்பதைப் பார்க்கவேண்டும். தேர்தல் சமயத்திலே ** என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கத்தினுடைய அணுகுமுறை பாஸிடிவ் ஆக இருக்க வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்திலே சிறுபான்மையோருக்குப் பாதுகாப்புக் கொடுக்கப் படவேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது ஒரு தார்மீகக் கடமை. எல்லா அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டு இருக்கின்ற ஒரு கொள்கை. அதுதான் உண்மை. இந்தச் சந்தர்ப்பத்திலே கடுமையான அளவுக்கு நூற்றுக்கணக்கான பேர்கள்மீது 147, 148-ன்படி வழக்குகள் போடவேண்டிய அவசியம் என்ன?

மாண்புமிகு பேரவைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது**

சம்பவம் தொடர்ந்து நடந்திருக்கிறதா? உடனடியாக ஏதாவது முடிவுக்குக் கொண்டுவரமுடியாதா? ஏன் காலதாமதப் படுத்த வேண்டும். ஏன் அரசு அக்கறையில்லாமல் இருக்கிறது? முஸ்லீம் பெருமக்கள் உங்கள்மீது கோபம் கொள்ளவேண்டிய அவசியமென்ன? 1977 ஆம் ஆண்டிலே இந்த அரசை உருவாக்கு வதற்கு முஸ்லீம் பெருமக்கள் ஓட்டுப்போட்டார்கள், ஆதரித்தார் கள் என்பதுதான் உண்மை, அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த அளவுக்கு தேர்தல் முடிவைப் பார்க்கிறபோது அந்த மக்கள் இப்போது இந்த அரசின்மீது கோபம் கொண்டிருக்கிறார்கள் என்றால் ஏன் என்று சிந்திக்கவேண்டும். இடதுசாரி ஜனநாயக அரசு நடந்துகொண்டு இருக்கின்ற மேற்குவங்கத்திலே இப்படிப் பட்ட நிலைமைகள் ஏற்படவில்லை. அங்கே மூன்றில் ஒரு பங்கினர் முஸ்லீம் பெருமக்கள் இருக்கிறார்கள். நான் பெருமையாகக்கூடச் சொல்லிக்கொள்கிறேன், என்றைக்காவது இந்து முஸ்லீம் கலவரம் அங்கே நடந்தது உண்டா? நிச்சயமாகக் கிடையாது. அப்படிப்பட்ட கருத்துக்கள் அங்கே வளர்க்கப் படவில்லை. ஆளுங்கட்சியும் சரி அதற்கு இடம் கொடுக்க வில்லை. கேரளத்தை எடுத்துக்கொள்ளுங்கள். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **இவையெல்லாம் வேண்டாம்.*

திரு. ரா. கிருஷ்ணன்: அணுகுமுறையைப் பொறுத்தவரை யில் இந்த அரசு மாற்றிக்கொள்ள வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

ஆகவே, உடனடியாக, அந்த வழக்குகளை வாபஸ் பெறுவதும், உடனடியாக பாதிக்கப்பட்ட அந்த மக்களுக்கு ஆறுதல் தரக்கூடிய ஒரு முறையிலே ஏற்பாடு செய்வதும், கைது செய்வதை உடனே நிறுத்துவதும், போலீசாருடைய அடக்குமுறை அல்லது இருக்கிற பதட்டமான அல்லது பீதியான ஒரு நிலைமையைத் தணிப்பதும் அல்லது நீக்குவதும் இந்த அரசி னுடைய முதல் கடமை என்று நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆகையினாலே வழக்குகள் வாபஸ் பெற வேண்டும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்— இப்படிப்பட்ட பல்வேறு விஷயங்களைப் பேச வேண்டுமென்பதற் காக, இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டு மென்று நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காயல்பட்டினத்தில் வாழும் சிறுபான்மை சமுதாய மக்களுக்கு எதிராகப் போலீசாரும் வன்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



(முற்பகல் 11—00)

முறைக் கும்பலும் நடத்தி வரும் தாக்குதலாலும் அவர்களில் பல பேரைக் காயப்படுத்திப் போலீசார் வழக்குகள் போட்டிருப் பதால் அன்றாடம் போலீசார் அவர்களை அச்சுறுத்துவதாலும், காயல்பட்டினத்தைச் சேர்ந்த சிறுபான்மை சமுதாய மக்கள் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்ற கருத்தை எடுத்துத் தெரிவித்து அதை விரிவாக விவாதிக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்த அவையின் இதர அலுவல் களை ஒத்தி வைக்க வேண்டுமென்கிற முறையில், மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

அவர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கின்ற பொழுது, சிறு பான்மை சமுதாயத்தினராக வாழ்கின்ற இஸ்லாமிய இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக இந்த அரசு இருக்கிறது, இந்த ஆளுங்கட்சி இருக்கிறது என்ற கருத்துப்பட எடுத்துத் தெரிவித் தார்கள். முதலிலே நான் கூற விரும்புகிறேன், காயல்பட்டினத் திலே மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் வாழ்கின்ற அல்லது எந்த தொகுதியிலும் வாழ்கின்ற அல்லது எந்தத் இடத்திலும் எந்தச் சிறுபான்மையினருக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமோ, அல்லது அது ஏற்று நடத்தி வருகின்ற இந்த ஆட்சியோ, எதிரானது அல்ல.

அது மட்டுமல்ல, சிறுபான்மை சமுதாயத்தினராக இருந் தாலும் சரிதான் அல்லது பல்வேறு சமுதாயத்தினரைச் சேர்ந்த வர்களாக இருந்தாலும் சரிதான், அவர்கள் எல்லா அரசியல் கட்சிகளிலும் பங்கு பெற்றிருக்கிறார்கள். அதைப் போன்று எந்தத் தொகுதியை எடுத்துக் கொண்டாலும் கூட, அதிலே இருக்கிற குறிப்பிட்ட சமூகத்தினர் இந்தக் கட்சிக்குத்தான் சொந்தக்காரர்கள், என்று அந்தந்தக் கட்சிக்குச் சொந்தக்காரர்கள் அந்தந்த கழகத்தினர் எந்த இடத்திலும் சொல்லமுடியாது. ஆனால் அவர்களிலே ஒரு சமுதாயத்தினர் ஒரு கட்சியைக் கூடுதலாகக் கூட ஆதரிக்கலாம். ஒரு சமூகத்தினர் ஒரு கட்சியைக் குறை வாகக் கூட ஆதரிக்கலாம். ஆனால், இங்கே மாண்புமிகு உறுப் பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்தது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முஸ்லிம்களுக்கு விரோத மாக இருக்கிறது என்று பரவலாகத் தெரிவித்து இருக்கிறார்கள். விரோதமாக இருந்தால் இந்த ஆட்சியே இங்கே அமர்ந்திருக் காது. 1980-லே நடைபெற்ற தேர்தலிலே, பரவலாக நடை பெற்ற தேர்தலே கூட, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெருவாரியான நம்பிக்கையையும் நன்

மதிப்பையும் முஸ்லிம் இனத்தவர்களுடைய அன்பையும் அர
வணைப்பையும் பரவலாகப் பெற்றிருப்பதன் காரணமாகத்
தான் பல இடங்களில் வெற்றி பெறவே முடிந்தது.
முஸ்லிம்கள் சார்பாக முஸ்லிம்கள் நிறுத்தப்பட்டது
பல இடங்களிலே அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது என்று சொன்
னால், அந்தச் சமுதாயத்தினருடைய அன்பையும் அரவணைப்
பையும் பெற்றிருக்கிற நிலையைத்தான் அது காட்டுகிறது.
அது இன்றைக்கும் மாறவில்லை. பெரியகுளத்திலும் ஏராள
மான அளவுக்கு முஸ்லிம்கள் இருந்தார்கள். அங்கும் நாம்
அவர்களது ஆதரவைப் பெற்றோம். ஏன் இதைச் சொல்கிறேன்
என்றால் நாங்கள் எதிரிகளாக இருக்கிறோம் என்று சொல்
கிறார்கள். திருச்செந்தூர் தொகுதியைப் பொறுத்தவரையில்
முஸ்லிம்களுடைய ஆதரவையும், பரவலாக அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெற்றிருக்கிறது.
காயல்பட்டினத்தைப் பொறுத்தவரையிலும் கூட சிறுபான்மை
யோர் ஓரளவுக்கு எங்களுக்கு ஆதரவு தராமல் இல்லை.
கூடுதலாக வேண்டுமென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்
திற்கு அங்கே ஆதரவு தந்திருக்கலாமே தவிர, அங்கே அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு முஸ்லிம்
களுடைய வாக்குகள் கிடைக்கவே இல்லை என்கின்ற நிலைமை
வரமுடியாது.

திரு· கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : சார், இப்பொழுது நிதி
அமைச்சர் அவர்கள் சொல்வதில் நியாயமோ அல்லது
உண்மையோ இருந்தால் முஸ்லிம் மக்கள் ஏன் அதிகமாக அங்கே
துன்புறுத்தப்பட வேண்டும், இம்சிக்கப்பட வேண்டும், அதிக
மாக அவர்கள் பேரில் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட
வேண்டும். இதன் காரணமாக, அவையில் இதர அலுவல்
களை ஒத்திவைத்து, நாம் பேசவேண்டுமென்று தீர்மானம்
கொடுத்திருந்தோம். அதை அவசியம் அவர் ஒப்புக் கொள்வார்
என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
இந்தக் குற்றச்சாட்டை ஆளுங்கட்சி மீது சொல்லாமல் இருந்
திருப்பார்களானால் இதற்கு நான் பதில் சொல்ல வேண்டிய
அவசியமே இருந்திருக்காது. மாண்புமிகு உறுப்பினர் சாகுல்
ஹமீது அவர்களும் இங்கே பேசிய மற்றவர்களும், இந்த இனத்
திற்கு விரோதமாக, எதிராக ஆளுங்கட்சி இருக்கிறது. ஆகவே
தான் மக்கள் கொதித்தெழுகிறார்கள். ஆகவே தான் அவர்
களுக்கு விரோதமாக இருக்கிறது என்று சொன்னார்கள்.



ஆளுங்கட்சியும் அந்தச் சமுதாயத்தினருக்கு விரோதமாக
இல்லையென்பதையும் ஆளுங்கட்சியின் சார்பாக, போலீசாரும்
ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரை வன்முறைப்படுத்த வேண்டு
மென்ற நிலையிலே இல்லை. திருச்செந்தூர் தொகுதியிலே பரவ
லாக பல்வேறு இடங்களில் முஸ்லிம்கள் இருக்கிறார்கள்.
அப்படிப்பட்ட கொடுமைகள் நடைபெற்றிருக்கின்றன என்ற
குற்றச்சாட்டுகள் வேறு எந்த ஊர்களிலும், எந்த இடத்திலும்
வரவில்லை.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே,
முன்னவரவர்களுடைய கருத்தைக் குழப்புவதற்காகவோ அல்லது
மாற்றுவதற்காகவோ நான் எதையும் சொல்லவில்லை. காயல்
பட்டினம் என்ற ஒரு இடத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சியை வைத்து,
அதைச் சுற்றி ஏற்பட்டிருக்கின்ற நிகழ்ச்சியை வைத்துதான்
இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்க நேரிட்டது. காயல்
பட்டினத்தில் வாழ்கின்ற மக்களில் முஸ்லிம்கள் பெரும்பாலோர்
அதன் காரணமாக முஸ்லிம் என்ற பெயர் இடம் பெற்றது.
அவர்கள் சற்று அதிகமாக, சில நிகழ்ச்சிகளின் காரணமாக
ஒரு மாறுபட்ட கட்சியில், ஆளுங்கட்சிக்கு மாறாக இருந்தார்கள்
என்பது ஆளுங்கட்சியைச் சேர்ந்த முக்கியமானவர்களுக்குத்
தெரிந்த ஒரு உண்மை. எனவே, எதிர்க்கட்சியை ஆதரித்தவர்
கள், காயல்பட்டினம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள்; முஸ்லிம்
சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், இது மூன்றும் சேர்ந்த காரணத்
தால், பேசும்பொழுது பல்வேறு வண்ணம் வந்தாலும், காயல்
பட்டினத்திலே ஏற்பட்டிருக்கின்ற நிகழ்ச்சிகளுக்கு முன்னவரவர்
கள் விளக்கம் தருவார்களேயானால் அந்த விளக்கங்களின்
மூலம் நியாயம் கிடைக்க வேண்டுமென்று அந்த நியாயத்தை
எதிர்பார்த்துத்தான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் தரப்
பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் குறை
சொன்னதன் காரணமாகத்தான் அதற்கு விளக்கம் தர வேண்டி
யதன் அவசியம் காரணமாக எடுத்துச் சொன்னேன். ஆகவே,
முஸ்லிம்கள் இந்த ஆட்சிக்கு விரோதிகள் அல்ல. அனைந்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்ப்பவர்களாகவும்
அவர்கள் இல்லை.

காயல்பட்டினத்திலே போடப்பட்டிருக்கின்ற வழக்குகளைப்
பொறுத்தவரையில், சிறுபான்மை முஸ்லிம்கள் என்ற நோக்கத்
கத்தோடு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்

கழகத்திற்கு ஆதரவு அளிக்கவில்லை, ஆகவே, அவர்கள் பழி வாங்கப்பட வேண்டும். அவர்கள் மீது எதிர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நோக்கத்தினுடைய அடிப்படையிலே இது நடைபெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்கள் தேர்தல் காலத்து நிகழ்ச்சிகளைச் சொல்ல வேண்டாமென்று அவர்களுக்கும் சொன்னதன் காரணமாக அதையும் அவற்றை விட்டுவிடுகிறேன். 26ந் தேதிய நிகழ்ச்சிகளை அவர்கள் சொல்ல வேண்டாம் என்று சொன்னதன் காரணமாக விட்டுவிடுகிறேன். அங்கே இருக்கின்ற சூழ்நிலை, இப்பொழுது கைது செய்யப் பட்டிருக்கிறார்கள் என்றால் சிறுபான்மையோரைச் சேர்ந்தவர் கள். ஆகவே கைது செய்யப்பட வேண்டுமென்ற காரணம் அல்ல, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாறுபட்டு வாக்களித்தார்கள், ஆகவே, அவர்கள் கைது செய்யப்பட வேண்டுமென்று அல்ல.

26-ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சிகளிலே, வன்முறை மற்ற வைகளிலே ஈடுபட்டவர்கள் என்பதற்காக, அதற்குப் பிறகும் தேர்தலும் ஒழுங்காக நடந்திருக்கிறது, 26-ஆம் தேதி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது, வேண்டத்தகாத நிகழ்ச்சி நடைபெற்றது அதை ஒட்டி வன்முறையாளர்கள் மீது வழக்கு பதிவு செய்யப் பட்டது.

27-ஆம் தேதி அமைதியாக நடைபெற்றிருக்கிறது, 28-ஆம் தேதியும் அமைதியாகத்தான் நடைபெற்றிருக்கிறது. அதற்குப் பிறகு ஆறுமுகநேரி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது என்றால், 26-ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சியை ஒட்டியே தவிர, மார்ச் மாதம் 1-ஆம் தேதி நடைபெற்ற விளைவுகளை ஒட்டி அல்ல. மார்ச் மாதம் 1-ஆம் தேதி நடைபெற்ற தேர்தலின் மூலம் ஏற்பட்ட விளைவுகளின் அடிப்படையாக வைத்து, ஆகவே, எதிர்த்து ஓட்டுப் போட் டார்கள் என்று அத்தகைய மக்கள் மீதும் பழி வாங்க வேண்டு மென்ற நோக்கத்தினுடைய அடிப்படையில் அல்ல.

அங்கே போடப்பட்டிருக்கின்ற வழக்கு, ஆறுமுகநேரி காவல் நிலையத்திலே வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. 21-2-83 இலிருந்து 28-2-83 வரை பதிவு செய்யப்பட்ட வழக்குகள் ஆறு. இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட வர்கள் 17 பேர். பத்து பேர் முஸ்லீம்கள், ஏழு பேர் முஸ்லீம் அல்லாதவர்கள். முதல்வரவர்கள் பிரச்சாரத்திற்குச் சென்ற போது தாக்குதல் குறித்த வழக்கில் கைது செய்யப்பட்டவர் கள் இரண்டு பேர் உள்பட. மேலும் 11-3-83 அன்று நீதி மன்றத்தில் எட்டு பேர் சரண் அடைந்திருக்கிறார்கள். ஆறுமுக



நேரியில் வழக்கு பதிவு செய்யப்பட்டதிலே, இந்த வழக்கு சம்பந்தமாக இதுவரை சம்பந்தப்பட்ட எதிரிகளில் 6-3-83 இல் இரண்டு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அது 26-ஆம் தேதி நடந்த நிகழ்ச்சிகளை ஒட்டி.

அதற்குப் பிறகு 11-3-83 அன்று தூத்துக்குடி இரண்டாம் நிலை குற்றவியல் நீதி மன்றத்தில் எட்டு பேர் சரண் அடைந் திருக்கிறார்கள். ஆகவே, இந்த 11 பேர், இதிலே 8 பேர். முதலில் 2 பேர் தேர்தல் நடந்து கொண்டிருக்கும் பொழுதே 17 பேர் கைது செய்யப்பட்டு வழக்குகள் இருக்கின்றனவே தவிர இந்த வழக்குகள் உண்மையா அல்லது அல்லவா என்பதை வழக்குமன்றம் தீர்மானிக்கும். ஆகவே, அதிலே பொய் வழக்கா, உண்மையான வழக்கா என்கின்ற விவரங்கள் அதிலே வரும் அதில் நான் குறுக்கிடவும் விரும்பவில்லை. வேண்டும் என்றே, இந்த அரசு யார் மீதும் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணமும் இல்லை.

இன்றைக்கும் எந்தவொரு சிறுபான்மை சமுதாயத்தினிடத் திலேயும் மாறுபாடான கொள்கையைக் கொண்டிருக்கவில்லை என்பது மட்டுமல்லாமல், எல்லாச் சிறுபான்மையினருடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் இந்த ஆட்சியும் சரி, ஆட்சியை நடத்திச் செல்லுகின்ற கட்சியும் சரி பெற்றுக் கொண்டிருக் கிறது என்ற நம்பிக்கையினுடைய அடிப்படையிலேதான் இருக் கிறோம்.

மற்றொன்றையும் சொன்னார்கள், 'ஆறுமுகநேரியினுடைய போலீஸ் தரப்பினர் கைது செய்யப்பட்டார்கள் என்று. இதற்குக் காரணம் முதலமைச்சர் 26-2-83 அன்று காயல் பட்டினத்திற்கு எந்தெந்த வீதிகள் வழியாக அழைத்துச், செல்லப்படுகிறார் என்ற பட்டியல் ஆறுமுகநேரி காவல் நிலை யத்தில் முன்கூட்டியே தரப்பட்டிருந்தும், காவல்நிலைய ஆய்வாளரோ அல்லது இங்கேயிருக்கின்ற தலைமை ஆய்வுக் காவலரோ காவல் துறையினுடைய மேலதிகாரிகளுக்கு இந்தத் தகவல்களைத் தெரிவிக்கவில்லை என்பதும், அதைப் போல திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சதுக்கைத் தெருவில் கூட்டம் நடத்துவதற்கு அவர்கள் அனுமதி கேட் டிருக்கிறார்கள்; ஆனால் எழுத்து மூலமாக அந்த அனுமதி தரப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் அனுமதி கேட் டது உண்மை. ஆனால் அதற்கு எழுத்து மூலமாக அனுமதி தரப்படவில்லை என்ற அந்தச் செய்தியையும் மேலதிகாரி களுக்கு அங்கேயிருந்த தலைமைக் காவல் அதிகாரியோ, ஆய்வாளரோ தெரிவிக்கவில்லை.

5 வரவு—செலவுத் திட்டம் 1983—84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

கோரிக்கை எண். 26

கைத்தறியும் நெசவுத் தொழிலும்

(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.—

''மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,06,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

(திருவாளர்கள் திரு. சு. பாலன், கே. எம். தங்கமணி ஆகியோர் இருக்கையில் இல்லை)

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, விசைத்தறியில் தயார் செய்த துணிகளை கைத்தறி நெசவு துணி என லேபில் ஒட்டி மோசடி செய்யப்படுவதால் கைத்தறித் தொழில் பாதிக்கப்பட்டுள்ளதை நிவர்த்தி செய்ய ஏற்பாடு செய்யாமலிருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறி மற்றும் நெசவுத் தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,06,32,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் அவினாசி வட்டம் சாவக்கட்டுப்பாளையம் பெரியாயி பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறி மற்றும் நெசவுத் தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 7,06,32,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னால் கைத்தறி மற்றும் பஞ்சாலை என்கிற தலைப்பின் கீழ் கொள்கைத் திட்டங்கள் ** வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை நான் படித்ததாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்ட பிறகு என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறேன்.



திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் பஞ்சாலை கொள்கைத் திட்டங்கள் என்று 1983—84-ஆம் ஆண்டு கோரிக்கை எண் 26-ல் பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலுள்ள 30.2 இலட்சம் கைத்தறியாளர்களில், தமிழ்
நாட்டில் 5.6 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இந்தியாவில்
இருக்கின்ற உற்பத்தியில் நான்கில் ஒரு பகுதி தமிழ்நாடு
தயாரிக்கிறது. இவைகளை நம்பியுள்ள 30 லட்சத்திற்கும்
மேற்பட்ட தமிழ்நாட்டுக் குடும்பங்கள் இந்த கைத்தறியிலே
ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தியன் ஹேண்ட்லூம் கமிஷன்
அறிக்கையின்படி 4.5 மீட்டர் கைத்தறி ஒரு நாளைக்கு
உற்பத்தி செய்கிறார்கள். என்ற கருத்தைக் குறிப்பிட்டிருக்
கிறார்கள். அதேபோல் கைத்தறித் தொழிலாளிக்கு 300
நாட்களும் வேலைவாய்ப்பு இருக்கிறதென்று சொல்லியிருக்
கிறார்கள். இது அன்னியில் வெளுப்பாக்குதல், சாயமிடல்,
மெருகு ஏற்றுதல், அச்சிடுதல் போன்ற பணிகளில் 13.4 லட்சம்
பேர்களும், 2.67 லட்சம் கைவினைஞர்களும் இதிலே ஈடுபட்
டிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே
குறிப்பாக பெரும்பாலானவாகள் ஏழை நெசவாளர்கள்,
நீண்ட நாட்களாக தங்களுடையத் திறமையைக் காட்டி இதிலே
ஈடுபட்டிருக்கிறார்கள். அப்படி ஈடுபட்டு அந்தத் தொழிலிலே
வருகின்ற வருமானத்தை வைத்துத் தங்களுடைய குடும்ப
வாழ்வை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா
அவர்கள் நெசவாளர்கள் தொழில் எப்போதும் நூல் போன்றது.
அந்நூல் எப்போதும் சிக்கலாக இருக்கக்கூடியது. நூலில்
ஏற்படும் சிக்கலைப் போக்குவது போல நெசவாளர்
களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கின்ற சிக்கலையும்
நாம் போக்கியாக வேண்டும் என்று சொல்லியிருக்
கிறார்கள். நூலிலே சிக்கல் ஏற்பட்டால் அதைப்
பக்குவமாக நீக்க வேண்டும். அதே போல் நெசவாளர்கள்
குடும்பங்களிலே இன்றைய தினம் பல சிக்கல்கள் இருக்கின்றன.
அதை நாம் பக்குவமாக களைவதற்கு நாம் முயலவேண்டும்
என்று ஒரு கருத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்திருக்
கிறார்கள், நெசவாளர்கள் தறிகளிலே காலை வைத்துக்கொண்டு
கையினாலே அந்த நாடானை இழுத்து முகத்திலே பெருமூச்சு
விட்டு உள்ளத்திலே வேதனை பொங்க தேய்பிறை போல் அவர்கள்
வாழ்க்கையிலே வறுமை நூற்றுக்கு 90 நெசவாளர்கள் குடும்

** 438—141-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சடிக்கப் பெற்றுள்ளது.

(முற்பகல் 11-10)

அது மட்டுமல்ல. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சுற்றுப் பயண விவரத்தைக் கொடுத்தும், அதுபற்றி தெரிவிக்கவில்லை என்பதற்காக காவலதுறையால். அதிகாரிகள், ஆறுமுகநேரி காவல்துறை ஆய்வாளர் மற்றும் தலைமைக் காவலர் ஆகியவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோமே தவிர, அரசியல் காரணமோ தேர்தல் காரணமோ, அல்லது வேறு எந்த காரணமும் அல்ல; 26-ஆம் தேதியை ஒட்டியே, அதற்கு முன்னாலே ஏற்பட்ட கலவரத்தை ஒட்டியே தவிர, அல்லது வேறு மாச்சரியத்தினுடைய அடிப்படையில் இல்லை. இவ்வாறு பல புகார்கள். பல நிலைமைகள் அங்கே இருக்குமேயானால், சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டிய முழு பொறுப்பையும், அரசு ஏற்றுக் கொண்டிருப்பதன் காரணமாக - ஆக அரசிற்கும் வராமல் மற்றவர்களுக்கும் தெரியாமல், மாண்புமிகு உறுப்பினர் ஒருவருக்குத் தனிப்பட்ட வகையில் பல கொடுமைகள் இழைக்கப்படுமேயானால், அதற்கு நீதி வழங்கவும், அல்லது முறைப்படி விசாரிக்கவும் அரசு ஆயத்தமாக இருக்குமென்பதையும் அரசினுடைய கவனத்திற்கு வராமல் சில பல குழப்பங்கள் நடைபெற்றிருக்குமேயானால் கூட- அதனுடைய அடிப்படையிலே எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எடுப்போம் என்ற உறுதியும் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட புகார்களையும் மற்றவைகளையும் இந்த அரசு எப்பொழுதும் எடுக்கத் தயாராக இருக்கும், என்றும் அது வழக்கு மன்றத்தின் மூலமாக நீதியை நிலைநாட்டுகின்ற முயற்சியைத் தொடர்ந்து மேற்கொள்ளும் என்றும் இங்கே நான் தெரிவித்து இதற்கு மேலே ஒத்திவைத்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தாலே நிராகரிக்கலாம் என்று கூறுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு பிரச்சினைக்கு விளக்கம் அளித்த பிறகு திரும்ப இந்த ஒத்திவைப்புத் தீர்மானம்......

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள் சொன்ன பதிலைப் பற்றி நான் எது சொன்னாலும், அது பொருத்தமாக இருக்காது. நான் அவையின் முறைகளை ஏற்றுக் கொள்கிறவன். ஆனால் எந்த ஒரு பிரச்சினையிலும் ஒரு மாறுபட்ட நிலை ஏற்படுமேயானால், அதை அவைத்தலைவரிடத்திலே தெரிவிக்க வேண்டிய கடமை எனக்குண்டு. முன்னவர் அவர்கள் சொன்ன கருத்தினுடைய பகுதி, அதனுடைய உண்மைகளுக்கு மாறுபட்ட கருத்தை நான் விளக்கக் கூடாதே தவிர அதற்கு மாறுபாடாக, உண்மைகள் அதற்கு மாறாக இருக்கின்றன என்று நான் கருதுவேனேயானால், அதை வெளியிடுவதற்காக ஒத்தி வைப்பை நீங்கள் ஏற்றுக் கொண்டால் அதை வெளியிட வாய்ப்பிருக்கும். ஒத்தி வைப்பதற்கு வாய்ப்பில்லை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று





தாங்கள் கருதுவதாக இருந்தால் நான் என்னுடைய கருத்தை அல்லது இங்கே இந்த தீர்மானத்தைக் கொண்டு வந்தவருடைய கருத்தை வெளியிடுவதற்கு வழியே இல்லை என்ற காரணத்தால் அதை வெளியிடுவதற்கான ஒரு வழியை நான் மேற்கொள்ள வேண்டியிருக்கும் எனவே, அவைகளுக்கு இடையில் அதில் தாங்கள் ஒத்திவைப்பதாக இருந்தால் எங்களுக்கு நியாயமான வாய்ப்பிருக்கிறது அவர் சொன்ன கருத்துக்களிலே உள்ள வேற்றுமைகளை, நியாயமானவைகளை நான் எடுத்துவைக்க முடியும் அப்படி வாய்ப்பில்லை என்று தாங்கள் சொல்வீர்களேயானால், அப்படி தெரிவிக்கிறபோது, எங்களுடைய மாறுபாட்டை தெரிவிக்க வேண்டி தாங்கள் ஒரு வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இப்போது விளக்கம் அளித்ததற்குப் பிறகு, சபையை ஒத்திவைப்பது, முறையல்ல மரபு அல்ல. உங்களுக்குத் தேவை என்ற உரிமைகளை கொடுப்பது என்பது தனிப்பட்ட விவகாரம். எதிர்க்கட்சியில் கேட்கப்பட்டதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

திரு. க. அன்பழகன் : இந்தப் பிரச்சினையிலே கூட விவாதிக்க முழு வாய்ப்பை தாங்கள் அளிக்காத காரணத்தால் உங்களுக்குத் தீர்ப்பு அளிக்கக் கூடிய உரிமை இருந்தாலும் கூட, நாங்கள் எங்களுடைய வேதனையை வெளிப்படுத்திக்கொள்வதற்காக வெளிநடப்புச் செய்கிறோம், அதைத் தங்களுக்குத் தெரிவித்து விட்டு வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது நம்முடைய அவை முன்னவர் அளித்த விளக்கம் அதிகாரியினுடைய கருத்தினை வைத்து தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அவை உண்மைகளுக்குப் புறம்பாக இருக்கிறது என்ற காரணத்தால் எங்களுக்கு திருப்தியளிக்கக் கூடிய அளவில் பதில் கிடைக்கவில்லை என்று கூறி முஸ்லீம் லீக் சார்பாக நான் வெளிநடப்பு செய்கிறேன்.

(திரு. ஏ. சாகுல்ஹமீது வெளிநடப்புச் செய்தார்)

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முன்னவர் வெளியிட்ட கருத்திலே உண்மை நிலை பிரதிபலிக்கப்படவில்லை என்றும் அங்கே மக்கள் பழிவாங்கப்படுகிறார்கள் என்ற காரணத்தாலும் முன்னவரவர்கள் கொடுத்த விளக்கம் எங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்பதற்காக இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

பங்களிலே இன்றைக்கு இருக்கிறது. அவர்கள் வாழ்வில் மறு மலர்ச்சியை நாம் ஏற்படுத்த வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறி நெசவாளர்கள் குடும்பங்கள் சிறப்பான முறையிலே இருக்க வேண்டும், அவர்கள் நல்ல முறையிலே இருக்க வேண்டும் என்று 1956-லே கைத்தறித் தேக்கம் ஏற்பட்ட போது, நெசவாளர் குடும்பங்கள் தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்திலே ஆட்சிப் பொறுப்பிலே இல்லாமல் எதிர்க்கட்சி வரிசையிலே இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறி துணியை தன்னுடைய தோளிலே சுமந்து விற்ற அந்த காட்சி இன்னும் பசுமையாக நினைவுக்கு வருகிறது.

(முற்பகல் 11·20)

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

நம்முடைய அவை முன்னவர் அவர்களும் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் என்.வி என். அவர்களும் மதியழகன் போன்றவர்களும் இந்த கைத்தறித் துணி தேக்கம் ஏற்பட்ட நேரத்தில் இந்தத் துணிகளை தோளிலே சுமந்து சென்று விற்பனை செய்து, அவர்களுடைய துயரிலே நாங்கள் பங்கு கொள்கிறோம் என்ற அளவிலே செயல்பட்டார்கள். கைத்தறியை ஆதரிக்க வேண்டுமென்ற குறிக்கோளை நம்முடைய இதய தெய்வம் பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்தி வந்தார்கள்.

அந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு 25-8-1972-ல் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் இந்த அரசு பொறுப்பை ஏற்றவுடன் ஜி.ஓ. 1408—ல் திரு. கே. சந்தானம் அவர்களை தலைவராகவும், திரு. ஆர். கனகசபை மற்றும் திரு. எம். பி. நாச்சிமுத்து ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட ஒரு வல்லுநர் குழுவை அமைத்தார்கள். அந்தக் குழு நாட்டில் திட்ட ஆணைக் குழு கிராம சிறு தொழில்களுடன் கைத்தறித் தொழிலையும் சேர்த்ததின் மூலம் தேசிய பொருளாதாரத்தில் கைத்தறிக்கு அளிக்கும் உதவி போதுமானதாக இல்லை என்ற கருத்தை தெரிவித்தது திட்ட ஆணைக் குழு கைத்தறியையும் விசைத்தறியையும் இணைக்க விரும்பியது நம்முடைய தீவினைப் பயன் என்று எடுத்துக்காட்டியது. அதோடு அந்த திட்ட ஆணைக் குழுவின் கைத்தறிக்குப் பதிலாக விசைத்தறிகளைப் பரவலாக்குவது என்ற ஆபத்தான கருத்துஒங்க தலைப்பட்டது. அந்த விசைத்தறிகளின் ஆபத்தை பற்றி எல்லாம் இப்போது நாம் உணர்ந்துகொண்டு வருகிறோம். ஒரு விசைத்தறியானது பத்து கைத்தறிக் குடும்பங்களை கபளீகரம் செய்யக்கூடிய நிலைமையில் இருந்த காரணத்தால் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சியில் இருந்த காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் விசைத்தறி நுழைவதை எதிர்த்தார்கள். ஆட்சியில் இல்லாத போதும் திராவிட முன்னேற்றக் கழகம் விசைத்தறி பரவுவதை





தீவிரமாக எதிர்த்து வந்திருக்கிறது. என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும்.

விசைத்தறியை புகுத்துவதும் மதுவிலக்கை தளர்த்துவதும் முழுக்க முழுக்க மைய அரசின் அக்கிரமமான போக்கைக் காட்டுகிறது என்று 1967-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கைத்தறி வார விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றைய தினம் அந்த விசைத்தறி தெரிந்தோ தெரியாமலோ எப்படியோ இந்த நாட்டிலே ஆதிக்கம் புரிந்துகொண்டு வருகிறது.

விசைத்தறிக்கு உரிமம் கொடுக்க வேண்டியது மைய அரசு. ஆனால் தமிழ்நாட்டில் இன்றைய தினம் விசைத்தறி வேகம் வேகமாக பரவி வருகிறது என்றும் அரசு இதிலே மெத்தனமாக இருக்கிறது என்றும் சொல்வது குற்றமாகாது என்று கருதுகிறேன்.

இன்னும் சொல்லப் போனால் இந்த விசைத்தறிகள் மத்திய அரசு உரிமம் பெற்றிருந்தாலும் பல இடங்களில் ஏதோ ஒரு வழியில் மறைமுகமாக நுழைகிறது என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அனுமதி பெறாத விசைத்தறிகள் தமிழ்நாட்டிற்குள் எப்படி நுழைகின்றன. அனுமதி பெற்று வந்த விசைத்தறிகள் எத்தனை? அனுமதி பெறாமல் வந்த விசைத்தறிகள் எத்தனை? இது கைத்தறிக்கு போட்டியாக மட்டும் வரவில்லை; ஒரு பேரிடியாக வந்திருக்கிறது. ஒரு அரசு இங்கே நடந்துகொண்டிருக்கிறது. ஆனால் மைய அரசு உரிமம் பெற்ற அந்த விசைத்தறிகள் இன்றைய தினம் இடம் மாறி வருகின்றன. ஓரிடத்தில் வைத்துக்கொள்ள உரிமம் பெற்றவர்கள் உரிமம் பெறாத மற்றொரு இடத்திற்கு அந்த விசைத்தறிகளை கொண்டு வந்து ஓட்டுகிறார்கள். அதற்கு எப்படி உரிமம் தரப்படுகிறது? ஒரு ஊரிலே இருந்து மற்றொரு ஊருக்கு விசைத்தறிகளை மாற்றும்போது எப்படி அந்த உரிமம் செல்லுகிறது என்பதை அரசு கவனத்தில் கொண்டு, அந்த விசைத்தறிகள் ஆதிக்கத்தை ஒழிக்க அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விசைத்தறி ஆதிக்கம் திட்ட ஆணைக் குழுவால் வந்த வேதனை. அதைப் பாதுகாக்க, அதாவது விசைத்தறி ஆதிக்கத்திலிருந்து கைத்தறியை பாதுகாக்க, அரசு என்ன செய்யப் போகிறது? இது மிக முக்கியமான பிரச்சனை. நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப் போல 10 கைத்தறி குடும்பங்களை ஒரு விசைத்தறி அழித்துவிடும். ஆகவே, இன்றையதினம் கைத்தறிக்கும் விசைத்தறிக்கும் ஒரு முக்கியமான பிரச்சனை இருந்து கொண்டிருக்கிறது. அரசு இதிலே தீவிரமான கவனம் செலுத்த வேண்டும். ஏதோ ஒரு இடத்தில் விசைத்தறி நடத்த உரிமம் பெற்றவர்கள் மறைமுகமாக உரிமம் பெறாத இடத்திற்கு

வருகிறார்கள். ஏன் அப்படி வருகிறார்கள்? எப்படி வருகிறார்கள்? அதிலே தமிழக அரசின் உரிமம் என்ன? அந்த உரிமம் எப்படி செல்லுகிறது? இப்படி பல இடங்களில் விசைத்தறி ஆதிக்கம் மறைமுகமாக வருகிறது.

அரசே அதற்கு உரிமம் தருகிறதோ தெரியவில்லை அல்லது கைத்தறி நெசவாளாகள் எப்படியாவது போகட்டும் என்ற அளவிலே அந்த விசைத்தறிகளுக்கு அனுமதி கொடுக்கிறீர்களோ? தெரியவில்லை. ஏனெனில் அதிகப்படியான அளவிற் விசைத்தறி உரிமம் பெற்றவர்கள் வந்துக் கொண்டேயிருக்கிற காரணத்தால் கைத்தறி நெசவாளர்களுடைய குடும்பங்கள் இன்றையதினம் நடுத்தெருவில் நிற்கிற நிலைமையில் இருக்கிறார்கள். 10 கைத்தறி தொழிலாளர்களின் குடும்பங்களை ஒரு விசைத்தறி ஏற்பட்டால் பாதித்துவிடும் என்பதை அரசு கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே மறுபடியும் நினைவு படுத்த விரும்புகிறேன்.

அடுத்து கைத்தறிக்கு என்று குறிப்பிட்ட ரகம் ஒதுக்கப்பட வேண்டும் இன்னின்ன துணி ரகங்களை கைத்தறியில்தான் நெய்ய வேண்டும் என்று பிரித்து வகுக்கப்பட வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட இதுபற்றி சொல்லியிருக்கிறார்கள். கைத்தறிக்கு என்று சில ரகங்கள் ஒதுக்கப்பட வேண்டும். விசைத்தறிக்கு என்று சில ரகங்களை ஒதுக்க வேண்டும். மில் களுக்கு என்று சில ரகங்களை ஒதுக்க வேண்டும் என்று அன்றே எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையில் கவனம் செலுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் அவ்வாறு ஒவ்வொன்றிற்கும் குறிப்பிட்டு அந்தந்த ரகங்களை திட்டவட்டமாக அறிவிப்பார் என்று நான் நம்புகிறேன்.

அடுத்ததாக, மாஸ்டர் வீவர்கள் என்று சொல்லக்கூடியவர்களிடத்திலே கைத்தறி நெசவாளர்கள் எப்படி மாட்டிக் கொண்டு கஷ்டப்பட்டுக் கொண்டுவருகிறார்கள் என்று சொன்னால் அவர்களுடைய பொருளாதார பலவீனங்களை பயன்படுத்திக் கொண்டு, அந்த மாஸ்டர் வீவர்கள் மொத்தமாக அவர்களுக்கு 1000, 500 என்று தொகைகளை கொடுத்துவிட்டு அந்த கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து எந்த வகையிலும் முன்னேற முடியாமல் தடை செய்யக்கூடிய நிலையில் வைத்திருக்கிறார்கள். ஆகவே, ஒரு நெசவாளி கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக ஆக வேண்டுமென்றால் அவர் மாஸ்டர் வீவர்களின் பிடியிலிருந்து விடுபட வேண்டும். அப்படி விடுபட வேண்டும் என்றால், பட்ட கடனை அடைக்க வேண்டும். ஆகவே, ஏதாவது ஒருவகையிலே அந்த மாஸ்டர் வீவர்களின் பிடியிலிருந்து கைத்தறி நெசவாளர்களை விடுவிக்க அரசு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, நூல் விலை ஏற்றம். இந்த நூல்விலை ஏற்றம் இப்போது ஒரு பெரிய பிரச்னை. அந்த நூல் விலையை நிர்ணயம் செய்யக் கூடிய அந்த உரிமை நம்மிடத்திலே இல்லை; மகாராஷ்டிராவிலே உள்ள காட்டன் பெடரேஷனிடத்திலே இருக்கிறது அந்த உரிமை. அவர்கள் நிர்ணயிப்பதை தான் நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதை நாம் மறுப்பதற்கில்லை. குஜராத் பஞ்சாப் போன்ற மாநிலங்களில் எல்லாம் பருத்தியின் உற்பத்தி அதிக அளவில் இருந்தாலும், காட்டனுடைய விலையை நிர்ணயம் செய்யக்கூடிய உரிமை மகாராஷ்டிராவிலே இருக்கிற காட்டன் பெடரேஷன் தான் செய்ய வேண்டும். அதற்கு மட்டும் மொத்தத்தில் மனோப் பலியாக வாங்கக்கூடிய ஒரு உரிமை இருக்கிற காரணத்தால், காட்டனுடைய விலையை நிர்ணயம் செய்யக்கூடிய உரிமையும் அதனிடத்திலேயே இருக்கிறது. அது நிர்ணயிக்கும் விலைதான் இந்தியா பூராவுக்கும் என்ற ஒரு நிலை இருக்கிறது. அதற்கு மாற்றுக் கருத்து என்பதே இல்லாமல் போய்விடுகிறது. பருத்தி ஆலைகளுக்கு பங்கீடு உரிமையும் அதனிடமேயிருக்கிறது.

அடுத்து 1969-ல் நிறுவப்பட்ட காட்டன் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா என்ற நிறுவனத்தில், தென்னாட்டில் இருந்து ஒருவர் கூட அதில் இயக்குநராக இல்லை. 1969-ல் அது நிறுவப்பட்டது. அதில் திராவிட நாடு என்று சொல்லக்கூடிய, ஆந்திரம், கர்நாடகம், தமிழகம், கேரளம் ஆகிய அனைத்து மாநிலங்களிலிருந்தும் ஒருவர் கூட உறுப்பினராக கூட அந்த காட்டன் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியாவிலே இல்லை; அதை மாற்ற அரசு முயற்சிக்க வேண்டும். ஏனென்றால் இந்தியாவிலே 442 நூற்பாலைகள் இருக்கின்றன. அதில் தென்னகப் பகுதியில் தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், கேரளா ஆகியவைகளில் மட்டும் 280 நூற்பாலைகள் உள்ளன. அதில் தமிழ்நாட்டில் மட்டும் 219 உள்ளன. ஆகவே, அந்த காட்டன் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியாவில் நாமும் அங்கம் வகிக்கக்கூடிய வகையில் அரசு முயற்சி எடுத்து அந்த உரிமையைப் பெற வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல யார்ன் பேங்க் ஏற்படுத்த வேண்டும் என்ற யோசனையை முன்னாள் கைத்தறி இயக்குநர் திரு. வரதராஜன் அவர்கள் மைய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அது பரிசீலனையில் இருக்கிறது. அதை திருத்தியமைக்க நடவடிக்கை எடுத்து, அந்த யார்ன் பேங்க ஏற்படுத்தினால், அந்த நூற்பு ஆலையிலே நூல் ஒரே விலையில் விற்பதற்கு முடியும்.

(முற்பகல் 11-30)

ஆகவே' அந்த யார்ன் பேங்கை ஏற்படுத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அரசாங்கமும் ஏற்பாடு செய்ய வேண்டும் அதற்காக முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சராக இருந்தவருக்குத் தெரியும். அதனால் தேக்கம்கூட
ஏற்பட்டு இருக்கின்றது. அந்த சிக்கலைத் தவிர்ப்பதற்கு நாம்
முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அதேபோல் நூற்
பாலைகளில் கொடுக்கப்படுகின்ற அந்த செஸ் அதை பொது
நிதியில் சேர்க்கக் கூடாது. அது கைத்தறி நெசவாளர்களுக்கு
பயன்படுகிற வகையில் நூற்பாலைகள் வழங்குகின்ற அந்த செஸ்
இனத்தை சர்பிளஸ் இருக்கின்ற நேரத்தில் காமன் குட் பண்டிலே
சேர்ந்திருக்கிறார்கள் அதை கைத்தறி நெசவாளர்களுக்கு பயன்
படும் அளவிலே அதற்கு ஒரு கொள்கை முடிவினை எடுக்க
வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்
கிறேன்.

அதேபோல் கைத்தறி நெசவாளர்களுக்கு பயன்படுகிற
அளவுக்கு அரசில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தருவதுபோல் அவர்
களுக்கும் நல்ல மருத்துவ வசதி செய்து தரவேண்டும் என்றும்,
அதேபோல் கோ—ஆப்-டெக்ஸ் கைத்தறி பாலியஸ்டர் சேலைகள்,
லுங்கிகள், சூட்டிங்குகள், ஏராளமாக தயாரிக்கப்படுகின்றன,
கைத்தறி நெசவாளர்கள் குடும்பங்கள் அதை நெய்கின்றனர்:
ஆனால் அவர்களுக்கு என்று ஒரு கன்சஷன் ரேட் கிடையாது.
கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் இன்றையதினம் ஒவ்வொரு
துறையிலே ஒரு கன்செஷன் இருக்கிறது அதேபோல இந்த
கோ—ஆப்-டெக்ஸ் தயாரிக்கின்ற பல ரகங்களுக்கு அதை
நெய்கின்ற அந்த தொழிலாளர்களுக்கு கன்செஷன் ரேட் தருவது
மிக முக்கியம். 20 அம்ச திட்டத்திலே இந்த கைத்தறி நெச
வாளர்களை வாழ்விக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை
சொல்லியிருக்கிறார்கள் அதற்கு இந்த அரசாங்கம் துணை
நிற்க வேண்டும் என்பதையும் கைத்தறி நெசவாளர் தொழி
லாளர் குடும்பங்களை வாழ்விக்க வேண்டும் என்றால் இங்குள்ள
பவர்லூம் விசைத்தறியை ஒழிக்க வேண்டும். ஆகவே நெச
வாளர்கள் வாழ விசைத்தறி ஒழிக என்ற முழக்கத்தை இந்த
நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல்
நெசவாளர் குடும்பங்கள் வாழ விசைத்தறி ஒழிக என்ற
முழக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன் அதேபோல் கைத்தறி
தொழிலாளர்கள் கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் வாழ
விசைத்தறி ஒழிக, ஒழிக என்று கூறி விடைபெறுகிறேன்.

திரு. இ. கோபால்: மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, கைத்தறியும், நெசவுத் தொழிலும்
பற்றிய கோரிக்கை எண் 26-ன் மீது என்னுடைய கருத்துக்களை
தெரிவிக்க வாய்ப்பு அளித்தமைக்கு முதலிலே என்னுடைய
நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்திய நாட்டிலே விவசாயத்திற்கு அடுத்தபடியாக
ஒரு தொழில் நடந்து வருகிறது என்று சொன்னால் அது
நெசவுத் தொழிலாகத்தான் இருந்து வருகிறது என்பதை
ஆணித்தரமாக கூற கடமைப்பட்டிருக்கிறேன். "செய்யும்
தொழில் எல்லாம் நெய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை" என்பது



வாய்மொழி. அந்த வகையில் இந்தியாவிலே ஏறக்குறைய
30.2 லட்சம் கைத்தறிகள் இயங்கி வருகின்றன என்கின்ற ஒரு
கருத்து இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே தமிழ்நாட்டில்
மட்டும் 5.6 லட்சம் கைத்தறிகள் இங்கே இயங்கி வருகின்றன.
அதாவது இந்திய நாட்டிலே கைத்தறி தொழிலே ஈடுபட்டிருக்
கிறவர்களிலே ஏறக்குறைய 19 சதவீத மக்கள் தமிழ்நாட்டில்
நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை இந்த
நேரத்தில் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அது
மட்டும் அல்ல இப்படி கைத்தறி நெசவாளர்கள் மூலமாக
உற்பத்தியாகின்ற துணி ஏறக்குறைய இந்தியாவிலே 2,900
மில்லியன் மீட்டர். அதில் தமிழ்நாட்டில் மட்டும் 725 மில்லியன்
மீட்டர் கைத்தறி துணி உற்பத்தியாகின்றன. இந்திய நாட்டிலே
உற்பத்தி ஆகின்ற கைத்தறி துணியின் அளவிலே சதவீதத்திலே
ஏறக்குறைய தமிழ் நாட்டில் 25 சதவீதம் உற்பத்தியாகிறது.
அதாவது 4—ல் ஒரு பங்கு தமிழ்நாட்டில் உற்பத்தியாகிறது
என்று சொல்கிறபோது கைத்தறி நெசவாளர்களுடைய
கோரிக்கைகளும் கைத்தறி நெசவாளர்களுக்கு ஆற்றவேண்டிய
கடமைகளும் இன்று தமிழகத்தில் தான் இருந்து வருகிறது
என்ற இலக்கணத்தை எடுத்துக்காட்ட வேண்டும். பேரறிஞர்
அண்ணா அவர்கள் இந்த கைத்தறி துணிகளை எல்லாம்
தோளிலே சுமந்து விற்று நலிந்து குடும்பங்களுக்கு வாழ்வு
தரவேண்டும் என்ற வகையிலே கைத்தறி துறைக்கு முக்கியத்
துவம் கொடுத்து வந்தார்கள் என்பதை இந்த நேரத்தில்
பெருமையோடு சொல்லிக்கொள்ள நான்
கடமைப்பட்டுள்ளேன்.
அப்படி பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின்னால் நலிந்து
வருகின்ற அந்த தொழிலுக்கு முன்னேற்றம் காட்டுகின்ற அந்த
முக்கியத்துவத்தை கொடுத்தவர் 1977 ஆம் ஆண்டு தமிழ்
நாட்டில ஆட்சி பொறுப்பை ஏற்ற எங்கள் இதய தெய்வம்
புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான்
பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11—40)

பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பின்னாலே கைத்தறி
தொழில் நசிந்து வந்தது மட்டுமல்ல, கைத்தறித் தொழிலிலே
ஈடுபட்ட மக்கள் பல இன்னல்களுக்கு ஆளானார்கள். அவர்கள்
உற்பத்தி செய்த பொருள்கள் தேங்கிக் கிடக்கின்ற நிலைமைகள்
எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்து
வந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கைத்தறித்
தொழிலிலே ஈடுபட்டிருக்கிற மக்களுக்கு முக்கியத்துவம் இருந்ததா
என்றால் இல்லை. கைத்தறி தொழிலுக்கு முக்கியத்துவம் இல்லாத
ஒரு நிலை இருந்தது. ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சிப்
பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குக் பின்னால் கைத்தறித்
துறைக்கு என்று ஒரு தனி அமைச்சரைக் கொடுத்து முக்கியத்
துவம் கொடுத்து உற்பத்தி செய்கிற துணிகளையெல்லாம்
தேங்காத நிலையை ஏற்படுத்தி விற்பனை செய்து நலிந்த குடும்
பங்களுக்கு வாழ்வு கொடுத்திருக்கிறார்கள் என்பதைப்
பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தின்

அடுத்து சிட்டங்களைப் பொறுத்தவரையில் விதிக்கப்படும் செஸ்ஸை நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை நீக்கினால்தான் பலவிதத்திலே நூல் விலை குறைவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து நேஷனல் ஹேண்ட்லூம் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனின் தலைமையிடம் உத்திரப் பிரதேசத்தில் இருக்கிறது. அதனைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். ஏனென்றால் பாதிக்கும் மேற்பட்ட நூற்பாலைகள் இங்கே இருக்கின்றன. எனவே அந்த நேஷனல் ஹேண்ட்லூம் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனின் தலைமையினை தமிழ்நாட்டிற்கோ அல்லது ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களுக்கோ கொண்டு வந்தால் நாம் ஒரு நெருக்கமான தொடர்பை வைத்துக் கொள்ளலாம், முடியுமானால் தமிழ்நாட்டிற்கே அதனைக் கொண்டுவருவதற்கும் முயற்சிக்க வேண்டும். இங்கே அந்த அலுவலகம் இயங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நெசவுத் தொழிலாளர்களின் மாத வருமானம் இன்றைக்கு மிகவும் குறைவு. அவர்கள் வறுமையிலேதான் இருக்கிறார்கள். இன்றைக்கு 90 சதவிகிதத்திற்கு மேற்பட்ட நெசவுத் தொழிலாளர்களின் குடும்பங்கள் வறுமையில்தான் வாடிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் முன்பிருந்ததைவிட ஓரளவுக்கு தற்போது வருமானத்தை உயர்த்தினாலும் கூட அந்த வருமானத்தை வைத்துக் கொண்டு அவர்கள் தங்களுடைய வாழ்க்கையைச் செம்மையாக நடத்த இயலவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூற்பாலைகளில் வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட வியாதிக்கும் மிக்க நெருக்கமான தொடர்பு தமிழ்நாட்டிலே உண்டு. அப்படி அவன் மனுப் போடாமலே வருகின்ற வியாதி டி.பி. வியாதி யாகும். அதேபோன்று யானைக்கால் வியாதியும் வருகின்றது. கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்த வரையிலே இந்த வியாதிகள் பெருமளவில் வருகின்றது. எனவே இதற்காக அவர்களுக்கு உடனடியாக வைத்தியம் செய்ய ஏற்பாடு செய்து கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களைக் காப்பாற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து கைத்தறி நெசவாளர்களின் வீட்டுப் பிள்ளைகள் பலர் வறுமையிலே தான் இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையிலே குடும்பத்திலே ஒருவருக்கு வேலை தருவதாக மாண்புமிகு அமைச்சர் திரு. கே. இராஜா முகமது அவர்கள் அந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்த நேரத்திலே 1977 ஆம் ஆண்டிலே சொன்னார்கள். ஆனால் அந்தக் கொள்கை விடப்பட்டுவிட்டது. எனவே அது குறித்து ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோன்று குடியிருப்பு மனைகள், படிப்புக்கு உதவி போன்றவை பற்றி எல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே ஏற்பாடு களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து நெசவுத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் 8 இலட்சத்து 81 ஆயிரம் பேர் மொத்தம் இந்தியாவிலே இருக்கிறார்கள். அவர்களில் தென்னாட்டிலே மட்டும் 2,57,665 பேர்கள் இருக்கிறார்கள். கதவடைப்பு போன்ற காரணங்களால் அவர்கள் பாதிக்கப்படுகின்ற போது அரசு அதற்கு நிவாரணம் தருகின்றது என்பதை வரவேற்கிறேன். ஆனால் அவர்களின் வருமானம் நிரந்தரமாகப் பாதிக்கப் படுகின்ற நேரத்தில் அவர்கள் போதுமான அளவுக்கு தங்களது குடும்பத்தை நடத்திச் செல்வதற்குரிய வகையில் அந்த உதவி அமைய வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கைத்தறி நெசவாளர்கள் இன்றையதினம் 4.5 மீட்டர் நீளம் நெய்யக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கின்றது என்ற புள்ளிவிவரங்களை இங்கே கொடுத்திருக்கிறார்கள். அதைக் கொஞ்சம் அதிகப்படுத்தி ஒரு 10 அல்லது 15 மீட்டர் அளவுக்கு நெய்யக்கூடிய வகையில் ஆராய்ச்சி செய்து அதற்கு ஆவன செய்தால் கைத்தறி நெசவாளர்கள் கொஞ்சம் அதிகமாக வருமானம் பெறுகின்ற நிலைமை ஏற்படும். அதற்கு வேண்டிய வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து கைத்தறித் துணித் தேக்கம் இன்று கோடிக் கணக்கிலே இருக்கின்றது. அதற்கு நிரந்தரமாகப் பரிகாரம் காண வேண்டும். இப்போது ரிப்பேட் என்று கொடுக்கப்பட்டு வருவதை ஒரு காலகட்டத்திலே எந்த அரசாவது வந்து நிறுத்தி விட்டால் கைத்தறித் தொழில் பாதிக்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு கோ-ஆப் டெக்ஸ் மூலமாக பாலிஸ்டர் போன்ற துணிகள் நெய்யப்பட்டு ஷர்ட் துணிகள் பேண்ட் துணிகள் ஆகியவை வெளி மாநிலங்களுக்கு எல்லாம் அனுப்பப் படுகின்றன. அவ்வாறு ஏற்றுமதி செய்வதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்தில் அவற்றிலே செய்யப்படுகின்ற டிசைனைப் பொறுத்தவரையில் போதுமான அளவுக்கு இல்லை. மேல்நாடுகளில் இருப்பதுபோன்று டிசைன் மாற்றங்களை எல்லோரும் பொதுவாக விரும்புவார்கள். எனவே அந்த டிசைன் மாற்றம் என்ற வகையிலே கோ-ஆப்-டெக்ஸ் முனைப்பான கவனம் செலுத்தி விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அடுத்து கைத்தறித் துணி ஏற்றுமதியினைப் பொறுத்தவரையில் பல தடைகள் இருக்கின்றன. பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன என்பது முன்பு அந்தத் துறையின்

இந்தத் திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளர் இறக்க நேரிடுகின்ற போது, அவருடைய சேமிப்புக் கணக்கிலே உள்ள தொகையுடன் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெற்று ரூ. 3,000 கொடுத்து வருகிறார்கள். இதற்கு முன்னாலே ரூ. 500 கொடுத்து வந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலேதான் இது ரூ. 3,000–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு பணிவன்பான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் ஒரு நெசவுத் தொழிலாளி அந்தத் தொழிலிலே ஈடுபடுகிறான் என்று சொன்னால் அவன் நெய்து துணியை உற்பத்தி செய்வதற்கு, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, ஒரு குடும்பத்திலே 4 பேர்கள் ஒத்துழைப்பு தந்தால் தான் அந்தத் தொழிலைச் செய்யமுடியும் என்கின்ற ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. அந்த நிலையினை அடிப்படையாகக் கருதி, கொடுக்கின்ற ரூ. 3,000 அந்த குடும்பத்திற்குப் போதாது என்று சொல்லி, அந்தத் தொகையை நீங்கள் ரூ. 5,000–ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை உங்கள் முன்னாலே நான் பணிவன்புடன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று, தமிழக அரசு பல திட்டங்களை வகுத்தாலும், நெசவாளர்களுடைய, ஏழை பெருமக்களுடைய நலனைக்கருதி, வீட்டுவசதி திட்டம் கொண்டுவரப்பட்டு, 1962–ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டிருந்ததை, மீண்டும் புரட்சித் தலைவர் ஆட்சி புத்துயிர் அளித்து, ஏழை நெசவாளர் பெருமக்களுக்கு வீடுகள் கட்டித் தருகின்ற நிலைமையை உருவாக்கி, ஏறக்குறைய 5,000 பேர்களுக்கு வீடுகள் கட்டித்தருகின்ற நிலைமையினை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் குறிப்பாக, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டத்தில். குறிப்பாக என்னுடைய தொகுதியில் நெசவாளர் பெருமக்கள், ஏறக்குறைய 25,000 பேர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் கூட ஏறக்குறைய 20–க்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் செயலாற்றிக் கொண்டு வருகின்றன. அந்த வகையிலே கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையிலே செயல்பட்டு வருகின்ற அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற அந்தச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு வீட்டு வசதியை பெருக்குவதற்கான நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–50)

அதுமட்டுமல்லாமல், கூட்டுறவுத் துறையின் சார்பாக, கூட்டுறவு நூற்பாலைகள், பஞ்சாலைகள் அமைக்கும் சூழ்நிலை தமிழ்நாட்டிலே இருந்து வருகிறது. குறிப்பாக வடாற்காடு, செங்கை மாவட்டங்களிலேயே நெசவுத் தொழிலை நம்பியிருக்



கின்றவர்கள் மட்டுமல்லாமல், குறிப்பாக பெரும்பாலான ஏழை மக்கள் விவசாயத்தையும் நம்பி இருக்கிறார்கள். இன்றைக்கு வறட்சி தாண்டவமாடுகின்ற நிலைமையில், ஆரம்பிக்கப்பட இருக்கின்ற கூட்டுறவு நூற்பாலையை சோளிங்கர் பகுதியான என்னுடைய பகுதியில் அமைத்துத் தர வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகள் விற்பனையானால் தான் இந்த நெசவாளர்களுடைய வாழ்வு வளம் பெறும். அந்த வகையிலே, உற்பத்தி ஆகின்ற துணிகளை விற்பனை செய்யும் போது நாம்கோவாப்டெக்ஸ் மூலமாக விற்பனை நிலையங்களை எல்லாயிடங்களிலும் திறந்தாலும், நவீனமான முறைகளிலே விற்பதற்கு ஏற்பாடு செய்தாலும் குறிப்பாக இந்தச் சபையிலே நான் ஒரு வேண்டுகோளை வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்திய நாட்டினுடைய மக்கள் தொகை அதிகமாகிக் கொண்டே போகிறது. அதைக் குறைக்க வேண்டுமென்பதற்காக பல திட்டங்களைத் தீட்டி மிகச் சிறப்பான வகையிலே சட்டங்களைக் கூடப் போடுகிறோம். ஆனால், இன்றைக்கு இந்திய நாட்டிலே ஏறத்தாழ இருக்கின்றவர்களில் தொழில் செய்து வரும் கைத்தறித் தொழிலைச் சேர்ந்தவர்கள் 25 சதவீதம் மக்கள் நெசவாளர் பெருமக்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களுடைய நலன்களைக் கருதி, இன்று அரசு உத்தியோகத்திலே இருப்பவர்கள், குறிப்பாக, நடுத்தர வர்க்கத்தினர், வியாபாரிகள்கூட ஓரளவு கைத்தறித் துணிகளை வாங்கி அணிய வேண்டுமென்ற ஒரு கட்டாய நிலைமையை எல்லாயிடங்களிலேயும் உருவாக்குவதன் மூலமாகப் பல இலட்சக்கணக்கான மக்கள், குறிப்பாக இன்றைக்குத் தமிழ்நாட்டிலே ஏறக்குறைய 70 இலட்சம் மக்கள், இந்தத் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு ஒரு நல்ல விடிவுகாலம் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் கூறி, அதற்கான சட்டதிட்டங்களை வகுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு மட்டுமல்லாமல், நெசவாளர்களுடைய துயரை தீர்க்கின்ற வகையில் நெசவாளர்களுக்கென்று தனிப்பட்ட முறையிலே கவனம் செலுத்தி, அவர்களுடைய வாழ்வும் வளமும் பெற வேண்டுமென்ற ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையிலே தமிழக அரசு தனியாக ஒரு வாரியத்தை அமைக்க வேண்டுமென்று சொல்லி இந்த அளித்த வாய்ப்பினை உருவாக்கி தந்தமைக்காக நன்றி கூறி, மானியத்தை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

சார்பிலே பேசிய மதிப்பிற்குரிய திரு. பாபு ஜனார்த்தனன் அவர்கள் கைத்தறித் தொழிலுக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஒரு குழு அமைக்கப்பட்டது என்று சொன்னார்கள் அது உண்மைதான். 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலே கைத்தறித் தொழிலாளர்களுடைய நிலைபற்றி ஆய்வு செய்ய ஒரு குழு போடப்பட்டது. அது சந்தானம் குழுவல்ல....

திரு. பாபு. ஜனார்த்தனன்; மாற்றுத் தலைவர் அவர்களே, சந்தானம் குழு என்பது 1969 ஆம் ஆண்டிலே கருணாநிதி அவர்களால் நியமிக்கப்பட்ட குழு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோபால்: 1973 ஆம் ஆண்டைப் பற்றி நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். 1973 ஆம் ஆண்டு உங்களுடைய தலைவர் கலைஞர் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார்கள். அப்போது 6 மாதத்திலே அந்தக் குழு கைத்தறி நெசவாளர்கள் முன்னேற்றத்தைப் பற்றி அறிக்கை தரவேண்டுமென்று சொல்லப்பட்டு அறிக்கை கொடுத்திருக்கிறதா? அல்லது கொடுத்த அறிக்கை மீது நடவடிக்கையை எடுத்துக் கொண்டிருக்கிறதா என்றால் இல்லை. டாக்டர் கலைஞர் தமிழகத்தை ஆண்டுகொண்டிருந்த போது, 1972, 1973, 1974 ஆம் ஆண்டுகளிலே தமிழகத்தில் இருந்த மொத்த கைத்தறி நெசவாளர் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 7:7 அவற்றிலே 580 சங்கங்கள் ஓரளவுக்காவது நல்ல முறையிலே நடந்து வந்தன. ஆனால் 145 சங்கங்கள் வாழ்வதற்கு வழியில்லாமல் நலிந்து போயின என்பது மட்டுமல்லாமல் இயங்க முடியாத நிலைமை தமிழகத்திலே நெசவாளப் பெருமக்களுக்கு ஏற்பட்டது. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே கைத்தறித் தொழிலை நடத்துகிறவர்கள், நலிந்த குடும்பத்திலே இருக்கின்ற அத்தனை பேர்களும் பாராட்டுகிற சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள் கைத்தறி வளர்ச்சிக்கான குழு நெசவாளர் ஒருவர் நாளொன்றுக்கு 4.5 மீட்டர் துணி உற்பத்தி செய்கிறார் என்ற கணக்கை கொடுத்து இருக்கிறார்கள். அந்தத் தொழிலிலே ஈடுபட்ட ஒருவர் ஒரு நாளில் 4.5 மீட்டர் துணி உற்பத்தி செய்கிறார் என்றால் அவரோடு ஏறக்குறைய அவர் குடும்பத்தில் உள்ள 4 பேர்கள் உழைத்தால் தான் அப்படிப்பட்ட நிலையை உருவாக்க முடியும். இந்தக் கைத்தறி தொழிலாளர்களின் நலன் கருதி தமிழகத்திலே வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்ற திட்டத்தில் ஏழை நெசவாளப் பெருமக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று நான் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்கள் துயரம் துடைக்கின்ற வகையில் அவர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாகக் கொண்டு வந்தால் வாழ்வு வளம்பெறும் என்ற தத்துவத்தின் அடிப்படையில கடந்த ஆண்டு 100 கூட்டுறவுச் சங்கங்களை தமிழக அரசு ஏற்படுத்தியிருக்கிறது அதுமட்டுமல்ல, கைத்தறித் துறையிலே காணுகிறபோது தனிப்பட்ட முதலாளிகளிடத்திலே அடிமைகளாக வாழ்ந்து கொண்டி





ருக்கிற நெசவாளர்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமென்ற காரணத்திற்காக 2 ஆயிரம் ரூபாய் கடனாகவோ மானியமாகவோ கொடுத்து 54 ஆயிரம் நெசவாளர்களை தனியார்களிடமிருந்து முதலாளிகளிடமிருந்து விடுவிக்க செய்து சுதந்திரமான வாழ்வு வாழச் செய்வதற்கான நிலையை உருவாக்கிய புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைக் காணிக்கையாக்குகிறேன். அந்த வகையில் சில தேசிய வங்கிகள் உறுதுணையாக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 20 அம்சத் திட்டத்திலே—நெசவாளர்களுக்கு உபகரணங்கள் வாங்கி தொழிலை நடத்த முடியாத நெசவாளர்கள்—கைத்தறி பொருள்களை வாங்கி அந்தத் தொழிலைச் செய்வதற்கு ஒரு வழிவகை இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்காக நெசவாளர்களுக்கு வங்கிகள் உதவ வேண்டுமென்பதுதான் அந்த 20 அம்சத் திட்டத்திலே ஒரு கொள்கையாக இருந்து வந்து கொண்டிருக்கிறது. ஆனால், வட ஆற்காடு மாவட்டத்திலும் சென்னை மாவட்ட த்திலும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாக இருப்பவர்கள் வங்கிகளை அணுகுகின்ற பொழுது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், குறிப்பாக, இந்தியன் வங்கி போன்ற முதன்மை நிலை வங்கிகள் கூட ஏழை நெசவாளர் பெருமக்களுக்கு ரூ. 1,000 கொடுத்து உபகரணங்கள் வாங்க வழிவகைகள் செய்கின்ற ஏற்பாடு இல்லையென்பதை இந்த நேரத்திலே மெத்தப் பணிவன்புடன் நான் சொல்லி; அவை மத்திய அரசைச் சேர்ந்த வங்கிகளாக இருந்தாலும் கூட அதிலே மாநில அரசு தனக்கு உரிய பங்கை ஏற்று, நெசவாளர்களுக்கு ஏழைகளுக்கு, கோடிக் கணக்கிலே தந்து, அவர்கள் தாங்களாகவே தொழில் செய்கின்ற தன்மையை உருவாக்கித் தருகின்ற நிலைமையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்று தறி இல்லை. நெசவாளர்கள் தனிப்பட்ட முறையிலே உபகரணங்கள் வாங்குவதற்குப் பணம் இல்லாததால், கூலி வேலை செய்து பிழைக்கக்கூடியவர்கள் பல இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்களுடைய நலனுக்காக ரூ. 65.86 இலட்சம் மூலதனத்தில் 20 தொழிலியல் நெசவாளர் சங்கங்களை நடப்பாண்டிலே ஆரம்பிப்பதற்காக வழி வகுத்திருக்கிற புரட்சித் தலைவர் அரசை இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, கூட்டுறவு அமைப்பின்கீழ் செயலாற்றும் கைத்தறி நெசவாளர்கள் நலனை முன்னிட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு மற்றும் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதிலே ஒவ்வொரு நெசவாளர் சம்பாதிக்கின்ற ஒவ்வொரு ரூபாய்க்கும் 6 காசுகள் மிச்சப்படுத்தி, அதிலே அரசினுடைய பங்காக 3 காசுகள் கொடுத்து

இந்தத் திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளர் இறக்க நேரிடுகின்ற போது, அவருடைய சேமிப்புக் கணக்கிலே உள்ள தொகையுடன் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெற்று ரூ. 3,000 கொடுத்து வருகிறார்கள். இதற்கு முன்னாலே ரூ. 500 கொடுத்து வந்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலேதான் இது ரூ. 3,000-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு பணிவன்பான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் ஒரு நெசவுத் தொழிலாளி அந்தத் தொழிலிலே ஈடுபடுகிறான் என்று சொன்னால் அவன் நெய்து துணியை உற்பத்தி செய்வதற்கு, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, ஒரு குடும்பத்திலே 4 பேர்கள் ஒத்துழைப்பு தந்தால் தான் அந்தத் தொழிலைச் செய்யமுடியும் என்கின்ற ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. அந்த நிலையினை அடிப்படையாகக் கருதி, கொடுக்கின்ற ரூ. 3,000 அந்த குடும்பத்திற்குப் போதாது என்று சொல்லி, அந்தத் தொகையை நீங்கள் ரூ. 5,000-ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை உங்கள் முன்னாலே நான் பணிவன்புடன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று, தமிழக அரசு பல திட்டங்களை வகுத்தாலும், நெசவாளர்களுடைய, ஏழை பெருமக்களுடைய நலனைக்கருதி, வீட்டுவசதி திட்டம் கொண்டுவரப்பட்டு, 1962-ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டிருந்ததை, மீண்டும் புரட்சித் தலைவர் ஆட்சி புத்துயிர் அளித்து, ஏழை நெசவாளர் பெருமக்களுக்கு வீடுகள் கட்டித் தருகின்ற நிலைமையை உருவாக்கி, ஏறக்குறைய 5,000 பேர்களுக்கு வீடுகள் கட்டித்தருகின்ற நிலைமையினை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தின்கீழ் குறிப்பாக, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய தொகுதியில் நெசவாளர் பெருமக்கள், ஏறக்குறைய 25,000 பேர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் கூட 20-க்கு மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஏறக்குறைய செயலாற்றிக் கொண்டு வருகின்றன. அந்த வகையிலே கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையிலே செயல்பட்டு வருகின்ற அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற அந்தச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு வீட்டு வசதியை பெருக்குவதற்கான நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

அதுமட்டுமல்லாமல், கூட்டுறவுத் துறையின் சார்பாக, கூட்டுறவு நூற்பாலைகள், பஞ்சாலைகள் அமைக்கும் சூழ்நிலை தமிழ்நாட்டிலே இருந்து வருகிறது. குறிப்பாக வடாற்காடு செங்கை மாவட்டங்களிலேயே நெசவுத் தொழிலை நம்பியிருக்





கின்றவர்கள் மட்டுமல்லாமல், குறிப்பாக பெரும்பாலான ஏழை மக்கள் விவசாயத்தையும் நம்பி இருக்கிறார்கள். இன்றைக்கு வறட்சி தாண்டவமாடுகின்ற நிலைமையில், ஆரம்பிக்கப்பட இருக்கின்ற கூட்டுறவு நூற்பாலையை சோளிங்கர் பகுதியான என்னுடைய பகுதியில் அமைத்துத் தர வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகள விற்பனையானால் தான் இந்த நெசவாளர்களுடைய வாழ்வு வளம் பெறும். அந்த வகையிலே, உற்பத்தி ஆகின்ற துணிகளை விற்பனை செய்யும் போது நாம்கோவாப்டெக்ஸ் மூலமாக விற்பனை நிலையங்களை எல்லாயிடங்களிலும் திறந்தாலும், நவீனமான முறைகளிலே விற்பதற்கு ஏற்பாடு செய்தாலும் குறிப்பாக இந்தச் சபையிலே நான் ஒரு வேண்டுகோளை வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்திய நாட்டினுடைய மக்கள் தொகை அதிகமாகிக் கொண்டே போகிறது. அதைக் குறைக்க வேண்டுமென்பதற்காக பல திட்டங்களைத் தீட்டி மிகச் சிறப்பான வகையிலே சட்டங்களைக் கூடப் போடுகிறோம். ஆனால், இன்றைக்கு இந்திய நாட்டிலே ஏறத்தாழ இருக்கின்றவர்களில் தொழில் செய்து வரும் கைத்தறித் தொழிலைச் சேர்ந்தவர்கள் 25 சதவீதம் மக்கள் நெசவாளர் பெருமக்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களுடைய நலன்களைக் கருதி, இன்று அரசு உத்தியோகத்திலே இருப்பவர்கள், குறிப்பாக, நடுத்தர வர்க்கத்தினர், வியாபாரிகள்கூட ஓரளவு கைத்தறித் துணிகளை வாங்கி அணிய வேண்டுமென்ற ஒரு கட்டாய நிலைமையை எல்லாயிடங்களிலேயும் உருவாக்குவதன் மூலமாகப் பல இலட்சக்கணக்கான மக்கள், குறிப்பாக இன்றைக்குத் தமிழ்நாட்டிலே ஏறக்குறைய 70 இலட்சம் மக்கள், இந்தத் தொழிலை நம்பி வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு ஒரு நல்ல விடிவுகாலம் ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் கூறி, அதற்கான சட்டதிட்டங்களை வகுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதோடு மட்டுமல்லாமல், நெசவாளர்களுடைய துயரை தீர்க்கின்ற வகையில் நெசவாளர்களுக்கென்று தனிப்பட்ட முறையிலே கவனம் செலுத்தி, அவர்களுடைய வாழ்வும் வளமும் பெற வேண்டுமென்ற ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையிலே தமிழக அரசு தனியாக ஒரு வாரியத்தை அமைக்க வேண்டுமென்று சொல்லி இந்த அரிய வாய்ப்பினை உருவாக்கி தந்தமைக்காக நன்றி கூறி, மானியத்தை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

திரு. இ. எஸ். எம். பக்கிர் முகமது: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1983—84-வது ஆண்டு மானியக் கோரிக்கையின்மீது நான் சார்ந்த கட்சியின்சார்பாக சில கருத்துக்களைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் நெசவாளர் பெருமக்களுடைய வாழ்வு உயர வேண்டும்; அவர்களுடைய வாழ்வு இன்னும் உயர்வதற்கு என்னென்ன முறைகளிலே இந்த அரசு முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று ஒட்டுமொத்தமாகச் சொல்லி, நல்ல கருத்துக்களைச் சொன்னதற்காக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் 5.6 இலட்சம் கைத்தறிகள்இருப்பதாகவும், அதனால் 13.4 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று இருந்தாலும் கூட, இதனால் 30 இலட்சம் பேர்கள் வாழ வழிவகை கிட்டுவதாக இந்தக் குறிப்பேட்டிலே இருக்கிறது. குறிப்பேட்டினுடைய கணக்கு எப்படியிருந்தாலும், இதைத்தவிர தறி இல்லாத ஏழை நெசவாளர் பெருமக்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தமிழ்நாட்டிலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

மொத்தம் 1,418 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமிழ்நாட்டிலே இருந்தாலும் கூட? அதனுடைய உற்பத்தி ஆண்டுக்கு 120 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த ஒட்டுமொத்தமாக கோவாப் டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்தாலும்கூட அதை ஆண்டுக்கு 70 கோடி ரூபாய் அளவிற்குதான் அவர்கள் விற்பனை செய்ய முடிகிறது. மீதம் 50 கோடி ரூபாய் அளவிற்குத் தேக்க நிலை இருக்கும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுவதற்கு நான் ஆசைப்படுகின்றேன். இப்படி தேக்க நிலைமை இருப்பதன் காரணமாக, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வாங்கும் துணிகளுக்கெல்லாம் குறித்த காலத்தில் அந்த நிறுவனம் அதனுடைய தொகையைக் கொடுக்காத ஒரு காரணத்தினால், அவர்கள் வாங்கக்கூடிய பேங்கிலே வட்டியை அதிகமாகக் கொடுக்கின்ற நிலைமை இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டு இருக்கின்றேன். ஆகையால் இந்த நிறுவனம் நல்லமுறையில் நடக்கவேண்டுமென்று சொன்னால் கோ— ஆப்டெக்ஸ் நிறுவனம் உரிய காலத்திலே அவர்கள் வாங்கக்கூடிய துணிகளுக்கு பட்டுவாடா செய்யவேண்டுமென்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.





இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பணிபுரிகின்றவர்களுடைய நிலைமைகளை எல்லாம் பார்க்கின்றபோது, எனக்குமுன் பேசிய உறுப்பினர்கள் சொன்னது போல, மிகவும் மோசமானநிலைமைகள் தான் இருந்து கொண்டிருக்கின்றன. அவர்களுடைய திறமைகளையெல்லாம் பார்த்து, அவர்களுக்கு அரசு நல்ல முறையில் முடிவெடுக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். நெசவுத் தொழிலை நம்பி வாழ்கின்றவர்கள் எல்லாம், ஒரு தொழிற் துறையில் வேலை செய்கிறவர்கள் என்ற காரணத்தால் அனைத்து நெசவாளர்களையும், கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நலிந்த நெசவாளர்களுக்கெல்லாம் கடன்வசதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 20 அம்சத் திட்டத்தைப்பற்றி எனக்கு முன்பு பேசிய, உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். தேசிய வங்கிகள் நல்ல முறையில் கடன் கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள். அதை நான் கண்டிப்பாக மறுக்கிறேன். இப்படி பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடைய 20—அம்சத் திட்டத்திலே தேசிய வங்கிகளிலே, நான் சார்ந்த கும்பகோணத்திலே, பலதரப்பட்ட வங்கிகள் உடனுக்குடன் கடன் கொடுத்துக்கொண்டிருக்கிறது. என்பதை நான் மகிழ்ச்சியுடன் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே சில குறைகள் இருந்தால், அதை வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லக் கூடாது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் திரு. சி. கோபால் தலைமை

மேலும் நெசவாளர் பெருமக்களுக்கெல்லாம், நாம் சொல்கிறோம். விவசாயத்திற்கு அடுத்தபடியாகத்தான் நெசவு என்று. நெசவாளர் குடும்பங்கள் அதிகமாக இருக்கின்றது. அவர்களுடைய பிரச்சினைகளுக்கு வரும்பொழுது, அரசு நல்ல முக்கிய நோக்கத்தோடு, அதற்கென்று ஒரு தனிப்பட்ட வாரியம் அமைக்க வேண்டுமென்று சொன்னால் அதை வரவேற்றாலுங்கூட, அவர்களுக்கு, இப்படி லட்சக்கணக்கான மக்கள் இருக்கக்கூடிய, இந்த நெசவாளர்கள் குடும்பங்களுக்கெல்லாம்வீடு கட்டுவதற்கு ரூ 5,000 வரையில் கட்டப்பட இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் நான் சார்ந்த கும்பகோணத்தில் இருக்கின்ற ஏழை நெசவாளர் குடும்பங்கள் எல்லாம் வீடுகள் இல்லாமல், ஒரு வீட்டிலே 2 பேர் இருக்கமுடியாது. அந்த இடத்திலே தறிகளை வைத்துக் கொண்டு' 10 குடும்பங்கள் இருக்கிறார்கள். அவர்கள் வேதனைப்படுகிறார்கள். என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டாலும் கூட. இப்படிப்பட்ட நெசவாளர் இருக்கக்கூடிய இடத்திற்கு அமைச்சரவர்கள் சென்று, அங்கிருக்கக்கூடிய சூழ்நிலைகளை மேல்வாரியாகப் பார்த்தால், எந்த முடிவும் எடுக்க முடியாது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய லட்சக்கணக்கான நெசவாளர். பெருமக்களுக்கெல்லாம், 5 ஆயிரம் வீடுகள் என்று சொன்னால்

இந்த நிலையை எவ்வாறு சமாளிக்க முடியும்? ஆகையால் கும்பகோணத்தில்கூட, விடு கட்டும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதும் என்றுதான் சொன்னார்கள். ஆனால்எந்த இடத்திலே கட்டப்படுவதற்கு என்று எனக்கே தெரியவில்லை. ஆகையால் இதை நான் ஏன் குறிப்பாக சொல்கிறேன் என்று சொன்னால், இந்த நெசவாளர்களை எந்தக்கட்சியானாலும் சரி ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, ஒட்டுமொத்தமாக நெசவாளர் குடும்பங்களின் நிலைமையை நாம் ஆதரித்துத் தான் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆகையால், அவர்களுடைய குடும்பங்களின் சூழ்நிலைகளைப் பார்க்கும் போது, நிச்சயமாக நாம் கவனித்துத்தான் ஆக வேண்டும். இங்கே தி மு க. வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது அவர்களுக்கு, இப்படிப்பட்ட நெசவுத்தொழிலை செய்கின்றவர்களுக்கு டி. பி., யானைக்கால் போன்ற வியாதிகள் எல்லாம் வருகின்றன. அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அது முற்றிலும் உண்மை. அதற்கு முக்கியமாக இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

மேலும், இந்த கவர்ச்சிகரமான கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு இன்னும் அதிகமான கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏனென்றால், குறுகிய காலத்தில் ஒரு குறிப்பிட்ட விசேஷ காலங்களுக்கு மட்டும் இந்தத் தள்ளுபடி செய்து கொடுக்கிறார்கள். ஆகையால் அந்த ஒரு மாதத்திற்கு தான் தீபாவளி, பொங்கல் இப்படிப்பட்ட ஒரு கால கட்டத்தில் தான் கொடுக்கிறார்கள். இன்னும் பெரிய பெரிய திருவிழாக்கள் நடக்கக்கூடிய காலங்களில் அப்படிப்பட்ட ஊர்களையெல்லாம் தேர்ந்தெடுத்து, அங்கேயெல்லாம் இந்தக் கடைகளை, கோ-ஆப்டெக்ஸ் கடைகளை போட்டு தள்ளுபடி செய்தால், இன்னும் இந்தத் தேக்க நிலையை ஓரளவிற்குத் தவிர்க்க முடியும். அப்படிச் செய்தால்தான், குறுகிய காலத்திலே சங்கத்திற்குத் தொகையைக் கொடுக்க முடியும். சில்க் மார்க்கெட்டிங் பெடரேஷன் கமிட்டி—அதைப்போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை நான் குறை சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. நம்முடைய ஸ்தாபனங்கள் மோசமாகப் போகக் கூடாது, அதைத் தவிர்க்க வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். அதை திருத்தியாக வேண்டும். இந்த பெடரேஷன் கமிட்டி நல்லமுறையிலே செயல்பட வேண்டும். நம்முடைய தமிழ்நாட்டுக்கு சமீபத்திலே 1300 டன் கோராப்பட்டு உற்பத்தியிலே தன்னிறைவு அடைய வேண்டுமென்று முன்பு அமைச்சராக இருந்த நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள்கூட திருச்சியிலே பேசியதாக செய்திகளிலே நான் அறிந்தேன். அவர்களுடைய இந்த ஆர்வத்தை நாம் பார்க்கும்போது நிச்சயமாக நாளுக்குநாள் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நல்ல முறையிலே வளர்ச்சி அதிகமாக பெற்று வருகிறது. இந்த 5 ஆண்டில் வளர்ச்சி 1300 டன்



என்றால், இன்னும் 2 ஆயிரம் டன் உற்பத்தி செய்தால் தான் நாம் அந்த உச்ச நிலைக்கு வரமுடியும். சார்ட்டேஜ் என்று வரும்போதுதான் மக்களுடைய நிலைமை, நெசவாளர்களுடைய நிலைமை மிகவும் மோசமான நிலை ஏற்பட்டு, அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் வருகிறது. அதை நிச்சயமாக அரசு உணர்ந்திருக்கிறது. அதிகாரிகள் கண்டிப்பாக கண்காணிப்புடன் இருக்க வேண்டும். அதிகாரிகளுடைய கண்காணிப்பு சரியாக இருந்தால்தான் அது எந்த அரசாக இருந்தாலும்கூட அதிகாரிகள் நல்லபடியாக பணி செய்தால்தான் உடனடியாக அந்த வேலைகளைச் செய்தால்தான் அரசுக்கு கெட்ட பெயர் வராது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து பட்டுப் பூச்சி வளர்ச்சி. நாம் இதை நல்ல முறையிலே நடத்த முடியவில்லை. அரசாங்கத்திலே நல்ல மானியம் கொடுக்கிறார்கள். நல்ல திட்டங்களை வகுத்தாலும் கூட இந்த பட்டுப்பூச்சி வளர்ச்சியிலே நம்முடைய ஜனங்கள் ஒரு தீவிரமான கவனம் செலுத்தவில்லை. இதனால் என்ன நன்மை நமக்கு, நாட்டுக்கு என்ன நன்மை. நமக்கு என்ன நன்மை கிடைக்கிறது, நமக்கு ஏதாவது லாபம் கிடைக்கிறதா என்று பார்ப்பதில்லை. எனவே இதை நல்ல முறையில் விளம்பரம் செய்ய அதிகாரிகள் உறுதுணையாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் கோ-ஆப்டெக்ஸ் என்று சொன்னால் சில பேர்களுக்கு வெறுப்பு வருகிறது. ஜனதா வேஷ்டி என்று சொல்வது நல்ல முறையிலே இருக்கிறது. மத்திய அரசு இதற்கு மானியம் கொடுக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட துணி வகைகளை ஜனங்கள் வாங்குவதற்கு நல்ல விளம்பரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகையாலே இப்படிப்பட்ட இந்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஜப்பான் நாடு போன்றநாடுகளுக்கு துணிகளை அனுப்ப, கவர்ச்சிகரமான முறையிலே வாங்குவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். பாலிஸ்டர் போன்ற துணிகளுக்கு இப்போது ரிபேட் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். ஆகவே இப்படிப்பட்ட ஒரு கவர்ச்சிகரமான, புரட்சிகரமான திட்டங்களை இந்தத் துறையிலே ஈடுபட்டு இருக்கிற கல்வி அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நான் சார்ந்திருக்கின்ற கும்பகோணத்தைப் பற்றி சில வார்த்தைகள் சொல்லாமல் இருக்க முடியாது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அவர்கள் கல்வித்துறையிலே எந்த அளவிற்கு அக்கறை காட்டுகிறார்களோ அதைவிட இந்த நெசவாளர்களுடைய துறையிலே அதிக கவனம் செலுத்த வேண்டும். கும்பகோணத்திலே எந்த வளர்ச்சியும் இல்லாமல் அப்படியே

இருக்கிறது. அதை நான் பலமுறை சுட்டிக்காட்டி இருக்கிறேன். அங்கே சாயத் தொழிற்சாலை ஒன்று டெக்ஸ்டைல் டெக்னாலஜி ஒன்று கும்பகோணத்திற்கு வந்தால் நல்லது. அங்கே நிறைய பேர்கள் படிப்பதற்கு காத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சமயத்திலே நெசவாளர் மக்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். இங்கே எல்லா அமைச்சர்களும்இருந்தாலும், கும்பகோணத்தைப் பற்றி அதிக கவனம் இல்லை என்று நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்கிறேன். நெசவாளர் மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய ஊருக்கு விஜயம் செய்த போது ஒரு சௌராஷ்டிரா தெருவிலே அங்கே எப்படி ஒரு வீட்டிலே எத்தனை பேர்கள் வாழ்கிறார்கள் என்று பார்த்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிறிய வீடுகளில் 6,7, பேர்கள் என்று வசிக்கிறார்கள். 10 வீடு என்றால் 70 பேர்கள் இருக்கிறார்கள். சுகாதார வசதி கிடையாது. ஏதாவது ஃபையர் ஆகிவிட்டது என்று சொன்னால், ஆக்சிடெண்ட் ஆகிவிட்டது என்று சொன்னால், ஆயிரக்கணக்கான தறிகளை அவர்கள் இழக்க நேரிடுகிறது. ஆகவே பொதுவாக உள்ள அந்த ஏழை தொழிலாளிகளுக்கு பாதுகாக்கப்பட்ட கொட்டகைகளை கட்டி அவர்களுடைய தறிகளுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகுஅமைச்சர் அவர்கள் வைத்திருக்கும் புத்தகத்தைப் பார்த்தால், கைத்தறிகளின் வளர்ச்சி ஆண்டுக்காண்டு அதிகமானாலும் கூட, இந்த கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் நல்ல முறையிலே ஊக்கமாகப்பாக இருக்க வேண்டும். ஏன் என்றால், நான் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த தலைவரைக் கூட கேட்டேன். நான் மானியத்திலே பேசப் போகிறேன். உங்களுடைய கோரிக்கை ஏதாவது இருக்கிறதா என்று கேட்டேன். குறிப்பாக சிலது இருக்கிறது என்று அவர்கள் சொன்னாலும் கூட அந்தத் துறையிலே இருக்கின்றவர்கள் இந்த சர்க்காருடைய ஊழியர்களைப்போல, மத்திய அரசாங்கத்தினுடைய ஊழியர்களும், இதை வாங்கி உபயோகிக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். அதுமட்டுமல்லாமல் அமைச்சர் அவர்களும் கைத்தறி துணியை வாங்கி உடுத்த வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களும் கைத்தறி துணிகளை உடுத்த வேண்டும். கிராமமக்களுக்கு அவர்களுடைய வாழ்க்கையை நாம் எப்படி உயர்த்த வேண்டுமென்று நினைக்கிறோமோ அதேபோல் இவர்களுக்கும் நாம் வழிகாட்டியாக இருக்க இந்த அரசு முன்வருமானால் நிச்சயமாக இதிலே அதிகமான தேக்கம் இருக்காது. இன்னும் அதிகமாக விளம்பரப்படுத்த வேண்டும். பெண்கள்எல்லாம் கைத்தறி வாங்க வேண்டும். அவர்களுக்கு அந்த மோகம் வர வேண்டும். ஏதோ ரிபேட் கொடுக்கிறார்களே என்று நினைத்து வாங்கும் எண்ணம் இல்லாமல் எப்போதும்



கைத்தறியை வாங்கி உபயோகப்படுத்த வேண்டும். அந்த எண்ணம் அதிகமாக மக்களிடையே வளர வேண்டும். அந்த வகையில் இந்த அரசு பல நல்ல திட்டங்களைத் தீட்ட வேண்டும். இப்படிப்பட்ட ஒரு நிலையிலே இந்தத் துறையிலே பாடுபட்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் அதிக அளவில் வழிவகைகளை காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத்துறை மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி கூறி, இந்த கைத்தறி மானியக் கோரிக்கையை வரவேற்று சில கருத்துக்களை கூறலாம் என்று கருதுகிறேன்.

செய்யும் தொழில்களில் எல்லாம்
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை.
சின்ன சின்ன இழை பின்னிப் பின்னி வரும்
சித்திர கைத்தறிச் சேலை

என்று பல்வேறு வகைகளில் புகழப்படும் இந்த கைத்தறித் துறை நம்முடைய இந்திய நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக அதிகமாகச் செய்யப்படக் கூடிய ஒரு தொழிலாக இன்றைக்கு இருக்கிறது, அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 7, 8 இலட்சம் மக்கள் இந்த கைத்தறி தொழில் மூலம் வேலைவாய்ப்பு பெற்று வாழ்க்கை நடத்துகின்ற சூழ்நிலை இருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இழைகளுக்கு எப்படி சிக்கல் இருக்கிறதோ அப்படி நெசவாளர்கள் வாழ்க்கையிலும் சிக்கல், சங்கடம் எப்போதும் நிறைந்திருக்கிறது என்று ஒரு முறை கூறியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சிக்கல்களுக்கும் சங்கடங்களுக்கும் இடையே இருக்கிற நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நம்முடைய அமைச்சரவர்கள் சிறப்பான பல திட்டங்களை அளித்திருக்கிறார்கள் அந்தத் திட்டங்களை நான் மனதார வரவேற்கிறேன்.

அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட தற்போது 60 சதவீதத்திற்கு மேல் நெசவாளர்களை கூட்டுறவுத் துறையிலேகொண்டு வந்திருந்தாலும் வருகின்றகாலக்கட்டத்திலே 67 சதவீதம் பேர்களை கூட்டுறவுத் துறையில் கொண்டுவர நம்முடைய அமைச்சரவர்கள் எடுத்திருக்கின்ற நல்ல நடவடிக்கைகளை நான் வரவேற்கிறேன்.

தனியார்களிடம் அடிமைகளாக வாழ்கின்ற பல ஆயிரக் கணக்கான நெசவாளர்களை கூட்டுறவுத் துறைக்கு கொண்டு வர லிபரேஷன் அசிஸ்டெண்ட் டைரக்டரை நியமித்து. அவர்களும் கூட்டுறவுத் துறைக்கு கொண்டுவர, நடவடிக்கை எடுத்து வருவது பாராட்டுதற்குரியது.

அதைப்போன்று லிபரேஷன் அதிகாரியின் நடவடிக்கைகளினால் கூட்டுறவுத் துறைக்கு வருகின்ற நெசவாளர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் நிதி உதவி கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்தால் இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மேலும் சிறப்பாக செய்யப்படும் வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே தற்போது நிலவி வருகின்ற கடுமையான வறட்சி காரணமாக கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்கிற சரக்குகளை வாங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கோவாப்டெக்ஸ் நிறுவனம் அந்த சரக்குகளை வாங்கிக் கொள்ள முன்வரவில்லை. வாங்கினாலும் அவர்களால் உடனடியாக பணம் பட்டுவாடா செய்யும் சூழ்நிலை இல்லை. எனவே நம்முடைய அமைச்சர் அவர்கள் மற்ற மற்ற துறைகளில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்வது போல், இந்த கூட்டுறவு நெசவாளர்களுக்கு உதவுகின்ற வகையில் தொகை ஒதுக்கீடு செய்து, தேக்கமாக இருக்கிற சரக்குகளை உடனடியாக வாங்கி, அந்த நெசவாளர் குடும்பங்களை வாழவைக்க நம்முடைய அமைச்சரவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.10)

1983-84 ஆம் ஆண்டிலே இந்தத் துறைக்கு என்று 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது- இந்தத் தொகையைப் பொறுத்த வரையில் இந்தத் துறைக்கு இது போதுமானது அல்ல. இதை வருகின்ற கால கட்டத்தில் கூடுதலாக ஒதுக்கி, அதற்கான வழிவகைகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் கல்வித் துறையில் எப்படி சிறப்பாக காரியங்கள் ஆற்றுகிறார்களோ, அதைப்போன்று இந்தத் துறையிலும் கொஞ்சம் கவனம் செலுத்தி ஆற்றினால் பல ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் வாழ்க்கை வளம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கோரா கூட்டுறவு நூற்பாலை ஒன்றும் கூட்டுறவு பாலிஸ்டர் தொழிற்சாலை ஒன்றும் காஞ்சிபுரத்தில் ஆரம்பிக்க வேண்டுகிறேன். அதிலே நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிற அந்த காசு கடனை, (Cash credit) அந்த கூட்டுறவுச் சங்கங்கள் வைத்து நடத்தக்கூடிய நிலையில் இருக்கிறதா என்பதை நம்முடைய அமைச்சர் அவர்கள் சிந்திக்க வேண்டுகிறேன். கடந்த ஆண்டு உற்பத்தி செய்த தொகையின் அடிப்படையில் நாலில் ஒரு பங்கு சரக்குகளின் தொகையின் அடிப்படையில் தான் கூட்டுறவு சங்கங்களுக்கு கடன் உதவி வழங்கப்படுகிறது. ஏறி வருகிற விலைவாசிக்கு அந்தத் தொகை போதுமானதாகஇல்லைஅந்தத்தொகை





போதுமானதாக இல்லாத காரணத்தால். அந்தச் சங்கங்களின் தலைமை பொறுப்பில் இருப்பவர்கள் அந்தச் சங்கங்களை நடத்த முடியாமல் கஷ்டப்படவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

எனவே தான் அந்தக் காசு கடன் வழங்குவது அந்தச் சங்கங்களுக்கு மிக உதவி அளிக்கும் என்கிற வகையில், கவனம் செலுத்தி அமைச்சர் அவர்கள் இன்னும் அதிகத அளவில் நிதிஉதவி பெற்றுத் தர நம்முடைய அரசு ஆவன செய்யவேண்டும்என்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

சலுகைக் கட்டண வட்டி விகிதத்தில் 1982-83 ல் 129.21 லட்சமும் 1983-84ல் 80 லட்சமும் வழங்கப்பட்டிருப்பதாக அறிகிறேன்- அந்த தொகையையும் கூடுதலாக உயர்த்துவதன் மூலம் நிர்வாகம் நல்ல முறையில் செயல்பட உதவும் என்பதையும் நான் நினைவுகூற கடமைப்பட்டிருக்கிறேன். இதுபோன்ற இடுபொருள் வழங்குவதற்காக நமது அரசு பல்வேறான சிறப்பான நடவடிக்கையை எடுத்து வருகிறது. என்னுடைய தொகுதியில் இருக்கிற காமாட்சி அம்மன் நூற்பு ஆலைகளில் பாவு நூல் உற்பத்தி செய்யப்படுவது இல்லை. ஊடை நூல் மட்டும் தான் உற்பத்தி செய்யப்படுகிறது. அதுபோல தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பு ஆலைகளிலும் பாவு நூலும் ஊடை நூலும் and all. Counts of yarn உற்பத்தி செய்வதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றுவேண்டிக் கொள்கிறேன். காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

அடுத்து நம்முடைய கூட்டுறவு நூற்பு ஆலைகளில்உற்பத்தியாகக் கூடிய நூல்களின் விலை வெளி மார்க்கெட்டிலே விற்கக் கூடியநூலின் விலையை விட அதிகமாக இருக்கக்கூடியசூழ்நிலை இருக்கிறது. ஆகவே அதைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். அடுத்து இப்போதிருக்கக் கூடிய ரிபேட் முறை ஆண்டுக்கு 30 நாட்களுக்குத்தான் வழங்கப்படுகிறது. அதற்காக 1981—82ல் 5·6 கோடியும், 1982-83ல் 13·21 கோடியும் 83-84ல் 17·3 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக நம்முடைய தமிழகத்து மக்கள் ரிபேட் வழங்கினால் அதிக அளவில் துணிகளை வாங்கக் கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால் அந்த ரிபேட்டை இன்னும் அதிக நாட்களுக்கு அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்றும், அதற்கு அரசு நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சேமிப்பு பாதுகாப்புத் திட்டம். இந்த திட்டம் நம்முடைய தமிழகத்தில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அந்த திட்டத்தின் மூலம் பல ஆயிரக்கணக்கான நெசவாளக் குடும்பங்கள் பலன் அடைந்து வருகிற வாய்ப்பு இருக்கிறது. இந்த திட்டத்திலே ஒரு திருத்தம் செய்தால்

நலமாக இருக்கும் என்பதினால் அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தற்போது நெசவாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் இறப்பார்களேயானால், அவர்களுடைய குடும்பத்திற்கு 3,000 ரூபாய் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த ஏற்பாடுகளைச் செய்யும் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகள் அவர்களுடைய சேமிப்புத் தொகையை வைத்துக் கொண்டு, பல லட்சக்கணக்கில் லாபமாக வட்டி பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த நிலையை மாற்றி, அவர்களுக்கென்று தனியாக ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி ஆரம்பித்து நடத்தினால் இத்திட்டத்தில் செலுத்தப்படும் தொகை கூடுதல் வருமானம் வட்டிப்பெற வாய்ப்பிருக்கிறது. அவர்கள் இன்னும் அதிகமாக 10,000 ரூபாய் அளவிற்கு அவர்கள் இறந்தால் வழங்குகிற அளவுக்கு வாய்ப்பு இருக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதற்காக நம்முடைய அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளோடு ஆலோசித்து முடிவு எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நெசவாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் கட்டிக் கொடுக்குமதிட்டத்தை ஏற்படுத்துவதற்காக 12 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்க அம்சம் என்றாலும், அந்தத் தொகை ஏறிவருகின்ற விலைவாசி காரணமாக போதுமானதாக இல்லை. ஆகவே, இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து குறைந்தபட்சம் ரூ. 15 ஆயிரம் 16 ஆயிரம் அளவுக்காவது ஒதுக்கீடு செய்தால்தான், அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கக் கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்க முடியும் என்று கூறி அதற்கு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கூட்டுறவுச் சங்கங்களுக்கு குடியிருப்புக்காலனிகள் கட்டுகிற நிலை இருக்கிறது. அப்படி காலனிகள் கட்டுகிறபோது, அதற்கான இடங்களை அரசே ஏற்பாடு செய்து கொடுத்தால் மிக நலமாக இருக்கும், அப்படி முடியவில்லை என்றால் அந்தச் சங்கங்கள் குடியிருப்பு மனைக்கான இடம் வாங்க பயன்பெறும் வகையில் தேவையான உதவியை செய்து தந்தால் அவர்களுக்கு அது உதவிகரமாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஜனதா ரகதுணிகளை உற்பத்திசெய்யும் சங்கங்களுக்கு அதை நெய்கின்ற உற்பத்தி செலவுக்குக் கூட கட்டுப்படியாகாத சூழ்நிலை இருக்கிறது. அதற்கென்று குறிப்பாக 5 சதவீதம் லாபம் கொடுத்தாலும், அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 8.53 வீதத்திற்குக் கூட வாங்கிக் கடனுக்கு வட்டி செலுத்துகின்றன. விலை கட்டுப்படியாகாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அந்த ஜனதா துணியை உற்பத்தி செய்கிற பல சங்கங்கள் நட்டத்திலே இயங்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது.



பிரதம கூட்டுறவு சங்களிடமிருந்து 9 அல்லது 12 அல்லது 15 1 லாபம் கொடுத்து கோ ஆப் டெக்ஸ் நிறுவனம் வாங்குகிறது ஆனால் கோ ஆப் டெக்ஸ் நிறுவனம் 30சதவீதம் அல்லது 35 சதவிதம் லாபம் வைத்துக் கொண்டு விற்கிறார்கள் பிரதம கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவுகின்ற வகையில்; அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்,

என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற தமிழ்நாடு ஜரிகை நிறுவனம் நல்லமுறையில் செயல்பட்டுவருவதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதிலே ஒரே ஒரு மாற்றத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஒரு அதிகாரி இருக்கின்றார். அவர் Gold Mixing செய்கின்ற அதிகாரி. அவர் ஒரு மாத காலம் விடுமுறையில் சென்றுவிட்டால் அந்த ஜரிகை நிறுவனத்தையே மூடிவிடக்கூடிய கட்டாயமான நிலைமை ஏற்படுகின்றது. அப்படிப்பட்ட நிலைமை அந்த நிறுவனத்திற்கு இருக்கின்றது. ஏனென்றால் அவர் ஒருவர்தான் அந்தத் தொழிலைத் தெரிந்தவராக இருக்கின்றார். அவர் விரும்பினால் அந்த நிறுவனத்தை நடத்த முடியும், விரும்பவில்லை என்றால் அந்த நிறுவனத்தை மூடிவிடக்கூடிய ஒரு கட்டாயமான நிலைமை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அந்த அதிகாரி தன்னிடம் பணியாற்றுகின்ற பலருக்கு அந்தத் தொழில் நுட்பத்தை கற்றுக்கொடுக்க அரசு ஆணை பிறப்பித்தால்தான் அந்தத் துறை வளர வாய்ப்புண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அந்த Gold Mixing செய்கின்ற அதிகாரி அந்த நிறுவனத்தின் ஆபீஸ் மேனேஜராக இருக்கிறார். அவருக்கு தொழில் துறை சட்டங்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது. எனவே அப்படிப்பட்ட ஒருவர் அந்த நிறுவனத்திற்கு ஆபீஸ் மேனேஜராக இருப்பது எந்த விதத்திலும் நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அந்தத்துறைக்கு என்று தனியாக ஒரு அதிகாரியை மேனேஜராக போடவேண்டும். முடிந்தால் டெக்ஸ்டைல்ஸ் டிப்பார்ட்மெண்டிலே இருந்து ஒரு அதிகாரியை அந்தத் துறையில் போட்டு அந்தத் துறையினைக் கவனிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து காஞ்சிபுரத்திலும், திருச்சியிலும் ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் ஏறக்குறைய 250, 300 கூட்டுறவுச் சங்கங்களைக் கண்காணிப்பதற்குரிய நிலைமையில் இருக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு நிர்பந்தமான நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும்பல்வேறு துறை அதிகாரிகள் இருப்பது போன்று கைத்தறித் துறையிலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கைத்தறி துணிநூல் அதிகாரி தனியாக நியமிக்கப்படவேண்டும். இதனால் அந்தத் துறையினை மேலும் நல்ல முறையில் கண்காணிப்பதற்குரிய நல்ல வாய்ப்பு ஏற்படும். (மணியடிக்கப் பெற்றது)

அடுத்து நெசவாளர்களை அதிகமாக பாதிக்கக்கூடிய வியாதி டி. பி, வியாதி. அதற்காக ஒரு நடமாடும் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு அது நெசவாளர்களே இல்லாத பகுதியில் —வேலூரில்—தலைமையிடத்தை வைத்துக்கொண்டு இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. அதை மாற்றி நெசவாளர்கள் பயன் அடைகின்ற வகையிலே அவர்களை அந்த டி. பி. வியாதியிலே இருந்து பாதுகாக்கின்ற வகையில் ஈ எஸ். ஐ. மருத்துவனை போன்றுநெசவாளர்கள் அதிகமாக இருக்கின்ற காஞ்சிபுரம் ஆரணி கும்பகோணம் போன்ற இடங்களிலே அந்த மருத்துவமனையினை நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளுக்கு என்று மாவட்ட மத்திய வங்கிகள் இருப்பது போன்று நெசவாளர்களுக்கென மாவட்ட மத்திய வங்கிகள் ஆரம்பித்து அதன்மூலம் அவர்களுக்குப் போதுமான நிதிவசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு உரையை முடிக்கிறேன், நன்றி' வணக்கம்.

திரு. கே. ஆர். சுந்தரம்; மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் நெசவுத் தொழில் குறித்த மானியத்தின் மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கைத்தறி நூல் விலை இன்றைக்கு பெருமளவுக்கு உயர்ந்திருக்கின்றது என்பது அரசு அறிந்த ஒன்று. 1982 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலேயும் டிசம்பர் மாதத்திலேயும் இருந்த விலையினைக் காட்டிலும் 30 சதவீதத்திலிருந்து 35 சதவீதம் வரையில் நூல் விலை அதிகமாக உயர்ந்திருக்கின்றது. ஆனால் தமிழக அரசு ஓரளவுக்கு விலைக் குறைப்பு செய்வதற்கு எற்பாடு செய்திருக்கிறார்கள் என்றாலும் கூட இன்றைக்கு உள்ள நூல் விலை அந்த கைத்தறித் தொழிலை எந்த அளவுக்குப் பாதித்திருக்கின்றது என்பதை நாம் உணர வேண்டும். எனவே நூல் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நூல் விலை அதிகமாக உயர்வதன் காரணத்தால், மாஸ்டர் வீவர்கள் இதிலே சம்பந்தப்படுகிறார்கள் என்பதைப் பார்க்காமல் கைத்தறி நூல் சாதாரண மக்களுக்குக் குறைந்த விலையில் கிடைக்கவேண்டும் என்றால் விலையினைக் குறைப்பது மிக மிக அவசியம். ஒரு பக்கம் நூல் விலை உயர்கின்றது. இன்னொரு பக்கத்திலே பருத்தியின் விலை குறைகின்றது. மின்வெட்டைக் காரணமாகக் கூறிக்கொண்டு,பஞ்சாலை அதிபர்கள் இன்றைக்கு அதிக லாபம் சம்பாதிக்கின்ற முறையில் நூல் விலையினை உயர்த்தி இருக்கிறார்கள் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே நூல் விலையைக் குறைக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். இந்த நாட்டிலே இலட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற இந்தத் துறையில் விசைத்தறி புகுந்திருப்பதன் காரணத்தால் இந்தத் தொழிலுக்கு பெரிய ஆபத்து ஏற்பட்டு இருக்கின்றது என்று பலரும் குறிப்பிட்டார்கள்.





(பிற்பகல் 12·20)

இந்த விசைத்தறிகளை கூட்டுறவுத் துறையிலே கொண்டு வருவதற்கான முயற்சியை அரசு எடுத்திருக்கிறது. அதை மீண்டும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு விசைத்தறிகளைப் புகுத்துவது என்பதோ, அல்லது விஞ்ஞான வளர்ச்சியை உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதிலோ, அல்லது உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பதிலோ மாற்றுக் கருத்து இருக்க முடியாது. இன்றைக்கு மனித சக்திக்கு வேலை வாய்ப்பு அளித்ததற்கு பிறகு தான் இத்தகைய விஞ்ஞான வளர்ச்சியைப் பயன்படுத்துவது சாத்தியமாகக் கூடிய ஒன்றாகும். ஆகவே விசைத்தறிகளைக் கொண்டு வருவதன் மூலமாக பல்லாயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பை இழக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது. அதை அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் இந்த விசைத்தறிகளுக்கு ஒரு கட்டுப்பாட்டு எல்லையை விதிக்க வேண்டும். நேற்றைக்கு முன்தினம் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்கு பதில் அளிக்கிறபோது அனுமதியில்லாமல் ஆயிரக்கணக்கான விசைத்தறிகள் தமிழகத்திலே இருந்தன என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான விசைத்தறிகளுக்கு அனுமதி தராமல் அதைத் தடை செய்வதற்கு அரசு முயற்சிக்கவேண்டும். மேலும் விசைத்தறிகளை இந்தத்துறையிலே கொண்டு வருவதற்கான முயற்சியை அரசு கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே இருக்கிற பிரைமரி சங்கத்திலே ஆனாலும், கோ-ஆப்டெக்ஸ் ஆனாலும் இன்றைக்கு கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. பல்வேறு சங்கங்களிலே தேங்கியிருக்கிற துணிகளை வாங்குவதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்றும் கேட்டுகொள்கிறேன். குறிப்பாக என்னுடைய தொகுதியிலே தெண்டாயுதபாணி கூட்டுறவுச் சங்கத்திலே தேங்கியிருக்கிற பட்டுத் துணிகளை வாங்கவேண்டுமென்று துறை அதிகாரிகளிடத்தில் முறையீடுகளை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்படி பல கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கலாம். இவைகளை கொள்முதல் செய்து இந்த பிரைமரி சங்கங்களுக்கு உதவி செய்வதற்கு அரசு ஏற்பாட்டை செய்ய வேண்டும்.

கைத்தறித் துறையிலே இருக்கிற நெசவாளர்களுக்கு மூலப் பொருள்களான சாயம் மற்றும் இதர ராசயனப் பொருள்களை அரசாங்கமே கொள்முதல் செய்து கூட்டுறவுத் துறை மூலமாக மலிவு விலையில் கொடுக்க வேண்டும். இந்தத் துறைக்கு

[திரு. கே. ஆர். சுந்தரம்] [1983 மார்ச் 16

தேவையான சாயப் பொருள்களையும் மற்ற இதர, ரசாயனப்
பொருள்களையும் தமிழ்நாடு அரசே சிறுதொழில் மூலமாக
உற்பத்தி செய்து நெசவாளர்களுக்கு மலிவான விலையில்
கொடுக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும்.

இன்னும் 67 சதவீதம் கைத்தறி ஆடைகளை கூட்டுறவிற்கு
கொண்டு வருவதற்கு முயற்சிகளை செய்திருக்கிறார்கள் என்று
கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். இந்த முயற்சி
களைச் செய்கிற நேரத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கு
இலக்கி..ன நிர்ணயித்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை
பேர்கள் இந்த கூட்டுறவிலே கொண்டு வந்திருக்கிறார்கள்.
இன்னும் எத்தனை பேர்களை இந்த நிதியாண்டிலே கொண்டு
வரவேண்டுமென்று கண்காணிக்கின்ற முறையிலே ஏற்பாட்டைச்
செய்யவேண்டும்.

இந்தத் துறையை விஸ்தரிப்பதற்கு போதுமான தலைவர்கள்
இல்லை என்பது உண்மையே. இந்தத் துறையிலே தலைவர்
களை உண்டாக்க ஏதாவது பயிற்சி வகுப்புகளை நடத்துவது
அவசியம் என்பதை அரசு உணர வேண்டும்.
இன்றைக்கு எங்களுக்குத் தெரிந்த உண்மை என்னவென்றால்
மாஸ்ட்டா வீவர்களிடம் கடன்பட்டு கைத்தறி நெசவாளர்கள்
அவர்களை விட்டு வெளியே வரமுடியாமல் இருக்கிறார்கள்.
அப்படி கடன்பட்டிருக்கிற கைத்தறி நெசவாளர்களுக்கு தேசிய
மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாக கடன் வழங்கி, உதவி
செய்து, அவர்கள் கடனை அடைத்து, மூலதனத்தை செலுத்தி
கைத்தறித் துறைக்கு அவர்களை கொண்டு வருவதற்கான
முயற்சியை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடு கட்டிக்கொடுக்கிற ஏற்பாட்டை இன்றைக்கு செய்திருக்
கிறார்கள். இந்த ஆண்டிலே ஆயிரம் வீடுகள் கட்டப்படும்
ஐந்து லட்சம் நெசவாளர்கள் இருக்கிற இடத்திலே ஐந்தாயிரம்
வீடுகள் என்பது போதுமானதாக இல்லை. இன்னும் வீட்டுவசதி
வாரியத்தின் மூலமாகவோ அல்லது கிராம சங்கத்தின் மூலமாக
வோ அவர்களுக்கு வீடுகளை கட்டிக்கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் கைத்தறி நெசவாளர்
களைப் போய் பார்த்தால் அவர்கள் ஓலைக் குடிசைகளில்
8 அடி, 10 அடிகளுக்குள்ளாக தறிக்குழியில் தங்களை
அடைத்துக்கொண்டு அங்கே குடும்பம் நடத்துகிற ஒரு பரிதாப
மான சூழ்நிலையைத் தான் பார்க்க முடிகிறது. ஆகவே இதைப்
போக்குவதற்கு அதிக வீடுகளை கட்டுவதற்கு ஏற்பாட்டைச்
செய்யவேண்டும். வீடுகளை கட்டுவதற்கு கொடுக்கிற தொகை
இன்றைக்கு இருக்கிற விலைவாசியில் போதாது. அதை



1983 மார்ச் 16] [திரு. கே. ஆர். சுந்தரம்]

உயர்த்திக் கொடுக்க வேண்டும். கிராம கூட்டுறவுச் சங்கங்
களின் மூலமாக கொடுக்கிற தொகை 3 ஆயிரம், 5 ஆயிரம்
என்பது இன்றைக்கு போதுமானதாக இல்லை. கிராமத்திலே
சிறிய அறை கட்டவேண்டுமென்றால் கூட 10 ஆயிரம் ரூபாய்க்கு
மேலே தேவைப்படுகிறது. ஆகவே தொகையை உயர்த்திக்
கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய
தொகுதியான குடியாத்தத்தில் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட
நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு வீடில்
லாமல் இருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கம் என்று அமைப்ப
தற்கு ஏற்பாடு நடந்து கொண்டிருக்கிறது. அவைகளில்
இரண்டு சங்கங்கள் என்னுடைய தொகுதியில் இருக்கின்றன.
அண்ணா நகர் கூட்டுறவுச் சங்கம், சிங்காரவேலு கூட்டுறவுச்
சங்கம்என்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்த சங்கங்
களுக்கு வழகப்பட்ட இடங்கள் பெரும்பகுதி காலியாக
இருக்கின்றன.

அந்தச் சங்கங்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு கடன் உதவி
செய்ய வேண்டும். மேலும் அங்கே தொழில் செய்துகொண்டு
அந்தப் பகுதியிலேயே அந்த தொழிலாளர்கள் வசிக்கவும் அந்த
வசதியை செய்துகொடுக்கவேண்டும் என்று நான் இந்த
நேரத்தில் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, கைத்தறி நெசவாளர்கள் குடும்பங்
களில் உள்ளவர்கள் இறந்து விட்டால் அவர்கள் கொடுக்கின்ற
6 பைசாவோடு அரசாங்கமும் நிதி உதவி ஏற்கனவே 500
ரூபாய் என்று இருந்தது 3,000 ரூபாய் அளிக்கப்படுகிறது.
நான் வெட்டுத் தீர்மானம் கூட கொடுத்திருக்கிறேன். 10
ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்று சொல்லி எனக்கு
முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.
இன்றைக்குள்ள நிலைமையில் ஒரு குடும்பத்தை நடத்துவதற்கு
10 ஆயிரம் ரூபாய் கொடுப்பது மிக அவசியமானது.
தேவை என்று சொன்னால் அதற்கு தனியாக வாரியம்
அமைப்பது அல்லது 6 பைசா, 7 பைசா, 8 பைசா என்று
உயர்த்தி அவர்களுக்கு 10 ஆயிரம் கொடுப்பதற்கான முயற்சியை
அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். இது இன்றைக்கு கூட்டுறவிலே இருக்கிற நெசவாளர்
களுக்கு கிடைக்கிற நன்மைகள் தான், கூட்டுறவுக்கு கீழ்
வராத லட்சக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் இன்றைக்கு
தனியாகசெய்து கொண்டிருக்கிறார்கள், அங்கே போய்
இத்தகைய குரூப் இன்ஸூரன்ஸ் முறையை கொண்டுவருவதற்கு
அரசு முயற்சி செய்து அந்த தொழிலாளர்களுக்கும் இந்த குடும்ப
சகாய நிதி கிடைப்பதற்கு அரசு உதவி செய்யவேண்டும் என்று
நான் மிக பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டும் அல்லாமல் இன்றைக்கு கூட்டுறவிலுள்ள
நெசவாளர் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வை நடைமுறைப்
படுத்த ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அந்த கமிட்டியினு
டைய சிபாரிசுகள் அரசுக்கு கிடைத்து ஒரு ஆண்டுக்கு மேல்
ஆகிற நிலைமை இருக்கிறது. அது இன்னும் பரிசீலிக்கப்பட்டு
அறிவிக்கப்படவில்லை. தமிழகம் பூராவும் இருக்கிற கைத்தறி
நெசவாளர் தொழிலாளர்களுக்கு அத்தகைய கூலி சட்டத்தை
அமுல் செய்வதற்கு அரசு உடனடியாக ஆவன செய்யவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்,

அதேபோல் கைத்தறி நெசவாளர் தொழிலார்களுடைய
நிலைமைகளை பாதுகாப்பதற்கு ஏற்கனவே பல்வேறு இயக்
கங்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்து கிளர்ச்சி செய்த
பிறகு சென்ற கூட்டத்தில் கைத்தறி நெசவாளர்களுடைய
பாதுகாப்பு சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்த சட்டம்
கொண்டுவரப்பட்ட நேரத்திலே இது கூட்டுறவு துறையிலே
இருக்கிற ஊழியர்களுக்கும் நெசவாளர்களுக்கும் பொருந்தாது
என்று சட்டம் கொண்டுவரப்பட்டது. அதற்கு எங்கள்
இயக்கத்தின் சார்பாக ஆட்சேபித்தோம், எதிர்த்தோம்.
கூட்டுறவிலே இருந்தாலும் தனியாக இருந்தாலும்
எல்லா தொழிலாளர்களும் பாதுகாக்கின்ற முறையில்
சட்டம் கொண்டுவர வேண்டும் என்ற முறையில்
கருத்தை எடுத்துச்சொன்னோம். அதை அரசு ஏற்றுக்
கொள்ளவில்லை. அதன் விளைவாக இன்றைக்கு அந்த
சட்டத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் தடை வாங்கிவிட்டார்கள்,
மாஸ்டர் வீவர்கள். ஆகவே சட்டம் அமுல் செய்யப்படவில்லை.
நாம் சட்டம் கொண்டுவரும் நேரத்திலேயே சட்டத்தில் உள்ள
ஓட்டையை பயன்படுத்தாத முறையில் அந்த சட்டம் கொண்டு
வரவேண்டும் என்ற கருத்தை நாங்கள் சொல்லுகின்ற
நேரத்திலே கவனத்துடன் கொண்டுவரவேண்டும்.
அப்படிப்பட்ட சட்டம் கொண்டுவந்ததால் இன்றைக்கு
தாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது தான் பயன்படுத்
எடுத்துக்கூறி அத்தகைய முறையில் இந்த என்பதை நான்
லாளர்களும் பாதுகாக்கிற முறையிலே அனைத்து தொழி
ஆவன செய்யவேண்டும் என்று சட்டத்தை கொண்டுவர
இன்றைக்கு இந்த கொள்கையில் கேட்டுக் கொள்கிறேன்.
கைத்தறித் துறையிலே சொல்லியிருக்கிறார்கள்
குறைந்த விலையில் கைத்தறி நெசவாளர்களுக்கு
துறையிலே பஞ்சாலை நூல் கிடைப்பதற்கு கூட்டுறவு
முயற்சி பற்றி ஏற்படுத்துவதற்கு உள்ள
பிடுகிற அதே நேரத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள், அப்படி குறிப்
தால் பல்வேறு மாவட்டங்களில் அந்த துறையில் இன்றைக்குப்பார்த்
மில்களுக்கு அரசாங்கம் ஒரு கடந்த காலத்திலே நலிவுற்ற
உதவி அளிக்கவும் நலிவுற்ற உத்திரவாதத்தை அளித்து நிதி
முயற்சி எடுத்து இருக்கிறது. மில்களை அரசு ஏற்று நடத்தவும்
எடுத்துக்கொண்டால் குடியாத்தம் இன்றைக்கு எங்கள் மாவட்டத்தை
ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக நகரத்திலே கடந்த 35
இயங்கி வந்த ...



135999

பஞ்சாலை கடந்த 6 மாதங்களுக்கு மேலாக மூடியிருக்கிறது.
அதன் உள்ளே இருக்கிற இயந்தரங்களில் கோளாறு காரண
மாக மூடியிருக்கிறது. 6 மாதமாக லே-ஆப் அறிவிக்கப்பட்
டிருக்கிறது. லே-ஆப் உதவித்தொகை கொடுக்கவில்லை. அந்த்
தொழிலாளர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து உதவி செய்ய
வேண்டும் என்று கூட கோரிக்கை விட்டோம். தொழிலாளர்
நலத்துறை அமைச்சர் அவர்கள் அதற்கு சிபாரிசு செய்திருப்ப
தாக நாங்கள் அறிகிறோம் என்றாலும் கூட அந்த நலிவுற்ற
ஆலையை நிர்வாகத்தின் கோளாறு காரணமாக மூடியுள்ள
அந்த ஆலையை அரசாங்கமே ஏற்று நடத்தினால் தான் அந்த
ஆலை நடக்கும் என்ற நிலை இருக்கிற காரணத்தினால் நிச்சய
மாக அந்த ஆலையை அரசு ஏற்று நடத்துவதற்கு முன்வர
வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன். கைத்தறி நெசவுத் தொழிலில் ஏற்பட்டுள்ள
இந்த முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு அரசாங்கமும் அந்த
கொள்கை குறிப்பிலே சொல்லியிருக்கின்ற அதை நினைவில்
வைத்துக்கொண்டு அதிகப்படியான நெசவாளர்களை கூட்டுறவில்
கொண்டுவருவதற்கும், வீடுகளை அதிகப்படியாக கட்டிக்கொடுப்
பதற்கும் கைத்தறி நெசவாளர் தொழிலாளர்களின் கூலியை
சீரமைப்பதற்கும் பாதுகாப்பு சட்டத்தை அமுல் ஆக்குவதற்குமான
நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறி என்
உரையைமுடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி; மாண்புமிகு பேரவையின் மாற்றுத்
தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே வைக்கப்பட்டிருக்
கிற கைத்தறி மானியத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு தந்த
மைக்கு முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்
ளேன். இந்த கைத்தறி நெசவாளர்கள் இன்றையதினம் புரட்சித்
தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு நல்ல நிலைமையில்
இருக்கிறார்கள் என்பதை முதலிலே பெருமையோடு எடுத்துச்
சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

(பிற்பகல் 12,30)

1973லே தி.மு.க ஆட்சி பொறுப்பிலே இருந்தபோது நான்
சேர்ந்து இருக்கிற ஆத்தூர் தொகுதியிலே சின்னாளம்பட்டில்
சித்தையன்கோட்டை என்ற கிராமதில் 90 விழுக்காடுக்கு மேலாக
நெசவாளர்கள் இருந்துவருகிறார்கள். அந்த பகுதியில் 1973ல்
அவர்களுக்கு தொழில் கிடைக்காமல் இங்கிருந்து டெல்லி
நோக்கி செல்கின்ற சூழ்நிலை இருந்து வந்தது.
அந்த நேரத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்
னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோதும் அந்த நெச
வாளர்களுக்கு குறைந்த விலையில் அரிசியைத் தந்து நெசவாளர்
களின் துயரத்தைப் போக்கியது எங்களுடைய இதய தெய்வம்
புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை நான் பெருமிதத்தோடு
சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆ. வெள்ளைச்சாமி] [1983 மார்ச் 16

கூட்டுறவுச் சங்கங்களின் கீழே 67 விழுக்காடுக்கு மேல் கொண்டுவந்திருப்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சின்னாளப்பட்டியிலே 1977 ஆம் ஆண்டிற்குப் பின்பு 12 ஆரம்ப கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் மூலமாக பெரும்பான்மையான நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு கொண்டுவரப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான அனைத்தும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்த அளவுக்கு நெசவாளர்களின் துயரம் போக்குவதற்கு முன்நின்று செயற்படுகிறது நம்முடைய அரசு.

ஆரம்பக்கூட்டுறவு சங்கத்திலே தலைவராக வருகிறவர்கள் பொறுப்போடு நல்ல முறையிலே சங்கத்தை வளர்க்க வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் வருகிறார்கள், ஆனால் ஒருவர் இருவர் ஏதாவது லாபம் தேடலாம் என்றுகூட இருக்கமுடியும், அப்படிப்பட்டவர்கள் கையாடல்கள் போன்ற தவறுகளைச் செய்தால் அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க 65 என்கொயரி என்று போடுகிறார்கள்' அந்த என்குயரி 1,2 ஆண்டுக்காலம் என்று இழுத்துக்கொண்டு போகிறது. அதன்மூலம் கையாடல்களைச் செய்தவர்களுக்கு உடனடியாகத் தண்டனை கிடைப்பதில்லை. இதனால் மற்ற சங்கங்களிலே உள்ளவர்கள் கையாடல் செய்கின்ற எண்ணத்திற்குத் தள்ளப்படுகிறார்கள். அப்படியில்லாமல அவர்கள்மீது துரிதமான நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்னாளப்பட்டியிலே துணித் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த மாதம் கோ—ஆப் டெக்ஸ் நிறுவன தனி அதிகாரியிடம் நான் எடுத்துச் சொன்னேன். 15 நாட்களாக அவர்களுக்கு பாலிஸ்டர் நூல் கொடுக்கப்படவில்லை என்பதை கைத்தறித் துறை இயக்குநர், கோ-ஆப் டெக்ஸ் தனி அதிகாரி ஆகியோரைச் சந்தித்து எடுத்துக் கூறியதன் பேரில் அவர்களிடம் பாலிஸ்டர் நூலை ஒதுக்கவேண்டுமென்ற கோரிக்கையை வைத்தபோது அதை ஏற்றுக்கொண்டு அவர்கள் 4 ஆயிரம் கிலோ பாலிஸ்டர் நூலை உடனடியாக ஒதுக்கியதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து மாதா மாதம் நூலை அவர்களுக்கு ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்கள் குடும்பத்திற்கு—அங்கே படித்தவர்கள் இருக்கிறார்கள் — எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு ஜனார்த்தனன் அவர்கள் பேசினார்கள் கைத்தறித் துறையிலே பல்வேறு வேலைவாய்ப்புகள் இருக்கின்றன, துறையைப்பற்றி நல்ல முறையிலே அறிந்த அனுபவமு



1983 மார்ச் 16] [திரு. ஆ. வெள்ளைச்சாமி]

உள்ளவர்கள் நிறைய இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு சட்டத்தை நம்முடைய அரசு கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்கள் சேமநலத் திட்டத்திற்கு இங்கே வகை செய்யப்பட்டிருக்கிறது. 13·5 லட்சம் நெசவாளர்கள் தமிழகத்திலே நெசவு தொழிலைப் புரிகிறார்கள், அதிலே 81 ஆயிரம் பேர்களைத்தான் இந்தத் திட்டத்திலே சேர்த்திருக்கிற நிலைமை இருக்கிறது. குறைந்த அளவுதான் சேர்க்கப்பட்டிருப்பதால் அத்தனை பேர்களையும் இந்த சேம நலத் திட்டத்திலே கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் வீட்டு வசதிக்காக என்று 12 ஆயிரம் ரூபாய் அளவுக்குக் கடன் கொடுக்கிறார்கள். அரசு மானியமாக 2 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கட சுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிட்டார்கள். 12 ஆயிரம் ரூபாயில் இப்போது இருக்கின்ற விலைவாசி விற்கிற நிலையில் வீடுகட்டுவது சிரமமான காரியம். ஆகவே அதை கூட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாகவே, நெசவாளர்களுக்குத்தான் அதிகமாக, டி.பி என்ற காச நோய் வருகின்றது. எனக்கு முன்னே பேசிய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும் தெரிவித்தார்கள். அப்படி நெசவாளர்களுக்கு வருகின்ற காச நோயைப் போக்குகின்ற வகையிலே அவர்கள் வாழ்கின்ற பகுதியிலே டி.பி. சானட்டோரியத்தை ஏற்படுத்த வேண்டும், நான் இந்த மன்றத்திலேயே பல்வேறு நேரங்களிலே சொல்லியிருக்கிறேன். என்னுடைய ஆத்தூர் தொகுதியிலே, சின்னாளப்பட்டியிலே காச நோய் மருத்துவ மனை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறேன். அதைப் பரிவோடு கவனித்து, ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல, நுழைவு வரியிலிருந்து கைத்தறிக்கு விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதற்காக, நெசவாளர் சார்பாக, நான் இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்,

அதே போல, இன்றையதினம் காஞ்சிபுரத்திலேயும் மற்ற பகுதிகளிலேயும் நூறியும் மற்ற தேவையான தளவாடங்களும், தமிழ்நாடு பெடரேஷனிலிருந்தும், கர்நாடக பெடரேஷனிலிருந்தும், வாங்கப்படுகின்றன அந்த பெடரேஷனிலிருந்து வாங்குகின்றபொழுது, வெளியே தனியார்களிடமிருந்து வாங்குவதைக் காட்டிலும் விலை அதிகமாக இருக்கிறது. அதற்குக் காரணம்

என்ன? அந்தக் காரணத்தை அறியவேண்டும். நடுவிலே யாராவது, தவறுகள் புரிகிறார்களா? அதிக விலை கொடுப்ப தற்கு என்ன காரணம் என்பதை அறிந்து, தனியார்களிடம் வாங்குவதைக் காட்டிலும், அங்கே அதிக விலை விற்கின்ற காரணத்தை அறிந்து அதைப் போக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே, இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்தவரை நெசவாளர் நல்ல முறையிலே இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கின்ற அளவிற்கு இந்த அரசாங்கம் செயல்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட அரசுக்கு நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு யாற்றுத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் பஞ்சாலைக் கொள்கையும் திட்டங்களும் என்ற அடிப்படையிலே நான் சில வார்த்தைகளை உங்கள் முன்னால் சொல்வதற்கு கொடுத்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருக் கின்றவர்களுடைய புள்ளி விவரங்களைப் பார்க்கும்போது, தமிழ்நாட்டிலே 14 பேர்கள் ஒரிடத்திலே நின்றால், 14–வது மனிதர் ஒன்று, நேரிடையாக நெசவுத் தொழிலிலே ஈடுபடு கிறார் அல்லது மறைமுகமாக அதனோடு தொடர்பு கொண்டிருக் கிறார் என்று சொல்கின்ற வகையில் இது மிக முக்கியத்துவம் வாய்ந்த தொழில். இந்த நெசவுத் தொழில் என்று சொல்வது நாளுக்கு நாளும் நசித்துக் கொண்டு வருவது போன்ற தோற்றத்தையும் உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் அதிலே ஈடுபட்டிருக்கிறவர்களுடைய வாழ்க்கையிலோ, தொழிலி லோ, சிறப்போ, உயர்வோ கிடைத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்கின்ற நம்பிக்கை நமக்கு இல்லாத நிலைமையிலே தான் அரசாங்கமும் பல்வேறு திட்டங்களை அவர்களுக்குப் போடுவதாக நினைக்கின்றேன். ஆனால், பல்வேறு சின்ன, சின்ன கருவிகளிலே ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிற நேரத்தில், இந்தத் துறையிலே இன்னும் போதுமான ஆராய்ச்சி செய்யவில்லையோ என்பது என்னுடைய எண்ணம். இங்கே, அது குழித் தறியாக இருந்தாலும் சரிதான், சமவெளி தறியாக இருந்தாலும் சரிதான், இப்பொழுதுள்ளதைவிட எளிதிலே அதை இயக்க வழியிருக்கிறதா? ஓட்டம் போன்றவற்றைச் செலுத்து வதற்கு இதைவிட எளிய சக்தியை — மனித சக்தியிலே கூட மிகக் குறைவான சக்தியைப் பயன்படுத்தினால் அதை இயக்க முடியுமா என்று பார்க்க வேண்டும்.

இரண்டாவது, நெய்து கொண்டிருக்கிற நேரத்திலே பஞ்சினு டைய துகள்கள் வெளியே தெறித்து வருகின்றன. அப்படி வருகின்ற நேரத்திலேதான் அது சுவாசப் பைக்குள்ளே போகின்ற ஒரு சூழ்நிலை உருவாகிறது. எனவே பஞ்செல்லாம் போய்



நெஞ்சிலே அடைகின்ற ஒரு சூழ்நிலையைத் தடுப்பதற்கு, நோய் வந்ததற்குப் பிறகு அவர்களுக்குப் பாதுகாப்பு தேடுவதைவிட, அந்தப் பஞ்சு அவர்களுடைய உடலிலே புகாமல் இருப்பதற்கு ஏதாவது தடுப்புகள் இருப்பதற்கு வழி இருக்கிறதா என்பதை அந்த ஆராய்ச்சியிலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு மற்ற உறுப்பினர்கள் சொல்வதைப்போல, பீரியாடிக்கல் மெடிக்கல் செக் அப் அடிக்கடி செய்யச் சொல்கின்ற வகையில், அவர் களுடைய உடலைச் சோதித்துப் பார்க்கின்ற நிலையையும் ஏற்படுத்துதல் வேண்டும்.

இரண்டாவது, ஒரே இடத்திலிருந்து வேலை செய்பவர்கள் அவர்கள். எப்பொழுதாவது நூல் அறுந்து விட்டால் மட்டுமே நீளப் பாவு போடுகின்றவர்கள் வெளியே போய் அதனை நிரவி விட்டு வருவார்கள். அதற்குக்கூட துணை இருந்தால் அவர்கள் எழுந்து போவதில்லை. அங்கேயே இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால், ஒரே இடத்திலேயிருந்து பணிபுரிகின்றவர் களுக்கு வருகின்ற தொல்லைகள் என்ன, என்ன என்று பார்த்து, அதற்கு ஏதாவது மாற்று யோசனைகள் சொல்ல இயலுமானால் அதை அரசாங்க ரீதியில் சொல்வது நலம் பயக்கும் என்று கருதுகின்றேன்.

அடுத்தாற்போல நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர் களுடைய குழந்தைகள், எல்லோரையும் போலே நல்ல மார்க்குகள் எடுத்திருப்பார்களானால், கல்வி அமைச்சராக நமது அமைச்சரவர்கள் இருக்கிற காரணத்தால், டெக்ஸ்டைல் டெக்னாலஜி போன்றவைகளிலே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பது நல்லது என்று நான் கருதுகின்றேன். அதனையும் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் கடந்த 5 அல்லது 6 மாதங்களுக்கு முன்பு நமது பெருமதிப்பிற்குரிய அமைச்சர் பெருமகனார் எழுதிய ஒரு கட்டுரைக்கும் இப்பொழுது தந்திருக்கிற குறிப்புகளுக்கும் சில வேறுபாடுகள் இருக்கின்றன. அந்த வேறுபாடு வளர்ச்சியைக் காட்டுகிற காரணத்தால் நான் பாராட்டுகிற முகத்தான் இருந்தாலும், அந்தப் புள்ளி விவரங்கள் சரிதானா என்பதை ஒரு தடவை நீங்கள் மீண்டும் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 6 மாதத்திற்கு முன்னால் நீங்கள் கொடுத் திருக்கிற அந்தப் புள்ளி விவரத்திலே சேமிப்புப் பாதுகாப்புத் திட்டத்தில் 67,000 பேர்கள் சேர்ந்திருப்பதாகக் குறிப்பு இருக்

(பிற்பகல் 12-40)

கிறது. இப்பொழுது எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றஇந்தக் குறிப்புப் புத்தகத்திலே 81,20) என்று இருக்கிறது. இவ்வளவு நாட்களுக்குள்ளாக இத்தனை பேர்களைச் சேர்க்க முடிந்தால் அது பாராட்டுக்கு உரியதுதான். ஆனால் அந்தப் புள்ளி விவரம் எந்த அளவிற்குச் சரியானது என்பதை ஒருமுறை பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் 1,320 இருந்தன என்று ஐந்து மாதங்களுக்கு முன்னால் அமைச்சர் கட்டுரையில் படித்தேன். ஆனால் இப்பொழுது அது 1,412 என்று ஆகியிருக்கிறது.

அதைப்போல 12 கூட்டுறவு நூற்பாலைகளிலேயும் 13,17,000 கதிர்கள் என்று முன்பு இருந்தது; இன்றைக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்ற அறிக்கையில் 13,24,000 கதிர்கள் என்று வந்திருக்கிறது.

இவ்வாறு விரிவு அடைந்திருந்தால் அது வரவேற்கப்பட வேண்டிய செய்திதான். ஆனால் இவைகளெல்லாம் சரியான புள்ளி விவரங்கள்தானா அல்லது புள்ளி விவரங்களில் எழுந்த தவறா என்று பார்க்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், நீங்கள் கொடுக்கின்ற புள்ளி விவரங்களை வைத்துத்தான் வெளியிலே இருப்பவர்கள் கணக்கு போடும் சூழ்நிலை உருவாகிறது.

அடுத்த செய்தியாக நான் சொல்ல விரும்புகிறேன். ஐந்து இடங்களில் கூட்டுறவு நூற்பாலைகளைக் கொண்டு வருவதற்கு, கூட்டுறவு நூற்பாலைகளைக் கொண்டு வரும் அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கும் என்றும், அதற்காக 30 கோடியே 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருப்பதாகவும் கூறுகிறீர்கள். இப்படிப்பட்ட ஆலைகளால் கிடைக்கின்ற நூல் அந்த நெசவாளர்களுக்குப் போய்ச் சேரு கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். இவைகள் தேவைதான் என்பது உண்மை. ஆனால் இப்பொழுது அம்பர் சர்க்கா போன்றவைகள் வந்திருக்கின்றன. அவைகளில் நூற்கப்படும் நூலும்கூட காந்தி மகாத்மா காலத்தில் இருந்ததைப்போல முரட்டுத்தனமாகவோ அல்லது எளிதில் அற்றுப் போவதாகவோ இல்லாமல், இப்பொழுது உறுதியாக, ஏறத்தாழ மில் நூலோ என்று எண்ணுகின்ற அளவிற்கு வந்து விட்டது. இப்பொழுது உள்ள உங்களுடைய திட்டத்தின்படி 30 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவு என்றால், ஐந்து இடங்களில் நூற்பாலைகள் போட்டால் 2,800 பேர்களுக்கு வேலை கிடைப்பதற்கான ஒரு திட்டமாக இது இருக்கிறது. இந்த 2,800 பேர்களுக்கு வேலை கொடுப்பதற்காக ஏறத்தாழ 30 கோடியே 15 இலட்சம் ரூபாய்களைச் செலவழிக்கின்ற நேரத்திலே, இதை வேலை வாய்ப்புக்கான ஒரு திட்டமாக மட்டும் வைத்துக்கொண்டு ார்க்கக் கூடாது. நூல் உற்பத்தி செய்கின்ற சூழ்



வைத்துப் பார்க்க வேண்டும். அந்த நூலை
நிலையையும் பெருக்குகின்ற மற்ற
உபயோகித்து வேலை வாய்ப்புகளைப் அம்பர் சர்க்காவுக்காக
திட்டங்களையும் நாம் பரிசீலிக்கலாம். செலவழித்தால் 6
30 கோடியே 15 இலட்சம் ரூபாய்களைச் கொடுக்க முடியும். 500
இலட்சம் பேர்களுக்கு வேலை முடியும். 6 இலட்சம்
ரூபாயில் ஒரு இராட்டினத்தை வாங்க முடியும். இந்த 6
பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க ஈடுபட்டால் ஐந்து நூற்
இலட்சம் பேர்களும் இந்த வேலையில் செய்ய முடியுமோ அந்த
பாலைகளில் எவ்வளவு உற்பத்தி செய்யமுடியும் என்று கருதுகிறேன்.
நூலை நிச்சயமாக உற்பத்தி

அமைக்கப்பட்ட கூடங்கள்
சத்துணவுத் திட்டங்களுக்காக பயன்படுத்தப்படாமல் சில நேரங்களில்
எல்லா நேரங்களிலேயும் மற்ற நேரங்களில் இந்த அம்பர்
மட்டும் பயன்படுத்தப்படுவதால் கூடங்களாகப் பயன்படுத்தலாம்.
சர்க்காக்களை வைக்கின்ற சுண்ணாம்பையும் வைத்துக் கட்டப்பட்டிருக்கின்ற
கல்லையும், சில நேரங்களுக்கு மட்டும் பயன்படாமல் மற்ற
அந்தக் கூடங்கள் இந்தச் சமுதாயத்திற்கு உதவி
நேரங்களிலும் பயன்பட்டு வேண்டுமென்ற அந்த யோசனையை,
செய்யும் வகையில் இருக்க அமைச்சரவர்கள் இருக்கின்ற
கல்வியமைச்சராகவும் இந்த வேண்டுமென்று பணிவன்
காரணத்தினால் சிந்தித்துப் பார்க்க காரணம், ஆறு இலட்சம் பேர்
போடு கேட்டுக்கொள்கிறேன். கொடுக்கப்படுகிறது என்றால் அது
களுக்கு வேலைவாய்ப்பு அல்ல; மிகப் பிரம்மாண்டமான செய
சாதாரணமான காரியம் நன்மைகளைச் செய்கின்ற இந்த
லாகும். இப்படிப்பட்ட நம்முடைய இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்
ராட்டினங்களைச் செய்ய பயன்படுத்திக்கொண்டு அங்கு வெகு
தொழில் கூடங்களைப் விடலாம். இதையும் சிந்தித்துப்
விரைவில் செய்து முடித்து கேட்டுக்கொள்கிறேன்.
பார்க்க வேண்டுமென்று

அடுத்தாற்போல், நெசவாளர்கள் இறந்தால் இப்பொழுது
சொல்லி இருக்கின்ற திட்டத்தை அதிகப்
3,000 ரூபாய் என்று எல்லோரும் சொன்னதைப்போலவே
படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
நாளும்

பலயிடங்களிலே பொருட்காட்சி என்று சொல்லும் வகையில்
எழுப்புவதாகவும், சிலயிடங்களிலே
ஆங்காங்கு கட்டிடங்கள் தற்காலிகமாகப் போட்டுக் கூடங்
அப்பொழுதைக்கப்பொழுது இருக்கிறோம். இவைகளையெல்லாம்
களை எழுப்புவதாகவும் இவைகளுக்குச் செலவிடும்
மொத்தத்தில் கணக்குப் பார்த்தால் முடியுமா என்று பார்க்க
பணத்தில் ஏதாவது சிக்கனம் செய்ய
வேண்டியவர்களாக இருக்கிறோம்.

கோவாப்டெக்ஸ் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலேயிருந்து துணியை வாங்கி மிக்க அதிக இலாபத்தை ஏற்றி, அதிலே 20 சதவீதமோ அல்லது நீங்கள் குறிப்பிடும் சதவீதத்தையோ குறைத்துக் கொடுத்தாலும், அதிகமாக இலாபத்தில் அது நடக்கவில்லையோ என்று தோன்றுகிறது. ஆதலாலே, ஓவர் ஆல் எக்ஸ்பெண்டிச்சர் அல்லது ஓவர் ஹெட் எக்ஸ்பெண்டிச்சர் என்று சொல்வார்களே, எஸ்டாபிலிஷ்மெண்ட் எக்ஸ்பெண்டிச்சர் என்று சொல்வார்களே, அவைகளையெல்லாம் சுருக்குவதற்கு, சிக்கனப்படுத்துவதற்கு நமது அரசாங்கம் முயல வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த செய்தியாக, வெளிநாடுகளுக்கு நம்முடைய துணி போவதை அறிந்து பெருமைப்படுகிறோம். மிகப் பழம் காலத்திலிருந்தே நமது துணிகள் போய்க்கொண்டிருக்கின்ற என்பதையெல்லாம் குறிப்பிட்டுக் காட்டியிருக்கின்றார்கள். இலக்கியம் பேசும் அளவில் மிக்க செம்மையான கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன என்று பாராட்டினாலும்கூட உலக் நாடுகளிலே இன்னும் புதிய புதிய இடங்களில் சந்தையைத் தேடவில்லையோ என்று நான் எண்ணுகிறேன். இப்பொழுது வளர்ந்து வருகின்ற நாடுகளிலே நாம் சந்தையைத் தேடியாக வேண்டும்.

கைத்தறியிலே வேட்டியோ, துண்டோ போட்டால் அதை எடுத்து அவர்கள் அப்படியே உடுத்துவது கிடையாது; சட்டையாகவோ அல்லது வேறு ஒன்றாகவோ மாற்றித்தான் அணிகிறார்கள். இங்கே கைத்தறியிலே நாம் எவ்வளவு மேன்மையாக சரக்குகளை உற்பத்தி செய்தாலும், கண்ணுக்கும் கருத்துக்கும் ஏற்றவகையில் நாம் துணிகளை உற்பத்தி செய்து, அவர்கள் அணிவதற்கு ஏற்ற வகையில் புது மாதிரிகளை, நியூ ஃபேஷன்ஸ் என்று சொல்வார்களே, அம்மாதிரி உண்டாக்க வேண்டும். அப்பொழுதுதான், ஒன்று துணிக்காக அவர்கள் வாங்குவார்கள், இன்னொன்று இந்தத் துணி தைக்கப்பட்டிருக்கின்ற அந்த மாதிரியைப் பார்த்து வாங்குவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, துணியிலே மட்டும் ஆராய்ச்சி செய்யாமல் புதிய புதிய வடிவங்களை வடிவமைப்பதிலே, அதாவது சட்டைகளாக, அல்லது பெண்கள், ஆண்கள், குழந்தைகள் போடும் துணிகளாக எப்படி எப்படியெல்லாமோ விநோதமாக மட்டுமல்லாமல், பார்ப்பதற்கு கவர்ச்சிகரமாகவும் தைப்பதற்கு முடியும் என்று சொல்லுகின்ற வகையிலே ஒரு ஆராய்ச்சிக் கூடத்தையும் நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். 3, 4 மாதங்களுக்கு ஒரு முறை ஃபேஷன் மாறிக்கொண்டேயிருக்கிறது என்று சொல்கிறார்கள். அதற்கு ஈடு கொடுக்கின்ற வகையிலே, நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்கவேண்டும். அதைப்பற்றியும், நாம் சிந்திக்கவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த வகையில் வீடு கட்டிக்கொடுக்கின்ற ஒரு திட்டத்தைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். இந்த வீடு கட்டுகின்ற எண்ணிக்கையும் போதாது; கட்டுவதற்காக ஒதுக்கியிருக்கிற பணமும்போதாது.



12 ஆயிரம் ரூபாயில் வீடு கட்டிக்கொடுப்பது என்பது, அது அவர்களுக்குப் போதுமானதாக இருக்காது என்பது மட்டுமல்ல; வலிவுள்ளதாகவும் இருக்காது. இவைகளையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு, இந்த நெசவாளர் பெருங்குடி மக்கள் ப- பேரிலே ஒருவராக — நேரடியாகவோ, அல்லது மறைமு மாகவோ தொடர்புகொண்டு, அவர்களுக்கு வாழ்வு அளிப்பதக குரிய திட்டங்களைச் சிந்தித்துப் பார்க்கின்ற நேரத்திலே, வேறைற வாய்ப்பும் பெருகி, அவர்களுடைய வாழ்விலே வளத்தையுல பெருக்குவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கித்தரவேண்டுமென்ம் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

று

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, கைத்தறி மற்றும் பஞ்சாலை கோரிக்கை எண். 26 என்கின்ற கொள்கை விளக்கத்தின் மீது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 'செய்யும் தொழிலைச் சீர்தூக்கிப் பார்க்கின் நெய்யும் தொழிலுக்கு நிகர் இல்லை' என்று சொல்லிய காலம் ஒன்றுண்டு. இன்று அந்தத் தொழில் நாளாவட்டத்தில் படிப் படியாகப் பல்வேறு துறைகளிலே நாம் சட்டத்தைக் கொண்டு வந்தாலும், அது படிப்படியாக பலஹீனம் அடைந்துகொண்டு வருகின்ற ஒரு தொழிலாகத்தான் அது இருந்து வருகிறது.

குறிப்பாக தமிழகத்திலே 5.6 இலட்சம் கைத்தறிகளில் நம்முடைய முயற்சியின் காரணமாக — தமிழக அரசின் முயற்சியின் காரணமாக - இந்தத் தொழிலை, தனியார்ச் சுரண்டலிலிருந்து, கூட்டுறவு மூலமாகக் கொண்டுவரவேண்டு மென்று, இந்த ஆண்டு வரை குறிப்பாக 3,22,000 கைத்தறி களைக்கொண்டு வந்திருக்கிறோம். என்றாலும், இன்னும் தனியாரிடத்தில் 'மாஸ்டர் வீவர்' ஒரு தறி, 2 தறி என்று போட்டு சொந்தமாக தொழில் செய்கின்ற கிட்டத்தட்ட 2,32,000 தறிகள் இன்னும் தனியாக இயங்கிக்கொண்டு இருக்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை 5 கோடி மக்களில் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் 100-க்கு 17 பேர்கள் ஆக இருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக, தமிழகத்தில், விவசாயத்திற்கு அடுத்து, இந்தத் தொழில் தான் கிராமத்தில் உள்ளவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். நெசவைப் பொறுத்தவரை, கிராமமானாலும் சரி, நகரமானாலும் சரி, இது படர்ந்து இருக்கக்கூடிய ஒரு தொழில் என்று இந்தச் சமயத்தில் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மேலும், இந்தத் தொழிலுக்கு நூல் வேண்டும். இந்த நூலுக்காக உற்பத்தி செய்யக் கூடிய பருத்தி குறைவாகக் கிடைக்கிறது. இந்த மூலப்பொருளுக்கு விலை குறைவு. அதுவே கைத்தறியாளர்களுக்கு வரும்பொழுது அதிகமான விலையில் இருந்துகொண்டிருக்கிறது.

வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

[திரு. தி. கா. நல்லப்பன்]
[1983 மார்ச் 16

(பிற்பகல் 12-50)

1975—ஆம் ஆண்டு சுமாராக 26—ஆம் நம்பர் நூல்
அன்றைய தினம் ரூ. 55 ஆக விற்கப்பட்டது. நம்பர் நூல்
படிப்படியாக அந்த நூல் விலை அதிகரித்து இன்றைக்குப்
இன்றையதினம் விற்கப்படக் கூடிய ஒரு ரூ. 150 க்குக்கூட
விலை ஏறுகின்ற காரணத்தால் சூழ்நிலை இருக்கிறது.
மூலப் பொருளாக உள்ள அதேசமயத்தில் அதனுடைய
உள்ளது — நூலின் விலை பருத்தியின் விலை கூடுதலாக
காரணமாகவும் இந்தத் அதிகமாக இருக்கின்ற ஒரு சூழ்நிலை
பாதிக்கக்கூடிய ஒரு தொழிலில் உள்ள நெசவாளர்கள்
யைப் பொறுத்தவரை சூழ்நிலை இருக்கிறது. இந்தக் கைத்தறி
கொண்டு இருக்கக்கூடியவர்கள் அந்தத் தொழிலிலே ஈடுபட்டுக்
களுக்கு, 8 மணிக்குச் சாதாரணமாக அலுவலகங்
விடுபவர்கள் அல்ல. சென்று மாலை 4 மணிக்கு திரும்பி வந்து
வேண்டுமென்ற நிலை அல்லது 8 மணி நேரம் தொழில் செய்ய
இல்லை. காலையில் அந்தத் தொழிலைப் பொறுத்தவரையில்
இருக்கக்கூடிய அந்த 6 மணிக்கு அந்தத் தொழிலில் ஈடுபட்டு
சென்றால், அவன் ஆண்மகன் தன்னுடைய பால்வாடிக்குச்
கொண்டு போகவேண்டிய பின்னாலேயே அவனுடைய மனைவி கஞ்சி
களுக்கு பின்னாலே ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவர்
ஈடுபடவேண்டிய அவனுடைய குழந்தையும் அந்தத் தொழிலிலே
நேரத்திலே ஒரு நிலையிருக்கிறது என்பதை நான் இந்த
பொறுத்தவரை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். வேலையைப்
அந்தத் நம்முடைய அறிக்கையில்கூட கூடுமான வரை
தொழிலாளிக்கு தொழிலில் ஈடுபட்டு இருக்கக்கூடிய அந்தத்
உத்தரவாதத்தைப்பற்றி வருடத்திற்கு 300 நாட்களுக்கு வேலை என்ற
இன்றையதினம் இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.
தொழிலாளர்களுக்கு அந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கக்கூடிய
கிடைக்காத சூழ்நிலை நிச்சயமாக 300 நாட்கள் வேலை
நூல் விலை ஏற்றம். தான் இருக்கிறது. அதற்குக் காரணம்
அந்தத் துணி மந்தம். அதேசமயத்தில் அவன் விற்கக்கூடிய
மூலம் உற்பத்தி கூட்டுறவுத் துறையிலே உள்ளவர்கள்
சங்கங்களிலேயிருந்து ஆகக்கூடிய துணியை, ஆரம்ப கூட்டுறவுச்
கோ—ஆப்டெக்சின் உற்பத்தி ஆகக்கூடிய அந்தத் துணியை
விற்கக்கூடிய அந்தத் மூலமாக விற்பனை செய்தாலும், அப்படி
காலத்தில் அந்தத் துணிக்கு முழுமையாக குறிப்பிட்ட
இந்த ஆரம்ப துணிக்கான பணம் வந்து சேருவதில்லை,
ஆகக்கூடிய 50 சங்கங்களுக்கு. அதேபோல் அங்கே உற்பத்தி
வாங்கினாலும், சதவீதம் துணியை கோ—ஆப்டெக்சின் மூலமாக
துணியை அவர்கள் மீதி இருக்கக்கூடிய அந்த 50 சதவீதம்
இதன் காரணமாக விற்கமுடியாத ஒரு நிலை ஏற்படுகிறது.
அந்தத் தொழில் அந்தத் தொழிலிலே தேக்கம் ஏற்பட்டு
நசுங்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆனால்

வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

1983 மார்ச் 16]
[திரு. தி. கா. நல்லப்பன்]

அதேசமயத்தில் ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தி
யாகக்கூடிய அத்தனை துணிகளும் கோ—ஆப்டெக்சின் மூலமாக
அந்தந்தக் காலக் கட்டத்தில் குறிப்பிட்ட 3 மாதம், 6 மாதம்
என்று அந்தக் காலத்திற்குள்ளாக அந்தத் துணியை
விளம்பரங்கள் செய்து, விற்பனை செய்ய நாம் முன்வர
வேண்டும். அதுமட்டுமல்லாமல், வெளிநாட்டிலே இதற்கு நல்ல
ஆதரவும் இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதன்
மூலமாக தான் இந்தத் தொழிலிலே உள்ள தேக்கங்களை போக்க
முடியும். இந்தத் துணிகளை முழுமையாக வாங்கக்கூடிய
அந்த உத்தரவாதத்தை நீங்கள் தந்தால்தான் இந்தத் தொழில்
நெருக்கடி இல்லாமல் இருக்கும். மேலும் ஆரம்ப கூட்டுறவுச்
சங்கங்களிலே உற்பத்தி செய்யக்கூடிய அந்தத் தொழிலாளி
அல்லது அந்தச் சங்கம் சற்றேறக்குறைய 12 சதம் லாபம்
வைத்து விற்கிறார்கள். ஆனால் அந்தத் துணியை வாங்கு
பவர்கள் குறிப்பிட்ட காலத்திலே அந்தச் சங்கத்திலே உள்ள
வர்கள், அந்தத் தொழிலில் ஈடுபட்டு உள்ளவர்களுக்கு உரிய
பணம் போய்ச்சேருவதில்லை. அந்தத் துணிகளை கோ-ஆப்
டெக்ஸ் மூலமாக கிட்டத்தட்ட 25 சதவீதம் லாபம் வைத்து
விற்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. எனவே அந்தத்
தொழிலில் ஈடுபட்டு இருக்கக்கூடியவர்கள் வளர்வதற்கு போது
மான வசதிகள் இல்லை. மேற்சொன்ன காரணங்கள் எல்லாம்
தடையாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதுவும் விசேஷ காலங்
களில், அதாவது தீபாவளி, பொங்கல் போன்ற அந்தக் காலங்
களில்தான் நாம் இந்தத் துணிக்கு ரிபேட் என்ற முறையிலே 20
சதவீதம் கொடுக்கிறோம். இந்த 20 சதவீதம் கொடுப்பதுகூட
உண்மையிலே ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கக்
கூடியவர்களுக்கு தெரியும், அந்தக் காலகட்டத்திலே விற்பனை
ஆகிறதா என்று உத்தரவாதமாக சொல்லமுடியாது. இதற்கும்
முன்னும், பின்னும், அந்தச் சூழ்நிலைகளிலே அவர்கள் ரசீதைப்
போட்டு அந்தத் தள்ளுபடி இருக்கின்ற காரணத்தால் தேங்கி
யிருக்கக்கூடிய அந்தத் துணியை விற்பதை நாம் கண்கூடாக
காண்கிறோம். இந்த தள்ளுபடியை ஒரு குறிப்பிட்ட காலத்திற்
கென்று இல்லாமல், அதாவது தீபாவளி, பொங்கல் போன்ற
பண்டிகை காலங்களில் மட்டுமல்லாமல் தொடர்ந்து அனைத்துக்
காலங்களிலும் இருக்குமானால் நிச்சயமாக இந்தத் துணிகள்
தேங்காமல் இருப்பதற்கு வாய்ப்பாக அமையும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தொழிலிலே ஈடுபடக்கூடிய தொழிலாளர்கள்
தாங்கள் தொழில் செய்வதற்காக ஒரு ரூபாய்க்கு ஆறு பைசா
என்று கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக பிடித்தம் செய்யப்
படுகிறது. அரசு அவர்களுக்கு 3 பைசா கொடுக்கிறது. இந்த
3 பைசா கொடுப்பதை இன்னும் அதிகப்படுத்தி, அவர்களிட
மிருந்து பிடிக்கிற 6 பைசாவோடு அரசே 6 பைசா போட்டு,
அவர்கள் இறந்துவிட்டால் என்கிற நிலை இல்லாமல் வயதாகி

தொழில் செய்யமுடியாத சூழ்நிலை ஏற்படுமானால் அந்த காலத்திலே அவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

சிவராமன் குழுவைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு மாதம் 300 ரூபாய் கிடைக்கவேண்டுமென்று பரிந்துரை செய்யப்பட்டு அந்த பரிந்துரை இந்த அறிக்கையில் இருக்கிறது. இன்றைய காலக்கட்டத்தில், விலைவாசி ஏறியிருக்கிற இந்த சூழ்நிலையில் அரசு தரப்பிலே சொல்கிறதைப்போல கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள் என்று வைத்துக்கொண்டு தினசரி 9 ரூபாய் வருமானத்தில் குடும்பம் நடத்த முடியாது. இதை அரசு யோசித்துப் பார்க்கவேண்டும். இந்த நிலையிலிருந்து தொழிலாளர்கள் விடுபட குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு 600 ரூபாய் வருமானம் வருவதற்கு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அப்போது தான் நெசவாளர்களுடைய குடும்பம் வளரும், வாழும்.

நெசவாளர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு வீடு கட்டும் திட்டமென்று ஒரு திட்டம் இந்த ஆண்டு சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு 5000 வீடுகள் கட்டுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுவும் குறிப்பிட்டிருக்கிற அந்த 5000 வீடுகளில் வீடு கட்டுவதற்கு 1000 ரூபாய் மானியமாகவும், ஏனையத் தொகையை கடனாக கொடுப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தத் தொகையைப் பொறுத்தவரையில் ஒரு சமயம் சம்பந்தப்பட்ட இலாக்காவினரிடத்திலே கேட்டபோது நாங்கள் கொடுக்கக்கூடிய ஆயிரம் ரூபாயை கொடுத்து விடுவோம்; மீதி இருக்கிற தொகையை அவர்கள் தீர்மானம் போட்டு சொசைட்டியிலேதான் பெறவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தொகையைப் பொறுத்தவரையில் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ அல்லது மாவட்ட கூட்டுறவு வங்கிகளிலோ அந்தத் தொழிலாளர்களுக்கு கொடுத்து வீடு கட்டுவதற்கு உதவி செய்யவேண்டும். புதியதாக கட்டக் கூடிய அந்த வீடு கட்டும் திட்டத்தில் அவிநாசியில் உள்ள சாமகட்டுப்பாளையம், பெரியார்பாளையம், முக்கனூர், எல்லப்பாளையம் போன்ற ஊர்களையும், பெருந்துறைப் பகுதியில் உள்ள முரட்டுப்பாளையம், கல்லங்குழி, சீனாங்குளம், பெருந்துறை போன்ற ஊர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 10 ஆயிரம் தொழிலாளர்களுக்கு புதியதாக நூற்பாலைகளில் வேலை கொடுப்பதாக இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இருந்தாலும் ஏற்கெனவே கோவை மாவட்டத்தில் நீண்ட நாட்களாக மூடிக்கிடக்கிற மில்களை திறக்கவேண்டும். அவிநாசியில் தமிழ்நாடு ஸ்பின்னிங் மில்ஸ், திருப்பூர் எஸ். ஆர். சி. மில்ஸ், காளப்பட்டி பத்மா மில்ஸ் போன்ற மூடிக்கிடக்கிற பஞ்சாலைகளை திறந்து வைத்து அவை நடப்பதற்குரியட் ஏற்பாட்டை செய்யவேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்,



(பிற்பகல் 1-00)

திரு. ஏ. கி. சண்முகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி மானியக் கோரிக்கையை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்ததற்காக முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே இன்றைக்கு விவசாயத்திற்கு அடுத்தபடியாக இருக்கிற ஒரு பெரிய தொழில் நெசவுத் தொழிலாக இருக்கிறது. கடுமையான தண்ணீர் பஞ்சம், பொருளாதாரப் பஞ்சம் இருந்தும்கூட இன்றைக்கு இந்த நெசவுத் தொழில் பாதிப்பு இல்லாமல் முன்னேற்றமடைவதற்கு இந்த அரசு கொண்டு வந்திருக்கிற நல்ல திட்டங்களை நான் வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த கைத்தறித் துறைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பது நமக்குத் தெரியும். தன்னுடைய வாழ்நாளிலே இந்த கைத்தறித் துறைக்கு என்னென்ன பணிகளைச் செய்தார்கள் என்பது வரலாற்றிலே பொன்னெழுத்தால் பொறிக்கப்பட்டிருக்கிறது. தன்னுடைய தோளிலே சுமந்துசென்று கைத்தறித் துணிகளை விற்ற வரலாறு இந்த தமிழ் மண்ணுக்குச் சொந்தம். பேரறிஞர் அண்ணா அவர்களின் வாரிசாக இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் துறை மேலும் மேலும் வளர்ச்சியடையக் கூடிய அளவுக்கு பல நல்ல திட்டங்களைத் தீட்டித் தந்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற தமிழக அரசுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

முதலிலே இங்கே நுழைவு வரியை அறிவித்து, அந்த நுழைவு வரியிலிருந்து விலக்கு கொடுத்து இந்த கைத்தறித் துறையை பாதுகாக்கின்ற அரசுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போன்று இங்கே கூட்டுறவுத் துறையில் எல்லா நெசவாளர்களையும் கொண்டுவர வேண்டுமென்று முனைப்போடு நம்முடைய அரசு செயல்பட்டு வருவதை நான் பாராட்டுகிறேன். அனைத்திந்தியாவிலும் கூட 60 சதவீதம் நெசவாளர்களைத்தான் இந்த கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டுவர திட்டமிட்டிருக்கும் போது நம்முடைய அரசு 1984 ஆம் ஆண்டிலே கிட்டத்தட்ட 67 சதவீதம் பேரை கூட்டுறவுத் துறையில் கொண்டுவர திட்டமிட்டிருப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் இந்த அரசையும் பாராட்டுகிறேன். அதற்காக என்னுடைய நன்றியை காணிக்கையாக்குகிறேன்,

[திரு. ஏ. சி. சண்முகம்] [1983 மார்ச் 16

ஏனென்றால் தனியாரிடத்திலே நெசவாளர்கள் பலகொடுமை
களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனக்கு முன்னால்
பேசிய சில மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல
அவர்கள் அடிமைகளாக, கொத்தடிமைகளாக தனியார்களிடம்
வேலை செய்து வருகிறார்கள். 2000 ரூபாய், 3000 ரூபாய் கடன்
பெற்றால் அவர்கள் தலைமுறை தலைமுறையாக, தன்னுடைய
மகன், பேரன் எல்லாம் அடிமைகளாக, கொத்தடிமைகளாக
அந்த முதலாளிக்கு சொந்தமாக இருக்கக்கூடிய நிலைமைகளைத்
தடுத்து, அவர்களை எல்லாம் கூட்டுறவுத் துறையில் கொண்டு
வர அரசு எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகளைப் பாராட்டு
கிறேன்.

அதைப் போன்று கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல்வேறு
சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். அதில் இருக்கக்கூடிய
காலதாமதத்தை தவிர்க்க வேண்டும். ஒரு சங்கம் ஆரம்பிக்க
வேண்டுமென்று மனு கொடுத்தால், மனு கொடுத்த 2 அல்லது
3 மாதங்களுக்குள் அந்தச் சங்கத்தின் தொடக்க விழாவினை
நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். கால தாமதத்தை தவிர்க்க
வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு
அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித்
தலைவர் ஆட்சியிலேதான் என்னுடைய தொகுதியாகிய ஆரணியில்
பல கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அங்கே
உற்பத்தியாவது பெரும்பாலும் பட்டுச் சேலைகள். அந்த பட்டுச்
சேலை உற்பத்திச் சங்கங்கள் கிட்டதட்ட ஏழு இருந்தன.
இன்றையதினம் அது 27 கூட்டுறவுச் சங்கங்களாக மாண்புமிகு
புரட்சித் தலைவர் ஆட்சியில் வளர்ந்திருக்கிறது என்பதால் இந்த
அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று கூட்டுறவுச் சங்கங்களை ஊக்குவிப்பதற்காக
1983-84 ஆம் ஆண்டில் 27,800 கைத்தறிகளை கூட்டுறவுத்
துறையின் கீழ் கொண்டுவர திட்டமிட்டிருப்பதைப் பாராட்டு
கிறேன்.

அதைப் போன்று பழைய சங்கங்களை, நலிவடைந்த
சங்கங்களை புதுப்பிக்க 110 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்
கிறது. 1983-84 ஆம் ஆண்டுக்கு மாநில அரசின் பங்காக 30
இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை இன்னும்
அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவாப்டெக்ஸ் நிறுவனத்தின் பணியை நம்மால்
பாராட்டாமல் இருக்கமுடியாது. இந்த கோவாப்டெக்ஸ் நிறுவனம்
இல்லை என்றால் இந்த கூட்டுறவுச் சங்கங்கள் வளரமுடியாத
ஒரு நிலைமை வந்திருக்கும். கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி



1983 மார்ச் 16] [திரு. ஏ. சி. சண்முகம்]

யாகக்கூடிய பொருள்களில் கிட்டத்தட்ட 50 சதவீதத்தை இந்த
கோவாப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்து விற்பனையை
அதிகப்படுத்துகிறது. தனியார்கள் கடன் கொடுக்கிறார்கள்.
தனிப்பட்ட முதலாளிகள், வியாபாரிகள் கடன் கொடுத்து
தங்களுடைய வியாபாரத்தை வளர்த்துக்கொண்டிருக்கிறார்கள்.
ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள் அப்படி கடன் கொடுக்காம
லிருந்தால் நலிந்து போகும் நிலைமை ஏற்படும். அந்த நலிவைப்
போக்க கோவாப்டெக்ஸ் நிறுவனம் 50 சதவீதம் கொள்முதல்
செய்து விற்பனையை அதிகரித்து, அந்தச் சங்கங்களுக்கு உதவி
வருகிறது. இன்றையதினம் 50 சதவீதம் கொள்முதல் செய்வதை
வரும் காலத்தில் 70 சதவீதம், 80 சதவீதமாக உயர்த்த வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சங்கத்திற்குப் பணமாக திருப்பிக் கொடுக்கும்போது இருக்கிற
சில காலதாமதத்தை குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். கோவாப்டெக்ஸ் நிறுவனம் கிட்டத்தட்ட 100 கோடி
ரூபாய்க்கு விற்பனையை உயர்த்தியிருக்கிறது. அதனுடைய
இந்த முயற்சியை நம்மால் பாராட்டாமல் இருக்க முடியாது.

இங்கே 1972-73 ஆம் ஆண்டு கோவாப்டெக்ஸ் நிறுவனம்
கொள்முதல் செய்ய முடியவில்லை. ஏனென்றால் 1972-73 ஆம்
ஆண்டு காலகட்டத்தில் இந்த கோவாப்டெக்ஸ் நிறுவனம் அழிந்து
விடக்கூடிய நிலைமை இருந்தது. அப்போது கூட்டுறவுச் சங்கம்
விற்பனை செய்ய முடியாமல் இருந்தது. கோவாப்டெக்ஸ்
நிறுவனம் கொள்முதல் செய்யாமல், கூட்டுறவுச் சங்கங்கள்கூட
நலிவு அடைந்து, அவற்றை மூடக்கூடிய நிலைமை இருந்தது.
அதற்குப் பின்னால்தான் நிலைமைகள் மாற்றப்பட்டது. அதே
போல ஒரு நெருக்கடி சென்ற ஆண்டு இந்த பட்டு கூட்டுறவுச்
சங்கங்களுக்கு வந்தது. அந்த பட்டு நூல் கிடைக்காத நிலை
தமிழகம் பூராவும் ஏற்பட்டு, பெங்களூரிலிருந்து தான் வாங்க
வேண்டிய நிலை ஏற்பட்டது. அதை இப்போது அடியோடு
மாற்றி அமைத்து தமிழகத்தில் இப்போது செரிகல்ச்சர் முறையை
முன்னேற்றி அந்த துறையிலே தமிழகத்திற்கு தேவையான
பட்டு தமிழகத்திலேயே கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்
கிறது. அதேபோல மிகவும் நெருக்கடியான நேரங்களிலே எல்லாம்
தமிழகத்திற்காக பல முயற்சிகளை எடுத்து டெல்லிக்குச் சென்று
அதற்காக தூதுக் குழுவை அமைத்து, பிரதமர் அவர்களையும்
மற்ற அமைச்சர்களையும் சந்தித்து அந்த பட்டு நூல்களை
வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்காக, வேண்டிய
வழியைச் செய்த அரசை இந்த நேரத்திலே நான் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும்
திட்டத்திற்காக கிட்டதட்ட 12 ஆயிரம் கொடுக்கிறார்கள். அந்த
அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே
மலிவான விலையிலே ஜனதாரக துணிகளைப் பொறுத்தவரையில்,

வேட்டிகள் புடவைகள், துண்டுகள் லுங்கிகள் போன்றவைகள் பெரும் அளவில் உற்பத்தியாகி வருகின்றன. ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற இந்த ரக துணிகளுக்காக 20 ஆயிரம் தறிகள் பயன்படுத்தபபட்டு பெரிய அளவில் அது சாதனையாக இயங்கி வருகிறது.

மக்கள் விரும்பும் புதிய ரகங்களை ஜனதா துணி பிரிவு திட்டத்தில் கொண்டு வர, இந்திய அரசுக்கு ஒரு செயற்குறிப்பு அனுமதி கேட்டு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்திய அரசின் ஒப்புதல் இன்னமும் கிடைக்கவில்லை எனவும் தெரிகிறது. மத்திய அரசு பல தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுக்க வில்லை என்றாலும், அரிசி கொடுக்கவில்லை என்றாலும், மாற்றாந்தாய் மனப்பான்மையை இந்த ஜனதா துணிகளுக்குக் கூட பார்க்கிறதே என்றுதான் வேதனையாக இருக்கிறது.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்று சொல்வார்கள். அதேபோல சிங்கப்பூரிலே கிளை நிலையம் அமைத்து நம்முடைய கைத்தறியின் பெருமையை பரப்புகின்ற அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் தமிழர்கள் அதிகமாக வாழக் கூடிய இடங்களிலே கோவாப்டெக்ஸ் நிறுவனங்களின் கிளைகளை வைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே விசைத் தறியைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். விசைத்தறி அதிகமாக வளர வளர நெசவாளர்களுடைய தரம் குறைந்துக் கொண்டே போகும் என்று சொன்னார்கள். அதை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று சொன்னால், மத்திய அரசு தன்னுடைய கையிலே வைத்துக் கொண்டிருக்கிற, விசைத்தறிகளுக்கு அனுமதி கொடுக்கும் பணியில் காலதாமதம் செய்யவேண்டும். இன்னும் சொல்லப்போனால், மாநில அரசும், மைய அரசும் அந்த விசைத் தறிகளுக்கு கொடுக்கக் கூடிய கடன் தொகையைக் கூட உடனே நிறுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சிவராமன் குழுவினுடைய பரிந்துரைகளை ஏற்று அவைகளை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். அதிலே என்னென்ன நல்ல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கிறதோ அவைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அதேபோல பாதுகாப்பு திட்டம் என்று ஒன்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதற்காக அரசை பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். மிக முக்கியமான திட்டம் இது. வருங்காலத்தில் நாம் இறந்தால் நம்முடைய குடும்பம் எப்படி வாழும் என்று ஏங்கும் ஏழை நெசவாளிக்கு இருந்த குறையை போக்குகின்ற திட்டம் அது. அதில் அவன் இறந்தால் 3000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதை 6 ஆயிரம் அல்லது 8 ஆயிரமாக மாற்றவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து நெசவாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலியை நிர்ணயம் செய்து அதனை அமுல் படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல எனக்கு முன்னாலே பேசிய ஒவ்வொரு உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னார்கள். நெசவாளர்களுக்கு தான் அதிகமாக காசநோய் வருகிறது என்று. காற்றோட்டமே இல்லாத அறைகளிலே ஒரே இடத்திலே உட்கார்ந்து வேலை செய்வதால், அவர்களுக்கு யானைக்கால், டி.பி. போன்ற வியாதிகள் அதிகமாக வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் வெங்கட சுப்பிரமணி அவர்களும், வெள்ளைச்சாமி அவர்களும் தங்களுடைய கருத்தை வைத்திருக் கிறார்கள். ஒவ்வொரு இடத்திலும் டி.பி. சானடோரியம் கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். டி.பி. சானடோரியம் கட்ட வேண்டும் என்று சொன்னால், அது நடைமுறைக்கு இயலாத காரியம். எனவே நடமாடும் மருந்தகங்களையாவது அந்த நெசவாளர்கள் வாழும் பகுதிகளில் அனுப்பவேண்டும். குறிப்பாக காஞ்சிபுரம், கும்பகோணம், சின்னாளப்பட்டி, ஆரணி போன்ற இடங்களில் நடமாடும் மருந்தகங்களை அனுப்பி அவர்களுக்கு தேவையான மருத்துவ வசதிகளைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதேபோல ஆரணி பட்டு கூட்டுறவுச் சங்கத்திலே பல ஆண்டுக்கு முன்னாலே வீடுகள் கட்டிக் கொடுத்தார்கள், அதற்கான பணத்தை நெசவாளர்களிடமிருந்து கடனாக திருப்பி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது வட்டி போட்டு, வட்டி குட்டி போட்டு போட்டு, இன்றையதினம் அசலை விட அதிகமாகியிருக்கிறது. ஆகவே, அந்த அசலை அவர்கள் கட்டியிருக் கிறார்கள் என்றால், அந்த வட்டித் தொகையையாவது ரத்து செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல விற்பனைக்காக அரசு ரிபேட் என்று 20 சதவீதம் அல்லது 30 சதவீதம் கொடுக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது.)

(முற்பகல் 1–10)

திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறியும் நெசவு தொழிலும் மானியக் கோரிக்கையின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே என்னுடைய சிலபல கருத்துக்களை எடுத்து வைக்க நான் ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னாலே பேசியவர்கள் எல்லாம் இந்த நெசவுத் தொழில் எந்த அளவுக்கு சிறப்பான தொழில் என்பதைப் பற்றிப் பேசினார்கள். குறிப்பாக ஆளும் கட்சி நண்பர்கள் கூட இந்த நெய்யும் தொழிலுக்கு நிகர் எதுவும் இல்லை என்ற அளவுக்கு குறிப்பிட்டார்கள். ஆனால் இன்றையதினம் அந்தத் தொழில் ஆண்டுதோறும் நசிந்து வருகின்றது. அரசாங்கம் கொடுத்திருக் கின்ற கணக்கைப் பார்க்கின்றபோது மகிழ்ச்சி அடையத்தக்க

இல்லை. தேர்தல் வேண்டும் என்று அங்கே உள்ள நிர்வாகத்தில் உள்ளவர்கள் 400, 500 பேர்கள் கேட்கிறார்கள். தீர்மானம் கூட போடுகிற அளவுக்கு இருக்கிறது. சில நிறுவனங்களில் ஆளும் கட்சிக்காரர்களாகப் பார்த்து அங்கே போடுகிறார்கள். அதனால் அங்கே தவறுகள் நடக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பொதுவாக இநதத் துறையில் தமிழ் நாட்டில் இருக்கின்ற சங்கங்களில் தேர்தல் நடத்தி அங்கே இருக்கின்ற நிர்வாகிகளை வைத்து தேர்தல் நடத்தி நிர்வாகத்தை நடத்தினால் பெரும் அளவுக்கு இந்த துறை முன்னுக்கு வரும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன், இராமநாதபுரம் மாவட்டத்தில் சத்திரப்பட்டி என்ற இடத்தில் கட்டபொம்மன் கூட்டுறவுச் சங்கம் முன்பு சிறப்பாக நடந்து வந்தது. அது சிறப்பாக நடத்தப்பட்டதற்காக பல சிறப்பு பரிசு பெற்றது அந்த சங்கம். அது நம்முடைா கம்யூனிஸ்டு கட்சி தோழர்களால் நடத்தப்பட்டு வந்தது. ஆனால் அதற்கு பிறகு தேர்தல் நடத்தப்படவில்லை அந்த சங்கத்தில் இருக்கின்ற பொதுக்குழு உறுப்பினர்கள் கூடி ஒரு தீர்மானத்தை போட்டு தேர்தல் நடத்தவேண்டும் நாங்களே நிர்வாகிகளை தேர்ந்தெடுக்கவேண்டும் என்று அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அதற்கு அதிகாரிகள் சம்மதிக்கவில்லை. அதற்காக அவர்கள் அத்தனை பேரும் சத்திரப்பட்டியிலிருந்து மதுரைக்கு 100 மைல் தூரத்திற்கு லாரியில் சென்று அங்கேயுள்ள அஸிஸ்டெண்டு டைரக்டர் ஆப் ஹாண்டுலும்ஸ் அந்த அதிகாரியை சந்தித்து சொல்கிறார்கள். அவர் அதை மறுக்கிறார். உடனே கேரோ செய்கிறார்கள். கேரோ செய்ததற்கு பிறகு உடனடியாக தேர்தல் நடத்துகிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் திரும்பி வந்ததற்கு பிறகு மீண்டும் நியமனம் செய்கிறார்கள். அதில் ஒரு திருத்தம் என்னவென்றால் அந்த 7 நிர்வாகிகளை நியமிக்கப்படுவதில் 4 பேர் கம்யூனிஸ்டு கட்சியை சேர்ந்த தோழர் களாகவும் 3 பேர் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வை சேர்ந்த தோழர்களை மறுபடியும் நிர்வாகிகளாக பார்க்கக்கூடிய நிலைமை அங்கே ஏற்படுகிறது. அதைப்போல் அருப்புக்கோட்டை ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய கூட்டுறவு சங்கங்களில் நிர்வாகிகள் திணிக்கப்படுகிறார்கள் அதனால் இன்றைக்கு பெரும்பாலும் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அங்கே இருக்கிறார்கள். அங்கே உள்ள நிர்வாகிகளுக்கு ஒன்றும் தெரியவில்லை. காரணம் அடிமைகளாக அவர்கள் இருக் கிறார்கள். காரணம் அவர்கள் கடன் பாக்கியாக இருக் கிறார்கள். அதனால் நூல் கொடுக்கமாட்டேன், நூலை கொடுக்க வில்லை என்றால் தொழில், நடக்காது பணம் வராது, சாப்பிட முடியாது என்ற அளவுக்கு பயந்து அடிமைகளாக இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அரசியல் காரணமாக இழுக்கப்படுகிறார்கள். நான் கூட திருச்செந்தூர் தேர்தலில் பார்த்தேன். அந்தப் பகுதியிலிருந்து பல்வேறு பஸ்களில் பலர் வந்தார்கள். நான் அவர்களை அழைத்துக்கேட்டேன் யார் என்று, நாங்கள் எல்லாம்



அந்த பகுதியில் இருக்கின்ற நெசவுத் தொழிலாளர்கள் என்று சொன்னார்கள். அரசியலிலே ஒன்றும் தெரியாதவர்களை அந்த தேர்தலில் ஈடுபடுத்துகிறார்கள். எப்படி வேண்டுமோ அப்படி இழுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் பயப்படுகிறார்கள். கொத்தடிமைகளாக இருக்கிறார்கள் என்பதற்காக நான் சொல்கிறேன். அப்படிப்பட்ட நெசவுத் தொழிலாளர்கள் பயந்த முறையில், கடனை திருப்பி கேட்பேன், நெய்வதற்கு நூல் கொடுக்கமாட்டேன் உங்களுக்கு பிழைப்பு இருக்காது என்று சொல்கின்ற அளவுக்கு அவர்கள் பயந்த முறையில் இருக் கிறார்கள்.

ஜனதா ரக துணிகள் மத்திய அரசு மானியத்தில் அது நடக்கிறது அதை எப்படி விற்கவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஏழை எளிய மக்களுக்கு விற்கப்படவேண்டும். மொத்த வியாபாரமாக விற்காமல் சில்லரையாக ஏழை எளிய மக்களுக்கு கொடுக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நடப்பது என்ன என்பதை இங்கே எங்களுக்கு வந்த தகவலை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கே சொஸைட்டி மூலம் தயாரிக்கப்பட்டு கோ-ஆப்டெக்ஸ்க்கு செல்கிறது. மீண்டும் அவை பலயிடங்களில் திரும்பவும் சொஸைட்டிகளுக்கே செல்கிறது. அந்த திருப்பிப் பெற்ற ஜனதா துணிகளை மறுபடியும் அந்த சொஸைட்டி மூலமாக தயாரிக்கப்பட்டதாக கணக்கில் இட வேண்டும் என்பதற்காக நெசவாளர்களுக்கு நூல் கொடுத்ததாக கணக்கு எழுதியிருக்கிறார்கள். நூல் கொடுத்து நெய்ததாக, நெய்வதற்கு பணம் கொடுத்ததாக கணக்கு சொல்கிறார்கள். பலயிடங்களில் இப்படி திரும்பத் திரும்ப தயாரிக்கப்பட்டதாக, ஜனதா ரக துணிகளை இன்றையதினம் திரும்ப அவர்கள் தயாரிக்கப்பட்டதாக கணக்கு எழுதும் நிலைமை இருக்கிறது. எவ்வளவு புனிதமான ஏழை, எளிய மக்களுக்காக குறைந்த விலையிலே தயாரிக்கப்பட் கொடுக்கவேண்டும், வினியோகிக்க வேண்டும். வேட்டி, லுங்கி, புடவை போன்ற துணிகள். ஆனால் அப்படிச் செய்யப்படவில்லை என்ற ஒரு நிலை இருக் கிறது. அந்த அளவுக்கு கூட்டு முறையில் ஊழல் இருக்கிறது. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் திட்டம்போட்டுத் திருடற கூட்டம் திருடிக்கொண்டே இருக்கிறது என்று சொன்னார்கள், இவர்களுக்கு என்றே எழுதிப் பாடி வைத்தார்கள் போல் தெரிகிறது.

(பிற்பகல் 1–20)

குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்படுகிற ஊழலைத் தடுக்கவேண்டும். தடுத்தால் பெருமளவுக்கு பலனை எதிர் பார்க்கலாம் என்று மீண்டும் ஒரு முறை நான் இந்த அவைக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில சொசைட்டிகளிலே அவசரமாக நூல் தேவை என்றால் கையிருப்பில் இல்லை கோ-ஆப்டெக்ஸிடமிருந்து பெறுவதற்கு இல்லை என்பதற்காக நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட் அதிகாரி களிடத்திலே வாங்கி வெளியே குறைவான விலைக்கு வாங்கி

அளவுக்கு இருந்தாலும் உள்ளபடியே நாட்டிலே இந்தத் தொழில்
எந்த அளவுக்கு நாளுக்கு நாள் நசிந்து வருகின்றது என்பதை
யாரும் மறுக்கவில்லை. அதனாலேதான் இந்தத் தொழிலிலே
ஈடுபட்டிருப்பவர்கள் கூட வேறு தொழில்களுக்குத் தன்னை
ஆட்படுத்திக் கொள்கிற நிலைமை இருக்கின்றது. இந்தியத்
துணைக்கண்டத்திலே இருக்கின்ற 30 இலட்சம் தறிகளில் 5.6
இலட்சம் தறிகள் நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கின்றன
என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டகடமைப்பட்டு இருக்கிறேன்
அதைப்போல கைத்தறித் துணியினை ஏற்றுமதி செய்கின்ற
மொத்த தொகை கூட இன்றைக்கு இந்திய அளவில் ரூபாய்
330 கோடி என்று இருக்கும்போது அதிலே 78.32 கோடி
ரூபாய்க்கு தமிழகத்திலே இருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது
என்ற ஒரு சிறப்பான புள்ளிவிவரத்தை கொடுத்திருக்கிறார்கள்.
ஆனால் சென்ற ஆண்டு நான் குறிப்பிட்டதைப்போன்று இந்த
ஆண்டும் இந்தத் துறைக்கு 7.6 கோடி ரூபாய்தான் ஒதுக்கி
இருப்பது உள்ளபடியே இந்தத் தொழிலை அவமதிக்கின்ற
வகையில் இருக்கின்றது என்ற குற்றச்சாட்டினைச் சுமத்த
விரும்புகிறேன். எனவே இந்தத் தொழில் பற்றியோ இந்தத்
தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் பற்றியோ
இந்த அரசுக்குக் கவலை இல்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். மத்திய அரசாலே செய்யப்பட்ட ஆய்வின்படி
தமிழ்நாட்டிலே நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள்
ஆண்டிலே 300 நாட்கள் இந்தத் தொழிலைச் செய்கிறார்கள்
என்று ஒரு குறிப்பினை இங்கே தந்திருக்கிறார்கள். ஆனால்
அது உண்மையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.
இன்றையதினம் நாட்டிலே பல்வேறிடங்களில் வேலை இல்லை
என்று போராட்டங்கள் நடக்கின்றன. நூல் கிடைக்கவில்லை
என்று போராட்டம் நடக்கின்றது. ஆனால் பல நூற்பாலை
களைத் துவங்கி இருக்கிறோம் என்று சொன்னார்கள். இரண்
டாண்டுகளுக்கு முன்பு கூட ஏறக்குறைய 10-க்கு மேற்பட்ட
நூற்பாலைகள் துவங்க அனுமதி வழங்க இருக்கிறோம் என்று
இங்கே சொல்லப்பட்டது. இன்றையதினம் கூட பல்வேறு பகுதி
களில் ஏறக்குறைய 30 கோடி ரூபாய் செலவிலே நூற்பாலைகள்
துவக்கப்பட இருக்கின்றது என்று இங்கே சொன்னார்கள்,
ஆனால் துவக்கப்பட்ட நூற்பாலைகள் இன்றைய தினம் உற்பத்தி
செய்கின்றதா அப்படி உற்பத்தி செய்யப்பட்ட நூலைப்
பொறுத்தவரை நம்முடைய பங்கை நாம் பெற்றோமா என்பதை
எண்ணிப்பார்க்கவேண்டும்.

அடுத்து சென்ற ஆண்டு ஒன்றைச் சொன்னார்கள். எட்டைய
புரத்திலும், தூத்துக்குடியிலும், தர்மபுரி போன்ற இடங்களிலும்
கூட்டுறவுத் துறையிலே நூற்பாலைத் துவக்கப்படும் என்று
சொன்னார்கள். 30 கோடி ரூபாய் செலவு செய்யப்படும் என்று
சொன்னார்கள். ஆனால் இந்த ஆண்டு அறிக்கையிலேயும் அதே



தான் திருப்பிச் சொல்லப்படக்கூடிய நிலைமை இருக்கின்றது'
1984 ஆம் ஆண்டிலே அந்த வேலை துவங்கப்படும் என்று
இப்போது சொல்லி இருக்கிறார்கள். எனவே அடுத்த ஆண்டிலும்
இதே வாசகத்தைத்தான் திரும்பவும் தருவார்கள் என்று நான்
கருதுகிறேன். எனவே ஆண்டுதோறும் ஒரே வாசகங்கள்தான்
கொள்கைக் குறிப்பிலே கொடுக்கப்படுகின்றன என்பதை
தெரிவித்துக்கொள்கிறேன்,

அடுத்து இன்றைக்கு பல்வேறு நிலைமைகள் இருக்கின்றன.
நூல் கிடைக்கவில்லை உற்பத்தி செய்யப்பட்ட கோடிக்கணக்கான
மதிப்புள்ள துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. இப்படிப்பட்ட
நிலைமையில் நாளுக்கு நாள் நூலின் விலை ஏறிக்கொண்டே
இருக்கின்றது. ஆகவே துணி உற்பத்தி நடைபெறாத காலத்திலே
கூட நூற்பாலை முதலாளிகள் நூலின் விலையினை உயர்த்து
கிறார்கள் என்பதுதான் இதன் பொருள். அதைத் தட்டி
கேட்பதற்கு நிச்சயமாக இந்த அரசால் முடியாது என்று கருது
கிறேன். எனவே இப்படிப்பட்ட நிலைமைகளின் காரணத்தால்
இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள்
பெருமளவு பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று
ஆளும் கட்சியினைச் சேர்ந்த திரு. வெங்கடசுப்பிரமணியம்
அவர்களும் சொன்னார்கள். ஆகவே அப்படிச் சொல்லத்தக்க
வகையிலே இந்தத் துறை கவனிக்கப்படாமல் இருக்கின்றது,
அதிகமாகக் கவனிக்கப்படாமல் இருக்கின்றது என்பதை சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். கூட்டுறவுச் சங்கத்தினுடைய நிர்வாகம்
எந்த அளவுக்கு மோசமான நிலையில் இருக்கிறது ஊழல்
மலிந்து காணப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்தில்
சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் இருக்
கின்ற கூட்டுறவுச் சங்கங்கள், சொஸைட்டிகள் நிர்வாகம் செய்யக்
கூடிய நிர்வாகிகள், இயக்குநர்கள் அத்தனை பேரும் மேலே
இருப்பவர்களால் திணிக்கப்படுகிறார்கள். அந்த சங்கத்தில்
அங்கம் வகிக்கிறவர்களுடைய எண்ணத்திற்கு மாறாக அங்கே
மேலிருந்து திணிக்கப்படுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை தான்
சொல்லவருகிறேன், தமிழ்நாட்டில் இருக்கின்ற 90 சதவீத
சங்கங்களில் ஆளும் கட்சிக்காரர்கள் நிர்வாக பொறுப்பை ஏற்று
இருக்கிற காரணத்தால் தான் ஊழல் மலிந்து இருக்கிறது
என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏன் அங்கே
தேர்தலை நடத்தவில்லை, அங்கே என்ன பிரச்சனை? இங்கே
ஊராட்சி மன்றத்தின் தேர்தலுக்கு சொல்லப்படுகின்ற சாக்கு
போக்கு அங்கே சொல்ல முடியுமா? இந்த ஊராட்சி மன்றத்
தேர்தலில் புதிதாக வாக்காளர் பட்டியல் தயாரிக்கவேண்டும்,
18 வயது உள்ளவர்களுக்கு வாக்குரிமை கொடுக்கவேண்டும்,
தாழ்த்தப்பட்டவர்களுக்கு. பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்க
வேண்டும் என்பதற்காக ஊராட்சி மன்றத் தேர்தல் தள்ளி
வைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதிலே அப்படிப்பட்ட நிலைமை

உறுப்பினர்களுக்குக் கொடுக்கிறபோது அதிக விலைக்கு கணக்குப் போடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. அதே சொசைட்டிகளிலே பல்வேறு தவறுகள் நடக்கின்றன. சாயப் பவுடர் வாங்குவதிலே கொள்ளையடிக்கிறார்கள். எரிபொருள் வாங்குகிறபோது 3 டன் வாங்கினால் 5 டன் என்று கணக்கு எழுது கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகளையெல்லாம் தவிர்க்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேண்டேஜ் கிளாத் எல்லாம் மருத்துவமனைகளுக்காகவும் இராணுவத்திற்காகவும் பெருமளவுக்கு தயாரிக்கப்படுவது இந்தியாவிலேயே தமிழகத்திலேதான் அதிகமாக அதுவும் முழுக்க முழுக்க உற்பத்தி செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சத்திரப்பட்டி, ராஜபாளையம் போன்ற பகுதி களில் ஏராளமாக உற்பத்தி செய்கிறார்கள். பேண்டேஜ் கிளாத் நம்முடைய அரசு போட்டிருக்கிற உத்திரவின்படி. கைத்தறியிலே தான் தயாரிக்கப்ப வேண்டு , விசைத்தறியிலே தயாரிக்கப்படக் கூடாது என்பது. இதை எதிர்த்து அங்கே இருக்கிற விசைத் தறிகளின் முதலாளிகள் நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள், ஹைகோர்டிலே அவர்களுக்குப் பாதகமாக தீர்ப்பளிக்கப்படுகிறது. உச்சநீதிமன்றத்திலேயும் அவர்களுக்குப் பாதகமாக தீர்ப்பளிக்கப் படுகிறது. பேண்டேஜ் கிளாத் கைத்தறியிலேதான் தயாரிக்கப் படவேண்டும், விசைத்தறியிலே செய்யக்கூடாது என்று உத்திரவு இருந்தும்கூட அது சரியாக அமுல்படுத்தப்படாத காரணத்தாலே இன்றுவரை விசைத்தறிகளில் தான் தயாரிக்கப்படுகிற நிலை இருக்கிறது. திருவள்ளுவர் ஹாண்ட்லூம்ஸ் என்று பெயரை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஹாண்ட்லூம் என்று சொன்னாலும் அங்கே கைத்தறி இல்லை, விசைத்தறிகள்தான் இருக்கின்றன. இதைப்போல பல தனியார் நிறுவனங்கள் இருக் கின்றன. அதுவும் நெசவுத் தொழிலிலே ஈடுபடாத குடும்பங்கள் நெசவுத் தொழிலைச் சாராத குடும்பங்கள் வியாபாரமாக நடத்துகிற நிலை இருக்கிறது. திருவள்ளுவர் ஹாண்ட்லூம்ஸ் மாடசாமித் தேவர் என்ற முதலாளிக்குச் சொந்தம், ஸ்ரீராம் புராடக்ட்ஸ் என்ற ஒரு நிறுவனம் மிகப்பெரிய அளவுக்கு வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது, அது பி. கே. ராமசாமி ராஜாவுக்குச் சொந்தம், காமராஜா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம் பி. ஆர். சுப்பிரமணிய ராஜாவுக்கு சொந்தம், இப்படி பெரும் பணக்காரர்களுக்குச் சொந்தமான முறையிலே 5, 6 குடும்பங்கள் கையிலே கோடிக்கணக்கான ரூபாய் சேர்கிறது, அவர்கள் இந்தியாவிலேயே அதிகமாக ஏற்றுமதி செய்கிறார்கள், மற்ற மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, பேண்டேஜ் கிளாத்தை கைத்தறி மூலம் உற்பத்தி செய்யவேண்டுமென்று உத்திரவைப் போட்டால் அந்தப் பகுதியிலே உள்ள லட்சக்கணக்கான ஏழைத் தொழிலாளர் களுக்கு ஆண்டு முழுவதும் வேலைகிடைக்கும் என்ற காரணத் தினாலே அந்த உத்திரவை அமலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



சைதாப்பேட்டை அதிக அளவு கைத்தறி நெசவாளர்கள் வசிக்கிற பகுதி, 10 ஆயிரம் பேர்கள் அந்த தொழிலிலே ஈடுபட் டிருக்கிறார்கள். பெரும்பாலும் லுங்கி உற்பத்திதான் நடக்கிறது. உற்பத்தி செய்யப்பட்ட பொருள் தேங்கிக்கிடக்கிறது இன்றைக்கு ஏன் என்று காரணம் கேட்டால் எனக்குக்கூட கடிதம் எழுதி யிருக்கிறார்கள். சைதாபேட்டை கைத்தறி துணி உற்பத்தியாள சங்கம் ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறது. நாளுக்கு நாள் நூல் விலை ஏறுகிறது, மாதத்திற்கு மாதம் நூல் விலை ஏறுகிறது, என்ற குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். சென்ற அக்டோபர் மாதம் 60 ஆம் நம்பர் நூலுக்கு ஒரு கட்டுக்கு 163 ரூபாய் இருந்தது. டிசம்பர் மாதம் 196 ரூபாய்க்கு உயர்ந்திருக்கிறது, இந்தமாதம் அதைவிட அதிகமாயிருக்கிறது என்று சொல்கிறார்கள் நாற்பதாம் நம்பர் நூல் ஒரு கட்டிற்கு அக்டோபர் மாதம் 130 ரூபாயாக இருந்தது டிசம்பர் மாதம் 141 ரூபாய்க்கு உயர்ந்திருக் கிறது, இந்த மாதம் அதைவிட அதிகமாகி இருப்பதாகச் சொல்கிறார்கள். இப்படி நூலின் விலையை கட்டுப்படுத்த முடியாமல் இருக்கிறது. ஆண்டிற்காண்டு அதிக நூற்பாலைகளைத் துவங்குகிறோம் என்று சொன்னாலும் நூலின் விலையை கட்டுப் படுத்த முடியவில்லை. என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் எல்லா உறுப்பினர்களும் சொன்னார்கள். இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் காசநோயால் பாதிக்கப்படுகிறார்கள். என்னுடைய தொகுதியில் யாரும் பெண் கொடுத்து பெண் வாங்குவதில்லை. யானைக்காலைப் பார்த்துதான் சைதாப்பேட்டையில் பெண் கொடுக்கிறார்கள். எடுக்கிறார்கள், நான்கூட சைதாப்பேட்டையில் தான் பெண் எடுத்தேன். பார்த்து தான் திருமணம் செய்தேன். இதுவரையில் அப்படிப்பட்ட நோய் என்னுடைய துணைவியாருக்கு இல்லை. ஆகவே அப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலை இருக்கிறது. காசநோய்க்கு பாதிக்கப்பட்டவர்கள் நூற்றுக்கு அறுபது பேர்கள் இருக்கிறார்கள். இதை தீர்க்கவேண்டுமென்று நான் முன்னாலே கேட்டபோது நடமாடும் மருத்துவமனையை அனுப்புகிறோம் என்று சொன்னார்கள். இதுவரையில் சைதாப்பேட்டையில் ஒரு நாள் கூட அந்த மருத்துவமனை நடமாடவே இல்லை. ஆளும் கட்சி உறுப்பினர்களும், மற்ற உறுப்பினர்களும் எடுத்துச் சொன்னதைப் போல காசநோய் மருத்துவமனை இல்லை யென்றாலும்கூட ஒரு பொது மருத்துவமனையை நிரந்தரமாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்;

அடுத்து வீடு கட்டுகிற திட்டம் இருக்கிறது. சைதாபேட்டைப் பகுதியில் ஏறக்குறைய பத்தாயிரம் தொழிலாளர்கள் இருக் கிறார்கள். சைதாப்பேட்டைத் தொகுதி வரலாற்றுச் சிறப்புமிக்க தொகுதி; பெரியவர்கள் எல்லாம் அங்கு இருந்தார்கள்; உங்களுக்குத் தெரியும். தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்படுகின்றன. ஆனால் சைதாப்பேட்டைப் பகுதியில் அந்தத் திட்டம் துவங்கப்படவே

இன்றைக்குக் கைத்தறி தொழிலிலே இருக்கிறவர்கள்
பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் தாங்கள் வாழ்கின்ற இடத்தை
விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.
வடக்கத்திய மாநிலங்களுக்குக் கூட அவர்கள் செல்ல வேண்டிய
நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்கிற ஒரு சூழ்நிலையிலே
தான் இந்தப் பிரச்னையை அரசின் சார்பிலேயும் பல்வேறு
இயக்கங்களின் சார்பிலேயும் தீர்ப்பதற்கான முயற்சிகளை நாம்
மேற்கொண்டிருக்கிறோம். ஆனால், இன்றைக்கு இருக்கிற
நிலைமைகள் கைத்தறி நெசவாளர்களைக் காப்பாற்ற வேண்டு
மென்ற நிலைமைக்கு அடுத்த கட்டமாக, இந்தக் கைத்தறி
தொழில் இருக்க வேண்டும், கைத்தறி தொழிலிலே ஈடுபட்
டிருக்கிற நெசவாளர்கள் என்றால் அனுதாபத்தின் காரணமாக,
அவர்களுக்குப் பல்வேறு உதவிகளைச் செய்ய வேண்டுமென்ற
நிலைமைக்கு மாறாக மற்ற தொழில்களைப் போல இந்தத்
தொழிலும் சிறப்பாக நடைபெற வேண்டுமென்ற நோக்கோடு
இன்றைக்கு பல முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.
ஆகவே, அனுதாபத்தோடு அவர்களைக் காப்பாற்ற வேண்டு
மென்ற நிலைமையிலே ஆரம்பித்த முயற்சிகளை நாம் இன்றைய
தினம் அந்தத் தொழில் நீடித்து இருக்க வேண்டும், நிரந்தரமாக
இருக்க வேண்டும், அந்தத் தொழில் மற்ற தொழில்களைப்போல
நடைபெற வேண்டும் மற்றத்தொழில்களைப் போல போட்டிகளுக்
கிடையே அந்தத் தொழில் வெற்றிகரமாக நடைபெற வேண்டு
மென்ற நோக்கோடு நாம் முயற்சிகளை மேற்கொண்டிருக்
கிறோம்.

தமிழ்நாட்டில் மொத்தம் 5.56 இலட்சம் கைத்தறிகள்
உள்ளன. 6-வது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் 1984-85—ல்
சுமார் 67 சதவீதம் கைத்தறிகள் கூட்டுறவு இயக்கத்தின்கீழ்
கொண்டுவரும் திட்டம் ஏனைய திட்டங்களுக்கு முன்னோடி
யாகும். இதுவரை 3.28 இலட்சம் கைத்தறிகள், ஏறக்குறைய
59 சதவீதம், கூட்டுறவு இயக்கத்தின்கீழ் கொண்டு வரப்பட்
டுள்ளன. இவை 1,440 பிரதம சங்கங்களில் வேலை செய்
கின்றன. நடப்பு ஆண்டில் மட்டும் சுமார் 26,000 நெசவாளர்கள்
தனியார் துறையிலுள்ள மாஸ்டர் வீவரஸ் பிடியிலிருந்து விடு
விக்கப்பட்டு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களல் சேர்க்கப்
பட்டுள்ளனர். 1983-84 ஆம் ஆண்டில் இதுபோன்று சுமார்
27,000 நெசவாளர்கள் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்டு,
அவர்களுக்காக புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தேசியமயமாக்கப்பட்ட
வங்கிகளும் இத்திட்டத்திற்கு உதவ முன் வந்திருக்கின்றன.
பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுடைய கைத்தறி துணி
உற்பத்தி ஆண்டுதோறும் உயர்ந்து கொண்டே வருகிறது.
தாங்கள் உற்பத்தி செய்து துணிகளை விற்கமுடியாத காரணத்



தினால் தொடர்ந்து தொழில் செய்ய முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நிலைமையை நாம் நினைத்துப் பார்த்து இந்த முன்னேற்றத்தை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

1978-79 ஆம் ஆண்டில் உற்பத்தி அளவு மில்லியன் மீட்டரில் சொல்கிறேன், 85.47 மில்லியன் மீட்டர்கள் ஆகும். 1979-80 ஆம் ஆண்டில் 90.06 மில்லியன் மீட்டர்கள் ஆகும் .1980-81 ஆம் ஆண்டில் 103.28 மில்லியன் மீட்டர்கள் ஆகும். 1981-82 ஆம் ஆண்டில் 120.96மில்லியன் மீட்டர்கள் ஆகும்.

நான் ரூபாய்க் கணக்கில் சொல்லவில்லை. காரணம் விலைவாசி உயர்வு அல்லது விலை உயர்வு என்கின்ற அடிப்படையிலே அது சரியான நிலைமைகளை உங்களுக்கு எடுத்துக் காட்டாது என்பதால், உற்பத்தியை மட்டும், எவ்வளவு துணி என்ற அடிப்படையிலே சொல்ல விரும்புகிறேன்.

1982-83ஆம் ஆண்டில் ஜனவரி 1983 முடிய மட்டும் 119.95 மில்லியன் மீட்டர்கள் உற்பத்தியாகி இருக்கிறது. 1983-84ஆம் ஆண்டிற்கு உற்பத்திக் குறியீடு 135 மில்லியன் மீட்டர்களாக வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, உற்பத்தி அதிகரிக்கிறது என்ற இந்த நிலைமையை நான் சொல்லும்பொழுது, வேலைவாய்ப்புகளை நெசவாளர்களுக்குத் தருவதற்கான முயற்சியிலே இந்தக் கைத்தறித் துறை வெற்றி பெற்றுக் கொண்டுவந்திருக்கிறது என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன், வறட்சி என்ற நிலைமையிலேயும் கூட இன்றைக்கு மிக அதிசமான அளவிற்குக் குறியீடை வைத்து அதிகத் துணியை விற்க இந்தத் துறை முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இப்பொழுது விற்றுக் கொண்டிருக்கின்ற நிலைமைகளை நாம் பார்க்கின்றபொழுதுகூட மில் துணியை விற்கின்ற வேறு பல நிறுவனங்கள் அல்லது கடைகளில் விற்பனையோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபொழுது, சென்ற ஆண்டு விற்றதை விடக் குறைவாகத்தான் இந்த ஆண்டு மில் ஜவுளிகள் விற்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நமக்குக் கிடைத்திருக்கின்ற புள்ளி விவரங்களை வைத்துப் பார்க்கின்றபொழுது, கைத்தறித் துணியைப் பொறுத்தவரையில் நம்முடைய கோவாப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமாக சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகமாக விற்றிருக்கிறோம் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறிகளை நவீனப்படுத்துவது என்பதைப்பற்றிய யோசனைகளைப் பல்வேறு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதை நாம் வரவேற்கிறோம். அதற்கான முயற்சிகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது.

[திரு. து. புருஷோத்தமன்] 

இல்லை. ஆண்டுதோறும் அமைச்சர் அவர்களிடத்தில் இதுகுறித்து
எடுத்துச் சொல்கிறேன். இந்த ஆண்டாவது வேண்டிய பணம்
ஒதுக்கி ஏழை நெசவாளர்களுக்கு வீடு கட்டுகிறத் திட்டத்தை
அமல் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெசவா
ளர்கள் இறந்துவிட்டால் 10 ஆயிரம் ரூபாய் அவரது குடும்பத்
திற்குக் கொடுக்கவேண்டுமென்று ஆளும் கட்சி உறுப்பினர்களும்
எடுத்துச் சொன்னார்கள். நானும் அதை வழிமொழிகிறேன்.
நெசவாளர்கள் சம்பாதிப்பதில் எதுவும் சேர்த்து வைத்துக்
கொள்ளமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே ஏழை நெசவா
ளர்கள் இறந்துவிட்டால் அவர்களது குடும்பங்களைக் காப்பாற்று
வதற்கு இந்த உதவியைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் பெருமைப்பட வேண்டிய
நிலையில் தான் இருக்கிறோம். இந்தியத் துணைக் கண்டத்தில்
330 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகச்சொன்னார்கள்
தமிழ்நாட்டில் 78.32 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்
படுகிறது. இந்த 78.32 கோடி ரூபாய்க்கு கோ-ஆப்டெக்ஸ்
மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்றால் இல்லை.
தனியார் நிறுவனங்கள் தான் ஏராளமாக ஏற்றுமதி செய்கின்றன.
அவர்களுக்கு சலுகை அதிகமாக தரப்படுகிறது. ஆனால் ஏற்றுமதி
அதிகரிக்க வேண்டுமென்று பல அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு
அனுப்புகிறோம். ஆனால் செலவு செய்தது தான் மிச்சம். உள்
நாட்டிலே கோ-ஆப்டெக்ஸ் மூலமாக விற்பனை செய்து அதன்
மூலமாக கிடைக்கிற லாபம்எல்லாம்விடஏற்றுமதி அதிகரிக்கவேண்
டுமென்று நினைத்து செலவுசெய்கிறோமே அது ஏராளம் என்பதை
தரிவித்துக் கொள்கிறேன். நஷ்டம் அதிகமாக ஏற்பட்டிருக்
கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன்.

** ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதிகாரிகள் குறித்துச்
சொல்லப்பட்டவை அனைத்தும் அவைக்குறிப்பிலே இருந்து
நீக்கப்படுகின்றன.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே,
அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுகள் சொல்லக்கூடாது என்ப
தில்லை. ஆதாரங்களோடு கூறலாம்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர்களைப் பாதுகாப்
பதற்கு அமைச்சர் இங்கு இருக்கிறார். எனக்கும் தெரியும்.
மேலெழுந்தவாரியாக கூறப்படுபவைகள் அவைக் குறிப்பில்
இருக்க வேண்டாம் என்று கருதித்தான் அவற்றை நீக்க உத்தர
விட்டேன். (அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்
படுகிறது.)



மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மானியம் சுமார் ரூ.7
கோடிதான் என்றாலும் இது இலட்சக்கணக்கான நெசவாளர்
களைப் பொறுத்ததாக இருக்கிற காரணத்தினால் இந்த
மானியம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அதிலே
மாண்புமிகு உறுப்பினர் ஆர்வம் கொண்டு தங்களுடைய கருத்
துக்களையும் யோசனைகளையும் சொல்லியிருக்கிறார்கள் என்ப
தையும் நான் வரவேற்று இந்த மானியக் கோரிக்கை விவாதத்
திற்குப் பதிலாக சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.

கைத்தறி தொழில் என்பது நீண்ட காலமாக இருந்து வரு
கின்ற ஒரு தொழில்தான் என்பதை ஏற்றுக்கொண்டாலும்
அந்தத் தொழில் எதிர்பார்த்த அளவுக்கு அல்லது இயற்கையான
முறையிலே வளர வேண்டிய அளவு வளராத காரணத்தினாலே
அந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதும் அதற்குப்
போட்டியாக மில்கள் போன்றவைகள் வந்துவிட்ட காரணத்தி
னாலே, அதிலே கைத்தறி தொழிலிலே ஈடுபட்டிருந்தவர்கள்
அப்படியே அந்தத் தொழிலுக்குப் போகக்கூடிய வாய்ப்புபெறாத
காரணத்தினால், அந்தப் போட்டியினால் இந்தத் தொழில்
வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதும் நாட்டிலே
இருக்கிற பொதுப் படையான வறுமை, ஏழ்மை போன்ற
நிலைமைகள் மக்களிடத்திலே வாங்குகின்ற சக்தியை, எதிர்
பார்த்த அளவிற்கு அளிக்காத காரணத்தினாலேயும் இந்தத்
தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் கவனத்திலே
கொண்டுதான் இந்தக் கைத்தறி தொழிலாளர்களுடைய பிரச்
னையை, நெசவாளர்களுடைய பிரச்னையைப் போக்குவதற்கு
நாம் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வர விரும்புகிறோம்.
இரண்டு அடிப்படையிலே இந்தப் பிரச்னையைத் தீர்க்க விரும்பு
கிறோம். ஒன்று மக்கள் பெருவாரியாக விரும்பி வாங்கக்கூடிய
நிலைமையை நாம் ஏற்படுத்த வேண்டுமென்பதும், அதைப்
போலவே, இந்தக் கைத்தறி துறையிலே ஈடுபட்டிருக்கிற நெச
வாளர்கள், மக்கள் விரும்பி வாங்கக்கூடிய அளவிற்கு தங்களுடைய
இரகங்களையும் உற்பத்தியையும் செய்ய வேண்டுமென்ற அடிப்
படையிலேயும் இந்தக் கைத்தொழில் பிரச்சனையைத் தீர்க்க
நாம் பல்வேறு நடவடிக்கைகளைக் கடந்த பல்லாண்டுக் கால
மாக எடுத்து வருகின்றோம். அதிலே சமீபகாலத்திலே எடுக்கப்
பட்ட முயற்சிகளைப் பற்றி உறுப்பினர்களுக்குத் தெரியும்
என்றாலும் இரண்டு நிலைமைகளை நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். நம் மாநிலத்திலே அமுலாக்கப்படும் பல்வேறு கைத்தறி
திட்டங்களின் நோக்கம், நெசவாளர்களுக்குத் தொடர்ந்து
வேலையும், அவர்களுக்கான அதிகபட்ச ஊதியமும் கிடைக்க
வகை செய்வது. அடுத்தது, மக்களுக்கு வேண்டிய ஆடைகளின்
தேவைகளைப் பூர்த்தி செய்தல். இந்த இரண்டு அடிப்படை
களிலேதான் இந்தப் பிரச்னையை நான் பார்க்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள கைத்தறிகளில் பெரும்பாலானவை குழித் தறிகளாகவே இயங்கி வருகின்றன. இம்மாதிரி குழித்தறிகளை சில உபகரணங்களின் உதவியால் நவீனப்படுத்துவதன் மூலம் நெசவாளர்களின் உற்பத்தித் திறன் அதிகரிக்கவும், அதன் மூலம் அவர்களுக்குக் கூலி உயர்வு கிடைக்கவும் ஏதுவாகும்.

சேலத்தில் இயங்கி வரும் மத்திய அரசின் கைத்தறித்தொழில் நுட்பப் பயிற்சிக் கூடம் இதற்கென ஆராய்ச்சிகளை நடத்தி நவீன கைத்தறியை உருவாக்கியுள்ளது. இந்தக் கைத்தறியின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு: 5 வீல்ஸ் அட்டாச்மென்ட் என்று 5 வீல்களைச் சேர்க்கின்ற முறைகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஃப்ளை வீல், ரப்பர் பில்லெட்ஸ், அட்டாசிட் பீம் என்று புதிய உறுப்புகளைச் சேர்ப்பதன் மூலமாக உற்பத்தியைப் பெருக்குவதற்கான சில திட்டங்களை சேலத்திலே இருக்கின்ற இந்தக் கைத்தறித் தொழில் நுட்பப் பயிற்சிக் கூடம் நமக்கு தெரிவித்ததன் பேரில் அதை இந்தக் கைத்தறித் தொழிலிலே பின்பற்றுவதன் மூலம், உற்பத்தியைப் பெருக்குவதற்காக நாம் முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறோம்.

இம்மாதிரி நவீனப்படுத்தப்பட்ட 45 தறிகள் சேலம் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தற்சமயம் பரீட் சார்த்த முறையில் வேலை செய்கின்றன. இந்த நூதன தறியில் நாளொன்றுக்கு கிடைக்கும் உற்பத்தி சுமார் 15 முதல் 20 மீட்டர் களாகும். இத்தறியில் வேலை செய்யும் நெசவாளர்களுக்கு நாளொன்றுக்கு சுமார் 30 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை கூலி கிடைக்கின்றது. சாதாரண தறியில் வேலை செய்யும் நெசவாளர் களின் தினசரி உற்பத்தி சுமார் 4.5 மீட்டர்களேயாகும். அவரது தினக்கூலி சுமார் 9 ரூபாய் முதல் 12 ரூபாய் மட்டுமே. கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருதி இம்மாதிரி நூதன தறிகளை உற்பத்தி செய்து வாங்கி, இனி அமைக்கப்படும் புது கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு குறிப்பாக தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கத் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

கைத்தறித் தொழிலை நவீனப்படுத்தும் வகையில் கீழ்க்கண்ட முக்கிய திட்டங்கள் அமுல் நடத்தப்பட்டு வருகின்றன. தறிகளை நவீனப்படுத்துதலும், புதிய நவீன தறிகள் வாங்குதலும் ஆகிய வற்றிற்கு அரசு அளித்துள்ள நிதியுதவி, 1979-80 ஆம் ஆண்டில் 15.50 இலட்சம் ரூபாயாகும்; 1980-81 ஆம் ஆண்டில் 21 இலட்சம் ரூபாய்; 1981-82 ஆம் ஆண்டில் 21 இலட்சம் ரூபாய்; 1982-83ஆம் ஆண்டில் 21 இலட்சம் ரூபாய்;





(பிற்பகல் 1-40)

அதற்கு அடுத்தபடியாக வடிவ அமைப்பு மற்றும் சேவா நிலையங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம். இதுவரை அமைக்கப் பட்ட நிலையங்கள் 5, மதுரை, சேலம், திருச்சி, கோவை, திரு நெல்வேலி. மொத்தச் செலவு 17.5 இலட்சம். இச்சேவை நிலையங்கள் கைத்தறிகளில், புதிய வடிவமைப்புகளை உருவாக்கு வதில் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. காஞ்சிபுரம், ஈரோடு சேலம், மதுரை ஆகிய இடங்களில் கூட்டுறவுக் கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் நல்லபடியாக செயல்பட்டு வருகின்றன. திட்டத்தின் மொத்தச் செலவு ரூ.375.46 இலட்சம், இதில் வேலை செய்யும் தறிகள் 17,904. ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி (மீட்டர்கள்) 83.17 இலட்சம். ஆண்டு உற்பத்தி மதிப்பு 586.04 இலட்சம்; ஆண்டு ஒன்றுக்கு விற்பனை மதிப்பு 576.09 இலட்சம். இந்தத் திட்டங்களின் ஆண்டு உற்பத்தி சுமார் 6.00 கோடி அளவிற்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. புருஷோத்தமன் அவர்கள் சொன்னது போல, ஜனதா உற்பத்தியில் குறைபாடுகள் ஏற்படாமல் இருக்கவேண்டு மென்று, இந்த வளர்ச்சித் திட்டங்களில், கைத்தறி ரிபேட், கடந்த சில ஆண்டுகளாக 30 நாட்களுக்கு 20 சதவீதம் விசேடத் தள்ளுபடி திட்டத்தை மத்திய அரசும், மாநில அரசும், சம அளவில் ஏற்றுக்கொள்வது என்ற அடிப்படையில் மத்திய அரசு அறிவித்து வந்துள்ளது. தற்சமயம் மொத்த விற்பனைக்கு 15 சதவீதமும், சில்லறை விற்பனைக்கு 20 சதவீதமும் அளிக்கப் பட்டு வருகிறது.

கடந்த சில ஆண்டுகளில் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள தள்ளுபடி மானியச் செலவினங்கள் வருமாறு:—

(ரூபாய் இலட்சத்தில்)

| | |
|---|---|
| 1978-79 | 300.06 |
| 1979-80 | 304.72 |
| 1980-81 | 483.98 |
| 1981-82 | 559.98 |
| 1982-83 | 1,321.52 |

1983-ல் 1,321.52 இலட்சம் என்று இருப்பது இந்தத் தள்ளுபடி சதவீதத்தைப் பயன்படுத்தியதால், இந்த அளவுக்கு வியாபாரம் பெருகியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இதுபோல் வேறு பல திட்டங்கள் வகுத்து, 600க்கும் மேற்பட்ட கிளைகள் மூலமாக கைத்தறித் துணிகளை விற்பனை செய்கிறது. ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் உற்பத்தி செய்யும் சிறிய பிரதம நெசவாளர் சங்கங்களிலிருந்து முழு உற்பத்தியையும் மாநில சங்கம் கொள்முதல் செய்கிறது. இதுவரை அரசு அளித்துள்ள மொத்த மூலதனம் ரூ.12.81 கோடியாகும். மலிவு விலை(ஜனதா ரகத்துணி)உற்பத்தி 1980–81-ல், 11.21 மில்லியன் மீட்டர், டிசம்பர் 1982 முடிய 22.29 மில்லியன் மீட்டராக உயர்ந்திருக்கிறது.

கொள்முதல் செய்யப்படும் கைத்தறி துணிகளுக்கு அடக்க விலையின் மீது வழங்கப்படும் இலாபத்தை நாம் அதிகரித்திருக்கிறோம். பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும், கைத்தறித் துணிகளுக்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் இதுவரை அடக்க விலைக்கு மேல் 9 சதவீதம் மட்டுமே இலாபம் கொடுத்து வந்தது. ஆனால் இந்த இலாபம் 1–3–82 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது.

சுத்தப்பட்டு கைத்தறித் துணிகள் .. 10 சதவீதம்

ஜனதா, தவிர மற்ற பருத்தி ரகத் துணிகள் .. 12 சதவீதம்

ஜனதா கைத்தறி இரகங்களுக்கு எப்பொழுதும் போல் 7% இலாபம் வழங்கப்படும். பிரதம நெசவாளர் சங்கங்களுக்குக் கொடுக்கப்படும் இலாப சதவீதத்தை உயர்த்திய போதும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் கைத்தறித் துணிகளை பெருமளவு வாங்கி அமோக ஆதரவு கொடுக்கும் போது மக்களுக்கு சலுகை அளிக்கும் விதத்தில் தனது கிளைகளின் மூலம் விற்பனையாகும் துணிகளின் விற்பனை விலையை உயர்த்துவது இல்லை என்று முடிவு செய்துள்ளது. ஆகவே, இன்றைக்குக் கிடைக்கின்ற இலாபத்தில், பெருமளவு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குட் போகிறது. அப்படிப்பட்ட சங்கங்கள் அதிகமான அளவுக்கு இலாபத்தைப் பெற்று, அதை நெசவாளர்களுக்குக் கிடைக்கக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறது.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த நூற்பாலைகளின் எண்ணிக்கை 12; உற்பத்தி அளவு 8,000 பேல்கள். புதிதாக நிறுவப்படும் கூட்டுறவு நூற்பாலைகள் 5. எட்டயாபுரம், தேனி, புதுக்கோட்டை, கமுதி, தர்மபுரி. புதிய கூட்டுறவு நூற்பாலைகளின் மொத்த மூலதனச் செலவு சுமார் 30·15 கோடி. புதிய கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் மேலும் அதிகப்படி வேலைவாய்ப்பு 2,800 பேர்களுக்குக் கிடைக்கிறது. ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்பொருட்டு, இராமநாதபுரம் ஒரு புது கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசு ரூ. 2 கோடி மானியமாக வழங்கி



யுள்ளது. அதைப் போலவே கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்கு ஊக்குவிப்பு. இந்தியாவில் மொத்த கைத்தறி ஏற்றுமதி ஆண்டு ஒன்றுக்கு ரூ.330 கோடி. தமிழ்நாட்டிலேயிருந்து ஏற்றுமதி ஆகக்கூடிய கைத்தறித் துணிகளில் கோ–ஆப்டெக்சின் ஏற்றுமதி மதிப்பு 53.33 லட்சமாகும். தமிழ்நாட்டிலுள்ள துறைமுகங்களின் மூலமாக ஏற்றுமதியாகும் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியைப் பெருக்குவதற்கும், சம்பந்தப்பட்ட ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. கோ–ஆப்டெக்சின் மூலமாக ஏற்றுமதியைப் பெருக்குவதற்கு நம்முடைய அதிகாரிகள் பல நாடுகளுக்கு சென்று வந்திருக்கிறார்கள். அதன் மூலமாக கணிசமான அளவிற்கு கோ–ஆப்டெக்சின் மூலமாக ஏற்றுமதியாகும் துணிகளுடைய மதிப்பு உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப்பற்றிய விவரங்களை நான் இங்கே சொல்வதற்கில்லை. காரணம் சொன்னால் அந்த ஏற்றுமதி வாய்ப்புகள் தனிப்பட்டவர்களுக்குப் போய்ச்சேருகின்ற நிலைமை ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால், அதைப்பற்றி விளக்கமாக நான் இங்கே பேசவில்லை. அந்த சாதனையை நாம் எட்டியதற்குப் பிறகு அதைப்பற்றிய விவரத்தை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சொல்கிறேன்.

அடுத்து இங்கே' இந்த ஆண்டு மிக முக்கியமான பிரச்னையாக இந்த சபையிலே பேசப்பட்டு வருவது, இந்தக் கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் விலை ஏறுகின்ற நேரத்திலே அரசு தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதைப் பற்றித்தான், வேறு பல சந்தர்ப்பங்களிலேயும், இன்றைக்குக்கூட பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது.அதனால் எப்படிப்பட்ட நிலைமையை நம்முடைய முயற்சியாலே உருவாக்கியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

சென்ற டிசம்பர் மாதம், தமிழ்நாட்டில் அமுலுக்கு வந்த 100 பர்சென்ட் மின்வெட்டை ஒட்டி வெளி மார்க்கெட்டில் நூல் விலை அபரிமிதமாக சுமார் 40% வரை உயர்ந்தது. இதனல் குறிப்பாக 20-ஆம் நெம்பர், 40-ஆம் நெம்பர், 2/17 நெம்பர் எண்ணுள்ள நூலை பயன்படுத்தி துணி உற்பத்தி செய்யும் நெசவாளர்கள் தொடர்ந்து தொழில் செய்வதில் சிரமம் ஏற்பட்டது. மதுரை, கரூர், ஈரோடு மற்றும் நாகர்கோவில் பகுதிகளிலுள்ள தனியார் துறை நெசவாளர்களிடமிருந்து இதுபற்றிய முறையீடுகளும் வந்தன. நெசவாளர்களுக்கு மேலே கண்ட எண்ணுள்ள நூல் நியாய விலையில் வழங்கி, அவர்கள் தொடர்ந்து தொழில் நடத்த வசதி செய்து கொடுப்பதற்காக கீழே விவரிக்கப்பட்டபடி சாத்தியமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கூட்டுறவுத்துறை: தமிழகத்திலுள்ள கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு பலவகை நூல்களாக சுமார் 4500 பேல்கள் வரை தேவைப்படுகின்றன. தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 12 கூட்டுறவு நூற்பாலைகளின் தேவையில் சுமார் 60 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை ஜெனரேட்டர்களைக் கொண்டு மின் உற்பத்தி செய்ய வசதிகள் உள்ளன. அவற்றை முழுமையாகப் பயன்படுத்தி தேவையான எண்ணுள்ள நூல் உற்பத்தியை எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு உற்பத்தி செய்யும். அவற்றைப் பூராவயும் பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு விநியோகிப்பதற்காக "கோ-ஆப்டெக்சிற்கு சப்ளை செய்யவும். ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, மேற்கண்ட எண்ணுள்ள நூல் சுமார் 3000 பேல்கள் இதர மாநிலங்களிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்து அகில இந்தியக் கூட்டுறவு நூற்பாலைகள் சம்மேளனத்தின் மூலமாக நியாய விலையில் அடுத்து மூன்று மாதங்களில் கோ-ஆப்டெக்சிற்கு சப்ளை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 60 ஆம் எண். கோம்பு நூல் சுமார் 100 பேல்கள் ஆந்திராவிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் வாங்கி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கியுள்ளது. மேலும் கோ-ஆப்டெக்ஸ், கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து, தள்ளி வைக்கப்பட்ட செலுத்துகை அடிப்படையிலே நூலைப் பெற்று பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கி, கோ-ஆப்டெக்ஸ் கொடுக்க வேண்டிய நிலுவையை பகுதி நூலாகவும், மீதியைப் பணமாகவும் தந்து ஈடு செய்து வருகிறது. இவ்விதமாக கூட்டுறவு நெசவாளர் சங்கங்களில் நூல் தேவை முழுவதும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் வழங்கி வருகிறது.

தனியார் துறை கைத்தறி நெசவாளர்களுக்கு மோட்டா மற்றும் சன்னரக நூல் விநியோகம் பற்றி விபரங்கள்:—தென்னிந்திய பஞ்சாலைக் கழகம், தனியார் நெசவாளர் கழகங்கள் ஆகியவற்றில் பிரதிநிதிகளுடன் முதல் கூட்டத்தில் கைத்தறி இயக்குநரும், நானும் பேச்சுவார்த்தை நடத்தியதின் விளைவாக தென்னிந்திய பஞ்சாலைக் கழகம் மோட்டா ரக நூல் கட்டு ஒன்றுக்கு ரூ. 5 முதல் ரூ. 14.50 வரை விலை குறைவாகவும், சன்ன ரக நூல் ரூ. 20 முதல் ரூ. 27 வரை விலை குறைவாகவும் கீழ்க்கண்டவாறு நூல் ஒதுக்கீடு செய்ய முன் வந்தது.

(பிற்பகல் 1-50)

| மோட்டா ரக நூல்கள் | பேல்கள் |
|---|---|
| 2/17 | 1562 |
| 20 நெ. | 309 |
| 40 நெ. | 601 |
| 60 நெ. | 210 |

மொத்தம் 2682 பேல்கள்.



| சன்ன ரக நூல் எண் | பேல்கள் |
|---|---|
| 80 நெ. காடட் நூல் | 85 |
| 80 நெ. கோம்புடு | 40 |
| 100 நெ. காடட் நூல் | 10 |
| 100 நெ. கோம்புடு நூல் | 39 |

மொத்தம் .. 174 பேல்கள்.

நெசவாளர் கழகப் பிரதிநிதிகள், நூலின் விலையை மேலும் குறைக்கும்படி கேட்டு கொண்டதற்கிணங்க 25-2-83 தேதியில் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர், தென்னிந்திய ஆலை சங்கம் மற்றும் தனியார் நெசவாளர் கழகப் பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் போது, நூலின் விலையை கீழ்கண்டவாறு மேலும் குறைத்து நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது.

குறைவு செய்யப்பட்டபின் நூலின் விலை/கட்டுக்கு

| | |
|---|---|
| 20 நெ. | ரூ. 90.00 |
| 2/17 நெ. | ரூ. 120.00 |
| 40 நெ. | ரூ. 123.00 |
| 60 நெ. காடட் | ரூ. 161.50 |
| 60 நெ. கோம்புடு | ரூ. 178.50 |

80 நெம்பர் நூல், 100 நெம்பர் நூல் கட்டு ஒன்றுக்கு ரூ. 20 முதல் ரூ. 27.00 வரை குறைவு.

மேற்கண்ட ஏற்பாட்டின்படி தென்னிந்திய நூற்பாலைகள் சங்கம் மொத்தம் 1567 பேல்கள் சப்ளை செய்ய ஒப்புக் கொண்டுள்ளது. இந்நூலை உற்பத்தி செய்வதற்கு தேவையான கூடுதல் மின்சக்தி சம்பந்தப்பட்ட ஆலைகளுக்கு கொடுத்து உதவ ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த 1567 பேல் நூல் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு விநியோகம் செய்யப் பட்டுள்ளது. நெசவாளர் கழகப் பிரதிநிதிகள் இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நூலை பெற்று பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டிலுள்ள நூற்பாலைகளிலிருந்தும், பிற மாநிலங்களிலுள்ள நூற்பாலைகளிலிருந்தும் மோட்டா ரக நூலை கொள்முதல் செய்து தனியார் துறை நெசவாளர்களுக்கு விநியோகிக்க தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகத்திற்கு அரசு ரூ. 50 இலட்சம் முன்பணம் வழங்கியுள்ளது.

திரு. எம். ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "மானியக் கோரிக்கை எண். 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 7,06, 32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 17-3-1983 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.57 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

192. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு வெல்லப்பாகு கட்டுப்பாடு முறைப்படுத்துதல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது சம்பந்தமாக, மதுவிலக்கு—ஆயத்தீர்வைத் துறையின் 5—10—1982 ஆம் தேதியிடப்பெற்ற 714 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

193. வருவாய்த் துறையின் 18-11-1980 ஆம் தேதியிடப் பெற்ற 2600 ஆம் எண் அரசாணையில் வெளியான விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து, வருவாய்த் துறையின் 21-1-1983 ஆம் தேதியிடப்பெற்ற 118 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பகுதிநேர கிராம அதிகாரிகளின் பதவி இடங்களை நீக்குதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 3/1981) 12 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

194. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சாராயம் (தயாரித்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறையின் 22-12-1982 ஆம் தேதியிடப்பெற்ற 861 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



195. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் 1977—78 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்) [தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (ஏ) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

196. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1982 ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619—ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

74. கோரிக்கை எண். 26-கைத்தறி மற்றும் பஞ்சாலை ஆகியவற்றின் கொள்கையும், திட்டங்களும் பற்றிய குறிப்பு, 1983—84 (தமிழ், ஆங்கிலம்).

75. 1983-84 ஆம் ஆண்டு கைத்தறி, துணிநூல் துறை பற்றிய சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

76. 1981—82 ஆம் ஆண்டு பொருளாதார வரவு—செலவுத் திட்ட நடவடிக்கைகளின் செயல் முறைவகைப்பாடு. (ஆங்கிலம்).

சமமாக பகிர்ந்து கொள்ளும். 1983–84 ஆம் ஆண்டுக்கு "நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில்" மாநிலத்தின் பங்காக ரூ. 30 லட்சம் முதலீடு செய்ய நிதியொதுக்கப்பட்டுள்ளது.

1981-82 ஆம் ஆண்டில் கூட்டுறவுத் துறையில் 121 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணி உற்பத்தியானது. நடப்பாண்டில் 31-12-1982 வரையிலும் 93 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணி உற்பத்தியாகியுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் 130 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணி உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கு முழு அளவில் எய்தப் பெறும். 1983–84 ஆம் ஆண்டிற்கு 135 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணி உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

3. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை விதத்தில் நிதியுதவி.

கூட்டுறவுத் துறையில் கைத்தறித் தொழிலுக்கு தேவையான நடைமுறை மூலதனம் வழங்குவதற்காக, 1956 ஆம் ஆண்டு, இந்திய ரிசர்வ் வங்கி ஒரு திட்டத்தை அறிவித்தது. இத்திட்டம், இன்று வரை பலவகையான மாற்றங்களுடன் செயற்படுத்தப் பட்டு வருகின்றது. இக்கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைமுறை மூலதனத்தினை அதிகரிக்கும் பொருட்டு 'தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி' (Nabard) (இந்திய ரிசர்வ் வங்கி) நிறுவனம் மறு நிதி உதவியளித்து வருகிறது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்நிறுவனம் வங்கி விதத்தைவிட 2½ சதவிகிதம் குறைந்த வட்டி விதத்தில் கடனளித்தும் வருகிறது.

நெசவாளர் தொடக்கச் சங்கங்கள், தங்களுடைய அங்கத் தினர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன. தனியார் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு கைத்தறித் தொழிலில் நெருக்கடியில்லாத நேரங்களில் வேலை கிடைக்கிறது. ஆனால் கைத்தறித் தொழில் நெருக்கடியான அல்லது மந்தமான காலங்களில் தனியார் தொழில் நடத்துபவர்கள் இந்த நெசவாளர்களை இக்கட்டான நிலையில் விட்டுவிடுகின்றனர். வியாபாரத்தில் மாறிவரும் நிலையினை மேற்கண்ட காலங்களில் கருத்திற்கொள்ளாமல் கைத்தறி நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுடைய அங்கத்தினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை நல்க வேண்டியுள்ளன. இப்பின்னணியைக் கருத்தில் கொண்டு பார்த்தால் நம் மாநிலத்தில் உள்ள எல்லா கைத்தறி நெசவாளர் தொடக்க கூட்டுறவுச் சங்கங்களும் மிகவும் திருப்திகரமாகச் செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மிக வலுவான அடிப்படை வசதிகளையும் நிதியுதவிகளையும் அளிக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத் தக்கதாகும். இச்சங்கங்களுக்குச் சலுகை வட்டி விதத்தில் வங்கிகள் கடனளிக்க இயலும் வண்ணம்

அவற்றிற்கு 1982–3 ஆம் ஆண்டில் 129·21 இலட்சம் ரூபாய் உதவித் தொகையை அரசு வழங்கியுள்ளது. 1983–84 ஆம் ஆண்டில் மேலும் ரூ. 80·00 இலட்சம் நிதியொதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

மத்திய கூட்டுறவு வங்கிகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களுக்கு வழங்கும் நடைமுறை மூலதனக் கடன் வசூலாகாமல் போனால் ஏற்படும் இழப்பைச் சரிக்கட்ட, அரசு அந்த வங்கி களுக்கு 90 சதவீதத் தொகையை அளிக்கிறது. எஞ்சிய தொகையைச் சம்பந்தப்பட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் பொறுப்பு ஏற்றுக் கொள்ள வேண்டும். இத்திட்டத்திற்கு 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 10·00 ஒதுக்கப்பட்டுள்ளது. 1983–84 ஆம் ஆண்டுக் காலத்திலும் இதேபோன்ற நிதியுதவி யுடன் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4. இடு பொருட்கள் வழங்குதல்:

நம் மாநிலத்தில் உள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகள், கூட்டுறவு அமைப்பின் கீழுள்ள நெசவாளர்களுக்குத் தேவைப் படும் நூலினைத் தொடர்ந்து வழங்கி வருகின்றன. வருங் காலத்தில் கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு அதிகரித்து வரும் நூலின் தேவையினைச் சமாளிக்கும் பொருட்டு கூட்டுறவு நூற்பாலைகள் புதுக்கோட்டை, தருமபுரி, மதுரை (தேனி), திருநெல்வேலி (எட்டையபுரம்) மற்றும் இராமநாதபுரம் (கமுதி) ஆகிய இடங்களில் நிறுவ அண்மையில் பதிவு செய்யப் பட்டு ரூ. 30·15 கோடி மூலதனச் செலவில் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு மேற்கண்ட ஆலைகள் 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறுதிக்குள் செயல்படத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எட்டைய புரத்தில் ஆரம்பிக்கப்பட உள்ள புதிய கூட்டுறவு நூற்பாலையில் தமிழகத்தில் உள்ள நெசவாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் செயற்கை இழை நூலினை உற்பத்தி செய்யும். ஏற்கனவே இயங்கி வரும் சேலம் மற்றும் வேலூர் கூட்டுறவு நூற்பாலைகள் மேலும் 12,500 கதிர்களை நிறுவி தங்களது உற்பத்தித் திறனை விரிவாக்கி வருகின்றன. புதிய கூட்டுறவு நூற்பாலைகள் அமைப்பதனாலும் ஏற்கனவே இயங்கி வரும் ஆலைகளில் விரிவாக்கத் திட்டம் செயல்படுத்துவதினாலும் கூடுதலாக 2,600 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனியார் துறை:

அண்மையில் தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவா ளர்கள், மோட்டா ரக நூல்களின் விலை ஏற்றத்தாலும், நூல் கிடைக்காமல் அவதியுற்றபொழுதும், மின் வெட்டு காரணமாக தனியார் துறையில் உற்பத்தி வீழ்ச்சியடைந்ததினாலும் மிகவும் அவதிக்கு உள்ளானபோது, அரசு உடனடியாக இந்த விவகாரத்தில் தலையிட்டு, தென்னிந்திய ஆலைகள் சங்கத்தின் மூலம் அதனுடைய உறுப்பினர்கள் ஆலைகள் மூலமாக நூலினைப் பெற்று, நெசவாளர் சங்கங்கள் மூலமாக விநியோகிக்கப்பட்டு அவைகள் தங்களின் நெசவாளர் உறுப்பினர்களுக்கு வழங்கியது.

## இணைப்பு.

[373....ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண். 26—கைத்தறி மற்றும் நெசவுத் தொழில்.

### கொள்கையும், திட்டங்களும்.

### 1983—84.

முன்னுரை.—(1)

பொதுமக்களின் துணித் தேவைகளை நிறைவு செய்வதில், கைத்தறி சிறந்த பணி ஆற்றுகிறது. இது தவிர, மேலும் முயற்சி செய்தால், கைத்தறித் துணிகளின் ஏற்றுமதி அதிக அளவு உயரக் கூடும். வேலை வாய்ப்பினைப் பொறுத்த வரையில் வேளாண் மைக்கு அடுத்த படியாக கைத்தறித் தொழில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்தியாவிலுள்ள மொத்தம் 30.2 லட்சம் கைத் தறிகளில், தமிழ்நாட்டில் மட்டும் 5.6 லட்சம் கைத்தறிகள் இயங்கி வருகின்றன. இதன்மூலம் 13.4 லட்சம் நெசவாளர் களுக்கு நேரடி வேலைவாய்ப்பு இடைப்பதுடன் இத்தொழி லினைச் சார்ந்துள்ள 30 லட்சம் பேருக்கு வாழ வழி வகையும் கிட்டுகிறது. நம் நாட்டில் உற்பத்தியாகும் 2,900 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணிகளில் தமிழ்நாட்டில் மட்டும் 725 மில் லியன் மீட்டர் அளவு துணி உற்பத்தியாகிறது. கைத்தறி வேலை வாய்ப்புப் பற்றிய ஆய்வு செய்ய அண்மையில் இந்திய அரசின் கைத்தறி வளர்ச்சி ஆணையரால் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழு ஒரு நெசவாளி நாளொன்றுக்கு ஒரு தறியில் சராசரியாக 4.5 மீட்டர் உற்பத்தி செய்கிறார். ஓர் ஆண்டில் சராச யாக 300 நாட்களுக்கு அவருக்கு வேலைவாய்ப்பு உள்ளது என்பதனை கண்டறிந்துள்ளது.

மொத்த வேலைவாய்ப்பில் 20 சதவிகிதம் நெசவுத் தொழி லிலும் அதற்கு முன்னேற்பாடான தொழில்களிலும் கிடைக் கிறது. அத்தொழில்களில் சில நெசவிற்கு பின்னால் செய்யப் படுபவை. அவை துணியினை வெளுப்பாக்குதல், சாயமிடல். மெருகேற்றுதல், முடிவு நிலைப்படுத்துதல், அச்சிடுதல் ஆகியனவும் நூல்கள், துணிகளை எடுத்துச் சென்று விற்பனை செய்வதிலும் கிடைக்கிறது. இந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் 13·4 லட்சம் நெசவாளர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பினையும் 2.67 லட்சம் கைவினைஞர்களுக்கு வேறு வகையிலும் வேலைவாய்ப்பினை அளிக்கிறது. சுரண்டல், இடை தரகர்கள் இல்லாத பொருத்தமான அமைப்பு ஒன்று கைத்தறித் தொழில் துறைக்கு இருக்க வேண்டிய அவசியம் பற்றி இத்துறைக் குரிய வளர்ச்சித் திட்டங்களில் எப்போதும் வலியுறுத்தி கூறப் பட்டு வந்துள்ளது. கடந்த 20 அல்லது அதற்கு அதிகமான ஆண்டுகளில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு பார்த்தால், கைத் தறித் தொழிலைக் கூட்டுறவின்கீழ் காண்டு வருதலே மிகச் சிறந்த வழியாகும் என்று புலனாயிற்று.





அமைப்பின்கீழ் கொண்டு வரப்பெற்ற கைத்தறிகளின் எண்ணிக் கையையும் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களை மேலும் வளர்ச்சி அடையச் செய்வதில் காணப்படும் நடைமுறை இடர்பாடு களையும் அரசு சார்பற்ற அனுபவம் வாய்ந்த தலைவர்கள் போதிய எண்ணிக்கையில் கிடைக்கப் பெறாததையும் கருத்திற் கொண்டு 1984—85 ஆம் ஆண்டு முடிவில் 67 சதவிகிதம் நெசவாளர்களை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவர இலக்கிடப்பட்டுள்ளது. இது குறித்த தேசிய இலக்கு 60 சதவீத மாகும்.

2. அதிக அளவிலான கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வருதல்.—

இம்மாநிலத்தில் செயல்படுத்தப்படும் அனைத்து கைத்தறி வளர்ச்சித் திட்டங்களில் ''கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்புகளின்கீழ் கொண்டுவரும் திட்டம்'' முன்னோடியாகும்.

கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ள கைத் தறிகளைத் திறம்பட இயக்க, கீழ்க்கண்டவாறு நெசவாளர் களுக்கு நிதியுதவி அளிக்கப்பட்டு வருகின்றது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு கைத்தறி நெசவாளர் ஆரம்பப் பங்கு மூலதனத்திற்குத் தொகை செலுத்துவதற்காக பருத்தித் தறி ஒன்றுக்கு ரூ. 200, பட்டு மற்றும் கம்பளித் தறி ஒன்றுக்கு ரூ. 250, பாலிஸ்டர் தறி ஒன்றுக்கு ரூ. 500 என்ற உயரளவிற்கு உட்பட்டு கடனுதவி பெற தகுதி பெறுகிறார். இக்கடன் தொகையில் 90 சதவிகிதம் தொகையை மத்திய அரசும் மாநில அரசும் சம விகிதத்தில் பங்கிட்டு அளித்து வருகின்றன. 1983—84 ஆம் ஆண்டில் 100 புதிய பருத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், 5 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், 10 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றை அமைப்பதன்மூலம் 27,800 தறிகளைக் கூட்டுறவின்கீழ் கொண்டு வரவும், ஏற்கெனவே இயங்கிவரும் சங்கங்களில் புதிய அங்கத்தினர்களைச் சேர்க்கவும். திட்டமிடப்பட்டுள்ளது. இதனால், 27,800 தறிகளை, கூட்டுறவின்கீழ் கொண்டுவரப்படும்.

நடப்பாண்டில் 31-12-1982 வரை 100 புதிய நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டதோடு ஏற்கெனவே இயங்கி வரும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும், புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் 20,000 கைத்தறிகள் கூட்டுறவு அமைப் பின்கீழ் கொண்டுவரப்பட்டன. தறியில்லாத நெசவாளர்களின் நலனுக்காக ரூ. 65.86 லட்சம் மூலதனத்தில் 20 தொழிலியல் நெசவாளர் சங்கங்களை நடப்பாண்டில் ஆரம்பிக்க கருதப் பட்டுள்ளது. ஏற்கெனவே இயங்கி வரும் நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்குமூலதனத்தினை அதிகப்படுத்தவும் செயலிழந்த, நலிந்த சங்கங்களுக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கவும் பங்கு மூலதனமாக சுமார் ரூ. 110·00 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. இத்தொகையை மத்திய அரசும் மாநில அரசும்

மேலும் அரசு தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்திற்கு ரூ. 50·00 இலட்சம் அளவிற்கு கடன் அளித்தது. இந்நிதியுதவியைக் கொண்டு மேற்படி கழகம் வெளி மாநிலத்திலிருந்தும் மற்றும் நமது மாநிலத்திலும் நூலினைக் கொள்முதல் செய்து தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு அடக்க விலையிலேயே விநியோகம் செய்தது. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள தனியார் ஆலைகளிலிருந்து தேவையான அளவிற்கு நூலினைக் கொள்முதல் செய்து, அதனை நெசவாளர்களுக்கு விநியோகம் செய்தது.

மேலும் கையினால் நூற்கப்பட்ட 20-ம் எண். நூலினை 1,200 பேல்கள் ஒரு பேல் ரூ. 110 விலையில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கட்டு ஒன்று ரூ. 133 என்ற அடக்க விலையை விட இது மிகவும் குறைவு. இதன் வித்தியாசத் தொகையான ரூ. 11.00 இலட்சத்தினை அரசு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு அனுமதி அளித்தது.

5. கைத்தறித் தொழில்நுட்பத்தின் தரத்தை உயர்த்துதல்:

புதிய கைத்தறித் துணிகளுக்கு உள் நாட்டிலும், வெளி நாட்டிலும் வளர்ந்து வரும் தேவைகளை ஈடு செய்ய இயலும் வகையில் நுகர்வோரின் மாறி வரும் ஆர்வங்களுக்கேற்பவும், விருப்பத்திற்கு ஏற்பவும் கைத்தறித் தொழில் புதிய தொழில் நுட்ப முறைகளைக் கையாள வேண்டும். இதைக் கருத்திற் கொண்டு தறிகளைப் புதுப்பிக்கவோ அல்லது நவீனப்படுத்தவோ அல்லது புதிய நவீன கைத்தறிகளை வாங்கவோ கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகின்றன. இந்தத் திட்டத்திற்கென்று 1982-83 ஆம் நிதியாண்டில் ரூ. 21.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு பாதி மான்யமாகவும், இரண்டு பாதி கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது. 1983-84-ம் நிதியாண்டில் ரூ. 21.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

6. கைத்தறித் தொழிலுக்கு விற்பனை வசதி செய்தல்:

''கோ-ஆப்டெக்ஸ்'' என்றழைக்கப்படும் தலைமைச் சங்கமான தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அதனுடன் இணைந்த 1,412 கைத்தறி நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்த துணியில் 50 விழுக்காடு அளவிற்குக் கொள்முதல் செய்வதன் மூலம் விற்பனைக்கு ஆதரவு கொடுக்கிறது.

7. கைத்தறித் துணி விற்பனையில் தள்ளுபடி:

கைத்தறித் துணியின் விற்பனையைப் பெருக்குவதற்காக அரசு நுகர்வோருக்குக் கைத்தறித் துணியில் தள்ளுபடி சலுகை அளித்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக 30 நாட்களுக்கு 20 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடியை மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் ஏற்றுக் கொள்ளுவது என்ற அடிப்படையில் வழங்கி வருகின்றன. இது தவிர மாநில அரசு கைத்தறித் துணி



விற்பனையில் 10 விழுக்காடு தள்ளுபடியைச் சிறப்புக் காலங்களில் அதாவது அகில இந்திய கைத்தறி இ வார விழாக் காலங்களில் அளித்து வருகிறது. 1981-82ம் நிதியாண்டில் தள்ளுபடி மான்யமாக கொடுத்த வகையில் செலவான தொகை ரூ. 5.6 கோடி ஆகும். 1982-83-ஆம் நிதியாண்டிற்கு இது ரூ. 13.21 கோடியாக உயர்ந்துள்ளது. 1983-84-ம் நிதியாண்டிற்கு ரூ. 17.3 கோடி அளவிற்குத் தேவைப்படும்.

8. தலைமை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பங்கு மூலதனத்தை அதிகரித்தல்:

நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கூடுதல் விற்பனை வசதிகளை அளிக்க தலைமைச் சங்கத்தின் (கோ-ஆப்டெக்ஸ்) உயர் அளவு கடன் பெறும் அளவை உயர்த்தும் பொருட்டு, 1982-83 ஆம் ஆண்டில் தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தில் ரூ. 75.00 இலட்சம் முதலீடு செய்துள்ளது. மேலும் ரூ. 1.20 கோடி முதலீடு செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

9. சிறந்த ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்:

கைத்தறி ஏற்றுமதியை அதிகரிக்கும் பொருட்டு, சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

10. நலத்திட்டங்கள்:

அ. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்.

நமது மாநிலத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் செயலாற்றி வரும் கைத்தறி நெசவாளர்களின் நலனை முன்னிட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 81,200 கைத்தறி நெசவாளர்கள் சேர்க்கப் பட்டுள்ளனர். இத்திட்டத்தில் இதுவரை சேர்ந்துள்ள ஒரு நெசவாளர் தான் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் 6 பைசாவைச் சந்தாத் தொகையாகக் கொடுக்கின்றனர். அந்த ஒரு ரூபாய்க்கு அரசு 3 பைசா கொடுக்கிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு நெசவாளர் இறக்க நேரிட்டால் அவரது நியமனதாரர் வருடைய சேமிப்புக் கணக்கில் உள்ள தொகையுடன் ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து ரூ. 3,000மும் பெறுவார். 1981-82-ம் நிதியாண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூ. 53.71 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1982-83-ம் நிதியாண்டிற்கு ரூ. 68.14 இலட்சம் செலவு செய்ய அனுமதி அளிக்கப் பட்டுள்ளது. 1983-84-ம் நிதியாண்டிற்கு ரூ. 75.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆ. நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்:

1962-ம் ஆண்டிற்குப் பிறகு நிறுத்தப்பட்ட நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் மீண்டும் 1979—8 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி வீட்டின் மொத்த மதிப்பு ரூ. 8,000-க்கு மேற்படக்கூடாது. இதில் ரூ. 1,000 மாநில அரசால் உதவித் தொகையாக கொடுக்கப் படுகிறது. வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் ஒவ்வொரு வீட்டிற்கும் ரூ. 5,600 அளவிற்கு மேற்படாமல் கடன் அளித்தது 1-7-1982 முதல் ஒரு வீட்டின் மொத்த மதிப்பு ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் வழங்கும் கடன் ரூ 9,700 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. அரசு உதவிய ரூ. 1,000-ம் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் 5,000 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 2,501 வீடுகள் கட்டுவதென முடிவு எடுக்கப்பட்டு 1,40 வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுவிட்டன. மீதமுள்ள ,097 வீடுகள் பல நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன. 1983-84-ஆம் ஆண்டில் மேலும் 1,000 வீடுகள் கட்டி முடிக்க கருதப்பட்டுள்ளது.

11. (i) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்).

(அ) கோ-ஆப்டெக்ஸ் என்று எல்லோராலும் அழைக்கப் படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தலைமைச் சங்கமாகும். தமிழகத்தில் உள்ள 1,412 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவு சங்கங்கள் இதனுடன் இணைக்கப் பட்டுள்ளன. கோ-ஆப்டெக்ஸின் மொத்தம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 12.58 கோடியில் அரசு பங்கு மூலதனம் மட்டும் ரூ. 11 62 கோடியாகும். கோ-ஆப்டெக்ஸ் முக்கிய நோக்கம் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல், பட்டு சரிகை, சாயம் வேதியல் பொருட்கள் ஆகிய மூலப் பொருட்களை வாங்கி வழங்குவதும், அவை உற்பத்தி செய்யும் கைத்தறித் துணிகளுக்கு விற்பனை வசதியைப் பெருக்குவதும் ஆகும். 1982-83-ல் ரிசர்வ் வங்கி சலுகை வட்டி விகிதத்தில் கோ-ஆப் டெக்ஸிற்கு ரூ. 25 கோடி ரொக்கக் கடன் வழங்கி உள்ளது. இதற்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

பன்னிரண்டு கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் நூலினையும் மூலப் பொருட்களையும் கோ-ஆப்டெக்ஸ் தன்னுடைய 22 நூல் விற்பனை நிலையங்களின் மூலமாக விநியோகம் செய்து வருகின்றது. இந்தியா முழுவதிலும் 600 விற்பனைப் பிரிவுகளைக் கொண்டு செயல்படுகிறது. அண்மையில் 600-வது விற்பனைக் கூடமான "தில்லையாடி வள்ளியம்மை மாளிகை" என்ற பெரிய விற்பனைக்கூடம் திறக்கப்பட்டுள்ளது. இது. தென் கிழக்கு ஆசியாவிலேயே இந்த விற்பனைக்கூடம்



கூட்டுறவுத் துறையின் கீழ் இயங்கும் மிகப் பெரிய விற்பனை நிலையமாகும். இந்த விற்பனைக் கூடம் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் ரூ. 150.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

1982-83-ம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸ் ரூ. 54 கோடி அளவிற்கு ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களிடம் இருந்து கொள்முதல் செய்து ரூ. 61 கோடி அளவிற்கு விற்பனைச் செய்துள்ளது. (இது 31-12-1982 வரை) 1981-82-ல் ரூ. 62.56 கோடி அளவிற்கு கொள்முதலும் ரூ. 70.65 கோடி அளவிற்கு விற்பனையும் இருந்தன. 1982-83 ஆம் கூட்டுறவு ஆண்டிற்கு ரூ. 100 கோடி அளவிற்கு விற்பனைச் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கைத்தறித் தொழில் நுட்பத் திறனையும், உற்பத்தியையும் உயர்த்துவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக, கோ-ஆப் டெக்ஸ், நெசவாளர்களின் தேவைகளை நிறைவு செய்ய, மதுரை, திருச்சி, சேலம், கோவை, கடையநல்லூர் ஆகிய இடங்களில் 5 வடிவமைப்பு பணி நிலையங்களை அமைத்துள்ளது. இந்த வடிவமைப்பு பணி நிலையங்கள மாறி வரும் நுகர்வோரின் ஆர்வங்களுக்கு ஏற்ப புதிய வடிவமைப்புகளைக் கண்டறி கின்றன. கூட்டுறவுச் சங்கங்கள் இந்த வடிவமைப்புகளைப் பயன்படுத்துகின்றன. அவற்றை அங்காடிகளில் அறிமுகப் படுத்தவும் செய்கின்றன. அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட 'காஞ்சனா' பட்டு புடவைகள் பொது 'உதயாத்தியா' புடவைகள் மக்களிடையே நல்ல வரவேற்பினை ஏற்படுத்தியுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவன தலைமையலுவலகத்தில், தொழில் நுட்ப வளர்ச்சிப் பிரிவு ஒன்றினை, முதன்மை வடிவமைப் பாளரைத் தலைவராகக் கொண்டு ஏற்படுத்தியுள்ளது. பொது மக்களைக் கவரும வண்ணம் விற்பனைக் கூடங்களை நவீனப் படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. ஆறாவது திட்ட காலத்தில் ரூ. 150 இலட்சம் செலவில் 400 புதிய விற்பனைக் கூடங்களை அமைக்கவும், ஏற்கனவே இயங்கி வரும் 300 விற்பனைப் பெரு நிலையங்களை நவீனப்படுத்தவும் திட்ட மிடப்பட்டுள்ளது.

ஆ. ஜனதா துணித் திட்டம்.—

மாநிலத்தில் ஜனதா ரக கைத்தறி வேட்டிகள், புடவைகள், லுங்கிகள் போன்ற மலிவு ரகத் துணிகளைத் தயாரிக்கும் பணியில் சுமார் 20,000 கைத்தறிகள் ஈடுபட்டுள்ளன. 1982-83-ம் ஆண்டில், 34 மில்லியன் மீட்டர்கள் ஜனதா துணி உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மக்கள் விரும்பும் புதிய ரகங்களையும் ஜனதா துணி உற்பத்தி திட்டத்தில் கொண்டு வர செயற்குறிப்புகள் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்திய அரசின் ஒப்புதல் இன்னும் கிடைக்காமையால், பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர் களுக்கு மட்டும் வழங்கப்படும் புடவைகள், வேட்டிகள், லுங்கி ரகங்களை மட்டுமே தயாரிக்கப்படுகின்றன.

இ. கடன் விற்பனைத் திட்டம்:

அரசுப் பணியாளர்களுக்கும் உள்ளாட்சி துறைப் பணியாளர் களுக்கும் கைத்தறித் துணிகளைக் கடனாக விற்பனைச் செய்யும் திட்டத்தை கோ-ஆப்டெக்ஸ் தொடர்ந்து செயல்படுத்துகிறது. இக்கடன் விற்பனைத் திட்டத்திற்கு ஆதரவு அதிகமாக உள்ளது. 1981-82ம் ஆண்டில் ரூ. 20.5 கோடியாக இருந்த விற்பனை 1982—83-ல் ரூ. 22.00 கோடி அளவிற்கு அதிகரித்துள்ளது.

ஈ. ஏற்றுமதி:

''கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல்'' என்ற பெயரில் ஏற்றுமதி பிரிவு ஒன்றை கோ-ஆப்டெக்ஸ் அமைத்து படிப்படியாக ஏற்றுமதி மூலமாக விற்பனையை அதிகரித்து வருகின்றது. 982—83-ல் (1982 டிசம்பர் வரை) ரூ. 53.33 இலட்சம் மதிப்புள்ள துணிகளை பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. 1982—83ம் ஆண்டு ஐரோப்பாவில் நடைபெற்ற கண்காட்சியில் கலந்து கொள்ளவும் தனது ஏற்றுமதியைப் பெருக்கும் வழிவகைகளைக் கண்டறிவதற்கும் பிரதிநிதிக் குழு ஒன்றை இந்நிறுவனம் அனுப்பியது.

உ. பாலியஸ்டர் துணி உற்பத்தி:

கோ-ஆப்டெக்ஸ் பாலியஸ்டர் சட்டைகள், புடவைகள், பேண்டு துணிகளை கைத்தறியில் உற்பத்தி செய்து அறிமுகப் படுத்தியுள்ளது. தற்சமயம் 9,307 தறிகள் பாலியஸ்டர் துணி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. தற்சமயம் ஆண்டு உற்பத்தி 31 இலட்சம் மீட்டர்களாகும். பாலியஸ்டர் புடவை நுகர்வோர் மத்தியில் மிகவும் பிரபலமடைந்து வருகிறது.

(ii) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்:

கூட்டுறவு அமைப்பின்கீழ் வராத கைத்தறி, விசைத்தறித் தொழில்களுக்கும் அதன் துணைத் தொழில்களுக்கும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கழகம் தொடர்ந்து கடன் அளித்து வருகின்றது. இக்கழகம், தனியார் கைத்தறி நெசவாளர்களுக்கு நடைமுறை மூலதனக் கடனாக 31—12—1982 வரை ரூ. 124.98 லட்சம் அளித்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டு திட்ட கால இறுதிக்குள் ரூ. 450 இலட்சம் அளவிற்குக் கடன் வழங்கப் படலாம். வெளி அங்காடியில் நூலின் விலை ஏற்றத்தினாலும், தட்டுப்பாடு ஏற்பட்டதினாலும், இக்கழகம், கிடைக்கக்கூடிய இடங்களிலெல்லாமிருந்து நூலினைக் கொள்முதல் செய்து அதனை தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் வழங்குகிறது. 1983 ஜனவரி திங்களில் நூலின் விலை மிகவும் அதிகரித்ததாலும், மின் வெட்டின் காரணமாக நூல் கிடைக்காததாலும் நெசவாளர்கள் அல்லலுற்ற போது, நிதியுதவியைக் கொண்டு இக்கழகம் நூலினைக் கொள்முதல் செய்து நெசவாளர்களுக்கு அடக்க விலையிலேயே வழங்கவேண்டி இக்கழகத்திற்கு, அரசு ரூ. 50.00 இலட்சம் வ... ...ன்பணம் அனுமதிக்கப்...





(iii) கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்:

மத்திய அரசின் நிதியுதவியுடன் இம்மாநிலத்தில் நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களையும் இரண்டு ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களையும் அரசு நிறுவியுள்ளது. சிவராமன் குழுவின் பரிந்துரையின்பேரில் இத்திட்டங்கள் தொடங்கப் பட்டுள்ளன. நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிப்பதற்கும், நூல் வழங்கல், தறியில் போடுவதற்கும் தறியில் இருந்து துணியை எடுத்த பிறகும் தேவையான வசதிகளை அளித்தலும், கடன் உதவி செய்தல், ஒரே அமைப்பின் கீழ் விற்பனை வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ. 200 வருவாய் ஈட்ட வகை செய்ய வேண்டுமென கைத்தறிகள் குறித்த சிவராமன் குழு செய்த பரிந்துரைகளின் அடிப்படையில் இத் திட்டங்கள் தொடங்கப்பட்டன.

டிசம்பர் 1982 வரை இந்த ஆறு திட்டங்களிலும் 17,800 தறிகள் பயன்படுத்தப்பட்டன. இவை 22,000 தறிகளாக உயரும். இத்திட்டங்கள் தங்களின் எல்லைக்குள் இருக்கும் சில நலிந்த செயலிழந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள தறிகளை மேற்கொண்டு வேலை வாய்ப்பினைத் தொடர்ந்து அளித்து வருகின்றன. திட்டங்களுக்கு விற்பனை ஆதரவும் அளிக்கப்படுகிறது.

(iv) கூட்டுறவு நூற்பாலைகள்:

அ. விரிவாக்கத் திட்டங்கள்:

தமிழகத்தில் உள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகள் 20-ம் எண் முதல் 120-ம் எண் வரை பல்வேறு ரக நூல்களை உற்பத்தி செய்து வருகின்றன. ஒன்பது நூற்பாலைகள் ரூ. 12.00 கோடி செலவில் விரிவாக்கத் திட்டத்தை எடுத்துக்கொண்டு பணிகளை முடித்துள்ளன. விரிவு படுத்தப்பட்ட பிரிவுகள் தொடங்கப் பட்டுள்ளன. தற்போதைய பன்னிரண்டு கூட்டுறவு நூற் பாலைகள் 3.24 இலட்சம் கதிர்கள் திறன் உடையனவாய் உள்ளன.

ஆ. புதிய நூற்பாலைகள்:

கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களின் அதிகரித்து வரும் நூல் தேவையைக் கருத்தில் கொண்டு, தமிழகத்தில் ரூ. 30.15 கோடி திட்டச் செலவில் 5 புதிய கூட்டுறவு நூற்பாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் நான்கு, மதுரை மாவட்டத்தில் உள்ள தேனியிலும், தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஊத்தங்கரையிலும், புதுக்கோட்டையில் உள்ள சிவந்தங்காட்டிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கமுதியிலும் அமைக்கப்பட்டு வருகின்றன. நான்கு நூற்பாலைகள் பருத்தி நூல் உற்பத்தி செய்யும்.

எட்டையபுரத்தில் நிறுவப்படும் நூற்பாலை பாலியஸ்டர் செயற்கை இழை நூலினை உற்பத்தி செய்யும். 1984-ம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள் அனைத்து ஆலைகளும் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆலைகள் அமைக்கப்படுவதினால் சுமார் 2,800 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

இ. நவீன சாயச் சாலைகள்:

ஏழு நவீன சாயச் சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டதில் இதுவரை சேலம், திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத்தூர், வேலூர் மற்றும் ஈரோடு ஆகிய ஐந்து இடங்களில் சாயச்சாலைகள் அமைக்கப்பட்டு செயலாற்றி வருகின்றன. திருச்சிராப்பள்ளி, சென்னிமலை ஆகிய இடங்களில் உள்ள நவீன சாயச்சாலைகள் 31—3—1983-க்குள் செயல்படத் தொடங்கும். மேற்கண்ட நவீன சாயச் சாலைகள் அந்தந்த இடத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளின் வளாகத்திலும் ஈரோட்டில் உள்ள தமிழ்நாடு துணி நூல் பதனிடும் கூட்டுறவு ஆலை வளாகத்திலும் செயல் பட்டு வருகின்றன. இந்த நவீன சாயச்சாலைகள் கூட்டுறவு சங்கங்களின் நூலுக்கு இங்கு சாயமிடப்படுகிறது.

(v) தமிழ்நாடு சரிகை நிறுவனம், காஞ்சிபுரம்:

காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு சரிகை நிறுவனம் தங்க சரிகை உற்பத்தியை மாதம் ஒன்றுக்கு 500 மார்க்குகளில் இருந்து சுமார் 1,000 மார்க்குகள் ஆக உயர்த்தியுள்ளது. உற்பத்தியாகும் அனைத்து சரிகைகளையும் பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் மூலமாக வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை நட்டத்தில் இயங்கிவந்த இந்நிறுவனம் தற்பொழுது ஆதாயத்தில் இயங்கி வருகிறது.

(vi) தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை, ஈரோடு.

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் துணிகளை வெளுப்பாக்குதல், சாயமிடல், பளபளப்பாக்குதல், துணிகளில் அச்சிடுதல் ஆகிய வசதிகள் உள்ளன. பலதரப்பட்ட முறைகளில் உற்பத்தித் திறனை சரிப்படுத்தி ஒரு மாதத்திற்கு 10 இலட்சம் மீட்டர் அளவிற்கு உற்பத்தியைப் பெருக்க, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 22.50 இலட்சம் நிதியுதவி பெற்று இந்த ஆலை விரிவாக்கத் திட்டத்தினை செயற் படுத்தியுள்ளது. துணிகளில் அச்சிடும் பிரிவு ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது. மத்திய அரசு நிதியுதவியுடன் ரூ. 31 இலட்சம் செலவில் இந்த ஆலையில் பாலியஸ்டர் பதனிடும் பிரிவு ஒன்றினை அமைக்கும் திட்டத்தினை மேற்கொண்டுள்ளது.

(vii) தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனம்:

தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனம் புதுக்கோட்டையில் 25,200 நூற்பு கதிர்கள் திறனுள்ள காவேரி நூற்பு நெசவு ஆலையையும், முத்தனேந்தலில் 13,260 நூற்புக்கதிர்கள் திறனுள்ள சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலையையும் எடுத்துக் கொண்டு அவற்றை நடத்தி வருகிறது. காவேரி நூற்பு நெசவு ஆலைக்கு ரூ. 137.71 இலட்சம் அளவிற்கு அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.

தமிழ்நாட்டிற்கு விசைத்தறி ஒதுக்கீட்டில் மீதியுள்ள விசைத் தறிகளைப் பயன்படுத்தி தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், அருப்புக்கோட்டை, சிவகிரி, ஜெயங்கொண்டசோழபுரம் ஆகிய இடங்களில் 288 விசைத்தறிகளுடன் 3 விசைத்தறிக் கூடங்களை அமைத்துள்ளது. இந்த விசைத்தறிக் கூடங்களில் 342 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இக்கழகம் மேலும் 7 விசைத்தறிக் கூடங்களை கூட்டுறவு அமைப்பின்கீழ் அமைத்து வருகிறது. இந்த விசைத்தறிக் கூடங்கள் 1984 மார்ச் திங்களுக்குள் உற்பத்திச் செய்யத் தொடங்கிவிடும். இந்த விசைத்தறிக் கூடங்கள் அமைப்பதினால் சுமார் 1,400 தொழிலா ளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும்.

(viii) மூடப்பட்ட துணி ஆலைகளை மீண்டும் திறத்தல்:

1976—77 ஆம் ஆண்டில் துணி ஆலைத்துறையில் மிகுந்த நெருக்கடி நிலை ஏற்பட்டதன் விளைவாக மூடப்பட்டிருந்த தனியார் துறையைச் சேர்ந்த 10 நலிந்த ஆலைகளுக்கு அரசு அளித்த உத்தரவாதத்தினால் இவை மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. மது நூற்பு நெசவு ஆலை, பின்னி லிமிடெட் (பி. அண்ட் சி. ஆலை) சென்னை ஆகியவற்றுக்கு மட்டும் அரசு உத்தரவாதம் தொடர்ந்து இருக்கிறது. ஏனைய ஆலைகள் பழைய நிலைமைக்கு வந்து மீண்டும் செயல்பட ஆரம்பித்துள்ளன. இந்த மீனாட்சி ஆலைக்கும் அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. இந்த ஆலைகளுக்கு அளித்துள்ள உத்தரவாதத்தினை அரசு கூடிய விரைவில் ரத்து செய்துவிடும். மூடப்பட்டிருந்த கோயம்புத்தூர், ஜெயலட்சுமி ஆலை அரசு உத்தரவாதத்தினால் மீண்டும் 1982 செப்டம்பர் மாதம் திறக்கப்பட்டது. இதேபோல் கலைக்கப்பட்டு வரும் கோயம்புத்தூர் ஜோதி ஆலைக்கும் அரசு உத்திரவாதம் அளித்துள்ளது. இந்த ஆலையும் விரைவில் திறக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ix) தனியார் துறையில் புதிதாக ஆலைகள் அமைத்தல்/ஏற்கனவே உள்ள ஆலைகளை விரிவுபடுத்துதல்:

1982 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 27 புதிய ஆலைகளை நிறுவ துணிநூல் ஆணையர் அனுமதித்துள்ளார். இந்த புதிய ஆலைகள் அமைப்பதினால் மேலும் சுமார் 10,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

12. முடிவுரை:

கைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பும் ஊதியமும் அவர்கள் வசிக்கும் இடத்திலேயே கிடைக்க இது வகை செய்கிறது. இது மிகவும் விரும்பத்தக்க நிலையாகும். குறிப்பாகக் கைத்தறித் தொழிலும் பொதுவாக துணி நூல் தொழிலும் சீராகவும் அதே சமயம் வேகமாகவும் வளர்ச்சியடைய தமிழக அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

மேலும் கைத்தறித் தொழிலாளர்களின் உற்பத்தித்திறனை துரிதப்படுத்த கைத்தறியை நவீனப்படுத்தியும் மற்றும் மேலே கண்ட பல்வேறுவிதமான உதவிகளை அளிக்கவேண்டியது அவசியமாகும். கைத்தறித் தொழில் மூலம் மக்களுக்குத் தேவையான துணிகளைத் தொடர்ந்து வழங்குவதோடு கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தி வருகிறது.



கைத்தறி துணிநூல் துறையின் கீழ் இயங்கும் பிரிவுகளின் வளர்ச்சி.

| (1) | 1978–79 (2) | 1979–80 (3) | 1980–81 (4) | 1981–82 (5) | 1982–83 (9 மாதங்கள் 31–12–1982 வரை). (6) |
|---|---|---|---|---|---|
| தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்: | | | | | |
| நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை. | 993 | 1,052 | 1,187 | 1,312 | 1,412 |
| தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.19 | 2.40 | 2.63 | 3.02 | 3.22 |
| ஆண்டொன்றுக்கு உற்பத்தி (ரூபாய் கோடியில்). | 44.85 | 52.00 | 72.27 | 86.77 | 72.96 |
| விற்பனை (ரூபாய் கோடியில்). | 53.42 | 60.00 | 75.41 | 96.26 | 83.00 |
| பயன்படுத்தப்பட்ட நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்). | 16.97 | 16.95 | 20.72 | 24.32 | 39.28 |
| கோ-ஆப்டெக்ஸ்: | | | | | |
| கொள்முதல் (ரூபாய் கோடியில்). | 27.51 | 29.00 | 39.27 | 62.56 | 54.00 |

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS, IN MADRAS CITY.

1 Account Test. Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

## IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 46D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A. Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Center, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

## IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEPARTMENT PUBLISHED UNDER RULES 303 AND 306 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES (CORRECTED UPTO 5TH NOVEMBER 1979) AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.

கைத்தறி துணிநூல் துறையின் கீழ் இயங்கும் பிரிவுகளின் வளர்ச்சி—தொடர்ச்சி.

| (1) | 1978–79 (2) | 1979–80 (3) | 1980–81 (4) | 1981–82 (5) | 1982–83 (9 மாதங்கள் 31–12–1982 வரை). (6) |
|---|---|---|---|---|---|
| 2 விற்பனை (ரூபாய் கோடியில்). | 34.80 | 38.00 | 48.00 | 70.65 | 61.00 |
| 3 பயன்படுத்தப்பட்ட நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்). | 900 | 1,200 | 1,500 | 2,200 | 2,500 |
| 4 விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை. | 400 | 420 | 444 | 525 | 600 |
| (3) கூட்டுறவு நூற்பாலைகள்: | | | | | |
| 1 கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.62 | 3.14 | 3.14 | 3.24 | 3.24 |
| 2 முதலீடு செய்தது (ரூபாய் இலட்சத்தில்). | 2024 | 2063 | 2250 | 2888 | 2,888 |
| 3 உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) | 3337 | 3371 | 4008 | 4844 | 5,000 |
| 4 விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) | 3424 | 3284 | 3996 | 4773 | 5,400 |
| 5 பயன்படுத்தப்பட்ட நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்) | 925 | 935 | 1,000 | 1,045 | 1,120 |
| 6 வேலைக்கு அமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 8,794 | 9,646 | 9,800 | 10,128 | 10,128 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| (4) தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு: | | | | | |
| 1 துணிகளை வெளுத்தல், சாயமிடல் (இலட்சம் மீட்டரில்). | 28 | 35 | 40 | 45 | 50 |
| (5) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்: | | | | | |
| 1 அனுமதிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை. | 1,742 | 2,233 | 2,500 | 2,700 | 2,100 |
| 2 அனுமதிக்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்). | 119 | 206 | 262 | 305 | 125 |
| (6) தமிழ்நாடு சரிகை நிறுவனம், காஞ்சீபுரம். | | | | | |
| 1 சரிகை உற்பத்தி (மார்க்குகளில்). | 1,640 | 2,540 | 4,000 | 4,500 | 3,800 |
| 2 விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | 9.8 | 20.4 | 39.3 | 54.0 | 45.6 |

D
V211,31 N83
N83·45·2
தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம் சென்னை-600 008. 135999